உ

கணபதிதுணை.

—(*)—

மாணிக்கவாசகரென்றுவழங்குகின்ற

# திருவாதவூரர்புராணம்

இஃது

கடவுண்மாமுனிவர்

அருளிச்செய்த-மூலமும்.

காஞ்சிபுரம்

குமாரசுவாமிதேசிகர்

செய்த-உரையும்.

—(*)—

இஃது

சிதம்பரம்.

கருணாநந்தசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டுச்

சிந்தாத்திரிபேட்டை

நாராயணசாமிமுதலியார்


அண்டெஸன் அவர்களால்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

௲௮௮௭ - ௵ - ஜுலை-மீ



உ

சிவமயம்.

# திருவாதவூரர்புராணம்.

## மூலமும் - உரையும்.

காப்பு.

விநாயகஸ்துதி,

பவளமால்வரையினிலவெழிப்பதுபோற்
பரந்தநீற்றழகுபசசுடம்பிற்
றிவளமாதுடனின்றாடியபரமன்
சிறுவனைப்பாரதப்பெரும்போர்
தவளமாமருப்பொன்றொடித்தொருகரத்திற்
றரித்துயர்கிரிப்புறத்தெழுதுங்
கவளமாகளிற்றின்றிருமுகம்படைத்த
கடவுளரிணைந்துகைதொழுவாம்.

இதன்பொருள்,

பெரிய பவளமலையினிடத்திலே சந்திரிகைவீசுவதுபோல்சிவந்ததனது திருமேனியிற் பரவப்பூசியதிருநீற்றினழகானது உமாதேவியினது பசியதிருமேனியிலே பிரதிபலிக்கும்படி. அத்தேவியுடனின்று நிருத்தஞ்செய்தருளிய பரமசிவனுடையபுத்திரனைப் பெரியபாரதயுத்தத்தைத் தனதுவெண்மைபொருந்திய பெரிய கொம்பொன்றை யொடித்து ஒருகையிலெழுத்தாணியாக வைத்

னைக்கொண்டு உயர்ந்த மகாமேருகிரியை ஏட்டாகக்கொண்டு அகளிட த்தெழுதியருளுமாகவளத்தைக்கொண்டுநின்ற பெரியயானையின து திருமுகமுடைத்த விநாயகக்கடவுளை மனதிலேதியானித்து இ ரண்டுகைகளையுங் குவித்துவணங்குவாம் என்றவாறு.

சபாபதிஸ்துதி,

இதந்தருமடந்தையொ டிசைந்து இருடம்புபோல்
விதம்படுபலவகைப்பிணிவிராவுதேசமின்கருவாய
மைக ழொலிதுகளிலாமைசெழுமுழுமுககவே
திருமன்றிடமதாயிலகுசெழுமலர்நிறைந்தருகுவாம்.

(இ-ள்) இதந்தைகைதருகின்ற சிவகாமியம்மையுடனே பொருந் தியிருந்து படம்போல பலவகைப்பட்ட எல்லாவுலகங்களிலே யும் நிறைந்து சோதிசொரூபராய் விளங்குஞ் சபாநாயகராகிய ந டனசபையுடனே பொன்னம்பலமையொருகமுறைகசதி மாயதிலேநடனஞ்செய்யாநின்ற செம்மைபொருந்திய திருவடி களை வணங்குவோமென்றவாறு,

சிவகாமிஸ்துதி,

ஆடசெகம்பரமையறுமையணங்கினா
மா கனனதசகணமுயினகவிரு
பொட மனைமபொருவிலாதுயிசைந்தவாள்
பாடகமலைகுசியபாதயினைநகுவாம.

(இ-ள்) பொன்னம்பலத்திலேயிடத்தேகமகிய அழகியஉமாதேவி யாருக்குயிலாத நிருத்தஞ்செய்தருளுகின்ற சபாபதியினது ஆன ந்தத்தை நன்மையாகப்பெற்றுக்கொண்டு அயருடையபாக த்தில் வாழுமனமைத்தை ஒடையருடையதிருமணமபோலச ராசரங்களையோதியறிவினற்குனையன்றிபயபட்டசிவகா மியம்மையினது பாதங்களை வணங்கிகின்றசிரிபதாமரைமலர்போ ன்ற பாதங்களைவணங்குவோமென்றவாறு,

சுப்பிரமணியஸ்துதி,

அருகசமதாரும்பயையாறும்பிறுகனெம்பிரா
தடிந்தசெந்திழுருசிறுசதங்கைகளபுலமபவே
மகாகையுமைகணகுளிரவந்துலவுகின்றதா
ளக்கைமலாகொணடிமிகுமன்புடனிறைஞ்சுவாம்

(இ-ள்) பரிசுத்தமாகியமதசலத்தைப்பொழிகின்றமத்தகத்தை யுடைய உயர்வாகியயானைமுக விநாயகருக்கிளைய முருகக்கடவு ளினது சிறப்புத்தங்கிய பொற்சிலம்புகளும் சிறியசதங்கைகளும்ச த்திக்கமங்கையாகிய உமாதேவியினது கண்கள்குளிரும்படிவந்து உலாவாநின்ற பாதங்களை அழகியகையினிடத்திலே மலர்களைக் கொண்டு அருச்சித்துமிகுந்தஅன்புடனேவணங்குவோமென்றவாறு

### நூல்வரலாறு

தென்பொதியமாமுனிசிறக்கவருளெண்ணெண்
ணின்பவிளையாடலெனுமக்கடலுளுறுமோயன்
மின்பவிழியுமைமதுரைமேவுதமிழ்மாறனா
முன்பமரநல்குகதைசொல்லலுறுகின்றேன்,

(இ-ள்) தென்றிசையில்விளங்கிய் பொதியமலையிலிருக்கும் அகஸ்தியமுனிவர் யாவருஞ்சிறக்கும்படி முற்காலத்திலே நைமிசாரணிய வாசிகளாகியமுனிவருக்கு அருளிச்செய்த பேரின்பத்தைத்தருகின்ற அறுபத்துநான்குதிருவிளையாடலென்றுஞ்சமுத்திரத்திலேஒளிவிளங்கிய குதிரைகளைமதுரை மாநகரத்திலேயிருந்தபாண்டியராசனது ஞானபதிக்கிக்கொடுத்தகதையைஅடியேன சொல்லத்தொடங்கினேனென்றவாறு, (௪)

அற்புதனிருந்தருள்பெருந்துறையடைந்தே
சிற்பரமுணர்ந்துதிருவாசகமுரைப்பார்
முற்பகலருந்தவமுயன்றுபெறுமன்பா
லுற்பவமொழிந்தமைமொழிந்திடவொழிப்பாம்

(இ-ள்) பரமசிவனெழுந்தருளியிருந்த திருப்பெருந் துறையென்னுந்தலத்திற்சேர்ந்து அருவுருவாகியசிவத்தையறிந்துதிருவாசகமுரைத்தருளிய மாணிக்கவாசகராளவர் முன்னாட்களிலே அரியதவங்களைமுயன்றுபெற்ற அன்பினாலே ஜனனமொழிந்துமோக்ஷமடைந்த கதையைச்சொல்லிப் பிறவித்துன்பத்தை நீக்குவாமென்றவாறு (௫)

அவையடக்கம்,

கொண்டலனகண்டனருள்கொண்டுதமிழ்பாடித்
தொண்டுபுரிமன்பர்செயல்சொன்னநெறிதன்னால்
வண்டமிழ்தெரிந்தவர்கண்மற்றெனதுரைகுற்ற
முண்டெனினுநன்றெனவுள்ளுவர்களெள்ளார்

(இ-ள்) மேகம்போன்ற நீலகண்டத்தையுடைய பரமசிவனது கிருபையைக்கொண்டு திருவாசகமென்னுந் தமிழ்வேதம்பாடி அடிமைத்திறஞ்செய்த அன்பராகியமாணிக்கவாசகர்சரித்திரத்தைச் சொல்லியபடியால்வண்மைபொருந்தியதமிழையறிந்தபுலவர்கள் அடியேன் சொல்லும்பாடலிற் குற்றமுண்டாயிருந்தாலும்அக்குற்றத்தைக்கொண்டு இகழாமல்இதுநல்லதென்று கொள்ளுவார்களென்றவாறு, (௬)

நூற்பயன்.

இந்தவளமக்கதையையன்பினர்நயந்தே
சிந்தையினினைப்பவர்செவிப்புலநிறைப்போர்
புந்திமகிழ்ப்புவிபுரப்பருடல்விட்டா
லிந்தவுலகத்தினிலரன்சபையில்வாழ்வார்.

(இ-ள்) இந்தத்தெய்வீகமுள்ளநல்லகதையைச்சொன்னவர்களும் நயப்புடனேமனதிலேசிந்திப்பவர்களும், செவியினிடந்தேகேட்பவர்களும், மனமகிழ்ச்சியையடையப்பூலோகமுழுவதும் அரசாக்ஷிசெய்யவார்கள் தேகம்நீங்கினால் அசசிவலோகத்திலே சிவசமுகத்தில்வாழ்ந்திருப்பாரகளென்றவாறு, (எ)

பாயிரமுற்றிற்று,

(*)

## மந்திரிச்சருக்கம்.

(*)

முக்கணொருநான்குபுயமைந்துமுகமூன்றோன்
சொக்கனருணன்மைபெறுதொன்மைதிகழ்நன்னா
டக்கடுவிடத்தையானுக்கருள்வதென்றே
மைக்கடலுள்வைகலொளுவையவளநாடு

(இ-ள்) மூன்றுகண்களையும். நான்குபுயங்களையும்-ஐந்துதிருமுகங்களையுமுடைய மூலகாரணராகிய சொக்கநாதர் அருளுகின்ற நன்மையைபபெற்றதாயும்- பழையதாயும்- விளங்குகின்ற; நல்லநாடாவது அந்தக்கடியவிஷத்தைப்பரமசிவனுககுக்கொடுப்பதென்று கடலினிடத்தேபொருந்துதலொழிந் தவையையாறுசூழ்ந்தவளப்பத்தையுடையபாண்டிநாடென்றவாறு, (க)

நீண்டகயிலைக்கிறைநிகழ்த்தவருளாலே
பூண்டமுனிமெய்த்தமிழ்புகன்றதிருநாடு
மூண்டபகைசெற்றுலகமுற்றுமரசாளும
பாண்டியனலங்குலவுபாண்டிவளநாடு

(இ-ள்) நெடியகைலாசகிரிக்குத்தலைவனாகிய பரமசிவன்திருவையினாலே அருள்செய்ய அவ்வருளைத்தரிககப்பெற்ற அகஸ்தியமுனிவர்தங்கியிருந்துமெய்ம்மைபொருந்திய இயலிசைநாடகமென்னு முத்தமிழையுஞ்சொல்லிய சிறப்பும்பொருந்திந்திய நாடாவது மூண்டுவந்தபகையைக்களைந்து உலகமுழுவதும் அரசாக்ஷிசெய்யும் பாண்டியனுடைய நன்மைமிகுந்தவளப்பத்தையுடைய பாண்டிநாடென்றவாறு (உ)

மேவுமூர்வளம்பலவுமிகுந்துளநாட்டதனினலம்
பாவுமூர்ப்பழமறைதேரந்தணர்கள்பயின்றுளவூர்
தாவுமூர்விடையேறிதங்கியநீராங்குறையுங்
தேவரூரினுமேன்மைசிறந்ததிருவாதவூர்

(இ-ள்) பலவளங்களுமிகுந்துள்ள வூர்களையுடைய அந்தபாண்டிநாட்டிலே நன்மைமிகுந்தவூராயும் ஆதி நூலாகியசதுர்வேதங்களுங்கிரமமாகத்தெரிந்த அந்தணர்கள் நிறைந்திருக்கின்ற. ஊரா
[illegible]க்கின்ற இடபவாகனமேறிய பரமசிவன் எழுந்தருளி

யிருக்கு மூராயுமிருப்பது அவ்வானுலகத்திருக்கின்றதேவர்களது
பொன்னகரத்தினுமதிகமேன்மைசிறந்ததிருவாதவூராமென்ற
[வாறு. (௫)

வேறு.

அந்நகரின்மறையோரிலருள்புனைமாத்தியர்குலத்திற்
றன்னிகரில்சைவநெறித்தலைவனவன்றனிதேவி
மின்னனையாடிருவயிற்றினின்மென்கொடிபங்கினருளாற்
றென்னவன்செங்கோன்முதல்வர்திருவவதாரஞ்செய்தார்

(இ-ள்,) அந்தவாதவூரில்வாழ்கின்றபிராமணவருணத்திலேசிறந்தபெருமையுடைய ஆமாத்தியர்குலத்திலே தனக்குநிகரில்லாத சைவசமயத்தலைமையுடையவர் ஒருபிராமணர் அவருடையஒப்பற்றதேவியானவள் மின்னலையொத்த வடிவினையுடையள் அந்த அம்மாளுடையதிருவயிற்றிலே உமாதேவியை யொருபாகத்திலேயுடைய பரமசிவனருளினாலே பாண்டியனசெயகோன் முறைக்குமுதன் மந்திரியாராகிய மாணிக்கவாசகர் திருவவதாரஞ்செய்தாரென்றவாறு, (௬)

வேறு.

பொய்ம்மையாமுலகின்மாயப்பொங்கிருளகலவன்றோர்
தம்மையாநரகிற்றள்ளுஞ்சமயதாரகைமழுங்க
வெம்மையாளுடையானன்பரிதயதாமரைகளெல்லாஞ்
செம்மையாமலரஞானதினகரருதயஞ்செய்தார்

(இ-ள்,) பொய்ம்மையாகின்றஉலகத்திலேமாயையென்னு மிக்கவிருள் நீங்கவும் அவ்விருளிலிருக்கின்றவரை அழுந்தநரகத்திலே தள்ளுகின்ற உலகாயதமுதலியசமயங்களென்னுமநட்சத்திரங்கள் மழுங்கவும் எம்மையடிமையாகக்கொண்ட சிவனடியாருடைய இதயகமலங்களெல்லாஞ் செம்மையாகி மலரவும் மாணிக்கவாசகராகியஞானசூரியரானவர் உதயஞ்செய்தாரென்றவாறு, (௭)

வேறு—நாமகரணம்.

மருவாதநெறிபூண்டமத்தனெனும்புத்தனுடன்
பொருவாதுவென்றுசிவனருநாமமிகவளர
வொருவாதபிறவியிற்சென்றோருநாமமுறுதவர்க்குத்
திருவாதவூரரெனுந்திருநாமந்தரித்தார்கள்

(இ-ள்) நல்லோர்களங்கீகரியாத மார்க்கத்தைக்கைக்கொண்ட உன்மத்தனாகியபுத்தனுடனேபெரியவாதுவென்றுசிவனுடையமகிமைபொருந்திய திருப்பெயர்மிகவும் ஓங்கத்தக்கதாகநீங்காதபிறவியிலே புகுந்து ஒருபெயர்தரித்த மாணிக்கவாசகர்க்குத் திருவாதவூரரென்னுந்திருப்பெயர்தரித்தார்களென்றவாறு, (௮)

வேறு,

தவமெனும்பெரியவித்துட்டங்கியேயங்குரித்துப்
பவமெனும்பங்கநீக்கிப்பயிலருட்குருத்துண்டாகி

பவமெனுங்களைகணீங்கியாக்குவோனருளாலுண்மைச்
சிவமெனும்விளைவுண்டாகவளர்ந்ததுதெய்வசாலி.

(இ-ள்.) தவமென்னும் பெரியவித்தினிடத்திலே தங்கியிருந்து முளைத்த சனனமென்னுஞ் சேற்றினின்று நீக்கிப் பொருந்துகின்ற ஆருயிரென்னுந் தருத்துவிட்டு பவமென்னுங் களைகளை நீக்கியதையும் உண்டாக்கும் பரமசிவனுடைய அருளினாலே சிவமென்னும் விளைவுண்டாக வளர்ந்தது மாணிக்கவாசகரென்னுந் தெய்விகமுள்ள செந்நெலென்றவாறு. (எ)

## வேறு—அன்னப்பிராசனம்

தேனினொடுகரும்பினெழுஞ்செழும்பாகுமுக்கனியு
மானினறும்பாலுமுடனளவியுளங்களிகூர
வீனமிகும்பலயோனிப்பிறவியெனும்பசிதீர
ஞானவமுதுண்பாகருநயந்தமுதூட்டுவித்தார்

(இ-ள்) இழிவுமிகுந்த அனேகம் யோனிகளிற்சென்று பிறக்கும்பிறவியென்னும் பசிநீங்க ஞானமிர்தமுண்ணும் மாணிக்கவாசகருக்குத் தேனுடனே கரும்பினிடத்துண்டாகின்ற செழுமைபொருந்திய பாகும், பலாப்பழம் வாழைப்பழம் மாம்பழம்-என்னும் முக்கனிகளும் பசுவினது நல்ல பாலும் ஒன்றாகக்கலந்து மனமகிழ்ச்சியடைய நயப்புடனே உண்பித்தாரென்றவாறு. (அ)

## சௌளம்.

காயமுடனுயிர்மாயலுங்கருமமெலாம்பரனருளாற்
றூயமனத்துணர்ந்துவினைதொகையொழுகிநாடோறு
மாயத்துயரசுகமளிக்குமயமனகணக்கிலடங்குபாவ
தீயசிகையில்லார்க்குச்சிறந்தசிகைவருவித்தார்,

(இ-ள்) உடலுமுயிருஞ் சேர்ந்துநின்று மாயனுஞ்செய்யுந்தொழிலெல்லாம் பரமசிவனுடைய அருளினாலே பரிசுத்தமான மனதிலே யுணர்ந்து நல்வினை தீவினைத்தொகைகளை யொழித்துவைகட்கிடாகநாடோறும் அனுபவிப்பதற்கான சுகதுக்கங்களை வரையறுத்துநியதிசெய்யுங்கூற்றுவனுடைய கணக்கிலே அடங்கியபாவதீமையாகிய குடுமியில்லாத மாணிக்கவாசகருக்குச் சிறப்புப்பொருந்திய குடுமியைவைத்தாரென்றவாறு. (கூ)

## வித்தியாரம்பம்

குலவயமங்கையைநீடுகோலஞ்செய்தரும்பொன்னு
நவமணியுங்குழைவுசெய்துநன்குடனமங்கலநாவிற்
றவமணமாந்திருநீற்றின் றன்மணமுந்தவழுந்த
சிவமணமும்பெறக்கல்விச்செல்விமணம்புணர்வித்தார்.

# மந்திரிச்சருக்கம்.

(இ-ள்) நூலேகோங்களை மிகவுஞ்சிறப்பாக அலங்காரஞ்செய்து அரியபொன்னும் வஸ்திரமும் குவித்துவைத்து நன்மையுடனே ஒருசுபதினத்திலே தவமணமும் திருநீற்றுமணமும் தவறில்லாத சிவமணமும் பெறும்படிக்கு ஒருபாயத்தியர் முக்கிலையிலே கல்வியென்னு மங்கையை மாணிக்கவாசகருக்கு மணஞ்செய்வித்தார்களென்றவாறு. (௰)

உபநயனம்,

இதுநூன்மற்றல்லது நூலில்லையெனுமறுசமய
விதநூலுக்கலநூலும்விரிந்தபுராதனநூலும்
பொதுநூலென்றுலகனைத்தும்புகழ்மறைநூலுஞ்சைவ
முதுநூலுந்தரிப்பார்க்குமுந்நூலுந்தரித்தார்கள்

(இ-ள்) மெய்ம்மையுள்ள நூலிதுவேயல்லாமல்இப்படிப்பட்ட நூலவேறேயில்லையென்று வாதிக்கும் சட்சமயிகள் நூலகளுங்ஸ்தலபுராணநூல்களும் விரிந்துவிளங்குகின்றபதினெண்புராணநூல்களும் உலகமெல்லாம பொதுநூலென்று புகழுகின்றவேதநூலகளும் பழமையாகிய சிவாகமநூல்களுந்தரிப்பவராகியமாணிக்கவாசகருக்குமுப்புரிநூலுந் தரித்தார்களென்றவாறு. (௰௧)

மிக்கலையுஞ்செழுநீருமதிக்கலையுமிலைக்குமவ
ரக்கலையுந்தோளாபுலியதட்கலையர்நல்லருளா
லொக்கலையும்பிறகலையுமொழிந்திடுமாகமகலையு
மெக்கலையுங்கற்றுணர்ந்தாரெட்டாண்டெல்லையினில்

(இ-ள்) மிகுந்தஅலைகின்றசெழுமைபொருந்திய கங்காநதியும் மூன்றாம்பிறையுந தரித்தவராயும் எலும்பணியாலைகின்றதோளையுடையராயும புலித்தோலாகிய வுடையையணிந்தவராயு மிருக்கின்றபரமசிவனுடைய நல்லதிருவருளினாலே தேகபந்தங்களையும் பிறவித்துன்பத்தையும் நீக்குகின்ற சிவாகமங்களும் மற்றெந்த நூலகளுமப்பதினாறு வயதளவிலே கற்றறிந்தார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௰௨)

உரைக்கரசனுக்கன்பாகியுண்மையறிந்துலகமெலாம்
பிழைக்கவருட்கவிபாடுமபெரியவர்தஞ்செயலெல்லாந்
தழைத்தகலைத்தமிழ்மாறன்றக்கோர்களுரைப்பவறிந்
தழைத்துரிமைத்திறநலமிகவல்லானன்பாயினன்.

(இ-ள்) மானேந்தியகையினையுடையபரமசிவனுக்குஅன்பாகி மெய்ப்பொருளறிந்து உலகமெல்லாம்பிழைக்கும்படித் திருவாசகம்பாடிய மாணிக்கவாசகருடைய செய்கையெல்லாம் தழைத்திருக்கின்ற தமிழைவளர்க்கும பாண்டியராசனானவன் பெரியோர்கள் சொல்லக்கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துத்தனக்குரியவராகி அவருக்குநீங்காதசினேகனானானென்றவாறு, (௰௩)

செங்கோலமிடும்பழனத்தடம்புடைசூழ்வாதவூர்,
அக்கோவின்செய்கையறிந்தியல்புடையோனொன்றாடி.

உ

# மந்திரச்சருக்கம்

பொங்கோதவெள்ளிலம்புரந்துபெரும்பகைதுறந்து
செங்கோன்மைமுறைநடத்துஞ்செழுந்தலைமைத்திறல்வ

(இ-ள்) சங்குகள்சஞ்சரிக்கின்றவிசாலமாகிய வயல்கள் புடைசூழ்ந்ததிருவாதவூரிலவதரித்த மாணிக்கவாசகருடைய கல்விமுதலியவைகளின் வல்லமைதெரிந்து தகுதியுடையதென்றறிந்துமிகுந்தசத்தத்தையுடைய கடல்சூழ்ந்தவுலகத்தை நடாத்துஞ்சத்துருக்களைகளைந்து மனுநீதிமுறைமைநடத்தும முதன்மையாகிய மந்திரித்தனங்கொடுத்தான் பாண்டியராசனென்றவாறு, (௰௪)

வேறு.

தென்னவன்பிரமராயனென்றருள்சிறந்தநாம
மன்னவர்மதிக்கநல்கிவையகமுய்வதாக
மின்னவமணிபூணுடைவெண்மதிக்கவிகைதண்டி
பொன்னவிரகவரிவேழமளித்தனன்பொருநைநாடன்

(இ-ள்) பின்னுமரசர்களெல்லா மதிக்குமபடிதென்னவன்பிரமராயனென்றுசிறக்கப்பெற்ற ஒருதிருப்பெயர்கொடுத்துஉலகமபிழைக்குமபடிமின்னுகின்ற நவரத்ந ஆபரணமும் பீதாம்பரமும் வெள்ளிசந்திரவட்டக்குடையுமசிவிகையுமபொனபிரகாசமுடைய வெண்சாமரங்களும யானைகளுங்கொடுத்தான் பாண்டியராசனென்றவாறு. (௰௫)

இந்திரசெல்வம்போலவிசைந்துளவின்பமெய்தி
மந்திரத்தலைமைபூண்டவண்புகழ்வாதவூரர்
தந்திரத்தொகுதிசூழ்ந்ததாரகைக்கணங்களோடு
மந்திரந்திழிந்துமண்மேலமர்ந்தவெண்மதியமொத்தார்

(இ-ள்) இந்திரசம்பத்துபோல இசைந்திருக்கின்றபாக்கியத்திலுளஇன்பத்தைப்பொருந்திமுதன்மந்திரியாகப்பெற்றவளம்பொருந்தியபுகழையுடைய வாதவூரரானவர்மற்றமந்திரிகள்பிரதானிகள் கூட்டங்களாகிய நட்சத்திரகூட்டங்கள் சூழ்ந்திருக்க ஆகாசத்தினின்றிழிந்து பூலோகத்தில்மலர்ந்த வெள்ளியசந்திரனையொத்தாரென்றவாறு, (௰௬)

பெருங்கடனகந்திபெருக்கியேதருக்குநல்கி
இருங்கடகதோள்மேல்வைத்திண்டருள்பூண்டகோவுங்
கருங்கடநாகமொடேயகாலமாநாகமெட்டும
பரங்கெடவுலகபாரமபரித்தனர்திருத்தமிக்கார்

(இ-ள்) பெரியகடமையடக்கீர்த்தியைவிர்த்திபுண்ணியாவக்குங்களிப்பையுண்டாக்கிய பெரியகங்கணமணிந்ததன்னுடைய தோளின்மீதுவைத்துக்காக்கும் கிருபையையுடைய பாண்டியராசனும் கரியமதம்பொழிகின்ற அஷ்டகஜங்களும் விஷத்தையுடையஅஷ்டமாநாகங்களும் சுமக்கின்றபூமிபாரமநீங்கத்தாமேசுபந்தர் மாணிக்கவாசகரென்றவாறு, (௰௭)

காதலித்தாஞ்செய்வோர்க்குக்கசுசமுங்கண்ணுமாகி
பேதிலர்க்கிடும்பையாகிவிளைஞ்சினர்க்கின்பமாகி

யாதுலர்க்கன்னையாகியானடிக்கன்புமிக்கார்
பூதலத்திறைவனாணைபொதுவறநடத்துநாளில்

(இ-ள்) விருப்பங்கொண்டு தருமஞ்செய்பவர்க்குத் துன்பம்வாராமற்காக்கின்ற ஒருகவசமாகியும் சிறந்தகண்களாகியும்மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தருகின்றவராகியும்வணங்கினவர்களுக்கு இன்பத்தைத்தருகின்றவராகியும் ஏழைகளுக்குத்தாயாகியும சிவனது திருவடியிலே அன்புமிகுந்தவருமாகிய மாணிக்கவாசகர்பூவுலகத்திற்கு அரசனாகியபாண்டியராசனுக்கினையைப்பொதுமை நீங்கநடத்துகின்றநாளிலென்றவாறு, (௰௮)

பற்பலபொருளாயுள்ளபாசமூமதனையேவி
யுற்பவபேதமானவுடம்புயிரொடுங்குமாறு
மற்புதபுத்திமுத்தியளித்தருளாலேமேலாந்
தற்பரனடத்துமாறுமுணர்ந்தனர்சைவநாவின்

(இ-ள்) பலபலசத்திகளாயிருக்கின்றமலன்களும் அம்மலங்களைப்பொருத்தி எழுவகைப்பிறவிதோறும பேதப்படுகின்றஉடம்பும் உயிரும் ஒடுங்குதொழிலும ஆசாரியமாகப் பந்தமோசங்களைக்கொடுக்கிருபையினாலே மேலாகியபரமசிவன் நடத்தும்விதமும் சிவாகமங்களாலறிந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௰௯)

அவ்வியமனத்தினாலேயனைத்துருவங்கள்கூடி
யிவ்வுயிர்பிறந்துமீளவிறந்திடுமென்றிரங்கி
வெவ்வெயில்வருந்தமுற்றோர்மென்னிழல்விரும்புமாபோ
லவ்வியுமழுவுமேந்துநம்பனுக்கன்புமிக்கார்

(இ-ள்) அழுக்காற்றையுடைய மனதினாலே எல்லாவுருவங்களோடுங்கூடி இந்தஉயிர்பிறந்து மறுபடியிறந்திடுமென்று இரக்கமுற்றுக்கொடியவெய்யிலிலே வருந்தப்பட்டவர்கள் மெல்லியநிழலையிச்சிக்குமாறுபோல் மானுமழுவுமேந்திய பரமசிவனிடத்திலே அனபுமிகுந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௨௰)

தீத்திறவினையினாலேசிறைப்படுமுயிரையெல்லாம்
பார்த்தனருலகவாழ்விற்பயனிலையென்றுதேர்ந்து
கூத்தினர்தன்மைவேறுகோலம்வேறுருமாபோ
லீத்தனர்மனத்தின்முன்போனிகழ்த்தினர்வழுதிநீதி

(இ-ள்)பொல்லாததீவினையினாலேகட்டுப்பட்டுப்பிறப்பிறப்பில் வருந்துகின்றசீவகோடிகளைப் பார்த்து உலகவாழ்வில் ஒரு பிரயோசனமுமில்லையென்று தெரிந்துகூத்தாடிகளுடைய சாதி வேறு மவேஷம்வேறுமாவதுபோல உலகவாழ்க்கையைப் பொய்யென்று மனதிலேநினைத்தவராய் முன்போலப்பாண்டியராசனுடையநீதிமுறைமையநடத்திக்கொண்டுவந்தாரென்றவாறு

வாருடன் புவியிற் றோன்று மறையவர்க் கிறைவ ருண்மை
தருவுணர் வென்னு நானாஞ் சித்தி விபாத மெய்ப்பி
பரமனஞ் செழுத்து மோன்றும் பராபர முணர்ந்து ஞான
குருபரன் றிருத்தாள் சென்னு கூட்டல் வேண்டுமென்று

(இ-ள்) அநுக்கிரகத்தினாலே பூலோகத்திலே திருவவதாரஞ் செய்தமாணிக்கவாசகர் உண்மையறிவைத்தருவதென்னப்பட்ட அதிவிசேஷக்குணத்தைப்பெற்று உயர்ந்த அஞ்செழுத்தின் பொருளையுள்ள இவைத்தையறிவிக்கும் ஞானாசாரியான் திருவடியைக் கூடல்வேண்டுமென்று நினைந்தாரென்றவாறு, (உ௨)

மற்கடவிலங்குதன்றலைவணங்கெழுவினைவின்மேல்
கற்பவிபிமொளனவேணடிகயங்குகல்வெதிவார்போலச்
சற்குருவுணரேவென்றுகாவிவார்தர்க்கமெலலாஞ்
சொற்றகலைஞானமைசவர்தம்முடன்சொலைந்துமறுர

(இ-ள்) குரங்காகிய மிருகத்தினாலே வளம்பொருந்திய விளவின் கனியுடைய கல்லையுழக்கெ றவிரும் [illegible] கனியைப் பெறப் பார்க்கும்போல நல்லகுருவுண்டோவென்று தேடுவாராகிய மாணிக்கவாசகர் யாவர்க்கும் சொல்லுகின்ற கலையிலேவல்ல வையாசாரியர்களுடனே வேதப்பிரசங்கம் பண்ணினாரென்றவாறு

வனையமெழுபுவிபுரள்ளவாகியங்காவேமொரு
விளக்கிமைசவைதேன்டேன்பிருமலர்தேமொபோர
றுணங்கொளாமமைசக்றசேலாஇனருணைமயெல்லா
மனர்த்துமிழுணர்ந்ததீரங்யாவவொன்றுபுகாவிலை

(இ-ள்) வளம்பொருந்திய பூலோகத்திலேயுள்ள நடாகங்களி லுடுசேர்மலர்களிலே சென்று விளங்குகின்ற இலிச்சையுடைய வண்டுகள் திரிந்து தேன்நிறைந்த மலர்களிலே தேடிவதுபோல மாணிக்கவாசகர் யாவகையுங் கற்றுத்தமனிக்கவாசகர் மெய்ப்பொருளென்னும் அவ்வவைசெய்து அறிவிலேயறிந்த தன்மையையுடைய ஞானாசாரியனாரவரென்றுகாணுதலாயினென்றவாறு, (உ௩)

வேறு.

மேதகுவனிதையொக்கணும்வியகவியசைந்தெழு
மாதலமுனிவர்களோந்துணர்மாசறகவிருர்செபிக்கிடு
வேதயின்மதிருவைபுங்கவனேக்கெழுமணிமுடியின்மிர
னாதனைமகிசையெறுவத்தியமசமைதவிருக்தனன்

(இ-ள்) மேன்மையையுடையமங்கையாகன் விகசின்றசாமரை அசைக்குமசையும் மகத்தாகிய தவத்தெசய்கின்றமுனிவர்களும பிராமணர்களும் குற்றமற்றவித்துவசனங்களும் நெருங்கவும்பழு தில்லாதசாத்திரகுலத்திலேவந்த அரிமர்த்தன பாண்டியராசாவான் அழகுபொருந்திய கிரீடமணியுடையமணிகள்பதித்தகிரீ

டமாகியசூரியன்சிரசிலேஉதயமாகும்படிவந்துசிங்காதனத்திலே யெழுந்தருளியிருந்தானென்றவாறு, (உ௫)

தாதகிமார்பனெடும்புவிசார்தருமாழ்கடலின்கரை
மீதிலமாதுரகங்கொடுசேரொழுமாரியர்வந்தன
ரேதமிலாயதுகண்டனமியாமெனவேதொழுதன்போடு
மேதினிகாவலன்முன்சிலமேதகுதூதர்விளம்பினர்

(இ-ள்) அப்பொழுது ஆத்திமாலையணிந்தமார்பையுடையசோ ழராசாவினுடையநெடியதேசத்திலேசோங்குகடற்கரையிலேத்தே குற்றமற்ற மேன்மைபொருந்திய குதிரைகளைக்கொண்டு சிறப்புப் பொழிந்திய குதிரைகள்கொண்டு சிறப்புப்பொருந்திய ஆரியதே பத்தார்வந்திருக்கிறார்கள் பழுதற்றபாண்டியராஜனே யாங்களது சார்த்தோமென்று வணங்கி அன்பினோடேபூமிகாவலனாகிய அர சன்முன்னேமேன்மைபொருந்தியசிலதூதர்கள் சொன்னார்களெ ன்றவாறு, (உ௬)

ஏவல்செய்வார்களிவர்க்கிவரேபரிவானரென்றிகல்
மேவியதூதரைவன்றிறன்மீனவர்கோனுமகிழ்ந்துபின்
வாவுநமாதுரகங்கொடுவாருமெனுவுடனுய்த்தன
தாவியமாமனையன்புடையாதரனோடுமொழிந்தனன்,

(இ-ள்) நம்முடையஏவல்செய்பவருக்குள்ளே இவர்களே அன் புடையவர்களென்று அக்கலவியமைபொருந்தியதூதர்களோசெள ரியத்தையுடைய பாண்டியராசனமகிழ்ந்து வேகமுடையநல் லகுதிரையைக் கொண்டுவாருமென்று தனதுடலுமுயிரும் போன்றவராயுஞ்சிலவிடத்திலே அன்புள்ளவராயுமிருக்கின்றவாத வூரர்முகத்தைப்பார்த்துச்சொன்னானென்றவாறு. (உ௭)

மீனவர்கோன்மொழியின்படிவேணியனேசரிசைந்தபின்
ஞானசோதியுடன்புவியாளபயங்வாசிகொளும்படி
வானவிமானமெனுந்திருவாழ்வுளகோயில்புகுந்துதன்
னீனமிலாநெறிவந்தபொன்னேழுகோடிவழங்கினன்,

(இ-ள்) அப்படி சொன்ன பாண்டியராசனுத்தரவின்படி சிவனு க்குநேசராகியவாதவூரர் உடம்பட்டபின்பு மலர்ந்தமுகத்தையு டையவனும்பூவுலகையாளுகின்ற பாண்டியராசன்குதிரைகொ ள்ளும்படிக்குத் தெய்வவிமானமென்றுசொல்லத்தக்கசெல்வம் பொருந்திய அரமனைக்குள்ளேபோய் நல்வழியிற்சம்பாதித்த த ன்னுடையதிரவியத்திலே நாற்பதுகோடிபொன் கொடுத்தானெ ன்றவாறு.

விற்படைவெற்றிமடந்தையமிக்கமலர்த்திருவும்பயின்
மற்புயவெற்பினங்கைசால்வைத்தவலத்தளவழங்கிய
பொற்புமிகுத்ததனக்கொடுபொற்கவனப்பரிகொண்டிட
நற்பயணத்தைமுயன்றனர்நக்கனைநெஞ்சுணர்கின்றவர்,

(இ-ள்) விற்படையுடனே விஜயமங்கையும் மேலாகியதாமரை மலரிலிருக்கின்ற ஸ்ரீதேவியுந் தங்குகின்ற புஜத்தையுடையவனுகி

யும்மீனக்கொடியை வலதுபக்கத்திலுயர்த்தவனாகிய விருக்கின்
றபாண்டியரான்கொடுத்த அழகுமிகுந்த திரவியத்தைக்கொண்
டுவேகத்தையடையசிறந்த குதிரையைக்கொள்ளுதற்குநல்லவே
ளையில்பிரயாணங்கொள்ள முயற்சிசெய்தார் பரமசிவனையேயுரு
கிநினைக்கின்ற மாணிக்கவாசகரென்றவாறு. (௩௰)

மெய்த்தவருற்றபெருந்துறைவித்தகனாக்குறுகும்படி
யித்தகுநற்பொருள்கொண்டினியிப்படியிற்செலுமென்றவி
ரோதகுப்புத்தியொழிந்துயிரற்புதமுத்திபெறும்படி
யுய்த்தருள்சத்தியுடன்பொருவொத்தனனுத்தமபஞ்சவன்

(இ-ள்) உண்மையாகிய தவத்தினையுடையோர்களிருக்கின்ற திருப்பெருந்துறையிலேஞானதேசிகரையடையும்படி இந்தத் தகுதியுள்ளநல்லபொருளையெடுத்துக்கொண்டு இந்தப்பூமியிலேபோமென்றுசொன்னபடியால் பகையாகியவெல்லாமொழிந்து உயிரானதுமேலாகியமோக்ஷத்தைப்பெறும்படிச் செலுத்துகின்ற அருட்சத்திக்குச்சமானமானன் உத்தமனாகிய பாண்டியராச-எ-று,)

பற்றிலர்பெற்றசிவன்கழல்பற்றினரைக்கலைவண்டமி
ழுற்றமலைக்கிறைவனற்றனையொக்கமதித்தருள்கொண்டலை
விற்றுவசத்தனெடும்படைமிக்கபுலிக்கொடியன்படை
மற்றுளகொற்றவர்தம்படைவர்க்கமுமுறைகொடெழுந்தன

(இ-ள்) ஒருபொருளிலும் பற்றில்லாதவராயும்பரமசிவனுடையதிருவடியிற்பற்றுள்ளவராயும் இருக்கின்றவரைவண்மைபொருந்தியதமிழ்விளங்கியிருக்கின்றபொதியமலைக்கு அரசனாகியபாண்டியனுக்குச்சமானமாக மதிக்கத்தக்கதிருப்பாமேகமாகியமாணிக்கவாசகரை விற்கொடிபடைத்தசேரமானுடைய நெடியசேனைகளும்மிகுந்த புலிக்கொடிபடைத்த சோழனுடைய சேனைகளும் மற்றுமுள்ள அரசர்களுடைய சேனைகளுஞ்சூழ்ந்துபுறப்பட்டனவென்றவாறு, (௩௧)

உக்கிரநச்சுரங்களினுச்சிபணிம்பவனைந்தடி
வைகருமூர்த்தனசெங்கயமக்கிரிபோலமலிந்தன
பக்கமுமுற்பிறகுந்துடிபறைபலகொட்டவொங்குவ
தக்கமனத்தில்விரைந்துளதத்துபரித்திரள்வந்தன

(இ-ள்) உக்கிரமானவிஷமுள்ள ஆதிசேஷனுடைய தலைகளும் அஷ்டமாநாகங்களினுடைய தலைகளுங்கலங்க அசைந்துநடப்ப யிருக்கின்றவலிமையுடையவாகிய வெவ்வியயானைகள் நீலகிரிகளுக்குச் சமானமாய்நெருங்கின இரண்டுபக்கமும் முன்னும்பின்னும் அனேகந்துடிகளடிக்கமனோவேகத்தினுஞ் சீக்கிரமாகச்சொல்லுகின்றனவாகிய தகுதியுள்ளகுதிரைக்கூட்டங்கள் வந்துசூழ்ந்தனவென்றவாறு, (௩௨)

வேறு.

கொங்கணர்கலிங்கரொடு கொங்கர்குருநாடர்
சிங்களர்களொட்டியர் தெலுங்கரொடுசீனர்

தங்குதிறன்மாளவர்மலாடர்தமிலெரீளரு
யெண்களுமிடைந்தவர்க ளெண்ணமுடிவில்லார்

(இ-ள்) கொங்கணதேசத்தார் கலிங்கதேசத்தார் கொங்குதேசத்தார் துளுவதேசத்தார் சிங்களதேசத்தார் ஒட்டியதேசத்தார் தெலுங்கதேசத்தார் சீனதேசத்தார் மாளவதேசத்தார்மலையாளதேசத்தார் இவர்களெல்லாம் தங்களுக்குள்ளே ஒன்றாகக்கூடி எண்ணுதற்கு அளவுபடாதவர்களாய் எவ்விடத்தும் நிறைந்தார்கள். எ-று, (௩௧)

இத்திறமெழுந்தபடையெங்கணுநெருங்கத்
தத்துபரிமீதுள தமிழ்க்கவிஞராஞ்சூழ
சித்திரமடந்தையர் இரண்டுபுறமருங்கா த
மொத்துவரவீணைகுழல் முன்னரிசைகொள்ள

(இ-ள்) இந்தப்பிரகாரமெழுந்தசேனைகள் எவ்விடத்துநெருங்கநடக்கின்ற குதிரையின்மேலே தமிழ்க்கல்வியின்மிக்கபுலவர்கள்சூழ்ந்துவர அழகியமங்கையர்கள்கூட்டங்கொண்டு இரண்டுபக்கத்திலுமநெருங்கிவர வீணையும் புல்லாங்குழலும் முன்பாக இசைகளைசெய்துகொண்டுவரவென்றவாறு. (௩௨)

கட்டுமளகத்தினார் கனத்துமாதனத்தார்
பட்டிடைமருங்கினா பணிக்கவரிவீச
வட்டமதிவெண்குடை யமைக்குமாசெங்கும்
கொட்டவுயர்காளமொடுகோடுகள்கறங்க

(இ-ள்) கட்டுகின்ற கூந்தலையுடையவரும் கனத்தஸ்தனபாரமுள்ளவருமபட்டுடை செறிந்த இடையையுடையவருமாகிய மங்கையர்கள் குளிர்ந்தகாற்றைத் தருகின்றவெண்சாமரங்கள் வீசவும் வெள்ளியசந்திரவட்டக்குடைகள்பிடிக்கவும் பேரிகைகளும் அதிரும்படிகொட்டவும் உயர்ந்தசின்னங்களோடு சங்கங்களைதொனிக்கவும்-எ-று. (௩௩)

மிண்டியுளபாடகர் வியந்துசரவாரங்
கொண்டுபுடைசூழவெழில் சேர்குழலர்பாடத்
தண்டரளமல்கிய தவிசசிவிகைமேலகொண்
டெண்டிசைமிகப்புகழ்கயற்கொடியிலங்க

(இ-ள்)நெருங்கியுள்ள பாடகர்களிசைத்து வாழ்த்திக்கொண்டு பக்கத்திலே சூழ்ந்துவரவும் அழகுசேர்ந்த கூந்தலையுடைய மங்கையர்கள்பாடவும் குளிர்ச்சிபொருந்திய முத்தினாற்செய்தநெருங்கிய ஒப்பற்றசிவிகையின்மேலேறிக்கொண்டு எட்டுத்திக்கும் மிகவும்புகழ்கின்றமீனக்கொடி பிரகாசிக்கவுமென்றவாறு-(௩௪)

மங்கலதினத்தினெடு மாளிகையகன்றே
துங்கமணியக்கையணி சொக்கனைவணங்கி
யங்குவிடைபெற்றுமறை யந்தணரின்மிக்கார்
திங்கண்மரபிற்குரிசில கோயிலுறைசென்றார்,

இ-ள், இந்தப்பிரகாரம்இவைகளெல்லாந்தம்மைச்சூழும்படிசுபமானதினத்திலேநெடியதிருமாளிகைவிட்டுநீங்கிஉயர்ச்சிபொருந்தி

யசங்குமணியணிந்தசொக்கநாதரைத்தொழுது அனுப்புவித்துக்
கொண்டு வேதியர்மணரினமிருந்த மாணிக்கவாசகர் சந்நி
வமிசத்திறந்துறைந்திய பாண்டியராசனிருக்கும அரமனைக்குப்போ
றொன்றவாறு

செந்தமிழ்மாறனருள் பெறநிறைபிலசிறக்கும்
வென்றிவளவனபுவியின மெனமையொடுசெலவா
குன்றனீயமாடகொடிகோபுரநெருங்கு
ஞெனறிமதுரைபதியை நணணிக்கொடுகடந்தார்

(இ-ள்)பாண்டியராசாவினுடைய அரமனைக்குப்போய் அவனு
டைய கிருபையும்பெற்றுக்கொண்டு அழகுசிறந்த, வெற்றியையு
டைய சோழராசாவிருக்குஞ் சோழதேசத்திற்கு மேனமையுட
னே செல்லுகின்றமாணிக்கவாசகர் மலைகளுக்குச்சமானமாகிய உப்
பரிகைகளும் கோபுரங்களும் நெருங்குகின்ற நன்றியையுடையம
துராபுரியைப்பனமையோடுநீங்கினாரென்றவாறு (௬௮)

நெடுங்குடதிசைக்கட லினைந்தொபிசறைந்தே
யுடைந்துதயாகறிசைபி லுபலுவருமாபோன
மிடைந்தபதிபுகட்டும வெறபுமிகைவெல்லாங
கடந்துவழிசென்றுபால காலத்மகனுரா

(இ-ள்) நெடியமேற்றிசைக்கடலானது நிறைவுடனேசந்தமிகு
ந்து உடைந்துபோய்க் கீழ்த்திசையிற் புரண்டுவருகிறதுபோல
நெருங்கிடங்களும் காடுகளும்மலைகளுங்கடந்து வழிக்கொண்
டு அநேகயாத்திரைவழிநீங்கினராமாணிக்கவாசகரென்றவாறு (௬௯)

என்றுருள்பொன்றூற்ட லெனனுந்தோறு
சென்றவழிமாறிபொரு தெய்வவழிசெலவார
நின்றியுள்புத்திபெற நயப்பக்மதமய்யார
லன்றுயாபெருந்துறை யடைந்தபடிசொலவாம

(இ-ள்) என்றுநதோன்றித்தோன்றிக் காணப்பட்டுக்கொண்டு
வருகிற தேகமென்னும் கன்றுகளகோலுஞ்செய்யு வழிதப்பிப்பரு
தெய்வத்தன்மையாகிய வழியிலே செல்வாராகிய வாதவூரா நன
மைபொருந்தியமோக்ஷத்தையுடைய பரமசிவனுடைய அனபினு
லே அன்றையாந்த திருப்பெருந்துறையிலே சேர்ந்ததனமையைச்
சொல்லுவாமென்று.

மந்திரிச்சருக்கம்,முற்றுப்பெற்றது ஆக க௭,

## திருப்பெருந்துறைச்சருக்கம்.

(*)

### வேறு

பழமறைமுழுதணர்ந்தனர் பலர்தொழடமயல்கின்றவர
மழவிடைமேலிசைகொண்டிட மருவியகவுரிமகிழ்ந்திட
விழைகுருபரசுத்தபோதமுகொளி விடுமுயாக்பிலைவிலங்கவி
லமுகுருதமணியமண்டப மதனிடையாருமைகொடிருந்தனர்

(இ-ள்)பழமையாயுள்ள நான்குவேதங்களையுமோதியுணர்ந்ததி
சைர்வணங்கப் பொன்னம்பலத்திலேயிருக்குஞ்செய்

நின்ற கடவுளானவர் மழுவுமானுந் திருக்கரங்களிற் கொண்டுவா மபாகத்திலிருக்கும் உமாதேவி மகிழ்ச்சியடைய யாவரும் விரு ம்பும்படி உயர்ந்த வெள்ளிமயமாகிய கைலாசகிரியில் அழகிய தி ருப்பொன்மண்டபத்திற் கிருபையுடனே எழுந்தருளி யிருந்தாரெ ன்றவாறு, (௧)

மதுமலர்கரமிசைகொண்டினிவழிவழியடியவரென்றுதம்
முதுமறைதெரியமொழிந்தெதிர்முறைமுறைமுனிவர்வணங்கி
னிதுபரனருளைவழங்குவதெனவரிபிரமனெழுந்துதம்
பதநிலைபெறவருளெனவிருபரிபுரகழல்கள்பணிந்தனர்.

(இ-ள்) தேனையுடையமலர்களைக் கைகளிலேகொண்டு உமக்கு வழிவழியாகிய அடிமையுடையோமென்று பழயவேதங்களையோ தித்திருமுன்னேநின்ற வரிசைவரிசையாக முனிவர்கள் வணங்கி னார்கள இதுகடவுளனுக்கிரகம் பண்ணுகிறகாலமென்று பிரமவி ஷ்ணுக்களெழுந்திருந்து தங்கள்பதங்களை நிலைபெற அனுக்கிரக ம்பண்ணுமென்று சிலம்பணிந்த இரண்டுதிருவடித்தாமரைகளையு ம் பணிந்தார்களென்றவாறு, (௨)

பரவருமணிகள்விளங்கிய பணவரவணியானங்கமு
மருவியதாளவடந்திகழ மதிநுதன்மலைமகளங்கமு
மிரவியுமதியுமிருந்தென வெதிரெதிரிலகுதல்கண்டன
ரரகரசிவசிவவென்றுள முயர்வுறவழுதனரன்பினர்

(இ-ள்) சொல்லுதற்கரியரத்தினங்கள்விளங்கியபடத்தையுடைய சர்ப்பங்களைத்தரித்த பரமசிவனுடையவடிவமும் மதுளிர்சசியொரு ங்கியமுத்துமாலைகள்பிரகாசிக்கின்ற மேருமலையைப்போலும் நெ ற்றியையுடைய உமாதேவியினுடைய வடிவமும் சூரியனுஞ்சந்திர னும் இசைந்திருக்கிறதுபோல ஒன்றாகக்கொண்டு இசைந்துபிர காசிப்பதைப்பார்த்தவர்களாய் அரகரசிவசிவவென்று மனங்கரை ந்து அன்பினால் ஆனந்தக்கண்ணீர் விட்டுருகினார்கள் அன்பர்க ளென்றவாறு, (௩)

அடிபொழிமரமெனநொந்துமின் னவனியில்விழுவதொழிந்து
நின்றுடனுறைபெருமறைவழங்குவதுளதுகொலெனநினைநெஞ்
சொடுமடலவிழ்நறுகமழ்ந்தருமலர் முறைமுறைசிந்திமுனி
விடமின்றெனமகிழ்ந்திர னிமையவரமரருமிறைஞ்சினர்

(இ-ள்) சம்பாதித்தபுண்ணியங்களெல்லாந்தேயவலோகத்தின னுபவித்து அறுபட்டபின்பு அடியற்றமரம்போல நொந்துபூ லோகத்திலேவந்து பிறக்கிறதொழிந்து உன்னுடையசமீபத்திலி ருக்கும்பெருமையை வழங்குவதுமுண்டோவென்று நினைக்கின்ற நெஞ்சுடனேவிரிந்தவாசனையுடைய பருந்தசரசருவிலுடையம லர் அனேகந்தூவிநினைக்கக்கவிடம்இதுவென்றுமகிழ்ந்தி ன்றதேவேந்திரனுந்தேவர்களும்வணங்கினார்களென்றவாறு, (௪)

வேறு,

இன்றிறன்மிகுஞ்சுரிகையுந்திகழவிரம்பு
கொண்டருகுநின்றுகுருக்கியருளகூறப

# ௰௮ திருப்பெருந்துறைச்சருக்கம்.

புண்டரீகமாதுபுவிமங்கையெழில்சிங்கா
ஸண்டாமடவார்களுலகன்னைபுறமன்ன

(இ-ள்) மிகுந்தவலிமையுடைய உடைவாளும்பிரகாசிக்கும் பிரம்புங்கொண்டு அருகேநின்றுகுருவாகியநந்திகேஸ்வரர்திருவை யிருந்திருக்கச்சீதேவியும்பூதேவியுங்குறைவில்லா தழகையுடைய தெய்வமங்கையரும உலகத்திற்குத்தாயாகிய உமாதேவியின்ப க்கத்திலிருக்கவென்றவாறு, (௫)

ஒன்றுபலபூதகணநாதர்புடைசூழக்
கின்னரர்களகந்தருவர் கீதவிசைபாட
மின்னுமுடிமன்னுநதி வீசுகிரணநனி
ரொன்னவொளிசாமரை யெழுந்தழகுசெய்ய

(இ-ள்) அனேகபூதகணநாதர்கள்நெருங்கியபக்கங்களிலேசூழ்ந் திருக்க கின்னரர்களுமகாந்தருவர்களும் கீதவிசைகளைப்பாடப் பரமசிவனுடைய மின்னுகின்ற முடியிலிருக்குங் கங்கையினுடைய வீசுகின்றஅலையைப்போலஓங்கி வெண்சாமரைகளழகுசெய்ய வென்றவாறு, (௬)

இந்தவளமலகுசபையின்னலகெடமன்னுந்
தந்தைமணிமன்றிலுமைதாண்டவபதத்தோன்
செந்தமிழின்வந்தசிவஞானவமுதுண்டா
மந்தமிலருட்கடலையாண்டருளவேண்டி.

(இ-ள்) இப்படிப்பட்ட வளங்களமிகுந்த சபையினிடத்திலே துன்பங்களெல்லாம நீங்கிலெப்பொழுதுநிற்கின்றனவெல்லாவுலகங்களுக் குத்தந்தையாயிருப்பவரும அழகியகனகசபையில எழுந்தருளி யிருந்து திருநடஞ்செய்கின்றவருமாகிய கடவுளானவர்செவ்விய தமிழிலேவந்தசிவஞானவமிர்தத்தோன்றுகின்ற அளவில்லாதகி ருபைக்கடலாகிய மாணிக்கவாசகரை அடிமையாக்கிக்கொள்ள விரும்பியென்றவாறு, (௭)

மைக்கடன்மண்ணவர்கடம்முருவில்வம்மென்
றத்தனையபத்தர்களைநாதனையழைத்தே
சித்திதருதேசிகசிறந்தவடிவங்கொண்
டுத்தமநெடுங்கயிலையோங்கலதுநீங்கி

(இ-ள்) கருங்கடல்சூழ்ந்த பூமியிலேயிருக்கின்ற மனிதரைப் போலவடிவங்கொண்டு நம்முடனேவாருங்களென்று அப்படிப்ப ட்ட அடியார்களையுமகணநாதர்களையும் அழைத்துக்கொண்டுமோ க்ஷத்தைத்தருகின்றசிறப்புப்பெற்ற ஆசாரியமூர்த்தங்கொண்டு உ த்தமமாகிய நெடியகைலாசமலையை நீங்கியென்றவாறு, (௮)

கொன்னெறுழிதன்னுருவுகொண்டொருவர்தேடும்
பொன்னடியெனுஞ்சலசமண்மிசைபொருந்தப்
புன்னுமறைவல்லவர்பரிந்தழல்வளர்ப்பார்
மன்னுமொருதெய்வயிகவளம்பதியில்வந்தார்

(இ-ள்) பெருமைபொருந்திய ஒருபசுவின்வடிவங்கொண்டுமெனா விஷ்ணுதேடிய பொன்மயமாகிய திருவடித்தாமரைகளைப் பூமியி லேபொருந்தவைத்துப்பன்னுகின்றவேதத்திலேவல்லவராயும் அன்புகொண்டு யாகஞ்செய்பவராயுமிருக்கின்றபிராமணர்கள் நிலை பெற்றிருக்கும் ஒப்பறறதெய்வத்தன்மையையுள்ள வளப்பத்தை யுடைய திருப்பெருந்துறையிலே வந்துசேர்ந்தானென்றவாறு. (௯)

வெம்பிறவிவேலைதனில் வீழ்ப்வர்களெல்லாம்
நம்புசிவநாமமெனு நற்புணைபிடித்தா
லெம்பரனருட்கரையிலேறுதுறையாமா
லம்புவிமொழிந்துள பெருந்துறைபதஃபேர்

(இ-ள்) வெப்பத்தையுடைய பிறவிசாகரத்தில்விழுந்து கிடப்பவர்களெல்லாம்பெரியோர்கள்நம்புகின்ற சிவநாமமென்னுமநல் லதெப்பத்தைப் பிடித்தால் எமதுகடவுளுடைய திருவையாகிய மோட்சக்கரையில் ஏறுவதற்குத்துறையாதலாலேஉலகமெல்லா ந்திருப்பெருந்துறையென்று அந்தப்பதிக்குத் திருப்பெயர்சொல் லுமென்றவாறு. (௰)

ஈனமிலபெருந்துறையெனும்பதியிருஞாங்கர்
கானமிருபுன்னைவளாகந்தழைசந்தம
வானுயர்சண்பகமரந்திகழ்நாக்கத்
தேனினமுரன்றெழு செருந்திகள்பொருந்தி

(இ-ள்) குறைவற்றதிருப்பெருந்துறையென்னுந் தலத்திற்கு அருகெல்லாம வாசமிருந்தபுன்னைமரங்களும் வளர்கின்றழகுமுள்ள சந்தனமரங்களுமஆகாயத்தைஅளாவியுயர்ந்தசண்பகமரங்களு மபிரகாசிக்கின்றநாரத்தைகளும் வண்டினங்கள் சத்தித்தெழும்பு கின்ற செருந்திமரங்களும் பொருந்தியென்றவாறு. (௰௧)

கோடுகவினும்பெரிய கோங்குமிகவோங்கும்
பாடலநெடும்பலவு பைங்கமுகுதெங்கு
நீடளியினைதவெழு நிரைகுரவுருத
மேடவிழசெழுங்கவரிலஞ்சிகண்மலிந்து

(இ-ள்) அழகியகொம்புகளையுடைய பெரிகோங்கு மரங்களும் மிகவுமுயர்ந்தபாதிரிமரங்களும நெடியபலாமரங்களும்பசியகமு குமரங்களும தென்னமரங்களும்நீடுகின்றவண்டுகள்நிறைந்தெழும் பெற்றவரிசையாயிருக்கின்றகுராமரங்களும் மராமரங்களும் இதழ்விரிந்த முருக்கமரங்களும் மகிழமரங்களும் நெருங்கின-எ-று.

மாக்கவின்மிருங்கலப மஞ்ஞைசிறையன்னங்
கூக்குரல்செயுங்கரிய கோகிலநெருங்க
மிக்குலவுமக்கினைமுக்குதொறுமேன்மே
லார்க்குசியிறெக்கணுமடர்த்திசைதொடங்க

(இ-ள்) வைத்தாகிய அழகு நிறைந்த தோகையுடைய மயிலும், இறகையுடைய அன்னங்களும், கூவுதல்செய்கின்ற கரியகுயில்களும் நெருங்கமரக்கிளைகளின் மேலேயிருக்கின்ற குறைகூட்டங்களை யுமயிக் குதிகுந்தோறும் மேலுமேலுஞ் சத்திக்கின்ற வண்டுக ளெவ்விடத்தும் நெருங்கி இசைகள்பாட வென்றவாறு, (௩௧)

வீழ்ந்துகாலைத்துவி விழிப்புனலதாகச
சூழ்ந்துசூழ்றல்வணைடிலினை தோத்திரந்தாகத்
தாழ்ந்துமலரேந்தியிரை தன்றிருமுனின்றே
வாழ்ந்துருகுமன்பரென மனனுமொருபூங்கா.

(இ-ள்) தம்மிடத்திலிருந்துவீழப்பெற்ற தேன்றுளிகளைக் கண்ணீ ராகவும் சுழன்றுசுழல்கின்றவண்டுகளின் இசைகளைத் தோத்திரமாகவுங் கைத்தட னே மலரையேந்திக்கொண்டு பரமசிவனுக்கெதிரேயிருந்து மன முருகுகின்ற அன்பர்கள் போலவிளங்கப்பெற்றிருக்கும் ஒப்பற்றதுஞ் சோலையென்றவாறு. (௩௨)

காய்த்தலைசயிலைகைவயக்குமகதைப்ப
னைத்தருதலைசிலைக வொகைதனுமெருகை
மீதுகியுகருதைத்தைறுதது மிளிர்மெய்மமைம
கூய்துறுகுரவேபாலெறுழில வெருகதுமோகருந்தம

(இ-ள்) இப்படிப்பட்டவளமைபொருந்திய அந்தச்சோலையினை வையாவரும் தலைகளென்னுங் கிளைகளோலவை யெவ்விடத்தும் நெருங்கமேலோங்கிப்பிரகாசிக்கின்ற தருமமென்னுந் தளிர்கள் தழைத்துவிளங்கிய உண்மையென்னு மலர்களோப்பூத்து அறிவுடையவர்களைப்போல அருகுபொருந்தியிருக்குமொருகுருந் தவிருட்சமென்றவாறு, (௩௩)

ஆர்வமுடன்வந்தினைமகப்படவலைகளும்
பார்வையெனமாகுபருவமுகொண்டிடந்தர்
சேர்வருகுருந்தமொடிவயகுழயாகவிற
சேர்குவமெனத்திருவுளத்தருளிப்பாந்து

(இ-ள்) ஆசையுடனே வந்து தன்னினங்களையகப்படும்படியாய் வலைகளின் ஒருபார்வையிருக்கும்போலமானிடவடிவங்கொண்டுவந் த கடவுளானவர் அழகியகுருந்தவிருட்சத்தோடும்பிரகாசிக்கின் ற உயர்ந்த சோலையினிடத்துச் சேர்வோமென்று திருவுளத்திற் கொண்டருளினரென்றவாறு, (௩௪)

வந்துதிகழ்தொண்டர்படைசூழமகிழ்வெய்திக்
கொந்தலர்மலப்பொழிகுருந்தடிபொருந்தி
யந்தமுதலில்லவருட்டமிழுமைப்பார்
பந்தமறமெல்லையதுபார்த்தினிதிருந்தார்

(இ-ள்) அப்படியாகவந்து பிரகாசிக்கின்ற அடியார்கள் புடை சூழமகிழ்ச்சியடைந்து கொத்துக்கொத்தாய்மலர்கள்நிறைந்த கு

ருந்தவிருட்சத்தின்கீழெழுந்தருளியிருந்து அந்தமுமாதியுமில்லாத பரமசிவனானவர் தமிழ்வேதமுறைப்பாராகிய திருவாதவூரருடைய பாசம்நீங்குகின்ற காலம்பார்த்து இனிதாகவிருந்தார்-எ

பொங்குபுனலாறுபலபோயவிழ்கடற்போ
லெங்குமுளநல்லுயிர்களெய்துமொளியாருந்
திங்களணிவேணியரிருப்பரியடிசேருந்
துங்கமறையாளர்பலர்துன்றுமெதுமென்றூர்

(இ-ள்) மிகுந்தசலத்தையுடைய அனேகநதிகளோடிப்போய்வீழ்கின்ற ஒருகடலைப்போல உலகமெங்குமுள்ள சுதந்தரமாகவுடைகின்ற சோதியாகிய மூன்றாம்பிறையைத்தரித்த சடாபாரத்தையுடைய பரமசிவன் அவ்வாவிருக்க அவருடைய பாதங்களையடைகின்ற உபாசகவேதியராகிய திருவாதவூரர்பலபேருந் நெருங்கிச்சொல்லுகின்ற அந்தமாகமமாகவே வந்தாரென்றவாறு. (௰அ)

வேறு.

செம்மனத்திவாதவூர்ச்செல்வர்தம்மைப்புல்லாத
பொய்ம்மயக்கந்தரும்பாசம்போலமலர்க்கள்பூவை
மெய்ம்மயக்குமொழிப்பாருக்கினிப்பிறவியில்லையெனக்
கைமறிக்குமவர்போலமாந்தளிர்கள்காந்தள

(இ-ள்) அந்தமார்க்கத்திலேநிலைமையையுடைய திருவாதவூரிற்பிறந்தமாணிக்கவாசகரை அடையாத பொய்யாகியமயக்கத்தை விளைக்கின்ற பாசம்போலகாயாமரங்களில் கரியமலர்கள்மலர்ந்தன எந்தமயக்கமுமநீக்குமிவருக்கு இனிமேல்பிறப்பில்லையென்று கையைமறித்துக்காட்டுமவர்போல அயலிருக்குங்காந்தளெலாமலர்ந்தன—எ-று. (௰கூ)

விற்காட்டுங்கரத்துமதனம் பாகிவெம்பிறவி
பிற்காட்டும்பாவனையு மாருலகுசெய்பெம்பாவை
நிற்காட்டியொழிப்பவரார் நீயருகவெமக்கென்று
பற்காட்டிநிற்பவர்போன் மலர்ந்தனமென்பனிமுல்லை

(இ-ள்) கருப்புவில்லைக்காட்டிய கையையுடைய மன்மதனுக்கு ஓரம்பாகியபாவனையும் வெய்யபிறப்பிலேவிட்டு வருத்தஞ்செய்கின்றபெயங்கள்பாவத்தை உனைக்காட்டிலும நீக்குபவர்கள்யாவர் நீஎங்களுக்கநுக்கிரகஞ்செய்யென்றுபல்லைத்திறந்துகொண்டுநிற்பவர்போலத்திருவாதவூரரேஎதிராகமலர்ந்துநின்றனமிருதுவாகியகுளிர்ந்தமுல்லைகள்—எ-று, (உ௰)

பொற்புடையதமிழ்பாடும் புண்ணியரெப்பொருளினுமங்கு
சிற்பரனுண்மையிலவிழிக்குந்திருநயனஞ்சோதனிலா
னிற்பதாம்பிறவியிது வெனவிரங்கிக்கண்மரங்கள்
சற்பனையயுணர்ந்துமலர் கண்ணீர்கள்பொருந்தனவால்

(இ-ள்) அழகிய தமிழ்வேதம்பாடுகின்றபுண்ணியராகியதிருவாதவூரர்எந்தப்பொருள்களிலும் கலந்துநிற்கும் அறிவுருவனாகியபரமசிவன் உண்மையாக நோக்கிச்செய்யும் சட்சுதீக்ஷையைப் பெ

றுகிறபடியால் இந்தப்பிறப்புஉலகங்கொண்டாடத்தக்கதாய் விம்பமென்று இரக்கமுற்று நெடியமரங்கள் அந்தமகிமையையறிந்து மலர்ந்து தேனாகியகண்ணீர்கள்பொழிந்தனவென்றவாறு. (உ௧)

முன்னைவினைப்பெருங்காடு மூடிறவம்புலவேடர்
துன்னியலைத்திடர்செய்யுந் துன்பவழிசெல்லாம
லுன்னருநற்சிவஞானவுபதேசந்தமிழ்செய்வர்
ரின்னலைத்துளகானமெய்தியவன்னெறிநீங்கி

(இ-ள்) பழவினையாகியபெரியகாடுமூடப்பட்டதாய் ஐம்புலன்களாகியவேடர்கள்நெருங்கி அலைந்துவருத்தஞ்செய்கின்ற துன்பவழியிலேபோகாமல் யாவராலும்நினைத்தற்கரிய சிவஞானவுபதேசத்தைத் தமிழ்ப்பாடல்செய்யுந் திருவாதவூரர் இப்படிப்பட்டதாயுள்ள காட்டுவழியைக்கடந்தனரென்றவாறு. (உ௨)

வேறு.

விரிந்தகடலுக்கிடை விழுந்திடருழந்தே
திரிந்தவர்நயந்துகரை சென்றணுகுமாபோல்
வருந்தவுழல்விக்கும்வினை யொருத்தகருள்வசத்தா
லருந்தவர்பெருந்துறை மருங்கினிலணைந்தார்

(இ-ள்) விசாலமாயுள்ள சமுத்திரத்தின்நடுவே விழுந்து துன்பப்பட்டலைகின்றவர்கள் சந்தோஷத்துடனே கரையையடைந்தது போல் தம்மைவருத்தும்படி இழுவைக்குமவருத்திய இருவினைகளுமொழிந்து திருவருளினாலே மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்குச் சமீபத்திற் சேர்ந்தார்—எ-று (உ௩)

இந்தவுலகஞ்சிவனிருக்குமுலகா
சிந்தையருள்கொண்டுதிருவாசகமுரைப்பார்
பந்தமறவந்தமில்பரகதியுறுகவென்றே
வந்துளபெருந்துறையினவண்மைபுனைசெய்வாம்

(இ-ள்) இந்தவுலகஞ்சிவலோகமாகமனநிலையிருப்பைக்கொண்டு தமிழ்வேதமாகிய திருவாசகமுரைக்கும் திருவாதவூரானவர் பாசநீக்கமுடிவில்லாத பரகதியையடையும்படி வந்துசேர்ந்த திருப்பெருந்துறையினதனைச்சொல்லுவாமென்றவாறு, (உ௪)

மாத்தியர்குலத்தலைவர்வன்பிறவிவெவ்வத்
தீர்த்துலகனையருள்செய்யுமிடமென்றே
தோத்திரமுரைத்துமிசைவந்துசராசிந்தும
பூத்திரளுதிர்க்குவகை போன்றுதலர்பொங்கர்

(இ-ள்) ஆமாத்தியர்குலத் தலைவராகியமாணிக்க வாசகருடைய வலிமைபொருந்திய பிறவித்துன்பத்தைத்தீர்த்து லோகநாயகராகிய பரமசிவன் அனுக்கிரகஞ்செய்ய வந்தவிடமென்று தோத்தி

சஞ்செய்தும்மலர்ந்துத்தவளைகள் புதைபக்திரள்களுதிர்க்க
துபோர்விருந்ததுமலர்ந்திருக்கின்றபூஞ்சோலையென்றவாறு (உரு)

வேறு,

பேறளித்துதவாறுயல்வோமென்றுபெருந்துறைநாடி
யாறியயனியிலாகத்துமேவாநீக்கவெதிரிபயவர்போம
க்கூறுமின்பயிழல்செய்யுமருளைநந்தபத்தியுட
னேமணிந்துசோதேந்திரின்றனதுனறியகைகை

(இ-ள்) பெறவேண்டியபின்னைதென்று தெரிந்து அதைப்பெறத் தவஞ்செய்வோமென்று திருப்பெருந்துறையைக்குறித்து வழிந டந்திளைக்கும் மாணிக்கவாசகர் கொண்ட ... இ னபமாகிய நிழலைச்செய்து, குளிர்ந்தலாக அன்புடனே திருநீறணி ந்த திருவுருத்தையுடையவர்களைப்போலவே காந்தப்பொடிகளைப்பூசிக்கொண்டு வெள்ளியமலர்களைப்போ ந்திருந்தன நெருங்கியதாளிகளென்று, (உ௭)

நிலக்களிலவந்தொருந்நந்தீட வேலெபவயலநங்
கலந்தபொருளிருந்தபடி கவிபகைகளிப்பெயர்க
துலையிபகங்களா நந்தொரிந்துகாயகுவிந்துருக
மலாந்தபெருந்தவாபோலமை தனையுணரியகள

(இ-ள்) பூலோகத்திலேவந்து ... கமுழவிலே எந்தவலகத் திலுங்கலந்தவஸ்துவாகிய பரமசிவமொழுந்தருளியிருந்தபடிக ளைமனமகிழச்சிபடைந்து விபாகபமறக்கைகளுடைய சனை ரீஞானசமொரிந்து கைகூப்பிந்து புசமலாசசியடைந்த பெரிய போதனர்களைப்போல ஒளிபொதிபுந்தேயறிய நீரொரசொ ரிந்து அருமயாகிய கைகளாக குவித்துமலர்ந்தன தாமரைகளென்று

ஆன்றபயனிறொப்பாவத்தினிமையுளதாகத்
தோன்றியநலலவியினபோறறுமைமையெழுந்தனகன்ன
லென்றநலமாகாநமதினைறவாறநீடிலவா
வானமைகயிலேபோலவுநொந்துவிளைந்தனசெந்நெல்.

(இ-ள்) நமக்குள்ளே நிறைக்குபிரபோசனத்தை அன்னியர்புசி க்கஉள்ளே இனிப்புள்ளதாகத் தோன்றிய நல்லஅறிவாளர்கள் போல இனிப்புள்ளாசம நிறைந்தெழுந்தொழுந்தன கருப்பஞ் சருப்புகள் நல்லகுலத்திலே பிறந்தகற்புடையஸ்திரிகள் தங்கள் புருஷனைக்கண்டால் மேலாகிய அவர்கள் தன்மைபோலசெந்நெ லக்கொலலாந்தலைவணங்கிவிளைந்திருந்தன-எ-று. (உஅ)

ருலைக்கிரிபுயகருங்கூந்தன்மொய்வனமுமாணுகக்
கொலைபபுருவமெனசாபங்குளித்துவிழிக்கணைபேவி
நிலைபபொருந்தபொருட்டேடினைந்துதவநீணெறியிற்
றலைப்பெவர்தமைவருத்துந்தன்மையினர்வயன்மாதர்

(இ-ள்) பள்ளஸ்திரீகளின் தனங்களுடைய ஸ்தனமாகிய மலைகளையும் கரியகூந்தலாகிய செருக்கியகாடுகளையும் கோட்டைகளாகக்கொண்டு கொல்லுகின்ற புருவங்களாகிய வெவ்விய வில்லுகளை வளைத்துக் கண்களாகிய பாணங்களைத் தொடுத்து அழிவற்ற நல்லபொருளைத் தேடி நினைத்து கொடிய தபோமார்க்கத்திலே செல்வாராகிய மாணிக்கவாசகரை வருந்துகின்ற தன்மையுடையாரானார்-எ-று. (உ௯)

வேறு.

இன்னவகைமன்னிவளர் காவுமெழின்மேவுங்
கன்னல்வயலுந்திகழ்நல் கண்டிவனைக்கொண்டே
மன்னனுடலம்பெறவினிப்புவியில்வாரா
யின்னவர்பெருந்துறைவளம்பதியில்வந்தார்

(இ-ள்) இந்தப்பிரகாரம் நிலைபெற்று வளர்கின்றசோலையும் அழகுபொருந்திய கருப்பஞ்சாறுமிகும் பிரகாசிக்கிற திருக்கலைப்பார்த்து மகிழ்ச்சியடைந்து துன்பத்துக்கிடமாகிய தேகத்தைப்பொருந்தாது இனிப்பூமியிலே வாராதமாணிக்கவாசகர் வளங்களையுடைய திருப்பெருந்துறையில்வந்து சேர்ந்தார்-எ-று. (௩௰)

மாதவர்பதிபுகுந்துழிமருங்கே
நாதனுறைதண்டலையினைதபுனைகொண்ட
போதனுசிவாகமவொலிபொலிவுசேரா
யாதின் கதிநதுணையினைவலர்களென்றார்

(இ-ள்) மகத்தாகிய தபோதனர்நிறைந்துள்ள திருப்பெருந்துறையிலே புகுந்தவிடத்திலே அந்நீர் தூறாததமாய பரமசிவனென்னூர்க்கருளி யிருந்த சோலையினிடத்திலே நன்மைமிகுந்த அடியார்கள்படிக்கின்ற சிவாகமங்களின்முழக்கத்தைக் கேட்டு இதுயென்னசத்தம தெரிந்துவந்து சொல்லுங்கள் தூதர்களேயென்றார் மாணிக்கவாசகர்-எ-று. (௩௧)

சென்றவர்கள்வந்துசிவபத்தர்பலர்சூழ
கொன்றைமுடிவைத்தருணெறைபரிகரொருபார்
நின்றதொருகுருந்தமரநீழலிலிருந்தா
ரொன்றலுமகிழ்ந்தனரினிப்பிறவியில்லார்

(இ-ள்) அப்படிசொல்லக்கேட்டுப் போய்ப்பார்த்த தூதர்கள் வந்து அநேகம் அடியார்கள் தம்மைச்சூழ்ந்திருக்கச் சடாமுடியிலே கொன்றைமாலிகை தரித்தகருணைமலையாகிய பரமசிவனுக்கு ஒப்பானஒருபெரியவர் அங்கேயிருக்கின்ற ஒருகுருந்தமரநிழலிடத்தே இருக்கின்றாரென்றலும் மகிழ்ச்சியடைந்தார் இனிப் பிறவியில்லாராகிய மாணிக்கவாசகர்-எ-று, (௩௨)

ஏவலருரைத்தமொழி கேட்டரனையெய்து
மாவலொடுகொடுவினையறுத்தகமலர்ந்து

மேவியமணிச்சிவிகைவிட்டினிதிழிந்தே
தேவர்பரவும்பரமர் தெய்வசபைகண்டார்

(இ-ள்) தூதர்கள்சொன்னசொல்லைக்கேட்டுகுருமூர்த்தமாவெ ழுந்தருளியிருக்கின்றபரமசிவனைசேரவேண்டுமென்கிறஆவலுட னேஅந்தச்சோலையிற்சேர்ந்து மனமலர்ச்சியுடனேதாமேறிவந்த ரத்நசிவிகையினின்றும் இனிமையுடனேஇழிந்து தேவர்களால் வணங்கப்பட்ட மேலாகிய தெய்வச்சபையைக்கண்டார் திருவாத வூரரென்றவாறு, (௩௩)

வேறு.

அண்டமெலாங்கடந்தபொருளபகருநூலி னளவுரைப்பார்தெ ளிந்தயவராய்வராகித், தொண்டுபடுமடியார்தநூறறொன்பான் மேற்றொன்றுநூற்றொனபூானென்னுந்தொகுதிசூழ, வொண்டொ டியங்கினனிருப்பவிருப்பாலெய்தியுடனுரைத்துசசிவஞானமுணர் வாரன்பு, மண்டியநெஞ்சினில்வணங்கிவணஙகார்போல மந்திரி யூர்மேனமையுடன்வந்துநின்றார்.

(இ-ள்) அண்டங்களெல்லாங்கடந்த பொருளாகிய கடவுளாற் சொல்லப்படடவேதாகமஙகளுடைய அளவைகளைசசொல்லுவா ரும் அவைகளைத்தெளிந்து ஆராயைபபடுவாரும்ஆறாய்வாருமாகி அடிமைப்படுமடியார்கள் தொளாயிரத்துத்தொணணூற்றொன்ப துபேர்கள் சூழ்மபடி உமாதேவியை யொருபாகத்திலே யுடைய பரமசிவ னெழுந்தருளியிருககை விருப்பத்துடனே அவ்விடத்திலடைந்து அன்புபெருகிய மனத்தால வணஙகிககாயத்தால்வணங் காதவர்போலமேன்மையுடனே வந்துநின்றார உடனேசிவஞான தனதப்பெறுவராகிய மாணிககவாசகரென்றவாறு, (௩௪)

உருத்திராக்ஷத்திருமணியையிலங்குகாதி லொண்சிரத்திற்கந்த ரத்திலொளிகொண்யார்பிற, காத்திலணிந்திலகு திருமுண்டமங் கிகணகரந்தநன்னுதன்மேறகவின்சாதித், திருத்திகழும்வேதிய ராமு பொன்மேனித்திகழ்வதுகண்டகமகிழ்வார் செஙகைமீது, பொறுததமுறுமபுத்தகமேதையாவென்னபபொய்ம்மையில்லாச் சிவஞானபோதமென்றார்,

(இ-ள்) அழகியருத்திராட்சத்தைவிளங்குகிறசெவியிலும்ஒளி யையுடையசிரசிலும் கண்டத்திலுமவிளங்குகின்றமார்பிலுமகை யிலுமணிந்து ஒளியையுடையவிபூதியைதிரிபுண்டரமாகஅக்கினி கண்ணையொளித்தநல்லநெற்றியிலே அழகுபெறத்தரித்துச்சிற ப்புப்பொருந்தியவேதியருடைய அழகியபொன்னையொத்த திரு மேனிப்பிரகாசிப்பதைக்கண்டு மனமகிழ்ச்சியுறுவராகியமாணிக் கவாசகரானவர்அவரைநோக்கிஐயாசிவந்ததிருக்கரத்திலேபொ ருந்தியிருக்கின்றபுத்தகமென்னவென்றுகேட்கஅப்பெரியவர்மெ யமமையானசிவஞானபோதமென்றருளிச்செய்தாரென்றவாறு.

# ௨௧ திருப்பெருந்துறைச்சருக்கம்

என்றீலுமேசிவமேது ஞானமேதிங்கிலங்கியிடும்போதமேதெ
யம்புவீரோ, லன்றுவடநிழலில்வந்திருந்தார்நீரோ, யடியேனுமும
க்கடிமையாவேனென்ன, நின்றசிவமொன்றதனைத்தேர்தன்ஞான
நிகழ்போதந்தேர்ந்ததனைத்தெளிதலாமென், றென்றியனற்பொ
ருளவினவினிறபார் சிந்தையுருகும்வகையுரைசெய்தாருவமையி
லலார்,

(இ-ள்) சிவஞானபோதமென்று அவர் அருளிச்செய்தவுடனே சிவமாவதென்ன-ஞானமாவதென்ன - விளங்குகின்றபோதமாவதென்ன-இவைசொல்லீரோயானால - அநநாளிலகலாலவிருட்சத்தினகீழெழுந்தருளியிருந்தவர்நீரோ அடியேனுமஉமக்கடிமையாவேனென்றுசொல்லச்சிவமென்றது ஒப்பற்றமெய்ப்பொருள் ஞானமென்றது அதனைத்தெரிதல போதமென்றதுதெரிந்ததைத் தெளிதலாமென்று பொருந்தியஇந்தயேலானபொருளைவினவின றதிருவாதவூராருடைய மனமுருகும்படி அருளிச்செய்தாரதமக்கு நிகரில்லாதகுருமூர்த்தமாயவந்தபரமசிவனென்றவாறு,(௩௬)

வேறு.

உத்தமரின்னவாறிங் குரைத்தலுமுவந்துநாலாரு
சத்தினிபாதமெய்துதன்மையராதலாலே
யத்திருமன்றுளாடுமையரிங்கெனையாள
வித்திருமேனிகொண்டாரெனபதுமனத்திலெண்ணி

(இ-ள்) உத்தமராகியபரமசிவனுனவர் இந்தப்பிரகாரஞ்சொன்னமாத்திரத்திலேமகிழ்ச்சியடைந்து இருவினையொப்புமலபரிபாகமடைந்து அதிதீவிரபக்குவமடையுந்தன்மை பொருந்தியவராகையினாலே அந்தப்பொன்னம்பலத்திலே திருக்கூத்தாடுகின்றஐயரே-இங்கேயென்னை யாளும்பொருட்டுக்குருவடிவமாகிய இந்தத் திருமேனித் தாங்கிக்கொண்டு வந்தாரென்று மனத்திலேநினைத்தாரமாணிக்கவாசரென்றவாறு, (௩௭)

மின்னுநிலைமயிலலாவிழுபபொருளியாவும்வேண்டே
னுன்னடியணைந்தூர்யேனுழுபவமொழிதல்வேண்டு
மென்னையின்றடிமைகொள்வாயெம்முயிர்க்கிறைவாவென்று
முனனுறவணங்கிநின்றார்முகமெலாங்கண்ணீர்வார

(இ-ள்) மின்னலைப்போல நிலையில்லாத துக்கத்தைத்தருகின்ற பொருள்களியாவையுமவிரும்பமாட்டேன உன்னுடையதிருவடியைச்சேர்ந்து அடியேன்பொருந்தியஜனனத்தை நீக்கல்வேண்டுமென்னை இன்றைக்கு அடிமையாகக்கொள்வாம் எங்களுடையஉயிருக்குஇறைவனேயென்று முன்னேபொருந்தவணங்கினார் முகமெல்லாங்கண்ணீரொழுகவென்றவாறு, (௩௮)

இவ்வகைபுகன்றுமுன்னேன்முன்னுறவிரங்கிநிற்பத்
திவவியதாரமேயான் செயதியொன்றுநாடி

யவ்வடியவரின்மிக்காரொருவரிவ்வடிமைதன்னை
வெவ்வினையகற்றியாளவேண்டுமென் றிறைஞ்சிநின்றார்

(இ-ள்) மாணிக்கவாசகரானவர் இந்தப்பிரகாரஞ்சொல்லிக்குருவடிவங்கொண்டுவந்த முன்னோனாகியபரமசிவனுடைய திருமுன்னே இரங்கிநிற்ப இவர்மோக்ஷவிருப்பங்கொண்ட அதிதீவிரபக்குவத்தையுடையவரென்று அறிந்து அந்தஅடியார்களில் மிக்கவொருவரொழிந்து இவ்வடியாருடைய பொல்லாதவினைகளைநீக்கிரட்சிக்கவேண்டுமென்று வணங்கிநின்றாரென்றவாறு. (௩௬)

கருப்புகவினையார்தம்மேற்கண்ணருள்செய்துநெஞ்சிற்
பரப்பறமிதித்தல்வேண்டியெடுத்தபொற்பாதங்கொண்டு
திருப்புனைமறையோர்போற்றத் தில்லையம்பலத்தேநின்ற
வருட்பரானந்தவாரியாதலினதமிசைந்தார்,

(இ-ள்) இனியொருகருப்பத்திலே சென்றுபுறத்தலைவினையாதவராகிய திருவாதவூரரிடத்திலே கிருபைவைத்து அவர்மனத்தின் விரிவுநீங்கமிதித்தலவேண்டி தூக்கியபொன்மயமானதிருவடியைக்கொண்டுசெல்வமிகுந்த தில்லைமூவாயிரவர்போற்றசிதம்பரத்திலே கனகசபையிலேநடனஞ்செய்கின்றஆனந்தமாகியகிருபைக்கடலாகையினாலே அவர்வேண்டுகோளுக்கிசைந்தார்-எ-று, ()

அத்தகுபகலோன்முன்னரலர்செயுமம்புசாத
மொத்தவர்தம்மைநாடியுன்னையின்றடிமைகொள்ள
வித்தலத்தணைந்தோநீமுன்னியற்றியதவத்தினாலே
சித்தமிரங்கல்வேண்டாமெனத்திருவாய்மலர்ந்தார்

(இ-ள்) ஆயிரங்கிரணங்களைப்பரப்பிக்கொண்டு வருகின்றசூரியன்முன்னேவிகசிக்கின்ற தாமரைமலர்போன்ற திருவாதவூரரை நாடிப்பார்த்து உன்னை அடிமைகொள்ளும்பொருட்டு நீ முன்சனனத்திலேசெய்ததபோபலத்தினாலே இந்தத்திருப்பெருந்துறைக்கு வந்தோம்மனஞ்சஞ்சலப்பட்டு இரங்குதல் வேண்டாமென்று திருவாய்மலர்ந்தருளினார் குருசுவாமியென்றவாறு, (௪௧)

வந்துநான்வறுமையுற்றேன்மாற்றெனவிலம்பாடென்று
சிந்தையாகுலமுற்றான்கைசெழும்பொருளீதல்செய்வார்க்
கிந்தநாளளிக்கவேண்டுமெனவிதியின்மையாலே
யந்தநாளிந்நாளாகவடிமைகொண்டருளவெண்ணி

(இ-ள்) நான் மிகவும் வறுமையடைந்தேன் அதனைத்தீர்க்கவேண்டுமென்றுமனோதுக்கமடைந்துவந்தவொருவன்கையிலேநல்ல

திரவியங்கொடுப்பவர்க்கு இந்நாள் கொடுத்தற்குரியவரென்று பார்க்கும்விதியில்லாமையாலே அந்தநன்றாலே இந்நாளைக அடிமைகொண்டருள் வெண்ணியென்றவாறு. (௩௨)

அத்தருதொண்டர்கெல்லாமதிபராமவரைநோக்கி
வித்தமுடையோனெய்து மிடரொழித்தாள்வதின்னாள்
வித்தகவிதற்குவேண்டுமகருமநீவிரைவிற்செய்கென்
றுத்தமவடிவங்காட்டுமுண்மையாருரைத்தல்செய்தா

(இ-ள்) அப்படிப்பட்ட அடியவர்களுக்கெல்லாம்பெரியவராகி யஒருவரைப்பார்த்து இந்தத்தவமுடையவனடைந்ததுன்பத்தை நீக்கி இவனை அடிமைகொள்ளும்நாள் இந்நாளாகும் ஆகையினாலே சதுரப்பாட்டையுடையவனே இதற்குவேண்டியகாரியங்களை நீசீக்கிரத்திற்செய்வாயாகவென்று உத்தமவடிவங்கொண்டஉண்மையானகுருவானவருளிச்செய்தாரென்றவாறு, (௩௩)

முன்னவன்புகன்றவாறு முயலகுருமென்றேயந்த
மன்னுறுதவத்தினமிககார்வகைமலர்த்தெரியலாலும்
பொன்னிடையழுத்திமுத்தம்புனைந்தபல்பட்டினானு
மங்கெழுகாவினூடகானபூங்கோயில்செய்தே

(இ-ள்) பரமகுருவன் அருளிச்செய்தபிரகாரமுயன்றமுடிப்போமென்று நிலைபெற்றதவத்திலேயிருந்த அந்தககணநாதர் விதம்விதமாகியபூமாலைகளாலும் பொன்னையிடையிலே யழுததிமுத்துமணிகளால விசிம்புசெயத பலவகைபபட்டினாலும அந்தசெடிய சோலையினிடத்து அழகியகோயிலசெய்தென்றவாறு, (௩௪)

செய்தகற்கோயிலுமெசிறந்தவாசனமுஞ்சேர்த்து
மெய்தருதொண்டர்க்கெல்லாமிககவரிலுறவற்சார்ந்து
கைதவமுடையார்கெருசிற கனவிலுமகாணகில்லா
மைதருகளத்தாய்கோடடருசலமைந்ததுவாய்ப்பவென்றார்

(இ-ள்) அப்படிசெய்தகல்லகோயிலினிடத்திலே சிறந்தஒருஆசனமிட்டு உண்மையாகியஅடியார்களுக்கெல்லாம் மிருந்தஅந்தக்கணநாதர் குருசுவாமியினிடத்திற்சென்று வஞ்சனையுடையவர்கள்நெஞ்சிலே கனவிலுங்காணப்பெறாத நீலகண்டனே கோயில்வாய்ப்பாகச்சமைந்ததென்றுசொன்றவாறு, (௩௫)

ஆயிடைக்குடபால்வெற்பிலாதவன்கரந்துஞாலம்
பாயிருள்பரந்தபின்புகடிகையோர்பதினைந்தாகி
மேயநல்லுயிர்களெல்லாம்விழிதுயில்பயிலுங்காலை
தூயதொண்டர்க்குமாயைதொலையுநல்லுணர்வுதோன்ற

(இ-ள்) அப்போது மேற்குத்திசையிலுள்ள அஸ்தகிரியிலே சூரியன் மறைந்து உலகத்திலே யிருள்பரவிய பின்பு பதினைந்து நாழிகைவேளையிலே உயிர்களெல்லாம் நித்திரைசெய்யும்போது பரிசுத்தராகிய திருவாதவூரர்க்குமாமலநீங்கும்சமயம்வந்துதோன்றவென்றவாறு, (சசு)

இங்கிவர்தம்மைமீளுங்காலமீதென்றுதெய்வ
சங்கமதகன்றுமுன்னோன் மஞ்சனசாலைசார்ந்து
குங்குமம்புழுகுசாந்தங்குழைத்துமெய்முழுதும்பூசிக்
கங்கையினனீர்வாசங்கலந்தமென்பனிநீராடி

(இ-ள்) இவ்விடத்திலே இவரை ஆட்கொள்கின்றகாலமிது தானென்று தெய்வசபையைநீங்கிக் குருசுவாமியானவர் திருமஞ்சனசாலைக்கெழுந்தருளிக்குங்குமம் புழுகு சந்தனமுங்குழைத்துத்திருமேனிமுழுவதும் பூசிக்கங்காதீர்த்தத்தாலும் வாசனைகலந்த குளிர்ந்தநல்லபனிநீராலும் ஸ்நானஞ்செய்து-ஆ-று.

மெய்ப்புனைதுகிலான்மாறுவிலைமதிப்பில்லாநல்ல
வொப்பருஞ்சமபட்டாடையுடுத்துயர்கோட்டமெய்திச்
செப்பிளமுலையாள்பாகன்றெனுமிசையதனைநோக்கி
யப்பெருந்தவிசின்மேலழகுறவிருந்தபின்னர்

(இ-ள்) திருமேனியிலே பொருந்தியநீரைத் திருவொற்றாடையாலொற்றி ஒருவராலும் விலைமதிக்கப்படாத நல்லதைப்பற்றி வந்தபட்டுப்பரிவட்டத்தையுடுத்தி உயர்ந்தகோயிலிற்சென்று செப்பையொத்தஇளமைபொருந்திய முலையையுடைய உமாதேவிபாகனாகிய கடவுள்தெக்ஷிணாபிமுகமாக அந்தப்பெரிய ஆசனத்தின்மேல அழகுபொருந்த விருந்தபின்னென்றவாறு. (சஅ)

அண்டருமலர்தூயேத்துமன்பருந்தூய்நீராடி
வெண்டுகில்புனைந்துநீறுவிளங்கியமெய்யராகி
முண்டகமலர்த்தாள்வைத்தமுந்தியதெருளமேனி
கொண்டவர்திருமுன்சென்று குறுகியுவகைகூர்ந்து

(இ-ள்) தேவர்களும் மலர்களைத்தூவியேத்துகின்றதிருவாதவூரரும்பரிசுத்தமாகிய நீரிலேஸ்நானம்பண்ணி வெள்ளைவஸ்திரமுடுத்துக்கொண்டு விபூதிதரித்ததேகத்தையுடையவராய்த்தமதுசிரசிலே தாமரைமலர்போன்ற திருவடிகளைவைத்து மோக்ஷங்கொடுக்கத் திருமேனிகொண்டுவந்த ஆசாரியருடைய திருமுன்னேயிருந்த மகிழ்ச்சியடைந்துசேர்ந்தென்றவாறு, (சகூ)

விண்ணவரதிபன்பொற்றுள்விளங்கியர்ச்சனைமுன்செய்து
தண்ணமர்பனிநீர்தோய்ந்தசாந்தமெய்ம்முழுதுஞ்சாத்தி

# ௩௰ திருப்பெருந்துறைச்சருக்கம்.

வண்ணமென்கழுநீர்மாலைவளம்பெறவணிந்தபின்னர்க்
கண்ணுறுபரிவுதீரகண்டனைமகிழ்ச்சிகொண்டு

(இ-ள்) தேவர்களுக்கிறைவனாகிய பரமசிவனுடைய அழகியதிருவடிக்குமுன்னே அபிஷேகஞ்செய்து அருச்சித்துக் குளிர்ச்சிபொருந்திய பனிநீராளாவியசந்தனத்தை அழகியதிருமேனிமுழுவதும் பூசிச்செங்கழுநீர்மாலையை வளமபொருந்தத்தரித்தபின்புகண்களைப் பெற்றஆசைதீரக்கண்டு மனமகிழ்ச்சியடைந்த-எ-று,

பருப்புடீருவிகோரப்பழச்செழுந்துருவல்சேர்த்துச்
சருக்கரைகலந்துபாலிற்சமைத்தநல்லமுதுதன்னை
யிருத்தியகனககான்மேலிலங்குபொறகலத்திமீது
விருப்பொடுபடைத்துநெய்யமிகக்ழுக்கனியும்பெய்து

(இ-ள்) பருப்புடனே செழுமைபொருந்திய தேங்காய்த்துருவலும்சேர்த்துச்சருக்கரைகலந்தபாலிலேசமைத்ததிவ்வியமாகியதிருவமுதினைப்பொன்னினாற்செய்தநாற்காலியினமேல் பிரகாசிக்கின்ற பொறகலத்திலே அனபினுடனேபடைத்து நெய்யும்வாழைப்பழமும் மாமபழமும் பலாபபழமும பெய்தென்றவாறு,(௫௧)

மாலயனைவ்லாரிமற்றவானவர்பிழைக்கமுன்னு
ளாலமுண்டவனேநல்லவமுதமுண்டருள்வாயென்று
சீலமாமகிழசசிபொஙகுஞ்சிந்தையினுடைப்பக்கால
காலனுமுணடுதீராயகரமலாகழிஇன்பின்னர்

* (இ-ள்) மகாவிஷ்ணுவும் பிரமதேவனும் இந்திரனும்மற்றதேவர்களும பிழைக்குமபடிமுன்னாளிலே விஷத்தையுண்ட கடவுளே நல்லஅமுதையுண்டருள்வாயென்று நலலகுணமும் மகிழ்ச்சியும் பொருநதியமனத்தோடு வேண்டிககொள்ள அவ்வேண்டுகோளின்படியே பரமசிவன் அமுதுசெய்து சலததினாலே கைபூசிய பின்னென்றவாறு, (௫௨)

வெள்ளிலைபழுக்காய்நல்கிவிரைதருதூபதீபங்
கொள்ளுநறுநேசுகாட்டிக்கோலநன்னீறுசாதகித்
தெள்ளொளிவிளங்குமாடிதிருந்தமுன்பிகழ்வித்தெந்த
முன்னவர்முடிமேலோங்கவொண்குடைகவித்தல்செய்து

(இ-ள்) வெள்ளைவெற்றிலையும் பாக்குங்கொடுத்து வாசனையைத்தருகின்ற தூபதீபஞ்செய்து அழகியதிருநீறுதரித்துத் தெளிந்தஒளிவிளங்குகின்ற கண்ணாடிகாட்டி எங்குலமுதல்வராகியபரமாசாரியருடைய முடியின்மேல் ஒளியையுடைய பட்டுக்குடைபிடித்தென்றவாறு, (௫௩)

கற்றைவெண்கவரிசெம்பொற்காம்புநீடாலவட்டம்
பற்றியன்புடனேவீசிப்பரிவுடனடியாசூழப்
பொற்றவிசிடைமேவும்புண்ணியன்றிருமுன்பைம்பொ
ற்றறஞ்கையுடனேவாதவூரரிருந்தபின்பு.

(இ-ள்) கற்றையாகிய வெள்ளியசாமரையும் சிவந்தபொன்னாற் செய்த நெடியகாம்பையுடைய ஆலவட்டமுமவைகளையன்புடனே வீசியடியார்கள்சூழப்பொன்னாற்செய்த ஆசனத்திலே எழுந்தருளியிருக்கின்ற புண்ணியசொரூபராகிய தேசிகோத்தமருடைய சந்நிதிமுன்னேமலரை இரண்டுகைகளிலுமேந்திக்கொண்டுதிருவாதவூரராகவிருந்தபின்பென்பதாம், (௫௪)

மந்திரம்பதங்கள்வன்னம்புவனங்கடத்துவங்க
ளாந்துறுகலைகளெனுமறுவகையாகறியநடுய
சிந்தனைக்கரியமேலைச்சிவத்துடனறிவுசேரப
பந்தனையொழிவார்தமமேற்பரிந்தருட்பார்வைசெய்து

(இ-ள்) பதினொருமந்திரங்களும் எண்பத்தொருபதங்களும் ஐம்பத்தோரக்ஷரங்களும் இருநூற்றிருபத்துநாலு புவனங்களும் முப்பத்தாறுதத்துவங்களும் ஐந்துகலைகளுமாகிய ஆறத்துவாக்களையுமதிக்கிமுடிவாகியமனதுக்கெட்டாதமேன்மைபொருந்தியசிவத்துடனே அறிவுபொருந்தப் பாசக்கட்டுக்குள் நீங்குவாராகிய மாணிக்கவாசகர்மேல் அன்புவைத்துக் கிருபாநோக்கஞ்செய்தென்றவாறு, (௫௫)

எவர்க்குமெஞ்ஞானமாமஞ்செழுத்தையுமுணர்த்தவேண்டி
யவத்தொழிலகற்றியாருமறிதகைமுனருகமாற்றித்
தவப்பெருவடிவங்கொண்டதண்டமிழ்ப்பாடல்மன்பர்
செவிப்புலன்வழிவேசிதையுறத்திருவாய்மலர்ந்தார்

(இ-ள்) பெரியதவவடிவங்கொண்டெழுந்தருளிவந்த ஞானதேசிகர் அதிதீவிரபக்குவரெவாதவூரர்தம் உண்மையறிவாக விளங்கும்படிபஞ்சாக்ஷரத்தை அறிவிக்கவேண்டி அவத்தொழிலை நீக்கியாருமறியகூடிய சிவத்தைமுனருகமாற்றிக்குளிர்ந்த தமிழ்வேதம் பாடுகின்ற அன்பராகிய திருவாதவூரருடைய காதினிடத்தேமனத்திலே பொருந்தத் திருவாய்மலர்ந்தருளினரென்றவாறு. (௫௬)

வேறு,

விரவுமன்பொருவடிவுகொண்டனைவர், விழித்தபார்வையி
ன்விளக்கின்முன்னிருள்போற், கருதிசெந்தமிழாகியமொழியா
ர்தொலைவிலாதஜெவக்குயரிப்புவமொழிந்து,பரவிமென்பதம்பணி

பவர்படிமேற்படிய வீழ்ந்தனர் வாழ்ந்தனர் பரிவான், மருவுமிங்கி லாசெனலிரியிலிருங்காண் மகிழவைத்தனாமதிநதிருமுடிப்பார்,

(இ-ள்) கலந்தஅன்பே ஒருவடிவமாகக்கொண்டு வந்தருளிய பரமசிவனுடைய பார்வையினாலே விளக்கினமுன்னே யிருள்கெடுவதுபோலவே வந்ததைத்தமிழ்ப்பாடியமாணிக்கவாசகர் நீங்காத வெவ்விய துன்பத்தைத்தரும் பிறவியொழிந்து துதிசெய்து மெல்லிய ஸ்ரீதிருவடியை வணங்குபவராய பூமியிலேபடியவீழ்ந்து வாழ்ந்தார் பதவியையுடைய இவரது சிரசிலே மகிழும்படி இரண்டு திருவடியுஞ் சூட்டினார் சந்திரனையுங் கங்கையையுமுடித்த பரமசிவனென்றவாறு, (௫௭)

மன்னுமுன்னுளவுயிர்க்கரணங்கள் மாய்ந்துபொய்முதல திலிழந்தருளால், முன்னுமின்னருட்சிவகரணங்க டோன்றலாற்சு கவறிவதிறமேன்றிச-சென்னியின்மிசைமேவியபாதந் திருந்துக ண்ணிணை சேர்த்திருத்தா- லுன்னலசெயநின்றிதயமேலணை வித்துவகைகூர்ந்துமெய்யுணர்ச்சியெழுந்தார்,

(இ-ள்) நிலைபெற்ற முன்னிருந்த பசுகரணங்களெல்லாங்கெட்டுத்திருவருளினாலே பொய்மமுதலாகிய முன்னறிவுபோய்க்கிருபைமிகுந்த சிவகரணங்களாகத் தோன்றலால் சுகவறிவு அதிலேயுண்டாய்ச்சிரசின்மேலே வைத்தபாதத்தை இரண்டுகண்களிலுஞ்சேர்த்துக்கொண்டு இரண்டுகையினாலும் நினைக்கின்ற இதயமாகியமாரியிலே அணைத்துக்கொண்டு மனமகிழ்ச்சியடைந்து மெய்யுணர்வுடனேயெழுந்தார் திருவாதவூரரென்றவாறு, (௫௮)

மேலையத்தலத்திந்திரனிமையோர் மீதேலாமபொழிவிரைம லர்மழையே, போலவித்தலமுழுதையுமறைத்திடப்பூதருங்கணநாத ருமகிழ்ச்சாலநற் குணமுமுடைய நல்லடியார்தங்கள்செங்கையி லொளியலுந்தயங்கு-மாலவட்டமுங்கவரியுமிருபாலசையமாமு னிக்கணமடிவணங்க.

(இ-ள்) மேலுலகத்திலிருந்து தேவேந்திரனும், தேவர்களும் மேலாதாவுகின்ற வாசனைபொருந்திய புட்பமாரிபோல இந்தப் பூமிமறையும்படி அசசோலையிலிருந்து மலாசளுதிரப் பூதகணங்களும்கணநாதரும் மனமகிழ்ச்சியடைய மிகுந்தநற்குணத்தையுடைய நல்லடியார்கள் தங்களுடைய சிவந்தகைகளிலே தொண்டமாலைகளும் பிரகாசிக்கின்ற ஆலவட்டங்களும் வெண்சாமரைகளும் இரண்டுபக்கங்களிலும் அசைய மகத்தாகிய முனிவர்கூட்டங்களெல்லாமவணங்கவென்றவாறு (௫௯)

இருந்தவப் பெருங்கருணையனைத் திரோபெய்தி யன்புடையியல் பினரிறைஞ்சிச், சிரதனிற மகிழ் கரங்குவியாச் சிறந்த போருணி றைந்த செயலையாராய், வருந்தியித் தலம் வந்து மேற்பறந்து மாலயன் றேடிற்று முவகரிய நீயடியே, வருந்துயர்ப் பலமகற்றவிங் குருவமானதே யென வழுது தொழுதுசாரிந்தார்.

(இ-ள்) இப்படியிருந்த அந்தப்பெரிய கிருபையுடைய கடவுளிடத்திலே சேர்ந்து அன்புடைய திருவாதவூரர் நமஸ்கரித்துச் சிரசினிடத்திலே தம்முடைய இரண்டு கைகளையுங் குவித்துக்கொண்டு சிறப்புமபெற்று அதிக ஆசைமிகுந்தவராய் வருத்தப்பட்டு இந்தப்பூமியைத் தோண்டியும் மேலே பறந்தும் மகாவிஷ்ணுவும் பிரமனும் கண்டுவணங்கத்தகாத நீ அடியேனுடைய அரியதுயரைச் செய்கின்ற பிறவியை நீக்குதற்கு இங்கே குருவடிவங்கொண்டுவந்தது என்ன அருமையென்று அழுதுமனமுருகினாரென்றவாறு. ()

ஐயனே யெனையாண்டருள் புரியுமாதியே புரையணிமழுவிருக்குங், கையனே கொடுங்காலனையுதையுங் காலனே இருகண்மணியனைய மணியே, செய்யனே யடிபோற்றியென் பெரிய செல்வமே யடிபோற்றி பொய்யினர்தம், பொய்யனே யடிபோற்றியெவ்வுயிர்க்கும் போதமே யடிபோற்றியென்றழுதார்.

(இ-ள்) ஐயனே என்னை ஆண்டு கிருபைசெய்யும் ஆதியே அழகிய மானும் மழுவுமிருக்குங் கையையுடையவனே கொடிய யமனைக்கோபித்துதைத்த திருவடியையுடையவனே என்னுடைய இரண்டு கண்களிலேயிருக்கும் மணியே சிவந்த ரூபத்தையுடையவனே உன்னுடைய பாதங்களைப்போற்றி என்னுடைய பெரிய செல்வமே உன்னுடைய பாதங்களைப்போற்றியென்றழுதுருகினாரென்றவாறு. (௬௧)

அற்றைநாள் திருள்வைகறையெனும்போதணைதலும் பரனருட்குருவடிவங் கூறுசாந்துடன் மயங்கு செங்கழுநீர்த்தொடையிலங்கு மைபொருதெனத் துளங்கிக், கற்றுமான் கரத்தேந்திய விவரவங்கவின் வடியாருடன் விளங்கினார் களங்கமொன்றில்லார்,

(இ-ள்) அன்றைத்தினம் இருள்நீங்கி விடியற்காலம் வருதலும் அருளையுடைய குருவினது திருமேனியானது நிறைந்த சந்தனமும் சோதிசெங்கழுநீர்மாலையும் அசைமையாதவிற பொறுக்கமாட்டாதென்று கலங்கிமானையேந்திய கையையுடைய அக்கடவுள் அழகு பொருந்திய மார்பிலே அணிந்த சந்தனமாலை முதலியவைகளைக் களைந்து தம்முடைய அன்பர்களெல்லாம் நெருங்கு மடியார்களுடனே விளங்கியிருந்தார் களங்கமொன்றுமில்லாத மாணிக்கவாசகரென்றவாறு. (௬௨)

வாதவூரரையிறைபிர்தம் பெரிய மாயையோவிருண் மாய்ந்து பின்னவாபாற, போதமாமிலங்கு அசடாயினகம் போலவெயின

ஞ

ன்புணரியிற்றோன்ற, வேதநாதர்தம்மிருபதமிறைஞ்சுமெய்ம்மை
யாளரைவேறுகொண்டிருந்தங், கோதுமாகமத்தறிவரும்பொரு
ளை யுரைக்கவேண்டினந்தாரறமுரைத்தார்.

(இ-ள்) திருவாதவூரிலேதங்கியதலையானமாணிக்கவாசகருடை
யபெரியதாகிய அஞ்ஞானநீங்கினதுபோல இருள்நீங்கிப்பின்பு
அவரிடத்திலே விளங்கியசிவஞானமென்னுந்தீபம்போல்சூரியன்
கடலிலேஉதயமாகஅப்பேர்துதமது இரண்டுபாதங்களையுமவணங்
கியதிருவாதவூரரை வேறேஅழைத்துக்கொண்டுபோயிருந்து அ
ங்கேசிவாகமத்திறசொல்லப்பட்டஅறிதற்கரியபொருளைச்சொல்
லநினைந்தனர்வேதநாயகராகியும் முன்னாலேஜனகாமுதலியநால்
வருக்குங்கல்லாலின்கீழிருந்து தருமமுறைத்தவராகியும்விளங்கி
யபரமாசாரியனென்றவாறு. (௬௩)

களிம்புதோய்ந்தசெம்பெனவுனைமருவுங் கருமைகூர்மலங்கண்
டதுகலக்கும், பளிங்குபோன்றதுன்றன்மையம்பலத்தின்பற்றினா
லுடல்பலவெடுத்துழன்றாய், வளங்குளாம்புவனந்தொறுஞ்செய
முன்வல்வினைப்பயன்வருமுறைநெறியே,யளந்துதாந்தருநுகர்ந்து
மேநுகர்பிமாககியேதிரிந்தனைமனவழுங்கால்.

(இ-ள்) இருள்வடிவாகிய மலமானது களிம்புதோய்ந்த செம்
பைப்போல அனாதியேஉன்னைபொருந்தியிருக்கும்உன்னுடைய
தன்மையானது எதிரிட்டவன்னங்களைப்பற்றுகின்ற பளிங்குபோ
லாம் அந்தமலத்தினது சம்பந்தககால்அனேகதேகங்களெடுத்து
உழன்றாய்வளமபொருந்தியபுவனங்கள்தோறுஞ்செய்யும்உன்னு
டையவ்விவினைப்பயன்கள் வருகின்றகிரமத்தின்வழியே அளவு
செய்துநாம் விதிசெய்யநீஅதனைப்பிரித்து அப்படிபுசிககுமிடத்
து.ஆகாமியவினையையும்விளைத்துக்கொண்டுதிரிந்தாய் அஞ்ஞா
னத்தினாலென்றவாறு. (௬௪)

செய்துளோகர்பெறும்வினைப்பயனொருவர்சேர்க்கவேண்டுவ
தில்லெனினிதுமே, லெய்துமேபிதுநுகர்வதென்றறிவதில்லைநீவி
னையெனிற்சடமறியா, வுய்தலாகியநன்னெறியுணராவுனையுமுன்
வினைப்பயனையுமுணர்ந்து, மைதவாமலமொழிந்தருள் புரியாவா
ழ்வுநல்குவம்யாமெனமதிப்பாய்.

(இ-ள்) வினைகளைச்செய்த ஆத்மாக்களுக்கு வினைப்பயனைஒரு
வர்இடைநின்றுசேர்க்கவேண்டுவதில்லை யெனின்நீசிற்றறிவுடை
யவனானபடியால்மேல்வருவதின்னதென்றும்புசிப்பதுஇன்னதெ
ன்றும் அறிந்துசேரமாட்டாய் வினைதானறிந்து சேருமோவென்
றால் சடமாதலின்அறியாது பிழைத்தலாகியநல்வழியையறியாத
உன்னையும் உன்வினைப்பயனையும் அறிந்துஇருள்வடிவாகிய மல
மொழித்துக்கிருபைநீங்காதமோக்ஷத்தைத்தருவோம்யாமென்று

மதிப்பாயாகவென்று அநுக்கிரகஞ்செய்தார் பரமாசாரியரென்றவாறு, (௩௫)

எவர்க்குமிம்மலஞ்சேரவிங்கொழியாதிருப்பதென்னெனிலி ன்னல்கொள்பிறவித், துவக்கெனுந்தமதிரு வினைப்பயனுந்துலைபுகும்பொருளெனநிறைநிகர்த்தா, லவர்க்குநம்பதங் கொடுத்திடரொழிப்போ, மதுவிலாதவர்மூங்கியவ்வளவும் பவப்பெருங்கடல்விழ்வர்தாம்பருவம் பார்க்குமெம்மையுந்தம்மையும்பாரார்,

(இ-ள்) யாவர்க்கும்இந்தமலத்தைச்சேரநீங்காமல் இருப்பது என்னெனில் துன்பத்தைக் கொண்ட பிறவியினுடைய சம்பந்தமாயிருக்கின்ற தங்களுடையஇருவினைகளும் ஒருதுலையினிருதட்டிலும் இட்டபொருளைப்போலே ஒத்தாலவர்களுக்கு மாத்திரம்நம்முடையபதத்தைக்கொடுத்து அப்பிறவித்துன்பத்தைநீக்குவோம்அப்படியிருவினையொப்புவாராதவர்கள் வருத்தப்பட்டு அவ்வளவுநாளும்பெரியபிறவிக்கடலிலே விழ்ந்தலைவார்கள்தங்கள்பக்குவத்தைப் பார்க்கின்றபதியாகிய நம்மையும்பசுவாகிய தம்மையும் விசாரியார்களென்றவாறு, (௩௬)

என்றுகூடுமிப்பருவமென்றியம்பியெயாயிருந்தளவிடந்தொறுமின்றஞ்சி, நன்றிசேர்சிவபுண்ணியம்புரியுநன்மையாலதாகுமென்றறிநீ, மன்றிலாமனவெம்மியல்புனகருணைகயின்,மாசிலாவுருமூன்றவற்றருவ மொன்றுபேரொளியொன்றருவுருவமொன்றுதானருளுருவமென்றுணர்வாய்,

(இ-ள்) என்றைக்கிகூடும் இந்தப்பருவமென்றுசொல் லுமிடத்தில்யாமிருக்கின்ற ஸ்தலங்கள்தோறுபோய்எம்மைத்தொழுதுசிவஸ்தலத்தில்வசித்தல்முதலிய சிவபுண்ணியம்பத்தினையும்செய்யும் நன்மனுலே அவ்விருவினையொப்புவருமென்றுநீயறிவாயாக கனகசபையிலேவிளங்கியஎம்முடையஇயல்புஉனக்குச்சொல்லுமிடத்தில் குற்றமில்லாதஎமது சொரூபமூன்று அவற்றில்அவற்றில் அருவமொன்று அருவுவடிவாகிய அருவுருவமொன்றுமொன்று அருளையுடையஉருவமொன்று என்றறிவாயாகவென்றருளினர் பரமாசாரியரென்றவாறு. (௩௭)

இந்தமூன்றினிலுருவுனக்கறியவிசைந்தபேரருளியம்புமிவ்வுருவம், வந்தியாவரும்பணிவதம்தெரிவாய் வரமெலாந்தரவருமுருவுருவம், பந்தமாகியமலவிருளகற்றும் பரிதியாயுளபல்லுயிர்க்குயிரா, யந்தமாதிகளளப்பருமொளியா யமலமாகுமவ்வருவெனுமுருவம்.

(இ-ள்) இந்தமூன்றுபேதத்திலே உருவமாவது உனக்குஅறியும்படியாக உபதேசித்தருளியஇந்தகுருவடிவமாம் அருவுருவமாவதுஎல்லாரும்வந்து வணங்குதற்குஎளிதாயிருந்து வரங்களெல்

# ௩௯ திருப்பெருந்துறைச்சருக்கம்

லர்க்கோபிக்கும் இலிங்கவடிவாம் அருமையாவது பஞ்சமாகியமல
விருகிலை நீக்குகின்றகோடிசூரியப்பிரகாசமாம் எல்லாவுயிர்களுக்கு
மாய் முதலுதலுங்கண்டு அனந்தநாகரியவனியாயினமலையாயிருப்
பதா மென்றவாறு, (௬௮)

[illegible]

(இ-ள்) [illegible] (௬௯)

[illegible]

(இ-ள்) [illegible]
[illegible] சாமீபபிய பதவியைப் பெறுவாரகளென்
றவாறு. (௭௦)

முக்குணமபுலன்களுடனெட்டகிமூலவாயுவையெழுப்பியிருவழி
யைச. [illegible] தொருவழியைத்திறந்துதாணடவச
சிமைபெரவியுடன்போயதகககவந்தெழுந்தோரெழுத்தருவாங்
கன்மைகண்டருடரும்பெருவெளிக்கே புகசமூக்கின ரெமதருப்
பதறுவார்புலியில்வேட்டுவனெடுத்தயென்புழுபபோல,

(இ-ள்) சத்துவம் ராஜசம் தாமசம் என்கின்ற மூன்றுகுணங்களையும்ப
ஞ்சேந்திரியங்களையும் அடக்கிப்பிராணவாயுவை யெழுப்புகின்ற
இரண்டுவழியாகிய இடைபிங்கலைநாடிகளையும் அடைத்துச்சு
ழிமுனைவழியைத் திறந்து நடனசபையையுடையதேசென்றுத
ங்கியிருக்கிற ஐந்தெழுத்தின் ஒளியெழுத்தாகிய தன்மைகண்
டு அநேகசருமங்களையொழித்து மேலே புகுந்து அழுந்தினவர்கள் எ
ம்முடைய உருவத்தைப்பெற்றவர்களாகிய சாரூபியத்தையுடையவ
ர்கள் பூமியின்மேலே குளவிகளினாலுருவாக்கியமெலிந்த புழுப்போலே
னேறவாறு (எ௧)

பார்த்தவர்களைக்கூறுமுறையானாமனம் மருங்கிடப்பலசமயசாத்திர
முட்டெரிந்துதேர்ந்தகதிலையாய்ந்து முப்பொருளினைச்செய்தியே பொ
ருளெனமனந்தெளிந்து பிறந்திறந்துழலுதற்சிறுவினைத்தொகைபோ
கியவழிவெனச்சிவபோதம் விரிந்துதோன்றுமெருகுடைவித்த
கரேமேன்மையானை நமதுபாதமடைவார்

(இ-ள்) விரியப்பொருந்தமேலாகிய கலைஞானமுழுவதும் ஆகமந்தா
னுடைய பாகுபாடுகளைத்தெரிந்தும் பலசமயசாத்திரங்களுந்தெரி
ந்து ஆராய்ந்து அவ்வாராய்ச்சியின்மேலே முப்பொருளாகியபதிபசுபா
சங்களிலுண்மையெய்தியசைதன்னியப்பொருளென்று மனந்தெளி
ந்து முன்செய்தகன்மத்தால் உண்டாகியபிறவியினைத் தொலைத்
துப் போகவிடுவதுமல்லாத் தண்மையினிந்து தோன்றுகின்ற
ஞானத்தையுடையசதுரப்பாட்டையுடையவர்களாகிய நம்முடையசாயு
ச்சியபதத்தைப்பெறுவார்களென்றவாறு, (எ௨)

உருவுபொல்லாதவரிழிகுலத்தவருடலொழுக்கமில்லவரென்று
நமையெள்ளல. விருப்பிலாதவரெனினுமெய்ந்நீறு திருச்சாதனமே
டமுங்கண்டாம். திருப்பெருந்துறைநிலையெலாமதிக்ககோ
ளாமெனிற்றிவாகவிப்பிதா. விருப்பொடாராதுடையவர்களடியார் பொன்பா
யானென்றெனுஞ்செருக்கறுப்பார்.

(இ-ள்) பொல்லாதவுருவுடையவராயினும் இழிந்தகுலமுடை
யவராயினும் நல்லொழுக்கமில்லாதவராயினும் மனமாறுபாடுகளுமம்மி
டத்திலே அன்பில்லாதவராயினும் அவர்களுடைய மெய்யின்மேலே வி
பூதியும் உருத்திராக்ஷமுமிடமுங்கண்டவளவிலே தியானமேமே
ம்மேசென்று ... அவர்களுக்கு ... அவர்களுடைய ...
... யானெனதென்னுஞ்செ
ருக்கையறுப்பார்களென்றவாறு, (எ௩)

பிரிந்தசருச்சகவினைகளாற்பட்டருமைப் பிறிக்கவந்ததுவிரும்பிய
ப்பிறவியிற், பொருந்தும்வல்வினைபுடனுடனகலும் புந்திசோருஞ்
வருவினைபோகரு, மருந்திருப்பெருந்துறையிருடம்புனலேயல்லாம்

மனவாக்குமிங்குனைப்போ லிருந்தநம்பெருவடிவைநின்கருத்தி லி
ருத்துவாயபொருளிதுவெனவுரைத்தார்

(இ-ள்) விரிந்திருக்கின்ற சஞ்சிதவினைகள் அன்புடனேசட்சுதீ
க்ஷையென்கிற நாமவிழித்துப்பார்க்கும் பார்வையினாலேவெந்து
போயிற்றுவிரும்பப்பட்ட இச்சனனத்தில் அனுபவிக்கும்படியெ
டுத்துக் கட்டுப்பட்டபிராதவம் இந்தேகத்துடனே போய்நமமு
டையபுத்தியில் தங்கியதிருவருளானது இனியேறவொட்டாமல்
ஆகாமியவினைகளையொழிக்கும் அரியதுயரைத்தருகின்ற உன்னு
டையபொருளும் உயிருமுடம்பும உன்னுடையதலலநம்முடை
யதாகும் இங்கேஉன்னைப்போலேமாணிட வடிவங்கொண்டுவந்த
நமதுவடிவை உன்மனத்திலிருத்திவைப்பாய் இதுவேபொருளெ
ன்று அருளிச்செய்தா ரென்றவாறு. (௭௪)

அத்தனார்திருவாய்மலர்ந்தருளும்மல்வாசகங்கேட்டகமகிழ்ந்
து,பத்தனார்தமதெழுபிறப்பறுக்குமபாதம்நீ துறப்பணிந்தெதிரெ
ழுந்து பித்தனைவென்பிழைதனக்கிரங்கும பிஞ்ஞகாமிகப்பே
தைமையுடையேன், முத்தனைச்செம்காட்டினையெனவே மொழிந்
தழிந்துகைமுடிமிசைக்குவித்தார்

(இ-ள்) அத்தனாராகியகடவுள்திருவாய்மலர்ந்தருளிய களங்கம
ற்றஉபதேசமொழிகளைகேட்டு மனமகிழ்ந்து திருவாதவூரர் தம
முடையஎழுபிறப்பையும நீக்குகின்ற குருவினதுபாத மலரின்
மேறபணிந்துஎதிரேயெழுந்து பித்தனாகிய என்னுடைய குற்றத்
துக்குஇரங்கியருளியபரமசிவனே மிகவும் அறியாமையுடையஅ
டியேனைசீவன்முத்தனாக உண்மைகாட்டினாயென்று சொல்லிமன
மகிழ்ந்துகைகளைச சிரசினமேறகுவித்துவணங்கினாரென்றவாறு

என்னதாகமுன்னினைந்தபொருளுமில்லதாகியவுடலமும்
யானு,நின்னதாகிநின்னருளகொடுவினைநீதேனினமலாவென நின்று
நின்றுருகா,மன்னுதானைதன் மேலணிகலன்களமதுரைமீனவா
ன்பொருளிறையோன்முன்னதாகவைத்திறைஞ்சினரறஞ்சேர்மு
தலவனுா முகமலரவுகொண்டிருநதாா,

(இ-ள்)என்னதென்று நான்முன்னேநினைந்திருந்தபொருளுமெ
னக்கிடமாகிய தேகமுமயானுமஉமது அருளைக்கொண்டு உமமு
டையவைகளாகவேநினைந்தேன்நின்மலனேயென்று நின்றுநின்று
ருகித்தம்முடைய பட்டுவஸ்திரங்களும் மேலே அணிந்திருந்தஆ
பரணங்களும் மதுரையிலிருக்கின்றபாண்டியன்குதிரைகொள்ளக்
கொடுத்தபொருள்களுமு தமது குருவினதிரேவைத்துநமஸ்கரி
த்தார் தருமசொரூபராகியபரமசிவனும் முகமலர்ச்சிகொண்டிரு
ந்தாரென்றவாறு, (௭௫)

வேறு,

பெருந்துறையுறைவாரன்பு பெறுந்திருவடியராகி
யிருந்தவர்தம்மின்மேன்மை யெமதினர்முகத்தைநோக்கித்

திருந்தியபொருளிதெல்லாந் திருப்பணிக்களியுமேலா
மருந்தவர்க்குதவுமில்லாதவருந்தவர்க்கருளுமென்றார்

(இ-ள்) திருப்பெருந்துறையிலே எழுந்தருளியிருக்கின்ற பரமாசாரியாரவர் தம்மிடத்தில் அன்புடையவராயிருந்த அடியார்களில் சிறந்தவொருவர் முகத்தைப்பார்த்துத் திருத்தமாகிய இந்தப் பொருளையெல்லாம் சிவாலயப்பணிக்குக்கொடும் அரியதவத்தையுடையவர்களுக்குக் கொடும்வறியவர்களுக்குக் கொடுமென்று அருளிச்செய்தாரென்றவாறு, (௭௭)

தம்பொருமுதல்வர்சொல்லுந் தருமொழிப்படியேயுள்ள
செம்பொருளியரவமன்பின்சிறந்துளார்தொலைத்தபின்ன
ரம்பரனளித்தஞானமருந்தினையருந்திபாச
வெம்பிணியகற்றுமிந்தவித்தகர்முத்தரானார்

(இ-ள்) தம்முடைய முதல்வராகிய பரமாசாரியர்சொல்லியதகுந்த சொற்படியே தம்மிடத்துள்ள திரவியத்தையெல்லாம் கொடுத்துவிட்டு அழகியகடவுள் அருளிச்செய்த ஞானாமிர்தத்தைப்புசித்துப் பாசமென்னும் வெய்யபிணியைநீக்கப்பெற்ற அன்பராகிய திருவாதவூரர்சீவன்முத்தரானாரென்றவாறு. (௭௮)

திருத்திகழ்கவிகைச்சூழுஞ்சிறந்தபொற்சிவிகைமேலும்
வரத்திருமேவுதானைமன்னவனென்னவந்தா
குருத்தெரியாதநீறுங்கோவணவுடையுங்குஞ்சி
விரித்துளசிரமுங்கண்ணீர்மிகப்பொழிவிழியுமானார்

(இ-ள்) திருத்தமாகிய குடைநிழற்கீழும் சிறக்கபெற்ற பொற்சிவிகையின்மேலும் அழகுபொருந்தியசேனைகள் சூழ்ந்துவரவொருஅரசனைப்போலவந்த திருவாத திருவாதவூரரானவர் உருவந்தெரியாமற் பூசப்பட்ட, நீற்றையுங்கோவணவுடையையும் குடுமிவிரிந்திருக்கின்ற சிரசையும் ஆனந்தபாஷ்பம் பொழிகின்றகண்களையுமுடையவரானாரென்றவாறு. (௭௯)

அன்புடனோக்கிநிற்பரழுவர்கைதொழுவர்வீழ்வ
ரின்புறவெழுவர்பின்பாலேகுவரிரங்கிமீள்வர்
நன்பகற்கங்குல்காணார்ஞானநல்லறிவேகொண்டு
தொன்புனைபித்தர்பாலர் பிசாசர்தங்கொள்கையானார்

(இ-ள்) தமக்கு அனுக்கிரகஞ்செய்த பரமாசாரியரை அன்புடனேபார்த்துநிற்பார் ஆனந்தபுஷ்பம்பொழிய அழுவார்கைகூப்பித்தொழுவார் கீழேவிழுந்துநமஸ்கரிப்பார்ஆசைபொருந்தவெழுந்திருப்பார் புறங்காட்டாமல் முன்பாகநடந்துசெல்வார் இரக்கங்கொண்டுதிரும்பிவருவார் பகலும்இரவும்அறியமாட்டார் சிவஞானத்தையே பொருளாகக்கொண்டு கண்டோர்களை அச்சஞ்செய்கின்ற பித்தர்பலர்பிசாசர்களுடைய கோட்பாட்டையுடையவரானார் மாணிக்கவாசகரென்றவாறு. (௮௰)

# சய திருப்பெருந்துறைச்சருக்கம்.

மன்னுமிக்கநிலைமையுற்றார்வன்பணைக்கூறமாகித
துன்னினவெல்லாமவர்க்குத்தோலாதவீந்தபொழுதுநின்று
தென்னவன்றூசியாவண்ணஞ்செழும்பரித்திரள்கொண்டே
வென்னுமதொன்றுந்தோற்றாதுபழுதெனவிரங்கி [க்

(இ-ள்) நிலைபெற்ற இந்நிலைமையைப்பொருந்திய திருவாதவூரருடைய வலிமைபொருந்திய பணைத்தலைவர்களும்பங்குகளுமாகிய வெல்லாரும்பெருநாளில் பெறுவோமென்று அவனைத்தொழுது வணங்கி அரசனாகியபாண்டியன் கோபியாதபடி செழுமைபொருந்திய குதிரைக்கூட்டங்களை வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்பதைத்தெரியாதிருக்கிறதுபழுதென்றிரங்கியென்றவாறு (அக)

ஐயநீவருகல்வேண்டுமென்றவரழைத்தபோதிற்
செய்யநீறணிவார்காவலைத்திறத்தினர்கண்மைநோக்கி
மையலாழுணாவினையிக்கிரியாவாக்கிரமாயாபேதப்
பொய்யெலாமுரைத்தலவேண்டாம்போமினியகலவென்றார்

(இ-ள்) ஐயா நீர்வரவேண்டுமென்று அவரழைத்த போதில் செம்மையையுடைய திருவெண்ணீறணிகின்றதிருவாதவூரர் அந்தச் சேவகர்களைப்பார்த்து அருஞானத்திலேயிருந்தநீங்கள் யாவர் மாயாபேதமாகிய பொய்யுரைகளெல்லாம் நம்முடனே சொல்லவேண்டாம்தூரம்போய்விடுங்களென்றென்றவாறு-அஉ.

என்னிவர்புகல்வதென்றேயாவருமின்றிரங்கி
துன்னிநம்முரைவிராதபழைதுயரமெய்திப்
பன்னுநம்மொழிபுங்கொள்ளார்பரிவிலரென்றுபேசித்
தென்னவற்கின்னவாறுசெப்புவோமென்றுசென்றார்

(இ-ள்) இவரிப்படிசொல்வதென்னவென்றுயாவருமிரங்கியெல்லோரும் இரங்கினதுதங்களுக்குதுன்பமடைந்துநாம சொல்லுகின்ற சொல்லையுங்கேளாதவராயும் நம்மேலன்பில்லாதவராயுமிருக்கிறாரென்று அவனைவிட்டுநீங்கிப்பாண்டியராசனுக்குஇதைச்சொல்லுவோமென்றுபோனார்களென்றவாறு.

சென்றவர்வையைநாடன்சிறந்தவைதன்னையெய்தி
வென்றிறன்மன்னபோற்றிமாமதுரேசபோற்றி
யென்றுபின்வாதவூரர்செய்தியச்செயலெலா
மொன்றியகவற்சிகூர்ந்துளத்துடனின்றுசொல்வார்

(இ-ள்) அப்படிபோனவர்கள் பாண்டியராயனுடைய சிறப்புப் பொருந்திய சபைக்கெதிரேபோய்நின்று பராக்கிரமத்தையுடைய அரசனேசரணம் பெரியமதுரைக்கு நாயகனேசரணமென்று வணங்கியபின்புதிருவாதவூரர் நடந்தசெய்கைகளையெல்லாமிகுந்த கவலைபொருந்திய மனத்துடனே நின்றுசொல்வார்களென்றவாறு; (அச)

நின்பெயர்புனைந்தோராகி நின்பெருங்கருமஞ்செய்வோ
ரென்பவர்செய்கைதன்னை யெங்ஙனம்யாங்கள்சொல்வோம்
பொன்பொலிமௌலியோய்நின் புடைவிடைகொண்டுபோ
மன்பெருந்துறையாமந்தவளநகர்புகுந்தபின்னர் [ந்து

(இ-ள்) தென்னவன் பிரமராயனென்று உன்பெயரைத் தரித்தவராகியும் உனக்குமந்திரிதொழில் செய்பவராகியும் இருக்கின்ற திருவாதவூரருடையசெய்தியைஎப்படிநாங்கள்சொல்வோம்பொன்னிறற்செய்யப்பெற்று விளங்கியகிரீடத்தைத்தரித்த அரசனே உன்னிடத்திற் செலவுபெற்றுக்கொண்டுபோய் நிலைபெற்றதிருப்பெருந்துறையென்னும்பெயரையுடைய அழகியநகரத்திலே புகுந்தபின்னென்றவாறு, (௮௫)

அந்நகர்மருங்கோர்காவிலலைந்துளகுருந்திலீசன்
தன்னடியார்களாகுந்தாபதர்பலருஞ்சூழ
மன்னியங்கொருவர்மேலாமாதவவேடம்பூண்டு
முன்னுறவிருத்தல்கண்டு முடிவிலாமகிழ்ச்சிகொண்டு

(இ-ள்) அந்நகரத்துக்குப்பக்கத்திலொருசோலையிலிருக்கின்ற குருந்தவிருக்ஷநிழலின்கண்ணே சிவனடியார்களாகியதபசிகள் அனேகர்சூழநிலைபெற்று அங்கேஒருவர் மேலாகியமகிமைபொருந்திய தவவேடம்பூண்டு எழுந்தருளியிருப்பதைக்கண்டு அளவற சந்தோஷம்பெற்றென்றவாறு, (௮௬)

அங்கவர்தாமுந்தாமுமன்பொடுசிலசொற்கூறிச்
சங்கரசிவனேபோற்றியென்றவர்தாளில்வீழ்ந்து
செங்கரங்குவித்துசசென்னிசேர்த்துவந்தனைகள்செய்து
பொங்கொளிமணிப்பூணுடைபொருளெலாமுவந்துநல்கி

(இ-ள்) அந்தப்பெரியவரும் தாமும்அன்புடனேசிலவார்த்தைகள்பேசி சங்கரசிவனேசரணமென்றும்அவருடையபாதங்களிலேநமஸ்கரித்துச்சிவந்த கைகளைக்கூப்பி சிரசின்மேல்வைத்துக்கொண்டுபூசித்துமிகுந்தஒளியையுடைய ரத்தினாபரணங்களையும் பட்டுவஸ்திரங்களையும்-திரவியங்களையும் சந்தோஷமாக அவருக்கே கொடுத்தென்றவாறு, (௮௭)

குறைவிலாவாடைநீத்துக்கோவணமுடுத்துச்சென்னி
நறைமயிர்விரித்துநீற்றைமெய்யெலாநயந்துபூசி
முறைமையன்றிதுதானென்றுமொழிந்தவெம்முகமும்பாரு
நிறையழிபித்தரானார்பிரபவென்றிறைஞ்சிநின்றார் [ர்

(இ-ள்) குறைவில்லாததம்முடைய வஸ்திரத்தைநீக்கிக்கோவணமாத்திரங் கட்டிக்கொண்டு தலையிலேயுள்ள மயிரைவிரித்துக்கொண்டுதேகமுழுவதும் விபூதியைவிருப்பத்துடனேயணிந்துஇ

ப்படிச்செய்கிறது கிரமமல்லவென்று சொன்னஎங்கள்முகத்தையும்பாராதவராய்க்கிரமந்தப்பிய பித்தரைப்போலானார்பாண்டியனேயென்றுவணங்கினார்களென்றவாறு, (௮௮)

கேட்டலுமதுரைமாறன்கிளர்ந்தமெய்ம்முழுதும்வேர்வு
காட்டிடவெகுளிபொங்கிக்கண்கனல்வடிவமாகி
வாட்டிறன்மன்னர்க்கின்னவன்மையருளரோல்லைய
மீட்டிறுசெலவந்தானையெவையிலவென்றுநக்கான்

(இ-ள்) அவர்கள்சொன்னவார்த்தையை மதுராபுரியரசனாகிய பாண்டியன்கேட்டுத் தேகமுழுவதும் வேர்வையுண்டாகக்கோபமிகுந்து கண்கள்அக்கினிவடிவாகச்சிவந்துவாள்யுத்தத்திலேதிறத்தையுடைய அரசர்களுக்கு இப்படிப்பட்டவனத்தைசசெய்கின்ற மந்திரிகளுண்டானால சம்பாதிக்கப்பட்ட நாடுசெய்யும் சேனைமுதலியவைகளில் குறையென்னவென்று சிரித்தானென்றவாறு,

அடுப்பரிகொள்வானீந்தவரும்பொருள்கவர்வதாகக்
கெடுமதியுரைபபாதஞ்சொறகேட்டுமாலெய்திறுனைக்
கொடுமையைகொளிந்தவோலைகொடுத்தொருகினத்துணம்பாற்
கடுநடைதூதரோக்கைககொண்டுவம்மினெனறான்

(இ-ள்) யுத்தத்திலே பகைவரைக்கொல்லத்தக்ககுதிரைகளைக்கொள்ளும்பொருட்டு நாங்கொடுத்த அரியதிரவியங்களைக்கொள்ளையிடுவதற்காககெடுமதிசொலலுவார் சொல்லைககேட்டு மயங்கியதிருவாதவூரரைவேகமாகியநடையையுடையதூதர்கள்போய்கெடுமையாகவெழுதிய இந்தவோலையைககொடுத்துஒருகினத்திலே நம்மிடத்திக்குக்கைபிடியாகக்கொண்டுவாருங்களென்றான் பாண்டியராசனென்றவாறு, ௯௰

ஏவலிற்சென்றதூதரொழிற்பெருந்துறையிலெய்தி
யாவலிற்சிவன்றாளைத்துமண்ணலைககண்டிறைஞ்சி
மேவலர்ககுருமேறென்னவெங்தொழில்வேந்தன்வாய்ந்த
காவலர்க்கதிபன்மாறன்றிருமுகங்காண்கவென்றார்

(இ-ள்) அந்தப்பாண்டியராசன் ஏவலினாலேபோன தூதர்கள் அழகியதிருபெருந்துறைகருப்போய் அன்பினாலேசிவனுடைய திருவடிகளைவணங்கியிருககின்ற திருவாதவூரரைக்கண்டுவணங்கிச்சதுருக்களுககுக் கொடியதண்டத்தைச செய்கின்ற இடியேறொத்த வேந்தனாகியும்மேன்மைபொருந்திய அரசர்க்கரசனாகியும் இருக்கின்றபாண்டியனுடையதிருமுகம்இதுகாண்பீராகவென்றுசொன்னார்களென்றவாறு, (௯௧)

அற்றமில்கொள்கைமிக்காரான்றிருமுகமதன்றி
மறறொருமுகமுங்காணமனதிலரிதன்மேலன்பு
பற்றிலர்பிரிதேர்ஞோலைப்படியெடுத்துரைமினென்ன
வுற்றதனியல்புலவல்லானெழுதியதுலுந்துசொல்வான்

(இ-ள்) சோர்வில்லாதகோட்பாட்டின்மிகுந்ததிருவாதவூரர்பரமசிவன்திருமுகமல்லாமல் வேறொருமுகத்தையும்பார்ப்பதற்கு மனமில்லாதவரால்இந்தத்தூதர்கொண்டுவந்ததிருமுகத்திலும்பற்றில்லாதவராய்வேறொருவோலைப்படியேயிதனை யெடுத்துச்சொல்லுங்களென்றுசொல்ல அவர்சொற்படி நல்லதென்று அதைத் தெரிந்த ஒருவனதிலெழுதியிருப்பதை மகிழ்ந்து சொல்லுவா னென்றவாறு, (௯௨)

தென்னவனறசனோலைதென்னவன்பிரமராய
னென்னுநல்லமைச்சர்காண்க வெல்லையிறன்றிகொண்டே
கொன்னுறுபரிகொளாமற்கோவணங்கொண்டீது [மிக
மன்னாதங்கருமஞ்செய்வார்வண்மையென்றுவகையுற்றேம்.

(இ-ள்) பாண்டியராசன் எழுதப்பட்ட ஓலைதென்னவன்பிரமராயனென்றுசொல்லும் நல்லமந்திரிகாணக்கடவன் அளவற்றதிரவியங்கொண்டுசென்று பெருமைபெருந்திபரிகளையக்கொள்ளாமல் கோவணங்கொண்டதா அரசர்காரியஞ்செய்பவர்களுடையவண்மையிப்படிப்பட்டதென்று மகிழ்ச்சியடைந்தோமென்றவாறு, ()

வையகமன்னராகிவாழ்வதின்மனைசட்டோறு
மெய்தியவுதாரத்தியாகிரப்பதுபெருமையென்று
மெய்தகத்தமையாண்டவேந்தனைப்பிழைத்துவேறு
செயலதுபலிக்குமென்றுசேர்ந்தநாருணியுங்கண்டோம்

(இ-ள்) பூலோகத்து அரசராகிச் சம்பத்துடன் வாழ்வதைக் காட்டிலும் வீடுகள்தோறும் தன்னையடைந்த உதாரகுணியிலே இரப்பதுபெருமையாகுமென்று உண்மையாகத்தம்மைச்சவரட்சணைசெய்த அரசருக்குப்பிழைசெய்து வேறொருகருமஞ்செய்வது பயன்படுமென்று நீராயெம்மேல் ஆராய்ந்ததுதோந்ததுணிவை யுங்கண்டோமென்றவாறு, (௯௪)

முன்னையுடைந்துவாழ்தல்வஞ்சகஞ்சுமிழ்நாகந்
தன்னுடனமருவிவாழ்ந்தன்மையென்றுணரவீராயிற்
றுன்னுமிவ்வேலைகாணும்பெறுழ்ந்துநநாதாகமமோ
டிநககாவருகமாறனெழுதெனவுரைத்துநின்றான்

(இ-ள்) அரசனைச்சேர்ந்துவாழ்வது வஞ்சகத்தைச் செய்யும் விஷத்தையுமிழ்கின்ற சர்ப்பத்துடனே கூடிவாழ்கின்ற தன்மை போலுமெனவீரானால் இந்தவோலையைக்கண்டமாத்திரத்திலே நம்முடையதூதர்களுடனே இந்தமதுரைமாநகரத்துக்குவரக்கடவீராக இதுபாண்டியன் கையெழுத்தென்றுபடித்து நின்றானென் றவாறு, (௯௫)

மீனவனெழுதுமோலைகேட்டபின்மின்பாலன்ப
ரானவரடியரெம்மையடிமையாவுடையரெல்லாம்

றுனெனக்கண்ணலென்றுந்தன்னையான்பிழைத்தேனென்று
மாநிலமன்னன்சொன்னதென்னனெனமனத்திலெண்ணி

(இ-ள்) பாண்டியன்எழுதிவிட்டவோலையைக்கேட்டமாணிக்கவாசகர் உமாதேவிபாகராகிய பரமசிவனுடைய அடியார்களேயெம்மையடிமையாக வுடையவரேயல்லாமல்தானென்னைக்குத்தலைவனென்றும்தனக்குநான பிழைசெய்தேனென்றுமபெரியவுலகத்தையாளுகின்றஅரசன்சொன்னது என்னவென்று மனத்திலேநினைத்தெனறவாறு, (௯௬)

அந்தகனெழுதுமோலைகொண்டவன்தூதர்தாமும்
வந்தெம்மையணுகமாட்டாருடையவர்மதுகையாலே
வெந்தொருகணத்தில்வீழமேவலர்புரங்களசெற்றோர்
தந்தமரொருவர்க்கஞ்சத்தக்கவரோவென்றுசாற்றி

(இ-ள்) எம்மையடிமையாகவுடைய பரமசிவனுடையவலிமையினாலே யமனெழுதுகின்றவோலையைகொண்டு அவனால்விடப்பட்டதூதரும் எமயிடத்தில்வந்து அணுகமாட்டார்கள் ஒருக்ஷணப்பொழுதிலேவெந்துவிழும்படித்திரிபுரங்களையழித்தஅக்கடவுளுடைய அடியார்கள் ஒருவருக்கு அஞ்சுவார்களோவென்று சொல்லியெனறவாறு. (௯௭)

போயரன்றிருத்தாளேத்திப்புண்ணியவடிவேபோற்றி
யாயிரஞ்சூடிகைப்பாம்பையலங்கலாமுடித்தாயபோற்றி
மாயிருஞாலங்காக்குமன்னவனெழுதுமோலை
பாயிரமிதுகேளென்றுமொழிந்தனாபழுதிலாதார்

(இ-ள்) இப்படிநினைத்துப்போய்ப் பரமசிவனுடைய திருவடியைத்துதித்துப் புண்ணியவடிவமுடையவனே சரணம் ஆயிரம்பணாமுடியையுடைய பாம்பைமலாமாலையாகத்தரித்தவனேசரணம் ஜகத்தாகியபெரியபூமியை ரக்ஷிக்கின்றஅரசனெழுதிவிட்டவோலையின்முகவுரையைக்கேட்டருளுமென்றுபணிந்துஎதிரேநின்றுசொன்னார்பழுதில்லாதமாணிக்கவாசகரென்றவாறு. (௯௮)

கேடிலாவியல்பினானுங்கேட்டிளமுறுவல்பூத்துப்
பாடலாலேத்துந்தெய்வப்பான்மையாக்குவந்துசொல்வார்
பீடிலாதவர்போலுள்ளம்பேதுறலொழிவாயிந்த
நாடெலாமதிக்கநாமேநரிபரிதிரள்கொண்டேகி

(இ-ள்) கெடுதலில்லாத வியல்பினையுடையபரமசிவன் அதனைக்கேட்டுப்புன்சிரிப்புக்கொண்டு தமிழ்ப்பாட்டலால் தம்மைத்துதிக்குந் தன்மையையுடைய திருவாதவூரருக்குச் சந்தோஷத்துடனேசொல்வார்அறிவில்லாதவர்கள்போலக் கருத்திலேகொண்ட பேதமையைநீங்குவாயாக இந்நாடெல்லா மதிக்கும்படியாய்நாமே குதிரைகொண்டுசென்சென்றவாறு, (௯௯)

தென்னவற்களித்துமீள்வோஞ்செழுந்திறற்றூதரோடு
மன்னனைக்குறுகியெம்பால்வரவிடுமோலைதன்னை

மூன்றுறக்கடிதுவந்தேனுவணித்திங்கண்மூல
மென்னுமத்தினத்திலிங்கேயெய்துமாபரிகளென்பாய்

(இ-ள்) பாண்டியனுக்குக் கொடுத்துத் திரும்புவோம் மிகுந்த சௌரியத்தை யுடைய தூதர்களுடனே அவ்வரசனிடத்திற்குப் போய் நீவிர்விட்டதூலையினாலே முன்னதாகச் சீக்கிரத்தில வந்து விட்டேன் ஆவணிமாத மூலநாளில இங்கேகுதிரைகள்வரு மென்று சொல்லுவீராகவென்றவாறு, (எ)

தொன்மதிக்குலத்துமன்னனுயர்செய்யவென்றேசற்று
நின்மனக்கவற்சிகொள்ளாதெனநீறுசாத்திப்
பொன்மணிக்கலன்களெல்லாம்பூந்துகில்பிறவுநந்து
மன்மனத்துவகைகூறமந்திரிப்பாணைசெய்து

(இ-ள்) பழமையாய்வருகின்ற சந்திரகுலத்து அரசனாகியபா ண்டியன் துன்பப்படுத்துவானென்றுசற்றும்உன்மனதிலேகவலை கொள்ளாதேயென்றுவிபூதிகொடுத்துப்பொன்னாலும்ரத்தினங்களா லுஞ்செய்தஆபரணங்களும்அழகியவஸ்திரமுமவானகமுதலியவை களுங்கொடுத்து அவ்வரசனமனதிலமகிழ்ச்சியடையும்படி மந் திரக்கேற்றகோலஞ்செய்தெனறவாறு. (எக)

தென்றிசைக்கதிபன்றன்பாற் சென்றிதுகொடுத்துச்சாண்டி
யென்றுநலமணிபுகலத்தியேகெனவிடுத்தபின்னர்
கன்றகலபுனிறுறுவெவ்வளக்கசிந்துருகவணீர்வார
நின்றுநின்றிறைஞ்சியையாநீக்கியோவென்றுநொந்து

(இ-ள்)தென்னாட்டிற்கு அதிபனாகிய பாண்டியனிடத்திலேபோ ய்இதைக்கொடுத்து நீகாணப்பாயாகவென்று நலமாணிக்கமொ ன்றுகொடுத்தனுப்பவென்று அனுப்ப அதனைப்பின்புகன்றைநீங்கி ப்போகுந்தலைநீமறுப்பசுப்போல இருகண்ணிலும் கசிந்துநீர்சொ ரூரும்படி நின்றுநின்றுவணங்கிஐயாவென்னைநீக்கினையோவென் றுமனநொந்தெனறவாறு. (எஉ)

விழிப்புனல்சிந்தச்சிந்தவிண்ணவன்விடைபெற்றேகிச்
சுழிபுனலவாவிசோலைசூழ்பெருந்துறையைநீங்கி
வழிக்குறுதுணையாயுள்ளவள்ளலைத்தெழுத்துமோதிப்
பழிச்சுறுதூதரோடுமதுரையம்பதியிற்சென்றார்

(இ-ள்)கண்களிலேயிருந்துநீர்தாரைதாரையாகப்பொழுக ஆசா மையுடனேபரமசிவனிடத்திலே செலவுபெற்றுக்கொண்டுபோ ய்ச்சுழியையுடைய நீர் மிகுந்ததடாகமுஞ்சோலையுஞ் சூழ்ந்ததி ருப்பெருந்துறையை நீங்கி வழிக்குத்துணையாயிருக்கின்ற கடவு ளுடையபஞ்சாக்ஷரமும் உச்சரித்துக்கொண்டு தம்மைவணங்கு கின்ற தூதர்களுடனேமதுராபுரியிற்சேர்ந்தாதிருவாதவூரரென் றவாறு, (எங)

மதுரைமன்னவன்முனேகிமனமிலாவணக்கஞ்செய்து
கதிர்மதிச்சடையோனீந்தகவின்கொணமாமணிமுனல்கி

பெதிருறநின்றபோதினின்புறவழுதிநோக்கி
விதிமுறையிருமினென்னவிருந்தனர்விரிந்தநூலார்

(இ-ள்) அம்மதுரை அரசனாகிய பாண்டியனிடத்திற்குப்போய் மனத்தில் விருப்பமில்லாமற் புறத்தில்வணக்கஞ்செய்து பிரணிறைந்தசந்திரனைத்தரித்த சடையையுடைய பரமசிவனைக்கொடுத்த அழகுபொருந்தியமாணிக்கத்தைக்கையுறையாகவைத்து எதிராகநின்றமாத்திரத்தில் மனமகிழ்ச்சியுடனேபாண்டியராசனைப்பார்த்து முறைமைப்படி இங்கேயிருமென்றுசொல்லமாணிக்கவாசகரெ

விலைமதிப்பில்லாவந்தமேதகுமணியைப்பல்கா
லிலையுறவியந்துநோக்கிநெஞ்சிலுறுவகையெய்தித்
தலைவனைச்சிந்தையுள்ளேதரிப்பவாதம்மைநாடிச்
சிலைமுகக்கரத்துமன்னன்செய்ததேதுரைமினென்றான்

(இ-ள்) ஒருவராலும் விலைமதிக்கக்கூடாத அந்த மேன்மைபொருந்திய மாணிக்கத்தை வியப்புடனே பலதரமுற்றுப்பார்த்துமனதிலேசந்தோஷப்பட்டுப் பரமசிவனைக் கருத்திலே வைத்திருக்கின்றதிருவாதவூரரைப்பார்த்துவில்லைக்கையிலேந்துகின்றபாண்டியன் நீர்செய்தகாரியமென்ன சொல்லுமென்று கேட்டானென்றவாறு. (௩௫)

மலைக்கொடும்பகையைவெல்வார்மன்னவன்முகத்தைநோக்கி
நிலத்தொளிர்புகழின்மிக்காநீதருநிதிகொண்டேகி
யிலக்கணக்குறைபாடின்றியீரிருகதியுமுண்டாய
குலப்பரியினங்கள்யாவும்விலைக்குறக்கொண்டபின்னர்

(இ-ள்) ஏமமலைகளென்னும் கொடியபகைகளை வெல்லுகின்ற திருவாதவூரர் பாண்டியன்முகத்தைப்பார்த்துப் பூலோகத்திலே விளங்குகின்ற மிகுந்தகீர்த்தியுடைய அரசனே நீகொடுத்ததிரவியத்தைக்கொண்டுபோய் இலக்கணங்களொன்றுங் குறைபாடில்லாமல்நான்குகதிகளுமுடைய நல்லசாதியானகுதிரைக்கூட்டங்களெல்லாம்விலைக்குக்கொண்டபின்னென்றவாறு. (௩௬)

அரும்பரித்தொகுதியெல்லாமணிதிகழ்மதுரைசேரப்
பொருந்தியதினமேதென்னப்பூசுரர்விதியிற்றேர்ந்து
திருந்துமாவணியாந்திங்கண்மூலநற்றினமாமென்ன
விருந்தனதனைநாடிப்பெருந்துறையென்னுமூரில்

(இ-ள்) அருமையான குதிரைக்கூட்டங்களையெல்லாம் அழகு மிகுந்த மதுரைப்பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பொருந்திய நன்னாள்எந்நாளென்றுகேட்டபோது பிராமணர் விதிப்படிப் பார்த்துத்திருந்தமாகிய ஆவணிமாதத்தில்மூலநட்சத்திரம்நல்ல நாளென்றுசொல்ல அந்நாளைக்குறித்துக்கொண்டு திருப்பெருந் துறை யென்னும்ஊரிலேயிருந்தனனென்றவாறு, (௩௭)

# திருப்பெருந்துறைச்சருக்கம்.

வின்படைச்சுற்றமெல்லாநீடுமிக்ககருக்கெய்து
மன்புடன்கடிதுமீண்டாரவர்பெருமபடிறுகூற
மன்பெருமுனிவாலோலைவரைந்தனையதனாலவந்தேன்
கொன்பரித்திரள்களெய்துங்கூறுமக்காளிலென்றான்

(இ-ள்) உம்முடையசேனைகளும் சுற்றத்தாரும்நீடியஇந்தமது ராபுரிக்குப்போகவேண்டுமென்னும விருப்பத்துடனே சீக்கிரத் திலே திரும்பிவிட்டார்கள் அவர்களென்மீதுபெரிய அபவாதஞ் சொல்ல அதைக்கேட்டு நீர்கோபத்துடனே ஒருவோலையெழுதி அனுப்புவித்தீர் அதனாலேமுன்னதாகவந்தேன் பெருமைபொரு ந்திய குதிரைக்கூட்டங்களெல்லாம் நாளைசொல்லிய ஆவணிமூல த்தன்றைக்கு வருமென்றார் திருவாதவூரரென்றவாறு. (௧௫)

என்பதுகேட்டுமாறனும்மிடையெமக்குண்டான
மனபெருநண்புநீயகரிலைத்துளமனத்தாரசொல்லா
லன்பிலார்போலவோலையெழுதினமதுகொண்டென்னே
துன்புறவொழியீரென்றானமையாதொன்மைகூறி.

(இ-ள்) இப்படிசொல்வதைக்கேட்ட பாண்டியன் உம்முடனே எமக்குண்டாகிய நிலைபெற்ற மிகுந்தசிநேகமேயொருபடிக்கு நினை த்த கருத்துள்ளவர்களாகிய சிலர்சொல்ல அதனாலே அன்பில்லா தவர்களைப்போல ஓலையெழுதினம அதுகொண்டுடனேகாரியம ம னவியாகூலம் ஒழியீராகவென்று நன்மையாகப் பழையவுரிமை யின்படியேபேசின-என்று- (௧௬)

கொன்னெடுங்கோயிலூடுகொடுபுரந்துரிமைகூரத்
தன்னருகிருத்திமேனமைதகயாநகலைகளைவிப
பொன்னணிகலன்கள்யாவும புனையுமென்றளித்துமுன்போ
மன்றுளகருமங்கூட்டிமனையிடையேகுமெனறான. [ன்

(இ-ள்)பெருமைபொருந்திய நெடியஅரமனையிடத்தே அழை த்துக்கொண்டுபோய உரிமையாகத்தனதிடையபக்கத்திலிருத்தி உயர்ந்ததகுதியாகிய நலலவஸ்திரங்களை கொடுத்துபொன்னினா ற்செய்த பலபலஆபரணங்களைத்தரித்துக் கொள்ளுமென்றுகொ டுத்துமுன்போலததானே இராஜகாரியங்களெல்லாஞ்சொல்லி விட்டிக்குப்போமென்றுவிடுத்தானபாண்டியராசனென்றவாறு. (

தன்பதிமனையிசென்றுதாபதர்வைகப்பின்னர்
வன்பரிசமூகமெய்தாநவிரணவென்றுமுன்னர்
வெம்படைச்சுற்றநீங்கியிருந்துழிவிரிந்தநேமி
யம்புவிக்கரசன்றன்முனைமைசரிலொருவன்சென்று

(இ-ள்) தன்னுடையபெரிய அரமனைக்குப்போய்த் திருவாதவூ ரிருக்கப்பின்பு நல்லகுதிரைகூட்டங்கள்வரவேண்டியதினத்து

# ௪௮ திருப்பெருந்துறைச்சருக்கம்.

க்கு இரண்டு நாளைக்குமுன்னே விரியப்பெற்ற சமுத்திரஞ்சூழ்ந்த புவிக்கரசனாகியபாண்டியன் வெங்கியசேனாதிபதிகளாகிறவர்கள் யாவரையுமகற்றித்தனித்திருக்கும்போது மந்திரிகளிலொருவன் முன்னே போயென்றவாறு. (௱௰௧)

போற்றியெம்பொருநைநாட போற்றியென்றிறைஞ்சிக்கூறு
மாற்றமுண்டொன்றுரினபேர் புனைந்துளவரிசைபெற்றோர்
சாற்றருந்துரகங்கொள்ளவேகியன்றலத்திற்சார்ந்து
நீற்றினனடியார்கையினின்பொருளையாவுமீந்தார்

(இ-ள்) பொருநைநாடடைந்திய அரசனே சரணஞ்சரணமென்று வணக்கஞ்செய்து யான்சொல்லுகின்ற விண்ணப்பமொன்றுண்டு அதென்னவென்றால் தென்னவன்பிரமராயனென்று நின்பெயரைத்தரித்திருக்கின்ற வரிசைபெற்றோராகிய மந்திரியார் சொல்லுதற்கரிய குதிரைகொள்வதற்குச் சோழனுடைய தேசத்துக்குப்போய்த் திருநீறு தரிக்கின்றபரமசிவனடியார்கையில்உன்னுடையதிரவியங்களெல்லாங்கொடுத்துவிட்டாரென்றவாறு. (௱௰௨)

நின்பெருந்தூதிரோதியெழுது நின்னோலைகாட்டும்
பின்புவந்துனதுசீற்றமொழுக்கியாட்கொழுத்தலெண்ணி
யன்புடையவர்போலுன்றனடியிணைதொழுதுபின்னர்
நன்பரித்திரளைக்கையதுநானுனக்களிப்பனென்றார்

(இ-ள்) பெரியஉம்முடைய தூதர்கள்போய் நீயெழுதியவோலை காட்டியபின்பு அவர்வந்து உமதுகோபத்தைநீக்கித் தம்முயிரைப் பிழைப்பிக்கக்கருதி அன்புடையவர்போல உமது திருவடியைச்சேர்ந்து ஆவணிமூலத்தில் நல்லகுதிரைக்கூட்டங்களைக்கொண்டுவந்து உனக்குத்தருவேனென்றாரென்றவாறு. (௱௰௩)

மற்றவர்மொழிகளெல்லாம்பொய்யுரைமன்னவென்ன
சொற்றமிழவைநாடன்றூதரைவெருவநோக்கி
யற்றமில்சுருதிவல்லோர்கடம்பெருந்துறையிலெய்தி
யுற்றவெம்பரிகளுண்டேலொல்லைவந்துரைமினென்றான்

(இ-ள்) அங்கத்திருவாதவூரர்சொன்ன வார்த்தையெல்லாம் பொய்வார்த்தையாகும் அரசனேயென்று சொல்லப் பாண்டிராசன் உடனே தூதர்களஞ்சும்படிப்பார்த்துச் சோர்வில்லாதவேதத்தில் வல்லபெரியோர்கள் வசிக்கின்ற மகிமைபெற்ற திருப்பெருந்துறைக்குப்போய் அங்கேகுதிரைகளிருக்கின்றனவாவென்று சீக்கிரத்தில் பார்த்துவந்து சொல்லுங்களென்றானென்றவாறு.()

அருக்கிறற்றூதரோகியத்தினங்கடிதுமீண்டு
வருந்திறனென்றுமன்னர்மன்னனைவணங்கிநின்று
பெருந்துறையென்னுமூருமதிற்றுளபதியுந்தேடிக்
கருந்தடங்களிற்றுவேந்தகண்டிலம்பரிகளென்றார்.

(இ-ள்) அரியதிறத்தையுடைய தூதர்கள்போய் அன்றைத்தினந்தானே சீக்கிரத்திலே திரும்பிவந்ததோடு மன்னர்மன்னனாகிய பாண்டியனானவனை வந்து வணங்கி கரியமலைகளைப்போன்றயானைகளையுடையவரசனே திருப்பெருந்துறையென்னு மூரிலு மதைச் சுற்றூர்களிலும் தேடிப்பார்த்தோம் குதிரைகளொன்றுங் காண்கிலோமென்றார்களென்றவாறு, (௧௰௫)

பாங்குன்றினன்வாறுபகர்தலும்வெகுளியெய்தி
யீங்குநங்கருமஞ்செய்வனென்றிடாசெய்வானென்னை
தாங்கருந்துயராஞ்செய்துதனைக்கொண்டதனத்தையெல்லாம்
வாங்குமின்றண்டலாளரென்றிகன்மன்னன்சொன்னான்

(இ-ள்) தூதர்களிந்தப்பிரகாரஞ் சொன்னமாத்திரத்திலே கோபமடைந்து இங்கே நம்முடைய காரியஞ்செய்கிறேனென்று போய் நமக்குத்துன்பஞ்செய்தவனைப் பொறுக்கத்தகாத துயரஞ்செய்து நம்முடைய திரவியங்களெல்லாம் வாங்குங்கள்தண்டகாரர்களேயென்று ஆக்கியாபித்தான் வலிமையையுடைய பாண்டியராசனென்றவாறு, (௧௰௬)

மன்பெருந்தண்டலாளர்மறையவர்குலத்துமிக்கார்
முன்புநின்றினையசொல்லவார்முனிவுடைமுகத்தராகி
நற்பரிதொகுக்கக்கொள்ளநயந்துமாக்கரலீந்த
தனப்பொருளெல்லாம்வாங்கச்சாற்றினன்சீறமன்னன்

(இ-ள்) அரசனுடைய பெரியதண்டகாரர்கள்பிராமணகுலசிரேஷ்டராகிய மிகுந்தமாணிக்கவாசகர்முன்னேநின்று இவைகளைச் சொல்லுவார்கள் கோபத்தையுடைய முகத்தினராகிநல்ல குதிரைகளைக்கொள்ளநயமுடனே உம்முடையகையில் அரசனாற்கொடுத்த தனமுடைய திரவியமெல்லாம் வாங்கச்சொல்லினன் கோபத்தையுடைய பாண்டியனென்று பின்னுஞ்சொல்வார்களென்றவா

மாறிதன்பயனியாதென்னின்மன்னவன்விடுப்பவெவ்வி
யிறைவனூர்தாவல்லையொண்பெருந்துறையிலெய்திக்
கொற்றவெம்பரிகள்காணார் மீண்டனர்கேண்மைபோற்
பற்றியநேசம்விட்டான்பாரினியாளவொட்டான்

(இ-ள்) இப்போது தூதர்கள் பணத்தைக்கேட்பதற்குப் பதிலென்னவென்னில் அரசனாலே விடுக்கப்பட்ட வெற்றிபொருந்திய வலிமையையுடைய தூதர்கள் சீக்கிரத்திலே திருப்பெருந்துறைக்குப்போய் வெற்றியையுடைய வெவ்விய குதிரைகளைக்காணாமல் வந்துவிட்டார்கள் ஆகையால் அரசனும் உம்மிடத்திலேவைத்த நேசத்தைவிட்டான் இனிப்பூமியையும் ஆளவொட்டானென்றவாறு, ௧௰௮

தனமினித்தருதல்வேண்டுமென்றுவன்றண்டலாளர்
சினமுடன்புகலவாளூர்விருந்தநுக்கையுடு

# ருய திருப்பெருந்துறைச்சருக்கம்.

நினைவுடனமைச்சர்வாழ்வுநீக்கிமெய்யாக்கின்மன்னர்த்
தனியுறவலிதிற்காவற்சாலையிலாகினார்கள்

(இ-ள்) திரவியமுழுவதுங்கொடுக்கவேண்டுமென்றுபின்புதண்டற்காரர்கோபத்துடனே சொல்லப் பேசாமலிருக்கவே அவகன்றி மையிருந்தமனதுடனே அமைச்சரிமையையைநீக்கிஉண்மைவாக்கையுடைய மாணிக்கவாசகரை வலிமையாகச்சிறைச்சாலையில்வைத்தார்களென்றவாறு, ௱௰௯

சற்றுமூட்டளாவிலாததன்மையின்வாதவூரர்
மற்றவர்செலுத்தச்சென்றுவன்சிறைச்சாலையெய்த
நற்றவர்வருத்தங்காணநாணுற்றொளிப்பான்போன்று
பொற்றடந்தேரின்வெய்யோன்போய்க்குடபான்மறைந்தான்

(இ-ள்) சற்றாயினும்மனந்தளர்ச்சியில்லாததன்மையையுடையவராய்த்திருவாதவூரரானவர் அந்தத்தண்டற்காரர்செலுத்தப்போய் வலியசிறைச்சாலையையுடையநல்லதவத்தையுடையஇவரதுவருத்தத்தைப்பார்க்கநாணமடைந்துஒளிப்பவனைப்போலப்பொன்மயமாகிய விசாலம்பொருந்தியதேரினின்றும்சூரியன்போய்மேற்குத்திசையின் கண்ணேமறைந்தானென்றவாறு, (௱௨௰)

கன்றுலாவிதழிமாலைகவின்பெறமுடித்தமேனி
வள்ளலரேவச்சென்றுவழுதிமேல்வெருட்சிகொண்டு
வெள்ளைவான்பிறைப்பற்றோன்றவிழுங்கவங்காந்தபேயின்
கொள்ளிவாயனையவண்ணங்கொண்டதுசெக்கர்வானம்

(இ-ள்) தேனுலாவியகொன்றை மாலிகையைஅழகுபெறமுடித்தசடையையுடைய பரமசிவன்யேவப்போய் பாண்டியன்மேற் கோபங்கொண்டு வெளுத்தமேலாகிய பிறைப்பல்லானது தோன்றவிழுங்கவாயைத்திறந்த கொள்ளிவாய்ப் பிசாசம்போல வடிவுகொண்டது செக்கர்வானமென்றவாறு. ௱௨௧

தெண்டிரையுலகினல்லறத்திலர்க்குற்றதீங்கு
கண்டுளசிறியோர்போலநகைத்தனகவின்கொண்முல்லை
யொண்டமிழ்வாதவூரர்க்குற்றதையுணர்ந்தேதுன்பங்
கொண்டவரிதயம்போலக்குவிந்தனகமலமெல்லாம்

(இ-ள்) தெளிந்தஅலைநீர்சூழ்ந்த உலகத்திலேநல்லயோக்கியர்களுக்குச்சம்பவித்த தீங்கைபார்த்த சிறியவர்கள்போலவாசனைகொண்டமுல்லைச்செடிகள் சிரித்தனஒள்ளியதமிழ்வேதம் பாடின மாணிக்கவாசகருக்கு வந்ததீங்குதெரிந்து துன்பங்கொண்டபெரியோர்கள்சிந்தைபோலக்குவிந்தனதாமரைமலர்களெல்லா

தென்னவன்வைத்தகாவற்சிறையினிலுறையுந்தெய்வ
மன்னவரொருவர்தாளிணைமுற்றுயர்வாரென்றே

யின்னல்கொண்மனத்தாள்போலவிருட்கரங்கொண்டுகூட்டிப்
பெருநகருள்ளார்கண்கள்புதைத்தனள்கங்குன்மங்கை

(இ-ள்) பாண்டியனால்வைக்கப்பட்டசிறைச்சாலையிலேதங்கிய தெய்வத்தன்மையையுடைய திருவாதவூரர் ஒருவர்கண்டால்மன மழிவரென்று துன்பங்கொண்ட மனமுடையவள்போல இருளாகிய கைகளைக்கொண்டு அழகியமதுரைமாநகரிலுள்ளவர்களகண்களைப் புதைத்தனள் இராத்திரியாகியபெண்ணென்றவாறு, ௱௨௩.

மன்பகைதுரப்பதிந்தமந்திரித்தலைவர்க்குண்டா
மென்பதுமுளதோவந்தோவெஞ்செய்துமென்றிரங்கி
யன்பரையகன்றுநெஞ்சாலழலெழவுயிர்த்துமாழ்குந்
துன்புடைமடவார்போலத்துயின்றிலர்மதுரையுள்ளார்

(இ-ள்) பாண்டியனுடைய பகையைநீக்கிக்கொள்ளுந் தன்மை யிந்தமந்திரிகளிலே முதன்மைபெற்ற திருவாதவூரருக்குண்டா மென்றுசொல்வதுமுண்டோஐயோ இதற்குநாமென்னசெய்வோ மென்றிரங்கித் தலைவனைப்பிரிந்து ஆற்றாமையுள்ளமனத்தோடு முழுகியலாபெருமூச்சுவிட்டுமயங்குகின்ற துன்பத்தையுடையமகளிர் போல அன்றிரவில நித்திரைசெய்திலா மதுரையிலுள்ளவர்க ளெல்லாருமென்றவாறு, ௱௨௪

செம்மனப்புனிதர்க்குண்டாந்தீங்குதயங்கிழமையாலே
யைம்முகக்கடவுணின்ற வறுமுகற்குரைக்குமாபோல
விம்முசெஞ்சூட்டுமுட்டாள் வியன்சிறைச்சேவலெல்லாந்
தமமனையிடங்கடோறுந் தழங்கினபுலரிக்காலே

(இ-ள்) நல்லமனத்தையுடைய பரிசுத்தரான திருவாதவூரருக் குண்டாகிய தீங்கினைத்தயங்கருகின்ற கிழமையினுமேலைந் துமுகத்தினையுடைய பரமசிவனீன்றருளிய ஆறுமுகசுவாமிக்குச் சொல்வதுபோலப் பருத்தசிவந்த உச்சிக்கொண்டையையும முள்ளையுடையகாலையும் பெரியசிறகைகளையுமுடைய சேவல்களெல்லா மதங்கள்தங்கள் வீடுகடோறும் விடியற்காலத்தில சத்தித்தன வென்றவாறு. ௱௨௫

சிற்பரமுணர்ந்துஞானச்செந்தமிழோதுநீதி
பொற்பினையுடையோரின்னல் பொருதுசென்றுரைப்பார்
விற்பொலிசடிலன்சூல வேலவனாலவாயி [போல
லற்புதன்கோயின்முன்றிலார்த்தனசங்கமெங்கும்

(இ-ள்) பரமசிவத்தினது யதார்த்தவடிவையறிந்துசெவ்வியத மிழ்வேதமென்கின்ற ஞானநூலையோதுமநீதியையுடையமாணிக் கவாசகர்துன்பத்தைபொறுக்கமாட்டாமற் போய்ச்சொல்லு கின்றவர்கள்போலப்பிரகாசம்பொருந்திய சடையையுடையவரா யும்-சூலாயுதத்தையுடையவராயும் திருவாலவாயி லெழுந்தருளி

# ௫௨ திருப்பெருந்துறைச்சருக்கம்

யிருக்கின்றசொக்கநாயகர் சந்நிதிக்குமுன்னே அனேகசங்கங்கள் முழங்கினவென்றவாறு, ௱௨௬

எம்மிறைபரியிலேறுநாளிதோவென்றுபார்க்குஞ்
செம்மலர்மடவாளிட்டதிலகசிந்தூரம்போல
வம்மலைமிசையேவைகியாகக்கிரிசூழ்போந்து
மைம்மிகுகடன்மேல்வந்துமுளைத்ததுவாலபானு

(இ-ள்) எம்முடையக்கடவுள் குதிரையிலேறிவருகின்ற நாளிது தானென்றுபார்க்கின்ற செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கப்பெற்ற திருமகளணிந்த சிந்தூரப்பொட்டுபோல மேற்குமலையில் அஸ்தமித்து மகாமேருமலையைச் சுற்றிக்கொண்டுவந்து கருமைமிகுந்த கீழ்க்கடலிலே உதயமானான் இளஞ்சூரியனென்றவாறு, ௱௨௭

மனாசெழுசெயகோல்வேந்தன் வைகறையெழுந்துநீராற்
கன்கழுவெள்ளகியெழுமிககணுதற்பூசைசெய்து
தண்கதிர்முத்தமாலைதரித்துநற்கலன்கடாங்கி
விண்ணளாவசெம்பொற்கோயின்முகப்பினில்வீற்றிருந்தான்

(இ-ள்) பூவுலகத்திலேசெங்கோற்செலுத்துகின்ற பாண்டியன் விடியற்காலத்தில் நித்திரையையொழிந்து கண்காலமுதலிய அவயவங்களைச்சுத்திசெய்து ஸ்நானஞ்செய்து சிவபூசைசெய்து குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய முத்துமாலைகளைத் தரித்துக்கொண்டு நல்லஆபரணங்களையணிந்துகொண்டு ஆகாசமளாவிய செம்பொன்னாற்செய்ததன்னுடைய அரமனைமுகப்பிலேவந்துவீற்றிருந்தானென்றவாறு, ௱௨௮

வென்றிறலாளரெல்லாம்வாம்பரித்திரள்கள்கொல்வான்
சென்றானடியார்க்கீந்தசெம்பொருடாரீராகி
யின்றுமைவருத்தஞ்செய்துமென்றெறிவெயிலினூடு
நின்றிடுமென்னநின்றார்நீள்பெரும்புகழினிற்பார்

(இ-ள்) வலியசௌரியத்தையுடைய தண்டற்காரர்களெல்லாம்தாவுகின்றகுதிரைக்கூட்டங்கள் கொள்ளப்போய்ச்சிவனடியார்களுக்குக்கொடுத்துவிட்ட நல்லதிரவியத்தைத்தரமாட்டாராகில் இனைநா உம்மைவருத்தப்படுத்துவோமென்று எரிகின்றவெயிலிலேநின்றிடுமென்றுசொல்ல அப்படியேநின்றார்மிகுந்தபுகழில் நிற்பவராகியதிருவாதவூரரென்றவாறு, ௱௨௯

அங்குநின்றிளைப்பார்தம்மையாண்டவாண்டகையையுன்னி
யிங்குணர்ந்திலைகொல்லோவென்றுதம்மனத்தேசொல்லிச்
சங்கவெண்குழையாய்மன்னன்றனக்குவாம்பரிகள்சீத
னங்களாகுமென்றுநவின்றசொற்பொய்ம்மையாமோ

(இ-ள்) அந்தவெயிலிலேநின்று இளைப்பாராகியமாணிக்கவாசகர்தம்மையாண்ட குருவைநினைத்து இங்கேயெனக்குநேரிட்டவருத்தத்தை அறிந்தாயில்லையோவென்றும் வெள்ளியசங்கைக்குழை

யையுடையபரமசிவனே பாண்டியனுக்குத் தாவுகின்ற குதிரைக ளெனக்கொடுப்பதாகவும் உம்முடைய கட லுருகுமென்று சொன்னசொற்பொய்ம்மையாமோவென்றும் தம்முடையமனத்திற் சொல்லுவாரென்ற

ஊனுடம்புடையவாழ்க்கையொழித்துனக்கடிமையென்று
மாநிலம்புகலுமாறுவந்துனையடைந்தேன்றன்னை
மீனவன்றன்பான்மீளவிடுத்தனை வேலைநீரு
ளானபினங்கீராற்றுநீரெனவாவதுண்டோ,

(இ-ள்) மாம்சபிண்டமாகியதேகவாழ்வைநீக்கிஉனக்கு அடிமையானவனென்று பெரியவுலகத்தார் சொல்லும்படிவந்து உன்னையடுத்தஅடியேனைப்பாண்டியனிடத்தில் மறுபடியும்விட்டாய் ஆற்றுநீர்சமுத்திரத்துடனே கலந்தபின்பு அக்கடல்நீராகுமேயல்லாமல் ஆற்றுநீராவதுண்டோ வென்றவாறு, (௱௩௧)

அறத்தனிச்செல்விபாசவன்பிலேனின்பாளென்று
வெறுத்திடிலடியேற்கிங்குவேறொருதுணையுமில்லை
செறுத்துயர்புரங்களெல்லாஞ்செற்றவனடியான்றன்னை
நிறுதகினர்வெயிலிலென்றானின்புகழுக்கேற்றமாமோ,

(இ-ள்) முப்பத்திரண்டு தருமத்தையும்வளர்க்கின்ற ஒப்பற்றஉமாதேவியை ஒருபாகத்திலேவைத்த கடவுளேஉம்மிடத்தில்அன்பில்லேனென்றுஎன்னை வெறுத்துவிட்டாய்அடியேனுக்குஇங்கே வேறொருதுணையுமுண்டோ பெரியதிரிபுரங்களைக்கோபித்து எரித்தசிவனுடைய அடியேனை வெயிலிலே நிறுத்தினார்களென்றால் உம்முடையகீர்த்திகுப்பெருமையாகுமோவென்றவாறு (௱௩௨.)

வானநாடவர்க்குமேலோய்வந்துனக்கடிமையிப்போ
தானநானிடும்பையுற்றாலாருனக்கடிமையாவார்
நானிலத்தார்சொல்லுநல்லுவாயன்றிநின்ற
வீனனுமொருவன்சொல்லிதேறுமோவுளத்திலென்றார்.

(இ-ள்) தேவர்களுக்கு மேலானவனேவந்து உமக்குஇப்போது அடிமையானநான் துன்பப்பட்டால் ஆருனக்கு அடிமைப்படுவார்களாயென்னும் அகங்கைதையுறுத்தநல்லமனத்தையுடையவர்கள்சொல்லுகின்றநல்ல சொல்லல்லாமல் ஈனனுகியஎன்னுடையசொல்லானதுசெவியிலேறுமோவென்றுசொன்னவாறு, (௱௨௩)

அவத்தொழில்புரியர்மேன்மையன்பருக்கன்புசெய்து
பவக்கடலிடைவிழாமற்பரிந்தருட்பாரவைநல்கித்
தவப்பெருவடிவங்கொண்டுதாளளித்தாருமையா
செவிப்புலன்புகுந்ததன்பர்செப்பியமாற்றமெல்லாம்.

(இ-ள்) அவத்தொழிலைச்செய்யாத மேன்மையையுடையஅன்பரிடத்திலே கிருபைசெய்து பிறவிக்கடலிடைவிழாமல் அன்புடனேகிருபாநோக்கமருளிக் குருமூர்த்தமாக வெழுந்தருளித் திரு

வடிவைக்கொடுத்தருளுகின்ற பரமசிவனுடையசெங்கமலங்களாகியடி யையடைந்தது திருவாதவூரர் சொல்லிய சொற்களெல்லாமென் றவாறு, (௱௯௪)

காம்படுதோளிபாகன்கண்ணுதலண்ணலன்பர்
தாம்படுதுயரமெண்ணியததுயர்தணிக்கவேண்டித்
தேம்படுமலர்கண்மாராயிற்றென்னவன்றனக்குவென்றி [ம்
வாமபரியளித்தல்சொலவாம் வல்வினைப்பகையைவெல்லா

(இ-ள்) மூங்கிலையொத்த தோளினையுடைய உமாதேவிபாகனாகியும நெற்றிக்கண்ணையுடையவனாகியும் இருக்கின்றபரமசிவன் தன்னுடையஅடியாராகிய திருவாதவூரர்படுகின்ற துயரத்தைநினைந்து அத்துயரத்தைநீக்கவேண்டி வண்டுகளைபொருந்திய வேப்பமாலையணிந்தமார்பையுடைய பாண்டியனுக்கு வெற்றியையுடையதாயிருக்குங்குதிரையைக்கொடுத்தகதையைச்சொலவித்தீவினைப்பகையைவெல்லுவாம்என்றவாறு. (௱௯௫)

திருப்பெருந்துறைச்சருக்கம்
முற்றுப்பெற்றது-ஆக-௱௯௫,

(*)

௧

சிவமயம்.

# குதிரையிட்டசருக்கம்.

(*)

வேறு,

தந்தையென்பவர்மைந்தரல்லல்தவிர்ப்பதேகடனாதலா
லந்தமின்றியகாதலன்பரழுங்கல்கண்டபினரியெலாம்
வந்துவெம்பரியாகவும்பரிவீரர்வானவராகவுஞ்
சிந்தைகொண்டனரந்தமாமவிதேடுவார்மதிசூடுவார்

(இ-ள்) பிள்ளைகளுக்கு வந்தவருத்தத்தைநீக்குவது பிதாக்களுக்குக்கடனாகையாலே முடிவில்லாதஅன்பையுடைய திருவாதவூரர்வியசனப்படுவதைப்பார்த்தபின்புநரிகளெல்லாம்வந்து வெவ்வியகுதிரைகளாகவும் தேவர்கள் அந்தக்குதிரைகளைச்செலுத்துகின்றவுத்தாரகவும் மனிதனிடத்திலேநினைத்தார் அந்தமகாவிஷ்ணுவும் பிரமதேவனும் தேடுவாரும் சந்திரனைத்தரிப்பவருமாகிய பரமசிவன்என்றவாறு, (௧)

தேசிலாநரிவந்துதிரண்டுவெம்பரியானபின்
மாசிலாவிமையோர்கடாமுமைந்தசேவகராயினர்

மாசிலாமணிமன்றாரரியவாசிவாணிமாபோலவே
யேசிலாவருமாயினார்மறைபரிவுளியின்புறமேயினார்

(இ-ள்) அழகிலலாதகரிகள் வந்துவந்துகூடி வெவ்வியகுதிரையானபின்புகுற்றமில்லாததேவர்களும அவைகளுக்கு ஏறறாவுத்தார்யினார்கள களங்கமிலலாத அழகியசபையினிடத்திலே நடனஞ்செய்கின்றகடவுளானவர் ஆரியதேசத்துக குதிரைவர்த்தகர்போலவகுதலில்லாத தம்முடையஉருவமாறினவராகிவேதககுதிரையின்மேலேறிக்கொண்டாரென்றவாறு. (௭)

கேடுகொண்டிரண்டிவீராரிரண்டுநாங்கர்சிறக்கவே
யூடெழுந்துகளிம்பரொகைஞுமுயரும்கிளாவெயதவே
கொடிடனறுடிவிம்மகேடியகூடல்குழுமதிலவாயிலவா
யாடலவெமபரிகொண்டுசென்றனராகியாருமைபாகியர்

(இ-ள்) சவுகருகள்கொண்டு குதிரைச்சேவகர்கிரண்டு இரண்டெங்கங்களிலுஞ்சிறப்பாகவா அவ்விடததிலேஎழுகின்ற தூளியானது பூமியாகாசமெங்குமபரககஉாதுகொமபு உடுககைமுதலிய வாத்தியங்களுஞசத்திக்க மதுரைமாநகரத்துநெடியமதில் வாயிலினிடத்தே ஆடுகின்ற வெவ்வியகுதிரைகளைக கொண்டுவந்தார்யாவர்க்கு முதலவராகியும உமாதேவியையொருபாகத்தி லுடையவராகியும இருக்கின்ற கடவுளென்றவாறு. (௮)

அங்குநின்றவாசென்றுயிம்பலலாகலாலேவணங்கியே
யெங்கணுந்துரகளபொயகிவிமம வெழுந்துகரசளமாயபவே
திங்களவெண்குடைமன்னவாரியதேசவெம்பரியினறுநந்
துரகவன்மதிலின்புறத்துதுவன்றிவந்தவெனசசொன்னார்

(இ-ள்) அங்கேநின்றவர்கள்போய் வேப்பமாலையைத்தரித்த பாண்டியனைவணங்கிஎவ்விடத்திலுந தூசுகளெழும்பி நெருங்கவும் சின்னங்கள்முழங்கவும சந்திரவட்டக்குடையுடைய அரசனே ஆரியதேசத்துக்குதிரைகளின்றைக்குநமமுடைய உயாந்தமதிலையானபுறத்தநெருங்கி வந்தனவென்று சொன்னார்களென்றவாறு, (௯)

வாசியின்றிரள்வந்தவென்றலும்ளாதரந்தறைபையார்மே
னேசமவைத்தவர்தம்மைமுன்னரழைத்துநீளகலையாதிதந்
தாசிலவெம்பரிகாணவெமயினென்றேறியவ கெழுந்தடைய
கூசுதன்படைசூழவேயிறைகோயிலின்புறமெய்திறான் [லார்

(இ-ள்)குதிரைகூட்டங்கள் வந்தனவென்று சொன்னமாத்திரத்திலே திருவாதவூரரிடத்திலே நேசமவைத்து அவரைவரவழைத்துவஸ்திரமுதலிய வெகுமதிகள்கொடுத்துக் குற்றமில்லாத வெவ்வியகுதிரைகளைப் பார்க்கவாருமென்றுசொல்லி எழுந்து சத்துருக்களும்அஞசத்தக்க தன்னுடையசேனைகள்சூழப் பாண்டியராசனானவன் அரமனையைவிட்டுப்புறத்து வந்தானென்றவாறு.

வேறு.

வண்டுபடியலங்கனெடுந்தடந்தோண்மாறன்-மணிச்சிவிகை மீதேறிமதுரைமூதூர், கண்டிருகண்களிக்குமவனையாலவாயிற் கடவுளிடமே பரிவரவுகாண்பானெண்ணிச், செண்டுவெளிக்குளிற் போந்துபனிநீர்தோய்ந்த செழுங்கழுநீர் மதுமாலைசிறந்துதூங்குங், கண்டரளமணிப்பந்தர்நிழற்கீழ்ப்பொற்றவிசின்மிசையினிதிருந்தான்சேனைசூழ,

(இ-ள்) வண்டுகள்மொய்க்கின்ற வேப்பமாலையணிந்த நெடியவிசாலமபொருந்திய புஜத்தையுடையபாண்டியனானவன்ரத்நசிவிகைமேலேறிக்கொண்டு பழமையாகிய மதுராபுரியிலுள்ளவர்களெல்லாரது இரண்டுகண்களுங்களிக்கும்படி திருவாலவாயிலிருக்கிறசொக்கநாயகர்கொண்டுவருகிறகுதிரைகளின்வரவினைக்காண நினைந்து வையாளிவெளிக்குப்போய்ப்பனிநீர்தோய்ந்தசெழுமைபொருந்திய செங்கழுநீர் மாலைசிறந்துதொங்குகின்ற குளிர்ச்சிபொருந்தியமுத்துப்பந்தலின்நிழற்கீழ் அழகியபொன்னினாற்செய்தசிம்மாசனத்தின் மேலினிதாக விருந்தான் சேனைகள்சூழவென்றவாறு. (௬)

முத்தமிழினிலைநவிலும்புலவர்சூழ முதுமறையோர்மங்கலச்சொன்முறையினேத்த, கைத்திகழுமவளைபொலம்பைங்கலன்களொண்மின்னக்கவரியர்களிருபாலுங்கவரிவீச, கொத்தலரும்பன்மலரின் வாசந்தோய்ந்துகுலவுமிளந்தென்றலுலவமாதர்பாட, மெத்துமணிமுத்தமெனுமபணிகள்பூண்டு- வெண்மதியின்றோற்றம்போல்வீற்றிருந்தான்.

(இ-ள்) இயலிசைநாடகமென்னும் முத்தமிழின்சிறந்தகவித்துப் புலவர்கள்சூழப் பழமையாகியவேதபிராமணர்கள்முறையாக வாழ்த்தெடுக்க- கைகளிலணிந்திருக்கின்ற வளையல்கள்தொனிக்கஆபரணங்கள் ஒளிசெய்யமங்கையர்கள் இரண்டுபக்கத்திலுமிருந்து வெண்சாமரைகள்வீச பலபூங்கொத்துகளின் வாசனையளாவிப் பொருந்தியஇளந்தென்றலானது வீசமகளிர்கள்பாடமெச்சுகின்றமுத்துமாலிகையைத்தரித்துக்கொண்டுவெண்மையாகிய உதயகாலத்துச்சந்திரனைப்போல வீற்றிருந்தான் பாண்டியராசன்-எ-று. (௭)

மங்குல்படிதடம்புரிசைவாதவூரர்-மனங்களிப்பவிழிகளிப்ப வழுவிலாத,திங்களெனுந்தென்மரபுவிளங்கவென்றுந்திருநீறுமஞ்செழுத்துஞ்சிறந்துமல்கச்- சங்கினுடன்காளங்கண் முழவமார்ப்பத்- தங்கியெழுந்துகளுயர்வான்றன்மேற்செல்லத்- துங்கவெண்டுங்கடல்பார்ந்துவருதல்போலத்-துவன்றியுளபரித்திரளின்றோற்றங்கண்டான்.

(இ-ள்) மேகங்கள்தங்குகின்றவிசாலமாகியமதில்சூழ்ந்ததிருவாதவூரில்அவதரித்தமாணிக்கவாசகருடையமனதுசந்தோஷிக்க

ண்கள்களிக்கக்குற்றமற்றதன்னுண்டிய சங்கிரலம்சம்விளங்க என்றைக்கும் திருநீறும்பஞ்சாக்ஷரமும் சிறந்துநிலைபெறச்சங்குகளும சின்னங்களும்பேரிகைகளும்சத்திக்கப்பூமியிலேயெழுகின்றதுகள் உயர்ந்தஆகாசத்தின்மேற்பரவப்பெரியகடலானதுபரவிவருகின்றதுபோல நெருங்கிவருகின்ற குதிரைக்கூட்டங்களின் தோற்றத்தைக்கண்டான்பாண்டியராசனென்றவாறு, (௮)

வேறு.

அங்கிளர்மதுரையம்பதியிலாவணித்
திங்களின்மூலநாள்செறிதினத்தினி
லெங்கணுநீறுமஞ்செழுத்துமோங்கிடச்
சங்கரனிடும்பரிசமூகம்வந்தவால்

(இ-ள்) அழகுமிருந்த மதுரைநகரத்தில் ஆவணிமாசத்தில்மூலநாளில் எவ்விடத்திலும் திருநீறும்பஞ்சாக்ஷரமும் விளங்கும்படிப்பரமசிவனாலே இடப்பட்ட குதிரைக்கூட்டங்கள் வந்தனவென்றவாறு, (௯)

தூத்திரண்மணிகெழுசோதிமாமுடிப்
பார்த்திவன்விழிநலமபருகவீதியிற்
கூத்தினர்செயலெனக்குலாவுவாம்பரிச்
சாத்தவர்வரும்பெருந்தன்மைகூறுவாம்

(இ-ள்) பரிசுத்தமாகிய திரட்சிபொருந்திய ரத்தினம்பதித்துப்பிரகாசிக்கின்ற பெரியகிரீடந்தரித்த அரசனுடையகண்கள்விருந்துண்ணவீதியினிடத்திலே கூத்தாடிகள்செய்கையைப்போலவிளங்கிநடக்கின்ற குதிரையைநடத்திராவுத்தர்கள் வருகிறபெரியதன்மையைசசொல்லுவாமென்றவாறு, (௰)

கட்டியசுரிகையர்கவின்கொள்வாளினர்
பொட்டணிநுதலினர்பொலனசெய்மேனியர்
பட்டுடைமருங்கினர்பவளநீள்வடம்
விட்டொளிவிளங்கியவியன்கொண்மார்பினர்

(இ-ள்) அரையிலேகட்டிய உடைவாளினையுடையவரும்அழகியகத்தியையுடையவரும்சந்தனப்பொட்டணிந்தநெற்றியையுடையவருமபொன்னிறமாகிய மேனியையுடையவரும்பட்டுவஸ்திரத்தையணிந்த அரையையுடையவரும் விட்டுவிட்டுஒளிசெய்கின்றபவளமாலையணிந்த விசாலமாகிய மார்பையுடையவருமென்றவா

புன்மயிர்ப்பேர்புலியின்றோலினர்
பின்மலர்ப்பாகிலேபிணைந்தகுஞ்சியர்
வனமொழிக்குரலினர்வயங்குதூணியர்
வின்மலிகரத்தினர்வெறித்தபார்வையர்

(இ-ள்) இலேசாயிருக்கின்ற மயிர்ப்பேரியையுடையவரும் புலித்தோலையுடையவரும்பின்புறத்தில்தாழ்கின்றகுடுமியிலேமலருமப

அ

ச்சிலையுஞ்சேர்த்துக்கட்டிய மாலையையணிந்தவரும் உரைச்சொல்லையுடையகுரலினரும்பிரகாசிக்கின்ற அம்ருக்தூணியையுடையவரும்வில்லேந்தியகைகளையுடையவரும் வெறிச்ச பார்வையையுடையவருமென்றவாறு. (௰௨).

பொன்னியல்குழையினர்பொலன்கொண்மாலையர்
பன்னிறச்சாத்தினர்பணைத்ததோளினர்
சென்னியிற்கதிர்மணியிலங்குடசேனைப்
பின்னிவிட்டெனதெனப்பிணைத்தகுஞ்சியர்

(இ-ள்) பொன்னாற்செய்த குண்டலத்தையுடையவரும்பொன்னரிமாலையையுடையவரும் பலநிறத்தையுடையநலச்சாத்தணிந்தவரும்பருத்த புயத்தையுடையவருமசிரோரதின்விளங்குகின்ற ஆதிசேடனைப்பின்னிவிட்டதுபோலப்பின்னியகுடுமியையுடையவருமென்றவாறு. (௰௩)

தாங்கியகரிகையுந்தயங்குவேல்களும்
வாங்கியசிலைகளுங்கணையும்வாளுமாய்
ஞாயகரிவிவர்வரநாப்பட்டோன்றினர்
தேங்கியநதிமதிசென்னியண்ணலார்

(இ-ள்) தாங்கப்பெற்ற உடைவாள்களும் பிரகாசிக்கின்ற வேலாயுதங்களும்வளைந்த விற்படைகளும் அம்புங்கத்திகளும்உடையவருமாய்ப்பக்கங்களிலே இவர்கள வரநதியிலேவந்தார் அவாரொன்றால்தேங்கப்பெற்ற கங்காநதியையும் பிறைச்சந்திரனையும முடித்தசிரத்தையுடைய பரமசிவனென்றவாறு, (௰௪)

வேறு,

நச்சுரகவுச்சிவளிநண்ணியொருவண்ணக்
கச்சிடைவிசித்துள்கவின்கொளுடையாரும்
பச்சைமுழுநீலமொடுபன்னிறவட்டஞ்சேர்
செச்சைநிறமன்னியதிரண்டவிருதோளும்

(இ-ள்) நஞ்சையுடைய சர்ப்பத்தினது சிரோரத்நம்பதித்துவிளங்கியநிறத்தையுடையகச்சையிடையிலேகட்டி அதனிடத்திலே சொருகிய அழகைக்கொண்ட உடைவாளும்பச்சை நீளமுதலிய பலநிறத்தையுடைய ரத்நமாலைகளணிந்த சிவந்தநிறத்தையுடைய திரட்சிபொருந்திய இரண்டுபுயங்களுமென்றவாறு, (௰௫)

ஒப்பரியசட்டையுமுடுத்திலகுபட்டுக்
தொப்பியுமுகத்திடைதுலக்கமுளராகிச்
செப்பருநலங்குலவுசெண்டொருகைகொண்டே
யிப்படியிலெப்படிவம்யாவருளரென்ன

(இ-ள்) உவமைசொல்லுதற்கரிதாகிய அங்கியும் உடுத்துவிளங்கியபட்டுடையும் தலைச்சாத்தும்உடையுவராயுந்திருமுகத்திற்பிர

காசமுள்ளவராயும்சொல்லுதற்கரியநன்மைமிகுந்தகுதிரைச்சவு
க்கை ஒருநாளையிலேகொண்டு இந்தப்பூமியிலே இந்தவடிவமுள்ள
வர்களயாரிருக்கிறார்களென்று சொல்லவென்றவாறு. (௰௬)

கட்டுபிடிமீதின்மணிகச்சைமணிமுன்பி
னிட்டவிருபக்கமணியின்றொலிபுலம்பப்
பட்டிலதுபக்கரைபணிக்கவரியொடும்
விட்டொளிவிளங்குமொருவெண்பரியிலேறி

(இ-ள்) அந்தவடியிற்கட்டியமணிமாலைகளுங் கச்சையிற்கட்டி
யமணிமாலைகளும் முற்புறத்தும் பிற்புறத்துமிரண்டுபக்கங்களி
லுங்கட்டியமணிமாலைகளும் இன்றொலிசையாய் ஆரவாரிக்கப்பட்டி
னாற்செய்யப்பட்ட கலனையிற்கட்டிய சாமரைகளொட்டும் விட்
டுவிட்டொளிவிளங்கப்பெற்ற வெள்ளைக்குதிரையின் மேலேறி-அ-

வீசுகவரித்திரண்மிடைந்தொளிரமீதே
தேசொடுகவித்துளசெழுங்குடைவயங்கப்
பூசல்புரிவெம்பரிபொருந்துபடையூடே
மாசில்குலவாரியரின்மன்னனெனவந்தார்

(இ-ள்) வீசுகின்றசாமரைக்கூட்டங்கள் நெருங்கிப்பிரகாசிக்க
வும்மேலேகவித்திருக்கின்ற செழுமைபொருந்திய குடைகள்கா
ந்தியோடுபிரகாசிக்கவும் யுத்தஞ்செய்கின்ற வெவ்விய குதிரைச்
சேனையினிடையிலே குற்றமற்ற ஆரியதேசத்தார்க்கு அரசனைப்
போலவந்தார்குதிரைச்சேவகரென்றவாறு, (௰௭)

மன்னவனுமிங்கிவர்வருந்தகைமைகண்டே
தன்னுளமகிழ்ந்திருதடங்கணிமையாம
லன்னமெறுமூர்த்தியெனமாலரனையல்லா
தின்னவெழில்யாவருளரென்றதிசயித்தான்

(இ-ள்) பாண்டியனும் இந்தக்குதிரைச்சேவகர்வருகின்றபெரு
மையைப்பார்த்துத் தன்மனமகிழ்ந்துவிசாலம்பொருந்தியஇரண்
டுகண்களும் இமையால்அன்னவாகனத்தையுடைய பிரமதேவன்
விஷ்ணுஉருத்திரன் இவர்களிலொருவரல்லாமல் இந்தஅழகோ
டுங்கூடியவர்யாவருள்ளாரென்று அதிசயித்தானென்றவாறு. (௰௮)

பண்ணியதவத்துளபயன்பரியின்மீதே
நண்ணியதெனத்தமினயந்தனர்வியந்தா
ரெண்ணியமுடித்தனமெனக்கருதிநின்றார்
புண்ணியமறைந்தமிழ்புகன்றதிருவாயார்

(இ-ள்) முன்னேநான்செய்த தவத்தினாலே உண்டாகியபிரயோ
சனமேகுதிரையின் மேலேவந்ததென்று தமக்குள்ளே மகிழ்ச்சி
கொண்டு அதிசயத்தையுடையவராய் என்னெண்ணத்தை முடித்

தாரொன்றுமினைத்துமின்னார்புண்ணியவடிவாகிய வேதத்தைத்தமிழ்செய்தமாணிக்கவாசகரென்றவாறு, (௨௰)

தூயசுடர்வேல்பலசுற்றியெதிர்செல்வார்
வாயொளிவிளைப்பரிகல்வாளினைவிதிர்ப்பார்
நேயமொழிதம்மிலணிநின்றுசமர்செய்வா
ராயினோரான்புடையிலானபரிவீரர்

(இ-ள்) தூய்மையானஒளியுள்ளஅனேகவேலாயுதங்கள்சுழற்றிக்கொண்டு எதிரேபோவார்கள் வாயினாலே ஆரவாரிப்பார்கள்பகைகொண்டுகத்திகளை அசைப்பார்கள் நேசமுடனேதங்களுக்குள்ளேஅணிவகுத்துநின்றுயுத்தஞ்செய்வார்கள்இப்படிப்பட்டவிநோதமுள்ளவர்களானார்கள் பரமசிவனோடுகூடவந்தகுதிரைவீரர்களென்றவாறு, (௨௧)

நீறுசிவநெறிநிலைநிற்கவுலகாளு
மாறனுமகிழ்ந்துதவமன்னனையழைத்தே
கூறரியவாரியகுலேசரொருவீதி
யேறும்வகைசென்றுரையுமென்றினிதுசொன்னான்

(இ-ள்) திருநீறும்சைவநெறியும்நிலைநிற்கஉலகத்தையாளுகின்றபாண்டியன்மகிழ்ந்து தவராசராகிய திருவாதவூரரையழைத்துச்சொல்லுதற்கரிய ஆரியகுலஅதிபரை ஒருவீதியிலே இந்தக்குதிரைகளை நடத்தும்படிக்குப்போய்ச்சொல்லுமென்று இனிதாகச்சொன்னானென்றவாறு, (௨௨)

என்னிவன்மொழிந்தனனெனத்தமிலிரங்கா
மன்னியவருந்தவரும்வாண்முகமலர்ந்தே
கன்னலைநலங்கொள்கனியைக்குறுகிநெஞ்சான்
முன்னுறவணங்கிவிழிமுத்துதிரநின்று

(இ-ள்) என்னவார்த்தைஇவன்சொன்னானென்றுதமக்குள்ளேயிரக்கமுற்றுநிலைபெற்றஅரியதவத்தையுடையமாணிக்கவாசகரும்ஒளிபொருந்திய முகத்திலேமலர்ச்சியுள்ளவராய்க் கரும்பையும்நற்சுவைகொண்ட கனியையும்ஒத்தபரமசிவனுக்குச்சமீபத்தேபோய்மனத்தினாலே முன்னேவணங்கிக் கண்களிலேயிருந்துமுத்துகள்போலநீருதிரும்படி நின்றாரென்றவாறு, (௨௩)

மன்றன்மலரோனுநெடுமாலுமுருவேறு
யன்றுமுதலின்றுமறியாதவகைநின்றாய்
வென்றிவிடையன்றியுயர்வெம்பரியின்மீதே
யின்றுனைவணங்கமுன்மெத்தவமுயன்றேன்

(இ-ள்) வாசனைபொருந்திய தாமரைமலரிலிருக்கும் பிரமனும் மஹாவிஷ்ணுவும் உருவம்வேறாகி அன்றுமுதல்இன்றைவரைக்கும்அறிதற்கரியவனாய்நின்றவனேவெற்றியையுடைய இடபவாகன

த்திலல்லாமல் உயர்ச்சியுள்ள வெவ்விய குதிரைவாகனத்தின்மேலே இன்றைக்கு உன்னைக்கண்டு வணங்க முன்னேயென்னதவஞ்செய்தேனென்றவாறு. (௨௪)

வந்தபடியிவ்வுருவணங்குமிதுவல்லா
லந்தவடிவாகிலுனையாரறியவல்லா
ரிந்தவகைக்கணடியவார்க்கெளியையென்றே
சிந்தைதனிலன்பொடுதெளிந்துலகெல்லாம்

(இ-ள்) தேவரீரெழுந்தருளிவந்த இவ்வடிவைக்கண்டு வணங்கப்பெற்று இதுவல்லாமல் மறைவாகக்கெட்டாத அந்தரிஷ்க வடிவாகியிருந்தாயானால் உன்னையாவரறியவல்லவர் இந்தவடிவங்கண்டல்லவோ பெரியோர்கள் அடியார்க்கு எளியவனாயிருக்கின்றாயென்று மனத்தில அன்பினுடனே தெளிந்து சொல்லுகின்றார்களென்றவாறு, (௨௫)

என்றுமுமன்பலவியம்பியருளாலே
வென்றிபுனைமீனவன்விளம்புமொழிசொன்னார்
கொன்றைமுடியாருமகிழ்ந்துகொடைமால
னன்றியொடுகாணுமலகைநறபரியுகைத்தார்,

(இ-ள்) இப்படியென்று அனேக உபசாரவார்த்தைகள்சொல்லி அருளினாலே வெற்றியைத்தரித்தபாண்டியராசன் சொன்னசொல்லைவிண்ணப்பஞ்செய்தார் கொன்றைமாலிகைதரித்தமுடியையுடையபரமசிவனும் அதற்கிசைந்தானைகையையுடையபாண்டியராசனன்றாகப்பார்க்கும்படி நல்லகுதிரையை நடத்தினாரென்றவா

மன்னரவபந்தமுடனவட்டநெடுவீதி
யென்னுமிவுளிதொழிலகளிபாவுமினிதேறி
யுனனுமனவேகமெனவோடுமுயர்பாயமமா
நன்னடமிதுமெப்படிநடாத்தியெதிர்வந்தார

(இ-ள்) நிலைபெற்றநாகபந்தம்விருத்தம்தெருவீதியென்கின்றகுதிரையினுடைய நடைபேதமெல்லாம் இனிதாகநடத்திக் காட்டி நினைக்கின்றமனோவேகம்போலவோடுகின்றஉயர்ந்தகுதிரைகளானவைநல்லநடனமிடும்படிநடத்திக்கொண்டெதிரேவந்தாரென்ற

வெம்பரியினண்ணலைவியந்துதமிழ்மாறன்
கம்பமுடியெய்தவொருகைவிரலசுழற்று
வம்பொன்விலையிலதொருஞ்சலையளித்தா
னெம்பரமாசெண்டினமிசையேறநகைசெய்தார்

(இ-ள்) வெவ்வியகுதிரைக்கு எசமானைப்பார்த்து அதிசயப்பட்டுத்தமிழைவளர்த்த பாண்டியன்சிரக்கம்பஞ்செய்து ஒருகைவிரலைச்சுழற்றி அழகியபொன் இவ்வளவென்றுவிலையில்லாததாயிரியவஸ்திரமொன்றுகொடுத்தான் எம்முடையகடவுளானவர்சவுக்கின்மேல் யேற்றிக்கொண்டு புன்னகைசெய்தாரென்றவாறு. ௨௭

வேறு,

ஏராரவெள்ளைக்கலையைநேசமெய்யினொருவனென்று
காரறெனவிளைவிநெபதிக்கடித்தனக்கதிலவாங்கிப
பேராரிலனமுடியினமீதுபுக்கிலனெனமார
னீறனனமறைபபிஞலேநெருசிடைவெகுடசிகொண்டான்.

(இ-ள்) அப்படியேயுறுக்கொண்டபிரகாசமபொருந்தியவுஸ்தி ரத்தைக்கேச்சுதைப்புடையவனுபக காறறைபபோலச்சீக்கிரத்தில சம்பளிவாசகத் தனனைக்கயிலவாங்கி வணங்கவில்லேசிரசிலேதரி த்துக்கொள்ளவில்லையெனறுபாண்டியராசனதிருநீறறையணிந்த கடவுளினுடையமறைப்பிஞலே கோபங்கொண்டானென்றவாறு

வெளிப்படவரியமேனிவிண்ணவன்கணனுநெஞ்சுங்
களிப்புறவருதலனறிகணடிலனகணணிகாட
டொளிகதுலகெங்குந்திறபோனுமபவமொழித்தருளான
மளிகடடினறிபாலரவனியிறநதெரியவல்லார்

(இ-ள்) வெளிப்படககாணுதறகரிய அருமைத்திருமேனியையு டையபரமசிவனுனவர் பாரத்தவர்கள கணகளுமமனமுமசநதோ ஷமடையும்படி வருகிறதைபபாரத்தும பாணடியனகாணவில்லே ஒளித்துககொணடு உலகெங்குந்திறைகின்ற கடவுளுமிந்தப்பிறவி யைபபொழித்து அறிவுகொடுத்தல்லலாமல எவாகள அவருடைய தன்மையைத்தெரிபவல்லவாகளென்றவாறு. (௫௰)

எணடிசைமனனரனபாற்சகமென்கலேகள்யாவுந
தெணடிடைகக்காடடலைந்தோநேயநலமிழநதைகையென்றே
வணடமிழவாதவூராமாமதுரேசனெருசிர
தொணடிளமுனவுதிரககுறைநதுமுன்னிவறுசொன்ஞர்

(இ-ள்) எட்டுத்திசைகளிலும இருககிற அரசாகள் அன்பால தமககுக்கொடுக்கப்பட்ட வஸ்திரங்களையெல்லாம சபையிலேவாங் கிக்கொளவது அவரது தேசமுழுககமென்றுவளத்தையுடையத மிழ்பாடுகின்ற திருவாதவூரானவர பாணடியராசன முன்னேநி ன்று அவனமனததிலே கொண்டிருந்தகோபம சாந்தியாகும்படி தாழ்ந்துசொன்னாரென்றவாறு, (௫௧)

நலகதகுமிநதநீாமைகேடடபினபநதுமன்னன்
கலகாமிலவெளிநன்றாலககறறவாதமமைநோக்கி
யிலககணவிதியாலுளளவிருமபரியிழிவுமேனமை
துலககுடனுமமிகாடியெமமுடனசொலலுமெனருன்

(இ-ள்) நன்மைபொருந்திய இந்தவழக்கத்தைக்கேட்ட பிறபா டு அன்புகொணடு கலககமில்லாதஅறிவலக்ஷணசாஸ்திரங்கற்றறி ந்தவரைப்பாரத்து லக்ஷணவிதிப்பிரகாரமிருக்கிறபெரியகுதிரை யினுடையஇழிவும மேனமையும்பிரகாசமாக உங்களுக்குள்ளே சோ தித்து நம்மோடேசொல்லுமென்று சொன்ஞன்பாணடியராசன்

சொற்றிகழ் தாரகநாமென் றணிபொருளுணர்ந்துளோரிய
கொற்றவெம்பரிகட்குள்ள குற்றமுங் குணமுநாடிப்
பொற்றடங்கிரியின்மீது பொருகயல்பொறித்ததும்பின்
வெற்றிகொண்மன்னர்க்கான முனிவனும்விளம்பலுற்றான்

(இ-ள்) சொல்லினும் பிரகாசிக்கப்பட்ட அஸ்வலக்ஷணத்தினுடைய விசயமாகிய பொருளைத் தெரிந்தவர்கள் வெற்றிபொருந்திய விரும்பத்தக்க குதிரைகளுக்குள்ளே குற்றங்களையுங் குணங்களையும்பார்த்து மகமேருமலையின்மேல் தன்னுடைய மீனக்கொடியை எழுதி வைத்துத்திரும்பிய வெற்றியையுங்கொண்ட அரசர்களாகிய பாண்டியனரசன்முன்பாக இந்தப்படிசொல்லுவதாக சொல்லுவானு.

வேறு.

தாவினைச்சக்கிரசுழி பாமண்டலாவர்த்தம்- தன்னுடையடியிற் றாழ்பாறுடையனாக, மெய்சுழிதெளிவர்த்தம் நாசிவாதம்-மேன்மைமுமே சுமுற்றேனவளையச் சுழிநாளுதம், பாவுசெழுங்கேசாரியடியிற்சோம த-பயனிலகொடுஞ்சுழிகேசாவர்த்தமாகும், பூவமருகசசைசையிற் பட்டடையாகப-புகன்றசுழி பிசசுழிகள் புனராவர்த்தி

(இ-ள்) துன்பத்தைத்தருகின்ற சக்கிரசுழி அண்டாவர்த்தமென்றுதன்னுடையடியிலிருக்கின்ற சுழிகளுமண்டலாவர்த்தமிருக்கின்றசுழியாகிய நளவர்த்தம்-காகாவர்த்தமுமேன்மையாக விளங்கிய முனவளையசுழியும பரவியசெழுமையுள்ள கேசாரி சுழியும காலிலிருக்கின்ற பிறயோசனமில்லாத கொடியசுழியாகிய கேசாவர்த்தமும் பொலிவோடுகூடிய சசசைகளிலிருப்பட்டடையாகச்சொல்லப்பட்ட சுழியும் ஆகிய இந்தச்சுழிகள் பொருந்தாதனவாமென்றவாறு. (௬௬)

கொம்புகன்னதிருகுநஞ்சபாதங் கொள்ளிக்கால்வெள்ளிக்கண்ணேனிகுன்று, வெம்புதமநகூடலோ நகப்பாரனோகண்ட மண்டபபாறவிலங்கிப்பலவண்டமாதல, சிமபொரிபாமகமெனிசித்ரகண்முனனறு சிறந்திகின்பனோட்டிறாலுறுபாலெனகே, யம்புவி யோர்மொழிந்தபழுதிவையுமினியா நாவிறகுரமிடையாகாவாம

(இ-ள்) கொம்புபோலிருக்கு நீண்டகாதும் முறுக்கியகாதும் () கறுத்தகாலொன்றும () விளர்த்தகாலொன்றும விளர்த்தகண்ணும நீனிதுன்றுமையும் வெம்புகின்ற நிறையுடையமயானருத்திரனைப்போலு நீலகண்டமும் பீஜமில்லாமையும மறைகுறைய விருக்கும்பெரியபீஜமும் செவ்வையாகிய மதுமையும் அசுகினி

* நஞ்சபாதமாவது மூன்றுகால்விளர்த்து ஒருகால்கறுத்தது
* கொள்ளிக்காலாவது மூன்றுகால்கருத்து ஒருகால்விளர்த்தது

யும் சித்திரமும்போ லசைவில்லாமலும் முகம்வால்நாற்கால்களி
வைகளிற் சுழியில்லாமையுமெனப் பூலோகத்தார்சொல்லிய கு
ற்றங்களில்லாமல் கழுத்தடியிலமார்க்கண்ட மிரட்டையாயிராம
லென்றவாறு, (௬௫)

சிரமதனிலிரண்டுசெழுந்துளைப்பினான்கு,சிறந்தவாரந்தனிலி
ரண்டுநுதன்மேலொன்று-குரலமிசைநின்றசுழியொன்றினொடுகு
லவிய விரைந்தசுழிகுறையாதாகி- நரிவெருகுகருங்காகமல்லை
யோரி-நாளிசெழுங்கேலனுங்குரலின்றாகி, விருபெருந்திரை
வேலைமங்குல்சங்கம்- விடைமுழவம்போன்முழக்கமிகவுண்டாகி

(இ-ள்) சிரசிலேஇரண்டுசுழியும்செழுமையுள்ள நாபிலேநான்
கு சுழியும்சிறந்தமார்பிலே யிரண்டுசுழியும் நெற்றியிலேஒருசுழி
யும உதட்டிலே ஒருசுழியும் ஆகியசுழிகள் பத்தும்குறையாமல்
நரிபூனைகரியகாகமைபோய் ஓரிநாய் செழுமையுள்ளயன்றிஇவை
களுடைய சத்தமில்லாதவையாய்ப் பெரியஅலையையுடையகடல்
மேகம்சங்கம் இடபம்பேரிகை இவைகளைப்போல் சத்தமுடைய
வரென்றவாறு, (௬௬)

உருக்கிகல்செய்புளிபுளியங்கழுதைசெந்நா யொன்பூனைந
ரியினுடனகரியகாகந்,தரித்தவழற்புகைநிறமும்புனையாவாகித்- த
ருக்கிமருக் கெனுங்கவனத்தன்மையையுதிருதித்தகதிர்வெண்டர
ளங்கினகலைல-மென்கமலத்தாதுசெழுங்கனகங்காயா,வரத்தமல்
நல்லபசுங்கிள்ளைபோலவமைந்தவொளிதயங்கிவங்கத்தவாகி.

(இ-ள்) கோபித்துப் பாய்கின்றபுலிகாடிகழுதை செந்நாய்
ஒளியையுடைய பூனைநரிதரிக்கப்பெற்றகரியகாகமதிபுகை இவை
களினுடையநிறத்தைப் பொருந்தாதவைகளாய் 'இருமைப்புடை
யனவாய் வாயுவென்னும் வேகத்தோடுங்கூடிப்பிரகாசித்தகிரண
ங்களையுடைய வெள்ளியமுத்துக்கள் சந்திரன்நிலாத்தினம் மெல்
லியதாமரையினுடையமகரந்தம்செழுமைபொருந்தியபொன்கா
யாசெவ்வரத்தமலர்நல்லபச்சைக்கிளி ஆகிய இவைகள்போலஅ
மைந்தஉருவத்தை யுடையவாகியென்றவாறு, (௬௭)

நெற்றியகன்றுயர்குரவமுடைத்தாய்வெண்மை-, நிறைந்து
தமிலொதிலகுமெயிற்றவாகித்-துற்றநறுகந்தமிகச்சிறந்துநாவு
ஞ்-சூதவிளந்தளிர்போலுமருணந்தோய்ந்தே, யுற்றவிரண்டிமை
மருருங்கொரகையுண்டாகி யுக்கிரமாம்விழிப்பார்வை யுடையவா
கி முற்றுமெயிற்றசையின்றியுள்ளவைாங்கு முக்கோணமெனத்திக
ழுமுகத்தவாகி.

(இ-ள்)நெற்றிபரந்துஉயர்ந்தமேலுதட்டையுடையவாய்வெண்
ணிறநிறைந்துதம்மிலேவரிசையாய்ஒத்துப்பிரகாசிக்கப் பெற்றப

றக்களையுடையவாய்நிறைந்த நல்லவாசனை சிறந்துநாகக்குமமாகிவிளங்குகின்றபோலும செம்மைநிறம்பொருந்தி இரண்டிமைமயிருந்தடசியுடையவாய்உக்கிரமாகியகண்பார்வையுடையவாய்தேகத்தில் அதிகமாழிசமில்லாமல உளளேவனோநூ முக்கோணமாய்ப் பிரகாசிக்கின்றமூகத்தையுடையவாயென்றவாறு. (௧௮)

,உளையினுன்றலைம்மயிருநிற்மொன்றுமியூரத்திலட்டனகழுத்து கபடமேபோன்று, வலோசிறக்கொளிபரந்து குவிந்துள்வாங்கியண்டலமுண்டாயுநங்கொள்குரங்கள்சேர்ந்து, விலாவெல்லாரம்புகள் நரந்துதசைதாஙென்றிகளிர்முழந்தாள்ஙெட்டியதங் கெழுமயின்றி, செவிமுதுகுப்பினைந்துதுடை இரண்டுதண்டைநீண்டுடலசெய்த்தநிறநீர்மையாகி,

(இ-ள்) கழுத்துமயிரும்தலைமயிரும்ஒருநிறமாயபார்பிலுடனே கண்டமும் பாமபின்படமபோலெத்து சங்குசன்போலவுமொளியுண்டாய்க்குவிந்து உள்வாங்கி மண்டலஞ்செய்வனவாய் வடிமைகொண்ட குளம்புடையவாய் விலாவெல்லாநரம்புகள்மறைந்துதசையையுடையவாய்பபிறகாசிக்கின்ற முழங்காலசெறிந்து இல்லாமல்செவிப்பாகிய முதுகும்பொருந்துதுடைசருந்தியண்டி தண்டைக்காலானதுநீண்டு சிவந்நிறத்தையுடையவானென்றவாறு,

மிக்கசெழுமைபநாவிற்கமலநாதன்யிறிப்புனலெவியின்றோர்சுவெண்மர்குமபானா, மைகக்டனமேலயிராகநயிலமேயிடீவின்றனந்சருப்பையயிலாகவணடந்தனிா, மெராகமெமுமேபுகமெமுறியிளா ரிமறேன்றுநதொனமையவாயிரணமிதுமோகுராவெனாறி,யொக்கவெருகரும்புரிகருளவாய்வான்ளிவொளபுனலிற்செல்லுநெறியுளவுமாகி,

(இ-ள்) மிக்கசெழுமையுள்ளசாமவேதத்திலுனைபநாபிரமதேவனைவன் ஓமஞ்செய்யும்போது அவனைவன்னிவினயலையில்வழிகநீரினிடத்தும இந்திரன்முதலியோர் மருபாலராமொனசிடத்தும் சாறத்திரத்தினியமதக அவிர்தகனிடத்தும் அந்தப்பிரமனோமஞ்செய்த அகினியிடத்தும ஜனைநத்திருப்பையிருப்பட்சுமி சாபத்தாற்பிறமன்கோட்டாதக அந்தகோட்டாலமுட்டையிலும்ஆகிய இடமிவழிடத்திலும உற்பத்தியானபழமையுடையனவாய் நாலுகாலும் கெறியும ஒசசெவருந்த இரதமும பஞ்சகல்யாணியெனனுமகுதிரைகள் ஆகாசத்திலும்நீரிலுமசெல்லுகின்றவழியுண்டா யென்றவாறு, (௧௯)

மங்காளன்சாரங்கன்கங்காநீலன் மௌவழகன்கொங்காளன்சம்பான், குங்குமச்சோரன்கரியாளிலன்சாரன் குலவுமன்

னாலுரத்தி சிவந்தானல்லான்பொல்லான், நந்தகருங்காற்சம்பர் னென்னுங்கூடிய, தன்மையுள்ளனவற்றையுடைனகச்சாதிக், துங்கமி குமபரியினையென்றுவற்றினறன்மைத தொன்மையுணர்ந்தாசனை முனோறுகின்றார,

(இ-ள்) மயிகாளனென்றும சாரங்கனென்றும் கங்காநீலனென்றுமமேனிவழகனென்றும கொய்காளனென்றும சனனசமபானென்றுமகுங்குமசோரனென்றும கரிபானென்றும நீலனென்றும் சா னென்றும விளங்கியமளானென்றும உரஞ்சிவந்தானென்றும நல்லானென்றும பொல்லானென்றும கருங்காற்சம்பானென்றுமபலவிதத்தையுமுடைய சாதியாய் மயாகதகுதிரைகளினைனென்று அவாவினமேன்மைபெல்லாஞ்சொல்லிப்பாணடியராசனைத்தொழுதுநின்றாகளென்றவாறு (௪௧)

நற்பரியினிபல்புணர்ந்தோரின்னவாறு நவின்றமொழிகேட்டுயிர்கடிங்குவெள்ளி, வெர்ப்பனையிடையே மியரிக்குந்தெய்வவெம்பரிகள்யாவுமவிலைமதிக்கப்பண்ணப, வெள்ளயுடையதனபொருள் மேவெண்ணமங்கு போதுவலாமவயாங்கு மகிழ்வெய்திமாறன். பாவைமுகநாடிககிறுமாற்ந்தருக்குதார்த்கொந்குதிரைகளையெனறுன,

(இ-ள்) மன்னையுள்ள குதிரையினுடைய லக்ஷணங்களைவாயுயர்ந்தவர்கள்நிகட பிரகாரஞ்சொல்லவசொல்லக்கேட்டு விசுவமங்கப்பையனை ... மேலவர்க்க இடபவாகனர் மேலேயிவர்ந்தருளாநின்ற கொடியவர் ... குதிரைக ளெல்லாமவிலைமதித்தபின்பு அந்தப்பொருளைப் பரனகொடுக்கப்பொருந்தினமேலவர் ... விலைபெற்றகுதிரைகளா யாருக்கும் ... சிவனுடையதிருநாமத்தைகப்பாரத்தர கயிறுமாறிக்தாரககடவிர்குதிரைசாட்டகர்களா பெசாருனென்றவாறு, (௪௨)

வேறு

காத்துலகனைத்தும் பாங்கைனைநலஞ்செய்யுமீசர்
பாககுதிரைகளுருசெய்யாபார் பியகரக்கிலையாககச
சாத்தியாதும பிலங்கோர்சாலபினாககழிறுமாறி
பித்தனாபங்கு ருடிசேர்த்தனரிவுளியெல்லாம்

(இ-ள்) உலகமெல்லாமபாதுகாத்துப்பிழைக்கும்படி திருபாலேககருசெய்யகின்றநீதியையுடைய பாண்டியராசனதுகாரியஞ்செய்வோர்கள் கையிற்றைபிடித்துவாங்கக் குதிரைச்சாத்தர்களுக்குள்ளேபெருமைபொருந்திய ஒருவர்கயிற்றை மாறிக கொடுத்தார்உடனே அவர்கள்குதிரைகளையெல்லாம் லாயத்திலே சேர்த்தாரகளென்றவாறு, (௪௩

திண்டிறல கெழுவேயித தென்றிசைக்கிறையுஞ்சேய்ய
வண்டார் [illegible]
பணை [illegible]
கொண்டலைப்பொருதண்டா [illegible]

(ஸ்ரீ-ள) [illegible] தென்றிசைக்கு அதிபதியாகிய [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௩௪)

[illegible]
வேந்தனை [illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) [illegible] குதிரைகள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] (௩௫)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) [illegible]
[illegible] குதிரைகளெல்லாம் [illegible]
[illegible]
[illegible]
[illegible]

வேறு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) [illegible] குதிரை [illegible]
[illegible]
[illegible] குதிரை [illegible]
[illegible] கொண்டனனென்றவாறு. (௩௭)

௬௫ குதிரையிட்டசருக்கம்.

லுமாசெய்கோபுரமாடநெருங்கிய
வரலர்வீதியுமாவணவீதியு
முரசவோசைமுழக்கொழிந்தேமிக்க
குரைகொள்வாய்நரிகூக்குரலானதால்

(இ-ள்) மலையைப்போற்செய்தகோபுரமும்உப்பரிகைகளுமநெருங்கியராசவீதிகளும்கடைவீதிகளும்பேரிகையோசைமுழக்கம்நீங்கியிருந்தசத்தத்தைக்கொண்டவாயையுடையநரிகள் ஊளையிடுஞ்சத்தமாயிறதென்றவாறு, (௪௯)

பாடிமாரணம்போற்றமன்றிற்பயின்
றாடியார்விளையாட்டின்புதுமையா
லோடியாருமொளித்திட்வென்றொரு
கோடியானதுகூவுநரிகளுமாம்,

(இ-ள்) வேதங்கள்பாடிப்போற்றும்படிக்குக்கனகசபையிலேயிருந்தருசெய்கின்ற கடவுளுடையவிளையாட்டின்புதுமையினாலே யாவருமோடி யொளித்துககொள்ளுங்கோளென்று ஒருகோடிநரிகள்கூட்டங்கொண்டு கூவுமென்றவாறு. (௪௯)

துங்கமாறன்றொருபடைவெங்கொலை
தங்குமாயுதந்தாங்கியெதிர்க்கவே
யெங்குமானநரிகளெல்லாங்கொடுந்
திங்கமாயவர்செய்யத்தொடங்குமால்

(இ-ள்) உயர்ச்சிபொருந்தியபாண்டியராசனுடையகூட்டமாகியசேனைகள்வெய்யகொலைதங்கிய ஆயுதங்களை யெடுத்துககொண்டெதிர்க்க எங்கும்பரவியிருக்கின்ற நரிகளெல்லாம் கொடியசிங்கம்போல அமர்செய்யத்தொடங்குகின்றவென்றவாறு, (௫0)

நீடுவாடையிடந்தொறுநின்றணி
கூடுவார்மிகக்கூவிவெருட்டுவா
ரோடுவாரொளித்தோடிபபுகுமிடந்
தேடுவாரெதிர்சென்றமர்செய்குவார்

(இ-ள்) நீடியதெருககள்தோறுநின்று அணிவகுப்பாகக்கூடுவார்களமிகவும்கூச்சலிட்டுமயங்கச்செய்வார்கள் ஓடுவார்கள்ஒளித்துக்கொண்டுஓடிப்புகுந்துகொள்ளுமிடந்தோறும்தேடுவார்களஎதிரேசென்றுயுத்தஞ்செய்வார்களென்றவாறு. (௫௧)

எங்களாருயிர்காத்தருளின்றணி
திங்களாயெனத்தெய்வம்பரவுவா
ரங்கபாடமடைத்தரண்செய்குவார்
மங்குலாடுமதிற்றலையேறுவார்

(இ-ள்) எங்களுடையஆத்மாவை இன்றைக்குக்காத்துரக்ஷிக்கவேண்டும் மூன்றுபிறையையணிந்தபரமசிவனேயென்றுசொக்

ணநாயகரைப்பரவுவார்கள். அழகிய கதவுகளைச்சாத்திக்கொண்டு காவல்செய்வார்கள்மேகங்கள்விளையாடுகின்றமதிலின்மேலேயிக கொள்வார்களென்றவாறு, (௩௨)

நற்றவஞ்செயனன்கிலதானதோ
கொற்றவன்செய்யகோலகொடிதானதோ
விற்றியின்பயனென்னெனவினவனை
முற்றிரங்கினர்கூடலுளோரெலாம்.

(இ-ள்) நம்முடையதேசத்தில்நல்லதவஞ்செய்வதுநன்மையில்லாததாயிற்றோ அரசனுடையசெங்கோல கொடிதானதோ இன்றைக்குஇதனுடையபிரயோசனம் என்னமோவென்றுஇந்தப்பிரகாரம் இரங்கினார்கள்மதுராபுரியிலுள்ளவர்களென்றவாறு.

தூயவன்புரகத்தொழிலாளர்கள
கோயிலின்கடைகூகதரல்செய்துபோய்
னாயவம்பரிவதவல்லாநரி
யாயவென்றரசர்கெதிர்கூறினர்,

(இ-ள்) பரிசுத்தராகிய வலிமையுள்ள குதிரைக்காரர்கள் அரமனைவாசலில வாயைதிறந்து கூசலிட்டுக்கொண்டுபோய்மாயமாய்வந்துவெம்மைபொருந்திய குதிரைகளெல்லாமநரியாய்ப்போயினவென்றுபாண்டியராசனுக்கெதிரே சென்றார்களென்றவாறு. (௩௪)

மாககளோசையும்வாம்பரியோசையுங்
கூககுலாருநரியோசையு
ரீகொண்மாமுடிமன்னவன்செவி
தீகொள்வேலைச்செருகியதொத்தவால்

(இ-ள்) மனிதர்களுடைய சத்தமும் தாவுகின்ற குதிரைகளுடை சத்தமும ஊளையிடுகின்ற குறியவாகியநரிகளுடையசத்தமுமமேலாகியகிரீடத்தைகொண்ட சிரசையுடையபாண்டியராசாவின் காதிலெநால்ந்த வேலாயுதத்தைச்செருகிய தொத்திருந்ததென்றவாறு, (௩௫)

இந்தவாறுசெவிகேட்டிருகுண்டழல்
அந்தவாகருசிறுவெயர்பெயகவே
யத்தமாறனவெகுட்சிகண்டண்ணலார்
வந்தமாயநரிப்படைமாற்றினா.

(இ-ள்) இந்தப்பிரகாரமாகிய சத்தத்தைக்கேட்டு இரண்டுகண்களுந்தீயபொறிசிந்தத்தேகத்திலே வேர்வைசிறியதுளிகளாகஉண்டாகஅந்தப்பாண்டியராசன்கோபிக்கஅதைக்கண்டுபரமசிவனானவர்மாயமாய்வந்த நரிச்சேனைகளை நீக்கினாரென்றவாறு, (௩௬)

பொன்கொனுடன்புனைந்தவந்திகழ்
மின்கொளாரம்விளங்கியமொய்ப்பினன்

நின்றுநீநடப்பிவர்தண்டல்செய்
வனைகளுளாயமமெனக்கூறினன்,

(இ-ள்) செல்வத்தைக்கொண்டபாண்டிநாட்டையுடையவனும் அலங்காரஞ்செய்ததன்மைபொருந்தியபிரகாசங்கொண்டமுத்து மாலையிலங்கியபுயத்தையுடையவனுமாகியஅரசனானவன்தன்னு டையகண்ணுக்குச் சமானமாய் நடக்கின்ற கொடியதண்டற்கார ரையாருமென்று ஆக்கியாபித்தானென்றவாறு, (௫௯)

வேறு.

நரியினிற்றெருகுதியெல்லாநம்பரித்திரள்களாக்குந்
சரிதியைக்கொணர்மினென்னத்தாடொழுதவர்கடோடி
யிருபிறப்புடையராகினிப்பிறப்பிறப்பில்லார்தம்மை
வினையினிற்றுறிநும்மையழைத்தனன்வேந்தனென்றார்,

(இ-ள்) நரியினுடைய கூட்டங்களெல்லாம்நல்லகுதிரைக்கூட் டங்களாக்குகின்றசரித்திரத்தையுடையமந்திரியைக்கொண்டுவா ருங்களென்றுசொல்லத் தண்டற்காரர் அந்தப்பாண்டியன்பாதத் தைவணங்கிசீக்கிரமாகப்போய்இரண்டுபிறப்பையுடையவராகி யினியொருபிறப்புமில்லாத மாணிக்கவாசகரைக்கண்டு உம்மை அரசனழைத்துக்கொண்டுவரச்சொன்னா னென்றார்களென்றவா

சிந்துரகன்புபூண்டசித்தருமறுவலெய்தி
நித்திலத்தொடரிபோன்மின்றுநீறணிந்தசாந்தூறிப்
பத்தருக்கேவல்செய்வார்பதமலர்முடிமேற்சூடி-
முத்தமிழ்ப்பொருனைநாடன்முன்புசென்றருகுநின்றார்,

(இ-ள்) சிந்துவித்தைகாட்டிய கடவுளிடத்தில்அன்புவைத்தசி த்தத்தையுடையதிருவாதவூரரும் புன்சிரிப்புக்கொண்டுமுத்துப் பிரகாசத்தைப்போல- பிரகாசியாநின்ற திருமேனியிலேதிருநீறு மியசந்தனத்தையும்பூசிஅடியவர்களுக்கேவல்செய்வாராகியவ ருடையபாதாரவிந்தங்களைச் சிரசிலேவைத்துக்கொண்டு இயலி சைநாடகமென்னு முத்தமிழையும்வளர்க்கின்ற பொருனைநாட னென்னும்பாண்டியராசன் முன்னேபோய்ப்பக்கத்திலே நின்றாரென்ற

மூட்டெழுமழல்போல்மன்னன்முனிவடைமுகத்தனாகி
யீட்டுநம்பொருள்களெல்லாமிரப்பவர்தமக்குநல்கி
நாட்டுளநரிகளெல்லாமிரப்பவர்தமக்குநல்கி
காட்டினீர்செல்மரியகண்டிரோவமைச்சரென்றார்

(இ-ள்) மூண்டெழுகின்றதீயைப்போல் பாண்டியராசனானவன் கோபத்தையுடைய முகத்தினனாகிச்சொல்லுவான்இவர்நாம்சம் பாதித்ததிரவியங்களையெல்லாம் யாசகர்களுக்குக்கொடுத்து விட்டுநா ட்டிலேயிருக்கின்றநரிகளையெல்லாம்நல்லகுதிரைக்கூட்டங்களா க்கிநம்முன்னே அழைப்பித்துக்காண்பித்தார் இந்தமாயத்தைக்க ண்டீர்களோ மந்திரிகளேயென்றானென்றவாறு. (௬௰).

தன்னெறியில்வழுவினோர்கட்குத் தண்டஞ்செய்தல்
மன்னியலரசநீதியாயினுமுறைமையல்லா
சென்றுயர்கலைதனிற்பரம்பொருளைப்பாலிருக்கும்பால
ரென்றிவர்க்குறுகண்செய்தலெம்மனோரியல்பன்றென்றான்

(இ-ள்) பின்னும் பாண்டியராசனானவன் தன்னுடைய செங்கோலி லே தப்பினவர்களுக்குத் தண்டனை செய்வது வழமை பொருந்தியசெளரியத்தையுடைய அரசர்களுக்கு நீதியாகிலுமந்த நீதியல்ல பிராமணர்கள் உயர்ந்தவர்களுக்குத் தீங்கு ... ள் மாதர்கள் விருத்தர்கள் பாலர்கள் என்று சொல்லப்பட்ட இவர் களுக்குத் துன்பஞ்செய்வதுமெம்போலொத்த அரசருக்கு முறைமையல் லவென்று சொல்லியனுப்பினான். ( [illegible] )

தண்டல்செய்வன்கணாளர் காவலன் ... 
கண்டிடமுனிவனில்லாமாதவனிவனாயென்னோடி
மண்டலமெல்லாம் ... 
கொண்டிருந்தனைவருத்தமெல்லாம் வாங்குமென்றான்.

(இ-ள்) தண்டிக்கையையுடையவர்களைத் தண்டஞ்செய்யும் காவலாளர் ... கொண்டுபோய் ... மேலே ... கோடி ... வெயிலிலே நிறுத்தி ... பெல்லாம் ... சொன்னார். ( [illegible] )

வஞ்சனைவல்லவாயர்மற்றவர்தமைக்கொண்டேகி
வெஞ்சினவெயிலினிற்றுவியநற்றலைக்கோலேற்றி
... கொன்வாதவூரர் ... 
நெஞ்சுமிசையிருப்பக்கல்லைப்பிணைத்துச்சொல்வார்

(இ-ள்) வஞ்சனையுடைய தண்டற்காரர் அவரைக் கொண்டுபோய் வெயிலிலே நிறுத்தி அந்தவெயிலிலே ... ர்கள் அப்போ து ... கல்லை ... கொண்டு திருவாதவூ ரரின்மேலேற்றி ... தண்டச் ... டியனுக்குக் கொடுத்ததைக் கொடு என்று சொல்லுவார்கள் என்றா வாறு. ( [illegible] )

தொல்லையோரிருவர்தேடுந்தேடாதேயாதுசெய்வேன்
தில்லையோர்பரவநின்றதெய்வமேயாதுசெய்வே
னில்லையோகருணைநின்பாலென்றனையடிமைகொண்ட
வல்லையோதமியேனின்னறிவிலையோவறிவிலாயோ

(இ-ள்) முற்காலத்திலே பிரமவிஷ்ணுக்கள் தேடியசோதிசொ ரூபனே நானென்னசெய்வேன் தில்லைமூவாயிரவர் வணங்கும்ப டி நின்றதெய்வமே நானென்னசெய்வேன் உன்னிடத்திற்கிருபை யில்லையோ என்னையடிமைகொண்டவனியல்லையோ என்னுடை ய துன்பத்தையறிந்தாயோ அறிவிலாயோவென்றுரைசெய்தார். ( )

பரித்திரணரியேயானபான்மைகண்டடியேன்றன்னை
வருத்தினரிதனைமாற்றவல்லனீமாறுமாயாகிற
றரித்ததனைவிடத்தையெனுந்தன்மையம்புரங்கண்மூன்று
மெரித்ததுமில்லையாமெனவிரங்கினரவாதவூரர்

(இ-ள்) குதிரைக்கூட்டங்கள்நரிகளான தன்மையைக்கண்டு அடியேனைவருத்தினார்கள் இதனைநீக்கத்தக்கவே நீக்கமாட்டாயானால் விஷத்தைக்கண்டத்திற் றரித்தாயெனனும் தன்மையுந்திரிபுரங்களைமூன்றையுமெரித்ததும் இல்லையாமென்று இரங்கினாரவரினுமிகுந்தவராகிய திருவாதவூரரென்றவாறு. (௬௫)

நன்றிகொள்கடவுட்கங்கைநதியினைவையைப்பதி
சென்றெறியிலவாதவூராபேரிடர்தீரென்றேவி
யன்றருமடந்தைக்காளாயடியவர்க்கெளியார்கொன்றை
துன்றியமுடியின்மேன்மண்சுமந்ததையுரைத்தல்செய்வாம்

(இ-ள்) நன்மையைக்கொண்ட தேவகங்கையைப்பார்த்து வைகைநதியிலேபோய் அழுகிய திருவாதவூரருடைய பெரியதுன்பத்தை நீக்கென்று அனுப்பி அப்போது ஒருபிட்டுவாணிச்சிக்குக் கூலியாளாய அடியவர்க்கு எளியராகிய பரமசிவன் கொன்றைமாலை நெருங்கியசிரசின்மேலே மண்சுமந்ததைச் சொல்லுவாமென்றவாறு. (௬௬)

குதிரையிட்டசருக்கம் முற்றிற்று-ஆக ௨௱௬௬,

## மண்சுமந்தசருக்கம்.

(*)

தங்கியவருளின்மிக்கார்காமபதிமிகுமபையுள்ளி
யங்கணரவாதவூரறவருந்துயர்களைகென்று
கங்கையைவிடுப்பவேகிக்கடும்பெருக்கெடுத்துவையைப்
பொங்கலைப்புனலாயெங்கும்பரண்டதுபுணரியேபோல்

(இ-ள்) தங்குகின்றகிருபையிலேமிகுந்தவராகிய திருவாதவூரர் படுகின்ற துன்பத்தைநினைத்து அப்ப பரமசிவனவரிடத்திலேவந்த அரியதுன்பத்தை நீக்குவாயென்று கங்காநதியையேவ அதுகடிய பெருக்கெடுத்து வையைநதியிலேசேர்ந்து மிகுந்தசலப்பிரவாகமாய் எங்கும்பரண்டது சமுத்திரம்போலென்றவாறு, (௧)

சேர்ந்தவெண்முத்தமூரல்செய்துநீக்கலைமேலார்த்துக்
காந்தளஞ்செங்கைவீசிக்கனதனக்குரும்பைகாட்டி
மாந்தளிர்ப்பகங்கண்மீதுவருதிரைநெறிமமாப்பப்
போர்த்துளகணிகைமாதாப்போன்றதுவையையாறு,

(இ-ள்) வெண்மைபொருந்திய முத்தமாகியபற்களாற்சிரித்து நீராகிய வஸ்திரத்தை மேமேலேகட்டிக்கொண்டுகரங்களாகியசி வந்தகையைவீசிக் கனம்பொருந்தியதனமாகிய குரும்பைகளைக் காட்டி மாந்தளிராகிய பாதங்களின்மேலேவருகின்ற அலையென் னுஞ் சிலம்புகள் சத்திக்கநடக்கின்ற வேசைமாதனை நிகர்த்தத ன்வையைநதி-எ-று, (உ)

திரைப்பெருமருப்பினாலேசெழுங்கலாயிருபாற்குத்தி
மரத்திரண்முறித்துச்சாலிவயலெலாமழித்துவாயா
னுரைத்திரள்சிந்திமீதேநுண்மணலிறைத்துவண்டு
நிரைத்தலின்மதத்தவேழநிகர்த்ததுவையையாறு

(இ-ள்) அலையாகியபெரியகொம்பினாலேசெழுமைபொருந்திய இரண்டுபக்கத்துக்கரைகளையுங்குத்தி மரக்கூட்டங்களை முறித்து நெற்பயிர்களையுடைய கழனிகளையெல்லாமழித்து வாயினாலே நு ரைக்கூட்டங்களைச்சிந்தி நொய்ம்மணலைமேலேயிறைத்துவண்டுக ள்வரிசையாகமொய்க்கவருதலால்மதத்தையுடையயானையையொ த்ததுவையைநதியென்றவாறு (௩)

மைத்திகழ்குழலாளந்தமலைமகண்முலையிற்றோய
வத்தனைவருத்துமேன்மைமனகவாயுதமென்றெண்ணி
யொத்தெழுந்தொளிருங்கன்னலுயங்குசெங்கழுநீர்கஞ்சம்
புத்தலையழிக்கவேண்டிப்புரண்டதுயமுனமெல்லாம்

(இ-ள்) மையைப்போலப்பிரகாசிக்கின்ற கூந்தலையுடைய அழ கியபார்வதியினது ஸ்தனபாரங்களிற் கூடும்படிக்குப்பரமசிவனை வருத்துகின்றமேன்மைபொருந்தியமன்மதனுடைய ஆயுதங்களெ ன்றுநினைத்து ஓரோராசியாய்எழுந்துபிரகாசிக்கின்றகரும்புகளையு ம் விளங்குகின்றசெங்கழுநீர்மலரையும் தாமரைமலரையும் இன் னும்புதியவாயுள்ளபலமலரையும் அழிக்கவேண்டியல்களின்மேல் விழுந்துபுரண்டது வையையாறென்றவாறு, (௪)

விட்டம்படைத்துடையபாரவன்முலைநூகத்துமாத
ரிடுந்துகில்கடுகிவீழ்வதென்னநின்றழகுசெய்து
தடம்படக்கிடந்ததெங்கின்றபுங்குசெங்குரும்பைமீது
நெடும்புனற்றிரைபோய்மீளநிவந்ததுவையையாறு

(இ-ள்) முத்துமாலையைத்தரித்துள்ள அழகியதனபாரத்தின்மே ல்மங்கையர்கள் தரிக்கின்றவஸ்திரம் சீக்கிரத்தில்வீழ்வதுபோல நின்று அழகினைச்செய்து விசாலமாயிருக்கின்ற தென்னமரத்தில விளங்குகின்ற சிவந்தகுரும்பையின்மேல் நெடியநீர்த்திரைகள்வீ சிமீளப்பெருகியதுவையைநதியென்றவாறு, (௫)

மீதெழுபரிதிகையால்விடுங்கனல்வெம்மைதீரப்
பூதலமட்டவாள்போர்க்கும்புதியவெண்டுகிலேபோல

யாநலர்ப்பழனஞ்சோலையாதெனப்பார்த்துகஞ்ச
மாதுறைமதுரைமூதூர்மதிற்புறஞ்சென்றுசேர்ந்து

(இ-ள்) ஆகாசத்திலெழுகின்றசூரியனானவன்தன்கிரணங்களெ
ன்னுங்கைகளால் விடுகின்றவெப்பம் நீங்கிப்பூமி தேவியானவள்
போர்த்துக்கொள்ளுகின்றபுதுமைபொருந்தியவெள்ளைவஸ்திரம்
போல்மலரைப்பூவிலிருக்கின்ற லட்சுமியானவள்வசிக்கின்றமது
ரைமாநகரத்துமதிற்புறத்தேவெள்ளம்வந்துசூழ்ந்ததென்றவாறு

தாங்கியதுவசவாயிற்றடமதிலிடியத்தள்ளி
யாங்கெழின்மதுரைமூதூரழிப்பதுபோன்றுசொல்லப்
பாங்குளவிடங்களெல்லாம்பரந்ததுவையைநன்னீ
ரீங்கெதுசெய்வமென்னாயாவருங்கவற்றிகொண்டார்

(இ-ள்) தாங்கப்பெற்ற கொடிகள்கட்டியகோபுரவாயிலையுடை
யவிசாலமாகிய மதிலையிடியும்படித்தள்ளி மதுராபுரிபட்டணத்
தையழியப்பதையொத்துச்சொல்லஅதுகண்டுபக்கங்களிலேயுள்
ளஇடங்களெல்லாம் வையைநீரானது பரவிவந்தது இவ்விடத்தி
லேயாம்என்னசெய்வோமென்று எல்லாருங் கவலைகொண்டாரெ
ன்றவாறு. (எ)

மைக்கடுங்களிற்றுத்தானைவழுதியுங்கடிதுவந்து
தொக்கபொன்மலருமுத்துந்துகின்மணிப்பூணுநல்கித்
தக்கவன்புவியிலுள்ளோர்தமக்குயிரென்னுமன்னே
மிக்கநின்கோபமாறல்வேண்டுமென்றிறைஞ்சிநின்றான்

(இ-ள்) வேகத்தையுடைய கறுத்தயானைபோன்ற சேனைகளையு
டையபாண்டியராசனும் சீக்கிரத்திலேவந்துநெருங்கியபொன்னு
ம்பூவும்முத்தும்வஸ்திரமும்ரத்தினாபரணமும் அந்தவையையாற
றிலேவிட்டுத்தகுந்தபூலோகத்தாருக்குஉயிரென்கின்றதாயேஉன்
னுடையமிகுந்தகோபமாறுதல்வேண்டுமென்றுவணங்கிநின்றானெ
ன்றவாறு, (அ)

கலைமதிக்குலத்துமன்னன்கன்னிநாட்டன்கூறுந்
தலைமைமிகவுடையசொல்லாற்றனாமுனிவொழிதலின்றி
மலையெனத்திரைகண்மேன்மேல் வருதல்கண்டிதுவென்னெ
ன்னிலையுறச்சிந்தையுள்ளேநேடினனடிப்பின்னர் [ன்று

(இ-ள்) சந்திரகுலத்துமன்னவனுங்கன்னிநாடனுமாகியபாண்
டியன்வேண்டிக்கொள்ளுந்தலைமைப்பாட்டைமிகவுமுடையசொ
ல்லினாலேவையையாநதியானது தன்னுடையகோபம்நீங்காமல்மலை
யைப்போல் அலைகள்மேலுமேலும் வருதல்கண்டு இதுஎன்னவெ
ன்றுநிச்சயந்தெரியமனதுக்குள்ளே ஆலோசித்தான்அப்படி ஆ
லோசித்தபின்னென்றவாறு. (௯)

ஆதியாங்கடவுளெந்தையாலவாயமலன்மங்கை
பாதியான்சிறந்தபூசைபண்ணுடையிற்குறைந்ததுண்டோ
நீதியாந்தவத்தின்மிக்கார்நெஞ்சகம்புழுங்கமண்மேற்
றீதியாஞ்செய்ததுண்டோசெப்புமின்மைச்சிரென்றான்

(இ-ள்) யாவர்க்கும்முதற்கடவுளாய் எனதுபிதாவாயுந்திருவாலவாயிலிருக்கும் அமலனும்உமாதேவிபாகனுமாகிய பரமசிவனுக்குமுன்செனமத்திலேயான்செய்யும்பூசையிலேகுறைவுபட்டதுண்டோ நீதிநிறைந்ததவத்திலேமிகுந்த பெரியோர்களுடையமனம்புழுங்கும்படிபூமியிலேயான்தீங்குசெய்ததுண்டோ சொல்லுங்கோள்மந்திரிகளேயென்றான் பாண்டியராசனென்றவாறு, (௰)

விளங்கிளமதிசேர்சென்னிவித்தகர்பத்தரான
வளந்திகழ்வாதவூரர்வருந்தியவளைப்பினீங்கி
யுளங்கொளமகிழச்செய்யிலுறுபுனலார்கொளாதென்
றுளந்தறிவறிந்துகூறியாங்கவர்தொழுதுநின்றார்

(இ-ள்) பிரகாசிக்கின்ற மூன்றாம்பிறையைத்தரித்த சிரசையுடையபரமசிவனுக்கு அடியாரானவளமபொருந்தியமாணிக்கவாசகரைவருத்தப்படுகின்றகோட்டியினின்றுநீக்கி அவருக்குமனமகிழும்படிசெய்வித்தால்மிகுந்த இந்தநீர்உனையடித்துக்கொண்டுபோகாதென்று ஆலோசித்துச்சொல்லிப்பாண்டியனைத் தொழுதுநின்றார்கள் மந்திரிகளென்றவாறு, (௰௧)

மன்னனுமவர்கடமதேன்மகிழ்ந்தருட்பார்வைநல்கி
யென்னுளமதித்தவாறின்றிங்கினிதுரைத்தீரென்று
கொன்னுறுவலைப்பினூடிருக்குநற்குணத்தினை
முன்னுவமைத்தான்பான்முகமலர்ந்திதுமொழிந்தான்

(இ-ள்) பாண்டியராசனும் அப்படிசொன்னவர்களிடத்துமனமகிழ்ந்துகிருபாநோக்கஞ்செய்துஎன்மனதில்நினைத்தபிரகாரமேஇன்றிஇங்கேஇனிதாகச்சொன்னீர்களென்று சொல்லிஅச்சத்தைத்தருகின்றவலைப்பினிடத்திலேயிருக்கிறநற்குணத்தையுடையமாணிக்கவாசகரைத்தம்முடனேயழைப்பித்துச் சினேகத்தால்முகமலர்ச்சியடைந்துஇந்தவார்த்தைசொன்னானென்றவாறு, ()

பாம்பினுசெய்யவேணிப்பரம்பரனடியார்கைமே
லாம்பொருணமதேயானலறம்பிறர்க்காவதுண்டோ
தேம்படுமலங்கன்மார்பாசெயிலிதறகுமதுமேனி
சாம்புவதலமேயான்செய்தண்டலேககவிலாமை

, (இ-ள்) சர்ப்பத்தையணிந்தசிவந்தஜடாபாரத்தையுடையபரமசிவனடியார்கள்கையிலே நீர்கொடுத்தபொருள்நம்மதேயானல் தருமம்பிறருக்குப்போகுமோவாசனைபொருந்திய மாலையணிந்தமார்பினையுடையமாணிக்கவாசகரே இக்காரியத்திற்குஉமது

ருமேனிவருநதுவது விருதாவேஇதற்குயான்தண்டுதல்செய்தது
அறிவிலாமையாமென்றவாறு, (௰௩)

உற்றவித்தகைமைமுன்னேயுணருமிவ்வுணர்வில்லாமை
குற்றமித்தனையுநம்மேற்கொண்டனங்குறைவிலாமல்
மற்றினிப்புகலுமாறென்னைனியநம்மூர்கொளாமே
வற்றவத்தலைவர்நீரேயடைப்பியுமெனநவின்றான்

(இ-ள்) வந்தஇந்தக்காரியங்களைமுன்னதாக அறியுமறிவில்லாமையாகியகுற்றத்தைநம்மதாககொண்டோம் குறைவிலலாமல இனிநான்சொல்வதென்னவென்றால்வையைநதி நம்முடையமதுரைமாநகரை அழியாமல்நன்மையாகிய தவத்திலே தலைவராகிய நீரேஅதைத்தடைசெய்யுமென்று சொன்னான் பாண்டியராசனென்றவாறு, (௰௪)

அருட்பெருவழுதியிவ்வாறன்புரைபகர்ந்தபோதுந்
தரிப்பரிதென்னமுன்னந்தழலெனவெகுண்டபோதும்
விருப்பொடுவெறுப்புமில்லாமெய்ம்மையர்தம்மையாண்ட
திருப்பதநினைத்தார்வையைசெழும்புனலூர்கொளாமல்

(இ-ள்) கிருபையையுடைய பெரியபாண்டியராசனானவன்இந்தப்பிரகாரம் பத்தியானவசனஞ் சொன்னபோதும்ஒருவராலுந்தாங்குதறகரிதென்றுசொல்லும்படிமுன்பு அககினியைப்போல கோபித்தபோதும் விருப்பும்வெறுபபுமிலலாத மனததினையுடையமாணிககவாசகர்தம்மையாட்கொண்ட பரமசிவனுடையதிருவடியைநினைத்தார்வையைநீரானது மதுராபுரியையடித்துக்கொண்டுபோகாமலென்றவாறு, (௰௫)

சுந்தரப்பரிமேல்வந்ததோற்றமேமனதிலுன்னி
யந்தரத்திறைஞ்சநன்னீரடங்கியுளவாங்கிசெல்ல
வெந்துயர்ப்பிறவியானவிடங்கிளர்வேலைநீந்தி
வந்தருட்கரையிறசேர்வார்வையையங்கரையிற்சென்றார்

(இ-ள்) அழகியகுதிரையின்மேல்வந்தகாட்சியையேமனதில்நினைத்துஆகாசத்திலேவணங்கலலநீரானது அடங்கியுள்வாங்கிப யோகவெம்பம்பொருந்தியதுயரைசசெய்கின்றபிறவியாகியவிஷத்தையுடையகடலைநீந்திவந்து கிருபையாகியகரையிலேசேரபபட்டமாணிக்கவாசகாவையையநதிககரையில்வந்தாரென்றவாறு. ()

முறைமுறைவணங்கிநின்றவாரியர்முகத்தைநோக்கி
யறைதிறைநெடுநீர்வையையடைப்பதுகடிதில்வேண்டு
முறையுமிம்மாந்தரெல்லாமொல்லையில்வம்மினென்று
பறையறைவித்துநம்மூர்க்கிவ்வுரைபரப்புமென்றார்

(இ-ள்) கிரமப்படிவணக்கஞ்செய்துநின்றதூதர்களுடையமுகத்தைப்பார்த்துச் சந்திககின்றஅலையையுடையநெடியநீர்சூழ்ந்தவையைநதியைசசீக்கிரத்தில்அணைசெய்யவேண்டும்வசிககின்றஇந்தமனிதர்களையெல்லாம் சீக்கிரத்தில்வாருங்களென்றுமுரச()

றைவித்தும்முடையவூருக்கு இந்தசொல்லைத்தெரியுங்கோளெ
ன்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௰எ)

ஆரியர்கடிதினோடிவன்பறையறைவித்தெம்பொற்
றேரியல்வீதிதோறுஞ்சென்றுரைபரப்புமுனனே
கூரியகொட்டுமண்சேர்கூடையுங்கொண்டுவைகை
நீரியல்கரைமேலவந்துநின்றனர்மதுரைமாந்தர்

(இ-ள்)அப்படியே தூதர்கள்சீக்கிரத்திலோடிவலியபறையறைவித்து அழகியபொன்மயமாகிய இரதங்களோடுகின்றதெருக்கள்தோறும்போயிதனைசொல்லுதற்குமுன்னமே கூர்மைபொருந்தியமண்வெட்டியுமமண்ணெடுக்குங் கூடையுங்கொண்டுநீர்பொருந்திய வையைநதிக்கரையிலே வந்தினார்கள் மதுரையிலுள்ளமனிதர்களென்றவாறு, (௰அ)

நீறுகொண்டிலங்குமேனிமறையவாரியமனுசெய்த
வீறுகொண்டிடங்கடோறுமாரியாவிரைந்துசென்று
கூறுகொண்டவர்க்குமவேறுகோலறையளந்துசெங்கை
மாறுகொண்டுறுகிவையையானகரையடக்கலுற்றார்,

(இ-ள்)விபூதியைத்தரித்து விளங்குகின்ற திருமேனியையுடையமாணிக்கவாசகராணவாரியமித்தஅதிகாரத்தைக்கொண்டு இடங்கள்தோறும் தூதர்கள்சீக்கிரத்திற்போய எப்படிப்பட்டவர்களுக்கும் அளவுகோலால வேறுவேறளந்துவிட்டுச் சிவந்தகையிலேஒருமாறுகொண்டு அடித்துவையைநதிக்கரையை அடக்கததொடங்கினார்களென்றவாறு, (௰கூ)

கண்பெருகழைபின்முத்துங்கட்கரிமருப்பின்முத்தும்
வெண்பணிலத்தின்முத்துமேதகுகருமபின்முத்தும்
வண்புனற்றிரைகள்வீசவகையெனக்குவைகள்செய்து
பண்படப்பொருந்தநீருடபதித்துயாவரம்புசெய்வார்

(இ-ள்) கணுக்களையுடையமூங்கிலிற்பிறந்தமுத்துக்களையும்மதத்தையுடைய யானைக்கொம்பிற்பிறந்த முத்துக்களையும்வெள்ளியசங்கிற்பிறந்த முத்துக்களையும் மேன்மைபொருந்திய கருமபிற்பிறந்த முத்துக்களையுமவண்மைபொருந்தியநீர்த்திரைகள்கொண்டுவந்தொதுக்க அவைகளைமலைகளெனனுமபடிகுவித்துத் தகுதியாகப்பெருந்தநீரிலேபதியத்தள்ளி உயர்ந்தகரைசெய்வார்களென்றவாறு, (உ௰)

பரித்திரணிறுத்துமென்பார்பாம்புகளுருட்டுமென்பார்
திரைபுனன்மிகுத்ததென்பார்தேவாகட்பயமென்பார்
நிறைபடுமகிலோடாரமவாவரொதுக்கிநீடு
வரைபயிடைக்குவிததுநிறபாராயினாமதுரையுள்ளார்

(இ-ள்) குதிரைப்பாச்சலாக மரங்களை நிறுத்து மென்பார்கள் வைக்கோலாற்செய்யும்பாம்புத்திரைகளை உருட்டித்தள்ளுமென

பார்கள் அலைகளையுடையநீர் அதிகரித்ததென்பார்கள் அதற்குப்ப
யந்து யாமதேவர்களுக்கு அடைக்கலமென்பார்கள் வரிசைப்படு
கின்ற அதற்கட்டைகளுடனே சந்தனக்கட்டைகளும் அடித்துக்
கொண்டு வருதலைப்பார்த்து அங்குள்ளவர்கள் நெடிதாகியவூரிட
த்திலே குவித்து நிறபார்கள் இத்தன்மையையுடையவர்களூர்கண்ம
துரைமாநகரத்தி லுள்ளாரென்றவாறு, (௨௧)

ஏருடைப்புதுநீர்வையையிவ்வகையடைக்குமெல்லை
நீருடைப்பொலிந்தசென்னிநின்மலற்கன்பமிக்காள்
சீருடைத்தவத்தினிற்பாள்செம்மனசெல்வியென்னும்
பேருடைநரைமூதாட்டிபிட்டுவிற்றுணவுகொள்வா

(இ-ள்) அழகையுடையபுதுமைகொண்ட பிரவாகமிருந்தவை
யைநதிப்பெருகனைஇந்தப்பிரகாரம் அணைசெய்யும்போதுகங்கை
யைத்தரித்த பிரகாசமபொருந்திய சிரசையுடைய பரமசிவனிட
த்தில அன்புநிறைந்தவளும் சிறப்பையுடைய தவத்திலேநிற்பவ
ளுமாகிய செம்மனசெலவியென்னும் பெயரையுடையநரைத்த
ஒருகிழவியானவள் பிட்டுவிற்பனைசெய்து சீவனஞ்செய்துவருப
வளென்றவாறு, (௨௨)

ஆங்கவட்களந்துநீங்குங்கோல்றையடைப்பதின்றி
யோங்கலைப்புதுநீர்வையையுடைபனையலைகுமெலை
தீங்குளதறுகணுளர்சென்றதற்குழுகண்செய்ய
வீங்கெமககுறுதியாவாரியாவரோவென்றிறங்கி

(இ-ள்) அவ்விடத்திலே அந்தப்பிட்டுவாணிசசிக்கு அளவுசெய்து
நீக்கியபங்குமாத்திரம் அடையாமல் அலைகளையுடைய புதியநீர்மி
குந்தவையை நதிக்கரையெல்லாம அடைக்கும்போது அதைப்பா
ர்த்து கொடுமையுள்ளதூதர்கள்வருத்தபபடுத்துன்பஞ்செய்யஅ
ந்த அம்மையானவள்பயந்து இவ்விடத்திலே எனக்குறுதியாய்வந்
து இந்தப்பங்கை அடைப்பவர்கள் யாரோவென்று இறககமடைந்
தென்றவாறு, (௨௩)

பின்னைக்கூலிகொண்டு பெருங்கரையடைப்பாரின்றி
நெட்டிலைச்சூலமேந்துநின்மலன்கோயிலெய்தி
மட்டறத்தளர்ந்தகொங்கைமார்பினிற்கண்ணீர்வார
வெட்டுருத்திரண்டபர்தமிறைஞ்சிநின்றிதனைக்கூறும்

(இ-ள்) பிட்டினைக்கூலியாகவாங்கிக்கொண்டு பெரியகரையை
யடைப்பவரொருவருமில்லாமல்நெடியஇலைகளையுடைய சூலாயு
தத்தையேந்தப்பட்டசொக்கநாயகரதுகோயிற்குப்போய் அளவு
கடந்துதளர்ந்துசாய்ந்தகொங்கைகளையுடைய மார்பிலேகண்ணீ
ரொழுகஅஷ்டமூர்த்தியாயிருந்த அவருடையதிருவடியைவணங்
கிநின்று இதைச்சொல்வாளென்றவாறு, ௨௪

வேறு.

வெட்டரவக்கச்சுடையாய்நீலநிறத்திருமாதின்
வட்டமுலைத்தழும்புபடவந்தணையுந்திருமார்பா
கட்டியசெஞ்சடையாயுன்கண்ணருள்கொண்டெப்பொழுது
பிட்டினைவிற்றுண்பேற்கும்பெரிதுமையுளதாமே [ம்

(இ-ள்) நெடியசர்ப்பக்கச்சையுடையவனே கரியநிறத்தையுடையகாமாக்ஷியினது வட்டமாகிய முலைத்தழும்புபட்டவந்து அணைந்த அழகியமார்பையுடையவனே சட்டப்பட்டசிவந்தஜடாபாரத்தையுடையவனே உன்னுடையகிருபாநோக்கத்தைக்கொண்டு எப்போதும்பிட்டினைவிற்றுஉண்ணப்பட்டஎனக்கும்பெரியதுக்கமுண்டாமோவென்றுசொன்னவாறு (௨௫)

யாருடனினிப்புகல்வேனென் னுடையாய்வையையினன்
னீருடையாதடைக்கும்வகைநீசிறிதினறருளாயேல்
சீருடையாயுனக்கடிமைசெய்யுமவாககெளியையெனும்
பேருடையநீயெனப்பலருமபேசுமொழிபழுதாமோ

(இ-ள்) இனியாரோடு யானசொல்லுவேனென்னையடிமையாகவுடையவனே வையைநதிநீருடைத்துககொண்டுபோகாமல அடைக்குமபடிநீயின்றுகொஞசம கிருபைசெய்வாயாறைல் கிருபையுடையகடவுளே உனக்குதொண்டுமைசெய்யும் அடியவர்களுக்கு எளியையென்னுமபெயருடையவனென்று பலருமபேசுகின்றசொலபழுதாகுமோயென்றவாறு, (௨௬)

தாயுமிலைதந்தையிலைதமருமிலைதமியேனைப்
பேயினுடனின்றுமபிரித்தறியவொண்ணாது
நீயதெனதிலமபாடென்சிந்தையிலவெந்துயாநீர
நீயருளாயயாயினுயிர்நீப்பேன்மறறென்செய்கேன்

(இ-ள்)எனக்குமாதாவுமில்லைபிதாவுமில்லை சுற்றத்தாருமில்லைதனியேனாகியவென்னைபபேயுடனேகூடநின்றுமஅதினின்றுவேறுபிரித்தறியககூடாது என்னுடையதரித்திரமானது நீயலாதிருக்கின்றதுஎன்மனதிலிருக்கின்றவெவ்விய துக்கமநீங்குமபடி நீகிருபைசெய்யாயாயினுலஉயிரை நீக்கிக்கொள்ளுவேன் பின்னென்செய்வேனென்றுசொன்னவாறு, (௨௭)

வேறு

இன்றெனக்குறுதியாகியானிடும்பிட்டுவாங்கி
வன்றிறக்கூலியாளாய்வன்கரையடைப்பாரில்லை
யுன்றனக்கபயம்யானென்றுரைப்பவடன்மேலன்பு
சென்றவட்காளாமாறுதுணிந்தனர்தேவதேவர்,

(இ-ள்)இன்றைக்குஎனக்கு உறுதியாய் நான்கொடுக்கப்பட்டபிட்டினைவாங்கிக்கொண்டு மிகுந்தவலிமையுள்ளகூலியாளாய்வந்துமேலாகியவையையாற்றின்கரையை அடைப்பாரில்லைஉனக்கடைக்கலம் யானென்றுமுறையிடுகின்றபிட்டுவாணிச்சியின்மேல அன்புவைத்துஅவளுக்கு ஆளாகும்படிதுணிவுகொண்டார்தேவதேவராகியசொக்கநாயகரென்றவாறு. (௨௮)

ஆடையுந்துணிந்தசிரையாகியேகூலியாளாய்க்
கூடையுந்தலைமேற்கொண்டுகொட்டுடைத்தோளராகிப்
பீடைகொண்டயர்வாள்காணப் பெரும்பசியுடையார்போல
வேடைகொண்டொல்லைவந்தார்வேண்டியவடிவுங்கொள்வர்

(இ-ள்) துண்டாய்க்கிழிந்தவஸ்திரத்தை யுடையவராயுங்கூலி கொண்டுவேலைசெய்யுமாளாயுங்கூடைகவிழ்த் ததலையையும்மண் வெட்டிக கொண்டிருக்கும தோளையுமுடையவராயும் தன்பங் கை அடைத்தற்கு ஒருவருமிலலாமையாலே துன்பங்கொண்டு ஆ யாசப்படுகின்றபிட்டுவாணிச்சி யம்மைகாணும்படி அதிகபசியு டையவர்போல வேஷங்கொண்டு சீக்கிரத்திலவந்தார்வேண்டிய வடிவங்கொள்ளுஞ் சொக்கநாயகரென்றவாறு. (௨௯)

வந்தெனையேவல்கொள்வாருளர்கொலோமற்றிங்கென்று
புந்தியின்மகிழ்ந்துகோயில்வாயிலிற்புகன்றபோதி
லந்தநன்மொழியைக்கேளாவன்னைதன்னையாச்சிக்கூறுஞ்
சிந்தனையொழிந்துகூலியாளைச்சென்றுசேர்ந்தாள்,

(இ-ள்) இங்கேவந்து என்னைவேலைகொள்வாருண்டோவென்று மனதிலேமகிழ்ச்சிகொண்டு ஆலயத்தின்கோபுர வாசலிலேநின் றுசொன்னார் அப்போது அந்தநல்லசொல்லைக்கேட்டு தாயாகிய பிட்டுவாணிச்சியம்மையானவள் தன்னுடையமனோவியாகூலந்தீ ர்ந்து கூலியாளாகியகடவுளை அடுத்தாளென்றவாறு. (௩௰)

புடையின்மேலுலகோரின்றிப புனைந்துளபுலித்தோலாடை
யுடையின்மேலரைக்குக்கட்டச்சாயோகுநச்சுரக்கீற்றிச
சடையின்மேன்மதியமின்றித்தாங்கியமழுமானின்றி
விடையின்மேலின்றிநின்றவெளியனைவெளிப்படக்கண்டாள்,

(இ-ள்) பக்கத்திலே முப்பத்துமூக்கோடிதேவர்களுமில்லாமல் தரித்திருக்கின்ற புலித்தோலாடையும் அதன்மேற்கட்டப்பட்ட கச்சாயோகிய சர்ப்பமுமில்லாமல ஜடாபாரத்திலே சந்திரனு மில்லாமல தாங்கப்பெற்றமழுமானுமில்லாமல் இடபவாகனமு மில்லாமல் நின்றசிதாகாசரூபத்தையுடைய கடவுளைவெளியிலே கண்டாள் பிட்டுவாணிச்சியம்மையென்றவாறு. (௩௧)

மைந்தநீயெனக்கிங்காளாய்வருகெனமுன்னர்க்கூலி
தந்திடேல்வருவலென்றுசாற்றலுந்துகாவிபபோ
திக்கவாரமுதம்போலுமினியபிட்டளிப்பேனல்லி
லந்திவாயிதனைவிற்றேயளிப்பனின்கூலியென்றாள்,

(இ-ள்) கண்டவுடனே மகனேநீஎனக்கு இங்கேஆளாகிவரக்கட வாயென்றுசொல்ல அதற்குக்கூலியாளானவர் முன்கூலிகொடுத் திடேயானால் வருவேனென்றுசொல்ல அதற்கு அந்தஅம்மைஇப போதுசாப்பிடுதற்குத் தேவாமிர்தம்போலும் இனிமையுள்ள இ ந்தப்பிட்டுத்தருவேன் அல்லதுசாயங்காலத்திலேஇந்தப்பிட்டினை விற்றுஉன்கூலியைக்கொடுப்பேனென்றாளென்றவாறு (௩௨)

இரும்பசியுடையேனன்னேயினியபிட்டளிப்பையாகிற்
குரம்புகொண்டடைப்பேன்யானேகோலமுழுதுமென்னக்
கரும்புறத்துகின்மேலிட்டபிட்டினைக்காத்தாலன்றி
விரும்பியிங்கிதனைக்கொள்வாயென்றனள்விருப்பமிக்காள்

(இ-ள்) மிகுந்தபசியுடையேன் தாயேயினிமையுள்ளபிட்டினைக் கொடுப்பாயானால் கோலாலளவுசெய்த உன்பங்குமுழுவதும்யானே அடைப்பேனென்றுசொல்லக் கரியபுறத்தையுடைய வஸ்திரத்திலேயிட்ட பிட்டினைக்கையினாலன்றி விருப்பம்வைத்து இங்கேயிதனைத்தின்னென்றுசொன்னாள் அன்புமிகுந்தபிட்டுவாணிசகாயமமையென்றவாறு (௩௫)

கூற்றடுகமலபாதர்குறுந்துணிக்கரியசீரை
யேற்றிடுமபிட்டுவாங்கியினபுறவமுதுசெய்து
மாற்றருமபசியையன்னேமாற்றினையினிப்போய்வையை
யாற்றினின்கூற்றிலுண்டாமருங்கரையடைப்பேனென்றார்

(இ-ள்) கூற்றுவனையுதைத்த தாமரைமலரையொத்ததிருவடிகளையுடைய பரமசிவனானவர்கொருசத்துண்டாய்க் கருமையுள்ள கந்தையையேற்று இட்டபிட்டினைவாங்கிஇன்பமிகுமபடிதிருவமுதுசெய்து ஒருவராகிலும்நீக்குதற்கரிய பசியினைத்தாயேநீக்கினைய இனிமேல்வையையாற்றுக்குப்போய் உன்பங்குக்குண்டான அரியகரையை அடைப்பேனென்றவாறு, (௩௬)

நன்றுநன்றினனுமன்னேநயந்துபிட்டளித்தல்வேண்டு
மென்றுதந்துணிந்தசீரையேற்றதுநிறையவாங்கித்
தின்றுநின்றலைநீர்வையைச்செழுங்கரையதனிற்சென்று
குன்றனுந்தவத்தாயுன்றன்கோலனைகாட்டுகென்றார்

(இ-ள்) நல்லதுநல்லது இன்னமுந்தாயேநயப்புடனேபிட்டினைக் கொடுக்கவேணுமென்றுசொலலிந்தமது துண்டுக்கந்தையையேற்று அதுநிறையவாங்கித்தின்றுநின்று அலையையுடையநீர்மிகுந்த செழுமையுள்ள வையைநதிக்கரையிலெவந்து மலைபோலும்உயர்ந்ததவத்தையுடைய அம்மேஉன்னுடையபங்கைக்காட்டென்றார் சொக்கநாயகரென்றவாறு. (௩௭)

மெய்த்தவம்புரிவார்தம்மின்விழுப்பமிக்குடையவன்னை
யித்தடங்கரையைவலலேயெம்பிநீமடைப்பாயென்னப்
பைத்தவெமபகுவாய்நாகமபணிமதிப்பாகிகொன்றைக்
கொத்துடன்முடிக்கவல்லார்கோலறையடைக்கலுற்றார்

(இ-ள்) மெய்ம்மைபொருந்திய தவஞ்செய்பவருக்குள்ளேநன்மைமிகுந்த பிட்டுவாணிசமியமமையானவள் இந்தவிசாலமாகியகரையையும்சீக்கிரத்திலேதம்பிநீயடைப்பாயாவென்று சொல்லப்பட்டதையும்வெப்பமபொருந்தியபிளந்தவாயையுமுடையசர்ப்பத்தையும் குளிர்ச்சிபொருந்தி அர்த்தசந்திரனையும்கொன்றைமலர்க்கொத்துடனே சிரசிலேமுடிக்க வல்லவராகிய சொக்கநாயகர்

மக

கோலாஹலஞ்செய்த மங்கிலத்தைக அடைக்கத்தொடங்கினரெ ன்றவாறு, (௩௭)

பேர்ப்பர்மண்கூடைப்பய்வர்பிறைமுடிமேற்சும்மாடு
சேர்ப்பர்பின்சுமந்துவையைத்திண்கரைசொரிந்துமீள்வர்
வேர்ப்பர்மெய்யிளைப்பார்போலமென்றுபிட்டிரதநாவுற்
பார்ப்பரவ்வன்னைதன்மேற்பரிந்தருட்பார்வைசெய்வார்

(இ-ள்) மண்ணைவெட்டுவார்கூடையிலேயிடுவார்மூன்றாம்பிறை யைத்தரித்தசிரசின்மேற்சும்மாடுகோலிவைப்பார்பின்புசுமந்துதி ண்ணியவையைநதிக்கரையிலேசொரிந்து திரும்புவார் வேர்வை யடைவார்திருமேனியிளைப்பார்போல் பிட்டினைமென்றுநாவிலே சுவைப்பார் அந்தப்பிட்டுவாணிச்சியம்மைமேல் அன்புவைத்துக் கிருபாநோக்கஞ்செய்வார்கூலியாளாகியசொக்கநாயகரென்றவா

பிட்டுநன்றென்றுகூறிப்பிறைமுடியசைப்பார்வேட
னிட்டமென்றசையிற்சாலவீசனுக்காமிதென்பார்
கொட்டுடன்கவித்தகூடைகொண்டுநின்றாடல்செய்வார்
வெட்டிமண்குவிப்பாரோடிவிரைந்தடியாய்ந்துமீள்வார்

(இ-ள்) பிட்டுநன்றாயிருக்கின்றதென்றுசொல்லிமூன்றாம்பிறை யைத்தரித்த சிரசையசைப்பார் வேடர்குலத்தில்வந்தகண்ணப்ப நாயனார் படைத்தமெல்லியமாமிசத்தைக்காட்டிலும் பரமசிவனு க்குஇந்தப்பிட்டுமிகவும் இனிமையுள்ளதாகுமென்பாரமண்வெட் டியுடனேகவித்துக்கொண்டிருக்கிற கூடையையுங்கொண்டு கூத் தாடுவாரவெட்டிமண்ணைக்குவிப்பார்சீக்கிரத்திலேகாலினாலேதா ண்டித்திரும்புவாரென்றவாறு, (௩௮)

பிரிவுடைமனத்தினாலும்பராமர்தஞ்செய்திகண்டு
கரையினையடைத்தல்வேண்டுமென்றுதங்கருமங்கூறு
ரூரனுடைவழுதிதூதர்காண்பரேலுறுகண்செய்வா
ரிருவினையுடையேன்மற்றிங்கென்செய்வேனெனநினைந்தாள்

(இ-ள்) அன்புள்ளமனத்தினையுடையபிட்டுவாணிச்சியம்மையும் கூலியாளாகவந்தசொக்கநாயகருடையசெய்தியைப்பார்த்துவை யையாற்றின் கரையையடைக்கவேண்டுமென்றுதன்னுடையகாரி யத்தைச்சொல்லமாட்டாதவளாய் வலிமையையுடையபாண்டிய ராசனுடையதூதர்கள் காண்பார்களேயானால் துன்பஞ்செய்வார் கள் இருவினைகளையுடைய நான் இதற்கு என்னசெய்வேனென்று நினைத்தாளென்றவாறு. (௩௯)

மற்றிவணிலைமைவெள்ளிமன்றுநின்றாடுகின்ற
கொற்றவாறிந்துபின்னுங்கூடைமண்கரைமேலேற்றி
யுற்றவிக்கரையயன்னேயொல்லையிலடைப்பேனின்னே
சற்றிதற்கிரங்காதேகுன்றகவுடைமனையிலென்றார்

(இ-ள்) இந்தப்பிட்டுவாணிச்சியம்மைநிலைமையைவெள்ளியம் பலத்திலே நிருத்தஞ்செய்கின்றசொக்கநாயகராகிய கூலிக்கார

தெரிந்து மீண்டும்கூடையிற்கொண்டமண்ணைக்கரையிலேகொட்டிவிட்டு இந்தக்கரையை இப்பொழுதேதாயேசீக்கிரத்தில் அடைப்பேன் கொஞ்சமாகிலும் இதற்கு இரங்காமல் உன்னுடைய உடைமையுள்ள வீட்டுக்குப்போவென்றாரென்றவாறு, (௩௰)

நீறணிபுனிதமேனிநின்மலன்விடுப்பவேகித்
தோரிரைமுகத்தினோடன்றன்மனைப்புகுதுமெல்லை
கூறருந்தவத்தின்மிக்காள்கோலரையடைக்கவஞ்சி
மாறடுதிரைக்கைதன்னாற்றொழுதனள்வையமங்கை

(இ-ள்) விபூதிதரித்தபரிசுத்தமாகியதிருமேனியையுடையசொக்கநாயகரனுப்பநடந்து தோல்திரைந்த முகத்தையுடைய பிட்டுவாணிசியம்மைதன்வீட்டிற்குப்போயினள் அப்போது சொல்லுதற்கரியதவத்தினாலமிகுந்த அவளுடையபங்கைச்சுவாமியடைக்க அதற்குப்பயந்துமாறிவருகின்ற அலையாகியகைகளால் வணங்கினள்வையைநதியாகியமாதென்றவாறு, (௩௧)

சிறந்தமண்கூடைவேணித்திருமுடிக்கொட்டையாக
நிறமிளிர்கொன்றைநீழனிறைமணலணையதாக
அருந்தொழின்முயர்ச்சியாலேயுயங்கிமெய்யிளைத்தார்போல
மறைந்துலகெங்குமானவள்ளலார்பள்ளிகொண்டார்

(இ-ள்) சிறக்கம்பெற்ற மண்ணெடுக்குங்கூடைஜடாபாரத்தையுடைய திருமுடிக்குத் தலையணையாகவும்நிறத்தையுடையகொன்றைமரத்தினது நிழலிலேநிறைந்திருக்கின்றமணலைமெத்தையாகவும்மிகுந்ததொழில்செய்யுமுயற்சியாலே வருந்தித்திருமேனியிளைத்தவர்போல்மறைந்து உலகெங்குமாயிருக்கின்ற சொக்கநாயகர்துயில்கொண்டாரென்றவாறு, (௩௨)

ஆங்கவர்துயிலுமெல்லையருட்பெருவாழ்வின்மிக்கா
ரோங்கியகருமஞ்செய்வாராகியொண்பிரம்புதாங்கிப்
பாங்குநின்றவரைநாடிப்படர்ந்தகோலமறையிலுள்ள
தீங்குநன்குணர்வீரென்னச்சென்றனர்கறையிலன்னோர்

(இ-ள்) அவ்விடத்திலேசொக்கநாயகர் நித்திரைசெய்யும்போது கிருபையுள்ளபேரின்பவாழ்விலேமிகுந்தமாணிக்கவாசகரானவர்மிகவுமுயர்ந்த காரியஞ்செய்பவராகிய ஒளியையுடையபிரம்புவைத்துக்கொண்டுபக்கத்திலே என்றவர்களைப்பார்த்து அவரவருக்கு அளந்துகொடுத்தபங்கிலுள்ள குற்றத்தையும் நன்மையையும் அறியுங்கோளென்றுசொன்னார் அப்படியே அவர்கள்வையைநதிக்கரையின்மேற்போனார்களென்றவாறு, (௩௩

நன்குறவடைத்தல்செய்தாரியாவருமெனநயந்து
சகன்றங்கடைக்குநீடுநெடுங்கரையவர்களெய்தி

யெங்கணுமுயர்ந்துதாழ்ந்ததிவ்விடமியார்க்குலாந்த,
பங்கிதுமொழியீரென்னநின்றவரிவைபகர்ந்தார்

(இ-ள்) நன்மைபொருந்தஎல்லாரும்அவரவர்பங்கைநன்றாயடைத்தார்களென்று மனமகிழ்ந்து சொக்கநாயகரடைக்கின்றவேந்தியக் கரையிலே அவர்கள்வந்துஎவ்விடமும்உயர்ந்திருக்க இவ்விடமாத்திரந்தாழ்ந்திருக்கின்றது இது யாவர்க்குவந்தபங்குசொல்லுங்கோளென்ன அங்குநின்றவர்கள் இவைசொன்னார்களென்றவாறு

பெருவளநீடுகூடற்பிட்டுவிற்றுணவுகொள்வா
ளொருமுதுமடந்தையாளாயொருவன்வந்திங்கணெய்தி
யிருநிலமகழ்ந்துகூடையுட்சொரிந்திரங்கிநிற்பன்
சிரமிசையெடுப்பன்மீள்வன்சிந்துவனகைசெய்வான்

(இ-ள்) பெரியவளங்கள்நீடியமதுரைமாநகரத்திலேபிட்டினைவிற்றுசீவனஞ்செய்பவளாகிய ஒருகிழவியிருக்கிறாள் அவளுக்காளாய்ஒருத்தன்இங்கேவந்துபெருமைபொருந்தியமண்ணைவெட்டிக் கூடையிலேசொரிந்து இரங்கிநிற்பான்தலைமேலெடுப்பான்திரும்புவான்கொட்டுவான்சிரிப்பானென்றவாறு, (௬௫)

பாடுவனாடல்செய்வன்பையவேயோர்கூடைமண்ணை
நீடுதிண்கரையிலேறச்சொரிகுவனெடிதுநிற்ப
னோடுவனோடிமீள்வனொருகைமண்கரையிலேறப்
போடுவன்போகவென்னில்வருவன்வாவென்னிற்போவன்

(இ-ள்) பாடுவான்கூத்தாடுவான் மெள்ள ஒருகூடைமண்ணைநீண்டுஉயர்ந்தகரையிலேறக்கொட்டுவான் நெடுநேரநிற்பான்ஓடுவான்ஓடித்திரும்புவான் ஒருகைமண் கரையிற்போகப் போடுவான் போவென்றால்வருவான் வாவென்றாலபோவானென்றவாறு. ()

பிட்டின்றுகர்வனையாபெரிதுநன்றென்றுகையைக்
கொட்டுவன்செய்கைகாணிலரசிளங்குமரனொப்பா
னெட்டலர்க்கொன்றைநீழனெடுந்துயில்கொள்கின்றானிங்
கட்டுரைசற்றுங்கேளானவன்றனைக்காண்மினென்றார்

(இ-ள்) பிட்டினைச்சாப்பிடுவான் ஐயாமிகவும் நன்றாயிருக்கிறதென்றுகையைக்கொட்டுவான் அவனுடையசெய்கையைப்பார்த்தால் இளமைபொருந்தியராஜகுமாரன்போலுமிருக்கின்றான்நெடியமலரையுடைய கொன்றைமரநிழலில் நெடும்போதுநித்திரைசெய்கின்றான் எங்களுடையசொல்லைக் கொஞ்சமுங்கேளான் அவனைக்காண்பீரென்றார்களென்றவாறு, (௬௭)

என்றலுமவனையிங்கேகொணர்மினென்றிருணின்ற
வன்றிறலொருவன்கூறவாரியன்வல்லையோடிச்
சென்றலுஞானயோகச்செழுந்துயிலொழிந்துமூன்று
துன்றியபுரங்கள்செற்றார்துண்ணென்விழித்தெழுந்தார்

(இ-ள்) இப்படியென்று சொன்னமாத்திரத்திலே அவனையிங்கே கொண்டுவாருங்களென்று இவருக்குள்ளேயிருந்தவலியசௌரியதையுடையவொருவன்சொல்லை மிலேச்சதூதரிலொருவன்சீக்கிரத்திலேயோடினான் அப்போது செழுமையுள்ளஞானபோக சித்திகளைநீங்கித்திரிபுரங்களையுமெரித்த பரமசிவனானவர் திடுக்கென்றுவிழித்தாகக்கொண்டாரென்றவாறு. (௪௮)

விழித்தலுங்கடிதுசென்றவாரியன்வெருவநோக்கி
மொழிகளனல்சிதறியந்தமுன்னவன்றன்னையெய்த
வழைத்தலும்வருதல்செய்யாதஞ்சிநின்றிரங்கக்கண்டு
பழித்தவர்செங்கைபற்றியீர்த்தனன்பரிவிலாதான்

(இ-ள்) விழித்துக்கொண்டமாத்திரத்திலே சீக்கிரத்திலேயோடிநின்றமிலேச்சதூதனானவன் அவனைப்பயப்படப்பார்த்துச் சொல்லாகியநெருப்பைப்பொழிந்து அந்தஎசமானிடத்துக்குவாவென்று அவனையழைக்கமாத்திரத்திலே வாராமல்பயந்துநின்று இரங்குதல்கண்டுபழித்து அவருடைய சிவந்தகையைப் பிடித்திழுத்தான் பத்தியில்லாதவனென்றவாறு. (௪௯)

ஆங்கவன்கடிதிற்றள்ளுநண்ணலையெண்ணிலாத
தீங்கினன்முன்னாகக்கொண்டுசேறலுமவெருட்சியெய்திப்
பாங்குநின்றவருணின்றபாவியைப்பாவிநோக்கி
யீங்கெழுகுருதிசோரவடித்திடுங்கிவனையென்றான்

(இ-ள்) அந்தத்தூதனானவன் ஆளாகவந்தகடவுளைச்சீக்கிரத்திலே அளவற்றகுற்றங்களையுடையவன் முன்னேதள்ளிக் கொண்டுபோய்ச்சேர்ந்தமாத்திரத் தேபூர்வியாகியஎசமான்கோபங்கொண்டு பக்கத்திலே யிருந்தவரில் ஒருபாவியைப்பார்த்து இங்கேரத்தமொழுகும்படி இவனையடிப்பாயாகவென்றானென்றவாறு, (௫௰)

கடுத்தசொல்வன்கணாளன்கதத்துடன்மாறுகையி
லெடுத்தனன்முனிவர்விண்ணோரெடுத்தனர்தொழுது செங்
யடித்தனனடித்தபோதிலன்புடையரிவைபாகங் [கை
கொடுத்திலர்துணுக்கமெய்தமறைந்தனர்குறைவிலாதார்

(இ-ள்) கடுத்தசொல்லையுடைய கொடியவன்கோபத்துடனேபிரம்பினைக் கையிலேயெடுத்தான் அப்போதுமுனிவருந்தேவருங் கையெடுத்துக்கூப்பி வணங்கினார்கள் அவன் அடித்தான் அப்போது அன்புடைய உமாதேவியிருக்கும் வாமபாகத்தைக்கொடாமல் அங்கிருந்தவர்களெல்லாந்திடுக்கிடும்படி மறைந்துவிட்டார்குறைவில்லாதசொக்கநாயகரென்றவாறு. (௫௧)

வேறு,

தார்மேனின்றிலங்குபுயவழுதிமேலுந்தன்மனைமங்கையர்மேலுமமைச்சர்மேலு, மாரமேலுஞ்சென்றுபொருஞ்சேனைமேலும, யனமேலுமான் மேலுமவோரமேலுந், தேர்மேல வெம்பகன்மேலுமதியினமேலுஞ்சிறந்துளவிந்திரனமேலுந்தேவர்மேலும்,பார்மேலுநடன் மேலுமரங்கணமேலும் பட்டதான்மெய்யிலடிபட்டபோது

(இ-ள்) அப்போதுமாலையணிந்த பிரகாசம்பொருந்திய புயத்தையுடையபாண்டியராசன்மேலும் அவன்பத்தினிகள்மேலும் மந்திரிகள்மேலும எவர்கள்மேலும போய்யுத்தஞ்சேனைகள்மேலுமபிரமன்மேலும் மகாவிஷ்ணுமேலும்முனிவர்மேலும்தேர்மேலிருக்கின்றசூரியன்மேலும சந்திரன்மேலும் சிறப்பினைப்பெற்றுள்ளதேவேந்திரன் மேலும் தேவர்கள்மேலும் சமுத்திரத்தின்மேலும்மரங்கள்மேலும் பட்டதுபரமசிவன்மேலேபட்டஅடியென்றவாறு, (௫௨)

தந்தமுருவொழிந்துபிறிதுருவமெய்திச் சதுமுகனுசங்காழிதரிக்குமாலு, மங்கமுத்தெரிவரிதாய்வெளியேநின்ற வண்ணலார்வடிவிலடிபட்டபோதி,லெந்தவுலகங்களினுமிருந்துளோர்க ளெம்முடலிலடியுறைத்ததென்றுகூற, முந்தியெழும்பன் மொழிகளுங்காந்தவெல்லைமோகரிகுமெழிகடலின் முழககம்போலும்

(இ-ள்)தங்கள்தங்கள்வடிவங்களைவிட்டுவேற்றுருவங்கொண்டுநான்குமுகங்களையுடையபிரமதேவனும்,சங்குசக்கரந்தரித்த மகாவிஷ்ணுவும்,தேடி அந்தமும் ஆதியுந்தெரிதற்கரிதாகி இப்போதுவெளியேநின்றசொக்கநாயகருடைய திருமேனியிலே அடிபட்டபொழுதிலே எந்தலோகத்திலிருந்தவர்களும் எங்கள்தேகத்தில்அடிபட்டதென்று சொல்ல முன்னதாக எழும்புகின்ற அந்தச்சொற்கள்உகமுடிவுகாலத்திலேசத்திக்கின்றசத்தசமுத்திரங்களுடையமுழக்கம் போலானதென்றவாறு. (௫௩)

மாயையெனுங் கரும்பெரிய புனன்மேன் மொக்குள்வண்ணமெனுமெண்ணிலாவண்டத்துள்ளு,மேயவகையென்பத்துநான்குநூறுயிரமானபலயோனியிவற்றினுள்ளு, மாயவுயிர்க்குயிராகநிற்குந்தன்மையவனிதலத்தஞ்ஞானரறிந்துபாதச்சேயமலர்வழுத்துதற்தோர்கூலியாளாய்ச்சென்று முடிமண்சுமந்தார்தில்லைநாதர்,

(இ-ள்) மாயையென்றுசொல்லுகின்ற கருமையுள்ளபெரியநீரின்மேலேகுமிழிவடிவென்றுசொலலும் அளவில்லாதஅண்டங்களுக்குள்ளேபொருந்தியிருக்கின்றஎன்பத்துநான்குநூறுயிரம்யோனிபேதமென்னும்இவைகளினுள்ளிருக்கின்ற உயிருக்குயிராகிநிற்குந்தன்மையைப்பூவுலகத்திலே அஞ்ஞானிகளறிந்துதம்முடைய..

பாதமாகிய செந்தாமரைமலரை வணங்குதற்கு ஒரு கூலியாளாகி பேர்ச்சிரசிலே மண்சுமந்தார் தில்லைமாநகரத்திலே நிருத்தஞ் செய்கின்றசபாநாயகரென்றவாறு (ருச)

வேறு

மையணையுந்திருமிடற்றார்மெய்ப்பயில்டிவாதவூ
ரையருடம்பினுமவந்தபடிதலுமெய்யாலெய்தி.
யுய்யவெனையாட்கொள்ளவுங்கொருவர்க்காளாகி
மெய்யவெழுந்தருளினரோவென்றென்றுமிகநொந்து

(இ-ள்) மேகத்தையொத்த அழகியகண்டத்தையுடையசொக்கநாயகர்திருமேனியிலேபட்ட அடியானது திருவாதவூரிலே அவதாரஞ்செய்தமாணிக்கவாசகருடைய திருமேனியிலும்வந்துபட்டமாத்திரத்திலே அவர் ஆயாசத்தையடைந்து நாமுய்யும்படியென்னை அடிமைகொண்டருளுமவ்வகிழந்து சொக்கநாயகர் ஒருவருக்குக்கூலியாளாகி எழுந்தருளினாரோவென்றுமிகவும் தமக்குள்ளே வருத்தப்பட்டனரென்றவாறு (ருரு)

தம்பெருமையறியாததம்மிறைவர்தமக்கிரங்கித்
தம்பிதழுங்கண்ணீருமவர்க்கவலுறசியுறும்போதில்
வெம்பிறவிதொலைத்தார்முன்னருரியார்கள்விண்ணோடி
யும்பர்பிரான்றிருவிளையாட்டெல்லாமங்குரைத்தார்கள்

(இ-ள்) தம்முடையபெருமையிவ்வளவென்று அறியாததமது கடவுளாகிய சொக்கநாயகருக்கு இரக்கமுற்றுநெக்குழும் கண்ணீரும்உண்டாகக்கவலையடைந்தபொழுதிலேவெய்யபிறவியைத்தொலைத்தமாணிக்கவாசகர்முன்னமே தூதர்கள்சீக்கிரத்திலோடிவந்து தேவர்களுக்கிறைவராகிய கடவுளுடையதிருவிளையாட்டெல்லாம் சொன்னார்களென்றவாறு (ருசு)

வேட்டிருக்கும்பெருங்காதல்வித்தகரித்தன்மையெலாங்
கேட்டுமனந்தளர்ந்துமிக்ககிளர்ந்துவிழிப்புனல்பொங்க
வாட்டிகழுஞ்சடையண்ணன்மண்சுமந்தவிடங்கொடுபோய்
காட்டுமெனமொழிந்தவரோடவ்விடநேர்கடிதெய்தி [க்

(இ-ள்) மிகுந்தஆசையால்விரும்புகின்றமாணிக்கவாசகர்இந்தச்செய்திகளனைத்தையும் கேள்விப்பட்டு மனந்தளர்ந்துமிகவுங்கண்களிலே நீர்பெருகச்சிவந்தவொளியினும் பிரகாசிக்கின்றஜடாபாரத்தையுடையசொக்கநாயகர் மண்சுமந்த இடத்தைக்கொண்டுபோய்க்காண்பியுங்களென்று சொல்லிஅவர்களுடனே அவ்விடத்திலேசீக்கிரத்திற்போயென்றவாறு. (ருஎ)

அழுங்கியரும்பெருநரகிலடியேனும்வீழாம
லெழுந்தருளும்பெரியோனேயெங்குளையென்றென்று

தொழுங்கரமுங்கண்ணீருந்துளங்கியமெய்ப்புளகமுமாய்
விழுந்துபுரண்டிவ்வாறுபுலம்பினர்மெய்யன்பாளர்.

(இ-ள்) அடியேன்வருத்தப்பட்டுக் கொடுமையையுடைய பெரியநரகத்திலே விழாமல் எழுந்தருளியகடவுளே; நீயெவ்விடத்திலிருக்கின்றாய் எவ்விடத்திலிருக்கின்றாயென்று தொழுகின்றகைகளுடனே கண்ணீரும் நடுங்குகின்றமெய்யிலேபுளகமுமுடையவராய்க் கீழேவிழுந்துபுரண்டு இந்தப்பிரகாரம் புலம்பினார்மெய்யன்பையுடைய மாணிக்கவாசகரென்றவாறு, (௫௮)

நீறுபடும்பொன்மேனிநின்மலனேநெடுங்கங்கை
யாறுபடுஞ்சடைமுடியாயடியவர்கட்கெளியானே
மாறுபடுமபுரமெரித்தாய்மாறுபடும்போதுடனிற்
கூறுபடுஞ்சிவஞானக்கொம்பினுளங்குழையாதோ

(இ-ள்) திருநீற்றையணிந்தபொன்போன்றதிருமேனியையுடைய நின்மலனே நெடியகங்காநதியைதரித்த ஜடாமுடியையுடையானே அடியவர்கட்கெளியவனே மாறுபட்டதிரிபுரத்தை எரித்தவனே மாறானதுபடும்போது உன்னுடைய இடபாகத்திலிருக்கின்ற சிவஞானமேவடிவாகிய உமாதேவியினதுமனங்குழையாதோவென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௯)

கொங்கைபொன்மணிமார்பிற்குழிபடுமவ்வீறுடைய
மங்கையாள்பெருமானைமண்சுமக்கநினைத்தாளோ
கஙகையாளலைகரத்தாற்கரைத்திலளோபுள்ளுருவாம்
பங்கையாசனனறியாப்பணிமுடியென்றறியாளோ

(இ-ள்) ஸ்தனபாரங்களாலே அழகியமார்பிலே தழும்புசெய்த திருவையுடைய காமாட்சியானவள் கடவுளைமண்சுமக்கும்படி நினைத்தாளோ கங்கையானவள் அலையாகியகையினாலே அந்தமண்ணைக்கரைக்கவில்லையோ அன்னவடிவாகிய தாமரைமலரிலிருக்கின்றபிரமனாலுமறியப்படாத சர்ப்பத்தையணிந்தசிரசென்றறியாளோவென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௰)

பிரமனுடன்றிருமாலும்பிறப்பகலப்பல்காலும்
பரிவினுடனறுமலரோபத்திரிடும்பசிலையோ
புரிதருசெஞ்சடையோநறபுதுமதியோவாயிரவாய்
வரியரவின்பலபடமோமண்சுமக்குஞ்சும்மாடு

(இ-ள்) பிரமதேவனுடனே மகாவிஷ்ணுவுந்தம்முடைய பிறவிநீங்கப்பலதரமும்அன்பினுடனே சாத்துகின்றமலரோ அல்லது அடியவர்கள்சாத்துகின்றபசிலையோ முறுக்கையுடையசிவந்த ஜடையோநல்லபுதுமையையுடையமதியோ ஆயிரம்வாயுள்ளநெடிய சர்ப்பத்தினுடைய அனேகம்படங்களோ நீயெடுத்தமண்ணைச் சுமக்குஞ் சும்மாடென்றவாறு. (௬௧)

கலையறியும்புகழ்வையைக்கரைதிருவம்பலமாக
வலையெறியும்புனலோரமையந்தாருத்தமியாகத்

தலைவனடங்கண்டார்களரவமெனுந்தவமுனியுங்
கொலைதவிரும்புலியென்னுங்குலமுனியுமானரோ

(இ-ள்) தமிழ்ப்பாடலின்தன்மையையறிந்த கீர்த்தியையுடைய வையைநதிக்கரையே அழகியவெள்ளியம்பலமாக அலையைவீசுகின்ற நீரினுடையசத்தமே தேவதுந்துபியாக கடவுளுடையதிருத்தத்தைக்கண்டவர்கள் பாம்புவடிவையுடைய தவமுனியாகியபதஞ்சலியும்கொலைதவிர்ந்த புலியென்றுசொல்லப்படுகின்ற உயர்ந்தவியாக்கிரபாதருமானரோவென்றவாறு, (சு[illegible])

மீனேறுங்கொடித்தென்னன்விழிக்கேறவிரைந்தேறகந்
தானேறுவதுகண்டுதருங்கலைபொற்செண்டேறத
தேனேறுமலர்க்கொன்றைத்திருமுடிமேன்மண்ணேற
யானேறுஞ்சிவபதமுமெனக்கேறவின்றது

(இ-ள்) மீனெழுதியகொடியையுடைய பாண்டியனதுகண்ணுக்கு நேராகவிரைந்தோடுகின்ற குதிரையேறுவதுகண்டு அவனகொடுக்குமபீதாம்பரமானது குதிரைச்சவுக்கிலேரத்தேனெறியமலர்ந்த கொன்றைமாலிகையைத்தரித்த அழகியசிரசின்மேல மண்கூடையேறவிருந்தபடியால்யானேறுகின்ற சிவபதமும்எனக்கேறஇன்மையில்லாததாயிருந்ததென்றார் மாணிக்கவாசகரென்றவாறு,

பொன்னுலகத்துளளோரும்புரந்தரனுந்திருமாலு
மன்னுமறைக்குரியோனும்வழியடிமைத்தொழில்செய்ய
வன்னைதனக்காளாகியணிவைகையுடைத்தடியுண்
டென்னையருட்பணிகொள்ள விசைந்தனையோவிறையோனே

(இ-ள) தெய்வலோகத்திலுள்ளதேவர்களும்தேவேந்திரனும்மகாவிஷ்ணுவும் நிலைபெற்றவேதத்துக்குரிய பிரமதேவனும்வழிவழியாக அடிமைத்தொழில்செய்ய பிட்டுவாணிச்சியம்மைக்கு ஆளாய் அழகியவைகைநதியை அடைந்து அடிபட்டு என்னைக்கிருபையுடையபணிகொள்ளச் சம்மதித்தனையே யிறைவனேயென்றார்மாணிக்கவாசகரென்றவாறு, (சுச)

கட்டுமரைத்துணிச்சிரைக்கச்சையுமத்திருத்தோளிற்
கெட்டுமுடித்தலைமீதுகவித்தவொருகூடையுமாய்ப்
இட்டுநற்றவமுடையாள்பின்புவருந்திருக்கோல
மிட்டமுறத்தொழும்படிநான்கண்டிலேனிறையோனே

(இ-ள்) அரையிற்கட்டுகின்ற துண்டாய்க்கிழித்ததுணியும் கச்சையும் அந்தத்திருத்தோளிலே மண்வெட்டியுமசிறப்பினமீதிலேகவித்துக்கொள்ளுகின்ற ஒருகூடையுமாய்ப்பிட்டினைத்தருகின்றநல்லதவமுடைய அம்மையினதுபின்னேவருகின்ற அழகியகோலத்தை அன்புபொருந்தத்தொழும்படி நான்காணவில்லை யிறைவனேயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு, (சுரு)

தாருருஞ்சடைமுடியாய்தவம்பெருகமுயன்றவர்க
ளீருரும்புகழ்வையைநெடுங்கரைமேனின்றாரோ
சீருருங்கனகமுடித்தென்னவனேமதுரையெனும்
பேரூரிலிருப்பவரோவிட்டமுகிட்டருள்வாளோ,

(இ-ள்) கொன்றைமாலிகையைத்தரித்த ஜடாமுடியையுடைய சொக்கநாயகரோ நீர்கூலியாளாய்வந்த திருவுருவைககாண மிகவுந்தவத்தை முயன்றுசெய்தவர்கள்வெள்ளமோடுகின்றகீர்த்திமிகுந்தவையைநதிக்கரையின்மேல்நின்றவர்களோசிறப்புமிகுந்தபொற்கிரீடத்தையுடைய பாண்டியராசனேபெரிய மதுரைமாநகரிலிருப்பவரோவிட்டமுகிட்டளிய செம்மனச்செல்வியோ வென்றார் மாணிக்கவாசகரென்றவாறு, (௬௬)

பொன்மௌலித்தலைமீதுபுண்ணியர்மண்சுமந்தேறுங்
கொன்மலிபுகழ்கோலவறையிங்குளிர்வையைக்கோடுறுங்
கன்மமெனும்பகைபோகக்கலவெம்பரியேறுந்
தென்மதுரைமூதூருமல்லவோசிவலோகம்

(இ-ள்) பொன்னினாற்செய்த கிரீடத்தை யணிந்த சிரசின்மேலேபுண்ணியராகிய சொக்கநாயகர் மண்ணைசுமந்துகொண்டேறுகின்றபெருமைமிகுந்த கோவிந்தலளந்தபயிருநிலமுமகுளிர்சசிபொருந்தியவையையெனும் பெயரையுடையநதியுங்கன்மமலமென்னும பகையானது ஓடிப்போகப்பரமசிவன்வெவ்வியகுதிரையிலேறுகின்ற அழகியமதுரைமாநகரமும் அல்லவோசிவலோகமென்றவாறு. (௬௭)

இன்னவகையன்புடையரிரங்கினராயிடையையைத்
தான்றுதிரைப்பேராருந்தொலையவடிந்ததுபின்னர்
தென்னவனுஞ்சிவன்செயலாமெனத்தெளிந்துவாதவூர்
மன்னர்தப்பாலவந்துவணங்கியிதுகூறுவான்

(இ-ள்) அவ்விடத்திலேஇந்தப்பிரகாரம்அன்மையுடையமாணிக்கவாசகர் இரக்கமுற்றிருந்தனர்நெருங்கிய அலைகளையுடையபெரியவையைநதியும் சீக்கிரத்திலவடிந்தது பின்புபாண்டியராசனு இவையெல்லாம் சிவன்செயலாமென்றுதெளிந்து திருவாதவூர்க்காசராகிய மாணிக்கவாசகரிடத்தில்வந்து வணக்கஞ்செய்துஇதனைச் சொல்வானென்றவாறு, (௬அ)

அந்தரர்தம்பதியினிழிந்தருள்புனைமாத்தியர்குலத்து
வந்தருளித்தமியோற்குமந்திரியாய்மகிழ்வெய்தி
யெந்தைவயப்பரியேறலகாட்டியெனக்கொழியாத
பந்தமறத்திருவுள்ளம்பற்றினைநற்றவத்தோனே

(இ-ள்) தேவர்கள்வசிக்கின்றபொன்னகரத்தினின்றிழிந்துகிருபையைத்தரித்த ஆமாத்தியர்குலத்திலேவந்துதிருவவதாரஞ்செ

ய்துத்தளியேனாகிய அடியேனுக்குமந்திரியாகியமனமகிழ்ச்சியடைந்துள்ளமனுபிதாவாகியசொக்கநாயகர்வெற்றியையுடையகுதிரைவரிவருவதை யெனக்குக்காட்டி எப்போதுமநீங்காதபாசத்தலையருமபடி திருவுளம்பற்றினீர் நல்லதவத்தையுடைய மாணிக்கவாசகரென்றவாறு, (௬௯)

கருமாளத்திருமேனிகாட்டினனென்றுணராமற்
றிருமாலுமபரவரியான்றேவருடன்பரியேறி
வருமாயசூழ்வினாலழுக்காடையண்டாதொழும்
பெருமானுக்களித்தேனென்பிழைசெய்தேன்பெரியோனே

(இ-ள்) என்னுடையபிறவிமாளத் திருமேனிகொண்டுகாண்பித்தாரென்றறிந்துகொள்ளாமலமகாவிஷ்ணுவாலுமவணங்குதற்கரியசொக்கநாயகர்தேவர்களுடனேகுதிரையேறிக்கொண்டுவந்தஅந்தமாயையினுடைய சூழ்ச்சையினாலேஅழுக்குவஸ்திரத்தைத்தேவர்பணிகின்றகடவுளுக்குக்கொடுத்தேனே என்னபிழையினைச் செய்தேன் பெரியோனேயென்றார் பாண்டியராசனென்றவாறு, (௭௰)

அப்பணிசெஞ்சடையானையரும்பரிமேலாளர்க்கு
மெய்ப்பொருளென்றுணராமல வெய்யவினைபபொருள்வே
செப்பருமித்தறுகணமைசெய்வித்தேனசிறுமையுளே[ண்டிச
னெப்பிழையுமபொறுத்தருளவாயானரகிற்புகுதாமல

(இ-ள்) கங்கையைத்தரித்த சிவந்தசடையையுடைய கடவுளை அருமையையுடைய குதிரைக்காரராகவும்உண்மைப்பொருளென்று தெரிந்துகொள்ளாமல தீவினைக்குக்காரணமாகிய திரவியத்தைவிரும்பிச்சொல்லுதற்கரிய கொடுமைசெய்வித்தேன்சிறுமையுள்ளவனாகிய என்னுடைய எந்தப்பிழையும் பொறுத்தருள்வாய் அடியேன நரகத்திற்புகாமலென்றவாறு, (௭௧)

தூநாகமணிந்தபிரான்றுங்கமிகும்பரியேறிப்
பூநாறுஞ்சடைமேன்மண்சுமந்தபுகழ்போதாதோ
யானாலுநின்பணியேசெயதொழுகவிவ்வுலகந
தானாளவேணடுமெனவென்றுரைத்தான்றமிழ்மாறன்

(இ-ள்) பரிசுத்தம்பொருந்தியசர்ப்பத்தையணிந்த சொக்கநாயகரானவர்உயர்மிகுந்தகுதிரையின்மேலேறிபூமணம்வாசிக்கின்றஜடாபாரத்தின்மேல் மண்சுமந்த கீர்த்திபோதாதோநான்நாள்தோறும் உமமுடையபணிவிடையே செய்துவரநீர் இனிஇவ்வுலகத்தையாளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான் தமிழைவளர்க்கின்றபாண்டியராசனென்றவாறு, (௭௨)

வேறு,

வனறிறன்மன்னனிவ்வாறுரைத்தலும்வாதவூரர்
தென்றிசைபுரக்குநீதித்தென்னவன்றன்னைநோக்கிப்

மின்றிகழ்சடையோன்மன்னும்பெருந்துறைநகரிலேக
வின்றெனைவிடுப்பதேமற்றிவ்வுலகளிப்பதென்றார்

(இ-ள்) வலியசௌரியத்தையுடைய பாண்டியராசன் இந்தப்பிரகாரஞ்சொன்னமாத்திரத்திலே திருவாதவூரர் தென்றிசையைரக்ஷிக்கின்ற நீதியுடைய அவ்வரசனைப்பார்த்துப்பின்னேபிரகாசிக்கின்ற சடையையுடையகடவுள்நிலைபெற்றிருக்கின்ற திருப்பெருந்துறைக்குப்போகும்படி இன்றுஎன்னையனுப்புவதேஎனக்கு இந்தவுலகத்தையாளும்படிக்குக் கொடுப்பதென்று மாணிக்கவாசகசொன்னவாறு. (௭௩)

தென்புலத்தலைவன்றானுஞ்சிந்தையிலொருந்துமுன்னோ
னன்பருக்கரசர்வாழ்விலாசையிங்குள்ளதோவென்று
மென்பதத்திறைஞ்சியையாவேண்டியசெய்கவென்று
தன்புகழ்க்கூடன்மூதூர்ப்புகுந்தனன்றானைசூழ

(இ-ள்) தென்றிசைமன்னனாகிய பாண்டியனும் அப்படிசொல்லக்கேட்டுமனதிலே நொந்துகொண்டு முன்னோனாகியபரமசிவனுடையஅடியாருக்குராஜசம்பத்திலேஆசையுண்டோவென்றுசொல்லி மாணிக்கவாசகருடைய மிருதுவாகிய பாதத்திலேவணங்கி ஐயரேமனதுக்குவேண்டியபடிசெய்யக்கடவீரென்று செலவுகொடுத்துதன்னுடைய கீர்த்தியிருந்த மதுராபுரியிற் புகுந்தான சேனைகள்சூழவென்றவாறு. (௭௪)

சற்றவத்தொழில்செய்யாததானைமன்போனபின்ன
ரற்றவர்க்கற்றசோதியருட்பெருவாழ்வுவேண்டிக்
கொற்றவர்க்குற்றகோலங்குறையெனநீத்துமேலா
நற்றவக்கோலங்கொண்டார்நம்பருக்கன்புமிக்கார்

(இ-ள்) சற்றாகிலும் அவத்தொழிலைச் செய்யாத சேனைகளையுடையபாண்டியராசன்போனபின்பு அற்றவர்க்கற்றகடவுளுடைய பேரின்பவாழ்வைவிரும்பி அவ்வரசனுக்காகக்கொண்டிருந்தவேடத்தைக்குறையென்றுநீக்கி மேலாகியநல்லதவ வேடங்கொண்டார்பரமசிவனுக்கன்புமிகுந்தமாணிக்கவாசகசொன்னவாறு (௭௫)

அத்தனையாலவாயிலண்ணலைவணங்கியந்த
மைத்திகழ்சோலைநீடுமதுரையம்பதியைநீக்கி
வித்தகர்தம்மையாண்டமேனிகண்டிறைஞ்சவேண்டும்
பித்தினர்கடிதுசென்றார்பெருந்துறைபொருந்தவெண்ணி

(இ-ள்) அத்தனும்மதுரையிலிருக்குஞ்சொக்கநாயகரைவணங்கி மேகங்கள் தவழ்கின்ற பிரகாசமிருந்த சோலைநீடிய அந்தமதுரைமாநகரைவிட்டுக்கடவுள்தம்மை ஆண்டதிருமேனியைக்கண்டு வணங்கவேண்டுமென்று திருப்பெருந்துறைக்குப்போக நினைத்துப்பித்தங்கொண்டவராய்ச் சீக்கிரத்திற்போனார் மாணிக்கவாசகசொன்னவாறு. (௭௬)

முடிகெடவைத்தபாதவித்தகருறைநோக்கி
நடையிடுமெல்லைதன்னின்மனவிரைவுங்காற்றுந்
தடைபடுகன்றைநாடுங்கபிலையுந்ததும்பிநின்று
மடையினையுடைக்குநீருமாயினர்,

(இ-ள்) அஞ்ஞானம்நீங்கத் திருவடியைவைத்த கடவுளுடைய திருப்பெருந் துறையைப் பார்த்து நடைகொள்ளுஞ் சமயத்தில் மனோவேகமும்வாயுவேகமும் தடைபட்டிருக்கின்ற இளங்கன்றை நாடியோடுங் கபிலைப்பசுவும் நிறைந்துநின்று மடையையுடைக்கும் நீரும்போலாயினர் திருவாதவூரரென்றவாறு. (எஎ)

கண்ணுழையாதகானும்பதிகளுங்கடிதுநீங்கி
யெண்ணறுமுனிவர்மேவுமெழிற்பெருந்துறையிலெய்திப்
புண்ணியவிளைத்தர்சூழமுன்புபோலிருந்தபோதில
விண்ணவரதிபன்பொற்றாள்வீழ்ந்திதுவாழ்த்துசொல்வார்,

(இ-ள்) கண்களுநுழையப்படாதகாடுகளும் ஊர்களுஞ்சீக்கிரத்திலேகடந்துபோய அளவற்றமுனிவர்கள் வசிக்கின்றஅழகுநிறைந்ததிருப்பெருந்துறைக்குப்போய்ப் புண்ணியத்தையுடையமுனிவர்கள்சூழமுன்புபோலிருந்தபோதிலதேவர்களுக்கதிபனாகிய பரமசிவனுடைய திருவடியின்மேல வீழ்ந்துவணங்கியிதைச் சொல்வார் மாணிக்கவாசகரென்றவாறு, (எஅ)

தீண்டுதற்கரியமார்பிற்சேயிழைதனத்தினோடு
மீண்டொருமாற்றினுமெய்தியதழும்பபோற்றி
வேண்டியவடிவமாகிவெம்பரிமேற்கொண்டெம்மை
யாண்டருள்செய்யவந்தவண்ணலேபோற்றிபோற்றி,

(இ-ள்) மூன்றுலோகத்தபரியிலும் விசேடமாகிய காஞ்சிமாநகரத்திலகம்பையாற்றில காமாக்ஷி பூசைசெய்யும்போது அந்தப்பூசையின்உறுதியைச்சோதிக்க அந்தநதியிலே சர்வதீர்த்தங்களையும வரச்செய்து அது ஆகாசமளாவிவருகிறபோது சிவபூசைக்குவிரோதமாய வருகிறதென்றுபயந்து தழுவிக்கொள்ளுதலால் ஒருவராலுந்தொடுதற்கரிய மார்பிலே அந்தக்காமாக்ஷியினுடையதனபாரங்களாலுமஇங்கேஒருமாற்றினாலும் அடைந்ததழும்பையுடையவனே போற்றி வேண்டியவடிவங்கொள்பவனாகிய வெவ்வியகுதிரையின்மேலேறிக்கொண்டு எங்களையடிமைகொண்டு அருள்செய்யவந்தஐயனே போற்றிபோற்றியென்றார் மாணிக்கவாசகரென்றவாறு, (எகூ)

அண்டருக்கரியாய்போற்றியடியவர்க்கெளியாய்போற்றி
வண்டமிழ்ப்பாண்டிநாடுவாழமண்சுமந்தாய்போற்றி
கண்டுனக்கினியமேனிகாட்டியென்சென்னிமீது
முண்டகத்திருத்தாள்வைத்தமுத்தனேபோற்றிபோற்றி,

(இ-ள்) தேவர்களுக்கு அரியவனேபோற்றி அடியவர்களுக்கெளியவனேபோற்றி வளத்தையுடைய தமிழ்மிகுந்தபாண்டியதேசம்

வாழும்படி மண்சுமந்தவனேபோற்றி கண்ணுக்கு இனிய திருவுரு
வைககாட டிஎன்சிரசின்மேலேதாமரைமலர்போன்றதிருவடிகளை
வைத்தழுத்தனே போற்றிபோற்றியென்றார் மாணிக்கவாசகரெ
னறவாறு, (௮௰)

போற்றியென்றின்னவாறுபுகன்றவர்முடிமேற்செங்கை
யேற்றியினிதினியகூறியெழுகெனவெழுந்தபின்னர்
நீற்றையும்புனைந்தஞானநிறையருட்பார்வைநல்கி
வீற்றிருந்தனபர்கூடடமவிளங்கினர்களங்கமில்லார்,

(இ-ள்) போற்றியென்று இந்தப்பிரகாரந்துதித்த மாணிக்கவா
சகரதுசிரசின்மேலே சிவந்தகையைவைத்து இன்சொறசொல்லி
எழுந்திருவென்றுசொல்லஎழுந்தபின்புவிபூதியுந்தரித்து அறிவுநி
றைந்தகிருபாநோககஞ்செய்து வீற்றிருந்து அன்பையுடைய அடி
யார்களகூட்டத்தில் விளங்கியிருநதார் களங்கரகிதராகிய கடவு
ளென்றவாறு, (௮௧)

அந்தமுமுதலுமில்லாவடியவர்தம்மைநாடி
வநதுளகருமமெலலாமுடித்தனமகிழ்சசிகூர
நங்கிசழுவடிவங்காணவேண்டிநமகயிலையுளளார்
சிந்தனைசெய்தார்வல்லேயாண்டுநாஞ்சேறல்வேண்டும்,

(இ-ள்) முடிவுமுதலுமிலலாத அடியவர்களைக்குறித்து வந்தகா
ரியமெல்லாம் முடித்தனம்மனமகிழ்சசியுண்டாகநமமுடையஒளி
யையுடையதிருவுருவைத்தெரிசிககவேணடுமென்று நல்லகயிலா
சகிரியிலிருககின்ற வாகள்நினைவுகொண்டார்கள் சீக்கிரத்தில் அ
வ்விடத்திலேநாம்போகவேண்டுமென்றார்பரமசிவனென்றவாறு,

வாழ்ந்திருமின்பின்யாமிமேகுவமென்னவந்து
சூழ்ந்தருளுருவாமன்தர்தோத்திரம்பலவுஞ்சொல்லித்
தாழ்ந்தைதிரிறைஞ்சியையயாதரிப்பரிதெம்மைமண்மேல்
வீழ்ந்தயர்ந்தழுதாரெம்மைவிடுதியோவென்றுநொந்தார்

(இ-ள்) நீங்களிங்கே இப்படியேவாழ்ந்துகொண்டிருங்கோள்
யாம்செல்குவோமென்றுசொல்லவேஅப்போதுவந்துசுற்றிக்கொ
ண்டுகிருபாவடிவத்தையுடைய அடியவர்கள் அநேகந்துதிகள்சொ
ல்லிவணங்கி ஐயனே இனியாங்கள் தரிக்கிறது அருமையென்று பூ
மியில்வீழ்ந்து ஆயாசங்கொண்டு அழுதனர் எங்களைவிட்டுவிடுகின
றையோவென்றுநொந்தார்களென்றவாறு, (௮௨)

பரிந்தழுமடியார்தம்மேறபரமனுமன்புபூண்டு
வருந்துவதொழிமினிந்தமண்மலிகுருநதநீழற்
பொருந்தியதெய்வபீடம்பொலிவொடுகுயிற்றியீதே
திருந்தியமறையுந்தேடுநம்பதமாகச்செய்து,

(இ-ள்) அன்புகொண்டு அழுகின்ற அடியார்மேற் பரமசிவனும்
அன்புவைத்து வருத்தப்படுவதைநீங்குங்கள் இந்தவாசநிறைந்த

குருந்தநிழலிலே பொருந்திய தெய்வ பீடமொன்று பிரகாசித்துட
னே வீசயத்து அதன்மேல் திருத்தமுற்றிய வேதங்களுந் தேடுகின்றநம
முடைய திருவடிகளைச் செய்தென்றவாறு. (௮௪)

தாங்கருமாரணந் தீங்கிபாமெனுந் தன்மைகண்டு
நீங்கருமன்பினாலே நித்தலு நயந்திறைஞ்சி
ஈங்கருண் மனத்தரெல்லா மாந்தருமொருநாளிந்தத்
தீங்கில் பொய்கைப் பூடே செழுந்தழல் வந்து தோன்றும்

(இ-ள்) தாங்குதற்கரிய துன்பம் நீங்கி நாமென்கிற தன்மையை அறிந்து நீங்குதற்கரிய அன்பினாலே நாடோறும் மகிழ்ந்து வணங்கி இவ்விடத்திலே திருமைபொருந்த மனத்தையுடைய அடியார்களெல்லாம் விரும்பியிருங்கோள் அப்படியிருக்குநாளிலொருநாள் இந்தத் தீங்கில்லாத பொய்கையினிடத்திலே செழுமையுள்ள அக்கினிவந்து தோன்றுமென்றவாறு, (௮௫)

எழுந்தழல் விளைந்தபோதில் பாவருந்தடத்திறாடு
விழுந்து பின்னெய்திநம்பால் விடுசருங்கவற்சியென்று
தொழுந்தவமியற்றுமன்பர் சூழ்ந்துபின் செல்லமெல்லச்
செழுந்திகழ் கயிலைநாடிச் சென்றனார் தில்லைநாதா,

(இ-ள்) அக்கினியெழுந்து விளக்கமாகிறத்திலே எல்லாரும் தடாகத்தினிடத்திலே விழுந்து பின்பு நம்மிடத்திலே வந்து உங்களுடைய கவலையைவிடுங்கோளென்று வணங்கத்தக்க தவத்தைச் செய்யும் அன்பர்கள் சூழ்ந்துகொண்டு பின்னே வர மெள்ள செழுமையுள்ள பிரகாசத்தையுடைய கயிலாசத்தைநாடி எழுந்தருளினார் சிதம்பரத்திலிருக்கின்ற சபாநாயகரென்றவாறு. (௮௬)

நீங்கருமன்பரெல்லா நில்லுமினென்று கூற
வாங்கவரிறைஞ்சி பொங்களையறிகாண்பதென்று
தாங்கருமயக்கமெய்தித் தாய்தனமகவுபோலப்
பூங்கழல் வணங்கினாரப் போயினார் மாயைவல்லார்

(இ-ள்) நீங்குதற்கரிய அன்பர்களெவருமில்லுங்கோளென்று சொல்ல அங்கே அவர்கள் வணங்கி இனியெந்தநாளிலே ஐயரே உம்மைக்காண்பதென்று தாங்குதற்கரிய மயக்கமடைந்து தாயைநீங்கிய பிள்ளைகள்போல தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கினார்கள் மாயையிலே வல்ல பரமசிவன் எழுந்தருளினாரென்றவாறு. (௮௭)

இங்கிவர்நின்றபின்னுமின்னருள் வாதவூரர்
தங்கிளைவாழ வந்ததலைவா பின்சென்ற போதிற்
பொங்கிளமுலையாள் பாகா புரிந்திவாவரவு காணு
பங்கொருகொன்றைநீழல் இருந்தனராந்தைநீங்கி

(இ-ள்) இங்கே அடியார்கள் நின்றபின்னும் இனிய அருளையுடைய திருவாதவூரரானவர் தம்சுற்றமெல்லாம் வாழும்படி குருமூர்த்

தழாயெழுந்தருளியகடவுளுக்குப்பின்னேபோனபேர்து பொலிவுபெற்றஇளமையுள்ளஸ்தனங்களையுடைய உமாதேவியினுடையபாகராகிய அக்கடவுள் அன்புவைத்து இவர்வருதலைப்பார்த்து அங்கேயொருகொன்றைவிருக்ஷ நிழலிலேயிருந்தார் துன்பமநீங்கியென்றவாறு. (௮௮)

தன்புடைக்கவடுகொண்டோர்தடங்கிரிசிறந்தமாலைப்
பொன்படைத்தனையகொன்றைப்பொலிவுறவிருந்தபோதின்
மென்பதத்திறைஞ்சிக்கண்ணீர்விழவிழத்தொழுதுநிற்கு
மன்பனைப்பரிவாலையாருகுவைத்தருளிச்செய்தார்

(இ-ள்) தன்பக்கத்திலே கிளைகளைக்கொண்டு ஒருமலைவரிசையாகிய பொன்மாலையைக்கொண்டிருப்பதையொத்தபூங்கொத்துகளுடனேகூடியகொன்றை நிழலிலே பொலிவுபொருந்தவிருந்தபோது மெல்லியதிருவடிகளிலே வணங்கிக்கண்ணீர் விழவிழத் தொழுதுநின்ற அன்பராகிய மாணிக்கவாசகரைப் பரிவினாலே பரமசிவன் பக்கத்திலேவைத்து இருளிச்செய்தாரென்றவாறு. ()

அவ்வியமில்லார்தங்கட்கருடாமுன்னமைமன்னுந்
திவ்வியதலமாமிந்தச்சிறந்துளகுருந்தநீழ
லெவ்வுலகெங்குமுள்ளேமாயினுமிங்குள்ளோர்கள்
வெவ்வினையகற்றியாளவேண்டியிங்குறைவோமென்றும்

(இ-ள்) மனக்கோட்டமில்லாதவர்களுக்குக் கிருபைசெய்ய முன்னே நாமடைந்த திவ்வியக்ஷேத்திரமாகிய சிறப்புப்பெற்றுள்ள இந்தக்குருந்தநிழலிலே எந்தலோகத்திலும் எங்குமிருந்தோமாயினும் இங்கேயிருக்கின்றவர்களுடைய தீவினையைநீக்கி ஆளும்பொருட்டு இந்தஸ்தலத்திலே வசிப்போமென்றவாறு. (௯௰)

பொங்கொளிச்சுழுமுனைநாடிப்புலம்பிசைக்குறியேயான
மங்கலசங்கமல்லால்வாய்ந்தபல்லியங்கள்யாவு
மிங்கெமக்காகாவோசையடங்கிடமாதலாலு
நங்குலக்கவுரிகாணநடனவிடமாதலாலும

(இ-ள்) மிகுந்த ஒளியையுடைய சுழுமுனைநாடியிடத்தில் சத்திக்கின்ற அடையாளமான மங்களகரத்தையுடைய சங்கவாத்தியமல்லாமல் மற்றவாத்தியங்களெல்லாம் இந்தஸ்தலத்திலேநமக்காகாவாம் அதென்னென்னில் சத்தநீங்கிய இடமாகையினாலும் நம்முடைய பாகத்திலிருக்கும் பார்வதிகாண நடனஞ்செய்யுமிடமாகையினாலுமென்றவாறு. (௯௧)

ஒழுங்குடனின்னவாறிங்குணர்ந்துநற்குருந்தநீழற்
செழுந்தவக்குழுவினீயுங்கழல்சேவைசெய்தே
யெழுங்கனன்மடுவிற்காணீலயாவருமதனிற்சென்று
விழும்பொழுதுடன்வீழாமலிவ்வுழையினாவினீங்கி

(இ-ள்) ஒழுங்காக இந்தப்பிரகாரம் அறிந்துநல்லகுருந்தநிழலிலேசெழுமையுள்ள தபோதனர்கூட்டத்துடனே நீயும்நம்முடையபாதத்திற்சேவைசெய்து எழுகின்றஅக்கினியைமடுவிற்கண்டால்யாவரும்அதிற்போய் விழும்போது உடனேவிழாமல்இந்தஇடத்திலேசீக்கிரத்தில் நீங்கியென்றவாறு, (௯௨)

உத்தரகோசமங்கையென்னுநம்மூரிற்சென்று
சித்தியங்களவையுமெய்தித்தெய்விகலிங்கமேனி
வைத்தநம்பதிகடம்மிலிவையிவைவணங்கிலங்கே
யித்திகழ்வடிவேகாண்டிகாட்டுதுமெனநவின்றே

(இ-ள்) உத்தரகோசமங்கையென்னும் நம்முடையஸ்தலத்துக்குப்போய் அஷ்டமாசித்திகளையும் அடைந்துதெய்விகமாகியலிங்கவடிவமாயிருக்கின்ற நம்முடையஸ்தலங்களிலே இந்தஸ்தலங்களைவணங்கினால்அங்கங்கும்இந்தப்பிரகாசமுள்ளவடிவேகாண்பாய்அப்படியே காட்டுவோமென்று சொல்லியென்றவாறு, (௯௩)

இந்நகர்வணங்கிநீங்கியெழுங்கழுக்குன்றமென்னு
மந்நெடும்பதியிறைஞ்சியாண்டுநின்றீண்டுபோந்து
பொன்னினம்பலத்திலெய்திப்புத்தரைவாதில்வென்ற
பின்னரெம்பதமேயானபெரும்பதம்பெறுதியென்றார்

(இ-ள்) இந்தஸ்தலங்களைவணங்கி நீங்கிஉயர்ந்த திருக்கழுக்குன்றமென்னும் அந்தநெடியஸ்தலத்தையும்வணங்கிஅவ்விடத்திலிருந்துஇங்கேவந்து சிதம்பரத்திற்குப்போய்ப்புத்தரைவாதில்வென்றபின்புஎம்முடையபதவியானசாயுச்சியத்தைப்பெறுவாயென்றார்பரமசிவனென்றவாறு, (௯௪)

மன்னுமன்புடையோர்தெய்வவாசகம்புகலுமாறும்
பன்னகம்புனைவோமேவும்பதிபலவணங்குமாறும்
பொன்னினம்பலத்திலெய்திப்புத்தரைவென்றுமன்றன்
றன்னருங்கமலபாதஞ்சார்தலும்பகரலுற்றாம்

(இ-ள்) நிலைபெற்றஅன்பையுடைய மாணிக்கவாசகர்தெய்வத்தன்மையையுடைய திருவாசகஞ் சொல்லியதும்சர்ப்பாபரணத்தைத்தரித்த பரமசிவனுடைய ஸ்தலங்களைவணங்கியதும் சிதம்பரத்திற்குப்போய்ப்புத்தரைச்செயித்துச் சபாநாயகருடைய திருவடிகளிற்சேர்ந்ததும் சொல்லத்தொடங்கினோமென்றவாறு, ௯௫

மண்சுமந்தச்சருக்கம்—முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௩௱௪௩,

சிவமயம்.

# திருவம்பலச்சருக்கம்.

வரந்தரவிருந்தாதமமைவாதவூரிறைவர்போற்றிப்
பெருந்துறைநகரிலன்றிப்பிஞ்ஞகாபுலியூர்மன்றிற்
பொருந்துகைமுத்தியென்றுபுகன்றதிங்கெவனோவென்னைத்
திருந்தியதவத்தாய்கேட்டியென்றவர்செப்பலுற்றார்,

(இ-ள்) தமக்குவரங்கொடுக்க விருந்தகடவுளைத்திருவாத வூருக்கரசராகிய மாணிக்கவாசகர் வணங்கிப்பரமசிவனேதிருப்பெருந்துறையிலல்லாமல் புண்டரீகபுரமென்னும் பெயரினையுடையசிதம்பரத்திற்பொருந்துதல் பரமுத்தியென்று அருளிச்செய்ததென்னவென்றுவிண்ணப்பஞ்செய்ய திருத்தமாகிய தவத்தையுடையவனே நீகேட்பாயாகவென்றுசொல்லத்தொடங்கினார்கடவுளென்றவாறு, (க)

இத்தலத்திடையேகீடமெடுத்துளவிடத்திலன்றி
வைத்துளவிடத்தேயந்தவேட்டுவன்வடிவங்கொள்ளும்
வித்தகவுனக்கிங்கன்பான்மெய்யுணர்வுரைத்தேமேன்மை
யொத்திடும்சிவானுபூதிமுத்தியம்பலத்திலுண்டா

(இ-ள்) புழுதன்னையெடுத்த விடத்திலல்லாமல் கொண்டுபோய்வைத்தவிடத்திலே குளவிவடிவங்கொள்ளும் அதுபோல் உன்னைக்கண்ட இந்தஸ்தலத்திலே அன்பினாலேஉண்மையறிவம்உபதேசம் பண்ணினேம்மேன்மைபொருந்தியசிவானுபூதியாகியமோக்ஷம் சிதம்பரத்திலுண்டாமென்றவாறு. (உ)

இடம்படுமுடம்பின்மூலத்தெழுந்தநற்சுழுனைநாடி
யுடன்கிளரொளியேயாகியொளியிலஞ்செழுத்துமொன்றாய்
நெடுங்குழலோசையாகியவ்வோசைபோயங்
கடங்கியவிடமேயென்றுமாடுமம்பலமதாகும்,

(இ-ள்) விசாலமாகியதேகத்திலே மூலாதாரத்தினின்றுஎழுந்த நல்லசுழுமுனைநாடியுடனே நிறைந்தவொளியாய் அந்தவொளியிலேபஞ்சாட்சரமுமொன்றாய் நெடியகுழலோசையாய்ப் பிரகாசம்பொருந்திய அந்தவோசைநீங்கிஅடங்கியவிடமேநாடோறும் நாம்ஆடுகின்றசிதம்பரமாகுமென்றவாறு, (ங)

எண்டரும்பூதமைந்துமெய்தியநாடிமூன்று
மண்டலமூன்றுமாகிமன்னியபுணர்ப்பினாலே
பிண்டமுமண்டமாகும்பிரமனேனைவராகக்
கண்டவர்நின்றவாறுமிரண்டிலுங்காணலாகும்

(இ-ள்) எண்ணிக்கையைத்தருகின்றபிருதுவி-அப்பு-தேயு-வாயு-ஆகாசமென்றுசொல்லப்பட்ட பூதங்களைந்தும்இடைபிங்கலைசு

மூழுனையென்னும் நாடிகள்மூன்றும் அக்கினிமண்டலம ஆதித்த மண்டலம் சந்திரமண்டலம் என்னுமண்டலங்கள் மூன்றும் ஆகி நிலைபெறறச்சம்பந்தத்தாலே பிண்டமுமண்டமாகும் பிர்மாவிஷ்ணு உருத்திரன்மாகேசுரன்சதாசிவனென்றுசொல்லுகின்றஐந்து வடிவமாகக்கண்டவர்கள் நின்றவிடமும் இவ்விரண்டுவித்திலுங் காணலாமென்றவாறு, (௪)

ஆதலாலிந்தவண்டத்தறிவருமமபாருளாயென்றுந்
தீதிலாமூலநாடிற்றிகழுசிவலிங்கமேனி
மீதிலாமந்தநாதவெளியின்மேலொளிமன்றங்குக்
காதாலான்மடவாள்காணக்கருத்துறநிருத்தஞசெய்வோம்

(இ-ள்) ஆகையினாலே இவ்வண்ணத்தின் அறிதற்கறியபொருளா கிஒன்றுங்குற்றமிலலாத மூலத்தைநாடிப்பார்த்தால்பிரகாசியாநின்றசிவலிங்கமேனியாயிருககும்மேலாகிய அந்தந்நாதவெளியின் மேல ஒளியாயிருக்கின்றது சபைஅஙகே ஆசையால் உமாதேவி காணமனமபொருந்தநிருத்தஞ்செயவோமென்றவாறு, (௫)

அந்தநன்னடமேதென்னிலைந்தொழிலடத்தலாகும்
பந்தமதகற்றுமிந்தப்படிவமுமதுவேயாகும்
விந்துலகத்தில்யாருங்காண்பரோல்வழுவாமுத்தி
தந்தருளளிக்குந்தெய்வத்தலமுமத்தலமேயாகும்

(இ-ள்) அந்தநடனம்யேதென்றால் கிருஷ்டி-ஸ்திதி-சங்காரம்-திரோபவம-அனுக்கிரகமென்று சொல்லபபட்ட பஞ்சகிருத்தியத்தைநடத்துவதாகும பாசத்தலையையறுககின்ற இந்தவடிவமும் அதுவேயாகும் உலகத்திலே யிருககின்றவர்கள் யாவர்வந்துதெரிசித்தாலும பூரமுத்தியைக்கொடுத்துக் கிருபையைத் தருகின்ற தெய்வஸ்தலமும் அந்தசிதம்பரமேயாகுமென்றவாறு. (௬)

தாவரும்பணிலநேமிதரிப்பவர்பிர்மனொன்போ
யாவரும்புலிபாம்பென்னுமிருவரும்புரத்திலுண்டா
மூவருந்தெய்வமூவாயிரவருமுனிவர்தாமுந்
தேவருந்தொழுதுபோற்றுமெல்லையத்தில்லைமூதூர்

(இ-ள்) தாவுதற்கறிய சங்குசக்கரந் தரிப்பவராகிய மகாவிஷ்ணுவும்-பிரமதேவரும்-பதஞ்சலிவியாக்கிரபாதரும்- திரிபுராதிகளும் தெய்வத்தன்மையுள்ள தில்லைமூவாயிரவரும் நாற்பத்தெண்ணாயிரமுனிவரும், முப்பத்துமுக்கோடிதேவர்களும் போற்றும் எல்லையையுடையது அந்தத்தில்லைமாநகரென்றவாறு. (௭)

மற்றிவைதெளிவாயென்றுபணிந்தெதிர்வணங்கிநிற்பார்
நெற்றியினீறுசாத்திநிற்றியென்றகாலநில்லார்
சுற்றிடஞ்சென்றார்பின்னுமிங்கிவர்தன்மைகண்டு
கற்றைவெஞ்சடையார்நின்றுகண்ணருள்செய்துபோந்து

(இ-ள்) இவைகளையெல்லாந் தெளிந்துகொள்வாயென்றுபணி
ந்துஎதிரேவணங்கி நிற்கின்றமாணிக்கவாசகருடையநெற்றியிலே
விபூதிதரித்துநிவலன்று கடவுளானவர் நீங்குதலுமில்லாதவரா
ய்கொஞ்சதூரம்போனார்மறுபடியும்இவருடையதன்மையைக்க
ண்டுபரமசிவனானவர்தினறுகிருபைசெய்துபோயென்றவாறு,(அ

கண்ணெதிர்நடக்குமாறுகண்டுளங்களித்துநிற்கும்
புண்ணியர்காணமுன்னர்மறைந்தனர்புலியூராயர்
துண்ணெனவிரக்கமெய்தித்தொழுதுகைதலைமேற்கொண்டு
நண்ணருமன்பர்கூட்டநணுகினர்வாதவூரர்

(இ-ள்) கண்ணெதிரேநடப்பதைக்கண்டு மனங்களித்துநிற்கின்
றபுண்ணியராகிய மாணிக்கவாசகர் காணும்படிசபாநாயகர் எதி
ரேமறைந்தார் அதுகண்டுஅச்சங்கொண்டுஇரக்கமுற்றுவணங்கி
க்கையைசிரசின்மேல்வைத்துக்கொண்டு பொருநூதற்கரிய அ
டியார்களுடையகூட்டத்தைப்பொருந்தினார் திருவாதவூரரென்ற

அந்தவங்கலாநெஞ்சத்தன்பருந்தாமுமந்தத்
திருந்தியகுருந்தின்கீழேதெய்வபீடிகையுஞ்செய்து
வரந்தருசெய்யபாதமலர்வருத்திறைஞ்சியாங்கே
யிருந்தனரிருந்தநாளிலெய்தியதியம்பலுற்றார்

(இ-ள்)அரியதவத்தைநீங்காதமனத்தையுடையஅடியார்களும்
மாணிக்கவாசகரும்அந்தத்திருத்தமாகியகுருந்தநிழலின்கீழேதெ
ய்வத்தன்மையுடைய ஒருபீடஞ்செய்து அதனமேலேவரத்தைத்
தைத்தருகின்றசிவந்த தாமரைமலர்போன்ற திருவடிகள்செய்து
துணங்கி அங்கிருந்தார்இருந்தநாளிலே நடந்தகாரியத்தைச்சொ
ல்லத்துடங்கினேமென்றவாறு. (௰)

வெண்பிறைமுடித்தவேணிவிண்ணவனன்பிலாத
பண்பினரெனினுந்தன்னைப்பாடினர்க்கிரங்குமென்றே
யெண்பெறுநமசிவாயவாழ்கவென்றெடுத்துநாதன்
வண்பதம்புகழ்ந்துஞானவாசகம்புகலலுற்றார்

(இ-ள்) தெளியமூன்றாம்பிறையைத்தரித்த சடாய[illegible]த்தையு
டையகடவுளானவர்அன்பில்லாதவர்களேயானாலும் தன்னைப்பா
டினவர்களிடத்தில்இரக்கஞ்செய்வாரென்றுநினைத்துஎண்ணுதல்
போற்றநமச்சிவாயவாழ்கவென்றெடுத்து நாதனாகியகடவுளதுத
வத்தையுடையதிருவடியைப்புகழ்ந்து ஞானவாசகமாகியதிருவா
சகமசொல்லத்தொடங்கினாரென்றவாறு. (௰க)

சொற்பதங்கடந்துநின்றசோதிவந்தருளாநல்கு
மற்புதமறியேனென்றுமதிசயங்கண்டாமென்று
மெம்பொலிசடையாய்நெஞ்சங்குழைத்தலையென்னை யென்
சிறபரன்றனதுபாதஞ்சென்னியின்மன்னுமென்றும் [ருஞ்.

(இ-ள்)சொல்லுகின்ற பதங்களைகடந்துநின்ற கடவுளானவர்வந்துதிருவடியைத்தருகின்ற அற்புதமறியேனேயென்றும் அதிசயங்கண்டாமேயென்றும் ஒளிவிளங்குகின்ற சடையையுடைய கடவுளேயென்னை மனங்குழைத்தாயென்றும் பரமசிவனுடையபாதஞ்சென்னியில்மன்னுமென்றும் என்றவாறு, (௰௨)

ஐயனேநின்னைக்காணவாசைப்பட்டேனென்று
முய்கிலேன்வாழேனென்று முனக்கடைக்கலமேயென்றுஞ்
செய்யுமாறறியேனந்தோசெத்திலேனென்றும்பொய்யர்
பொய்யனேநின்பொற்பாதம்புணருநாளென்றோவென்றும்

(இ-ள்) ஐயனேநின்னைக்காண ஆசைப்பட்டேனென்றும்பிழையேனவாழ்கிலேனென்றும் உனக்கடைக்கலமென்றும் செய்யுமாறறியேன்ஐயோ செத்திலேனென்றும்பொய்யர்க்குப்பொய்யனே நின்பாதம புணருநாளென்றோவென்றும் என்றவாறு. (௰௩)

ஆதரித்தழைக்கிலிங்கேயதெந்துவென்றருளாயென்றும்
போதவிக்குடையபாடலிவையிவைபுகன்றபின்னர்
மாதிரத்தெவருந்திருவார்த்தையெண்ணுந்
தீதறசிறந்தவெண்பாதிகமெழுநான்குமோதி

(இ-ள்)ஆதரித்தழைக்கில்இங்கே அதெந்துவேயென்றருளாயென்றருட்பதும்ஞானமிகவுமுடைய பாடல்கள்இவைகளிவைகள் அருளியபின்பு எட்டுத்திக்கிலுள்ளவர்களும் வணங்கவருகின்றதிருவார்த்தையும் எண்ணப்பதிகமும் குற்றமறச்சிறந்தவெண்பா இருபத்தெட்டும்விளங்கச்சொல்லியென்றவாறு, (௰௪)

இயல்புடன்மொழியும்பள்ளி யெழுச்சியேசறவுநெஞ்சத்
தயர்வறவுரைக்குமின்னேரனையபூங்கழல்களென்று
முயிருண்ணியெனுநற்செய்யுள்பிரார்த்தனையோங்குநீதி
வியனெடுங்கூடற்பாண்டிவிருத்தமெய்த்தமிழுங்கூறி

(இ-ள்)இயல்புடனே சொல்லுகின்ற திருப்பள்ளியெழுச்சியும்ருவேசதிராவும்மனத்தின்வருத்தம்நீங்கச்சொல்லுகின்றஇன்னேரனையபூங்கழல்களன்றுனந்தமாலையும்உயிருண்ணிப்பத்தும்பிரார்த்தனைபத்தும் உயர்ந்தநீதியாகிய அதிசயமுள்ளநெடியமதுரையினுடையதிருப்பாண்டிவிருத்தமென்னுந் தமிழ்ப்பாடலும்சொல்லியென்றவாறு, (௰௫)

வேறு,

மருவுந்தொண்டருடன்கூடிவைகிச்சில்நாட்செல்லமுதற்
பரமன்சொல்லும்படியேயின்பயிலும்பொய்கைத்தழல்கண்டு
கருதுந்திருவஞ்செழுத்தோதிக்காணக்கிளருங்கனன்மீது
விரவும்போனபுடையார்களெல்லாஞ்சென்றுவிழ்ந்தார்கள்

(இ-ள்)தங்கியிருக்கப்பட்ட அடியார்களுடனே வாசஞ்செய்து சிலநாள்செல்லஅதற்குமுன்னே பரமசிவனுக்கிறகித்தபடியே

பின்புபயிலுகின்ற தடாகத்திலே அக்கினியைக்கண்டுவிளங்குகின்ற அழகியபஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்காணும்படிப்பிரகாசியாநின்ற அக்கினியிலேகலந்திருக்கின்ற மிகுந்தஅன்புடைய அடியார்களெல்லாம்போய் மூழ்கினார்களென்றவாறு, (௯௬)

வீழ்ந்தபோதிறைபுலியூரர்விடைமேற்றோன்றிக்கவுரியுடன், சூழ்ந்தவிமையோர்மலர்சிந்தே தொழவிண்ணிடையேதோன்றுதலூமாழ்ந்ததடத்துடனன்மூழ்குமன்பாடங்கத்துயர்நீங்கி, வாழ்ந்துவணங்கிக்கணநாதவடிவாயதிருமுன்வந்தார்கள்

(இ-ள்) விழுந்துமூழ்கினபோது சபாபதியானவர்இடபவாகனத்தின்மேலேறி உமாதேவியுடனே முப்பத்துமுக்கோடிதேவர்களுஞ்சூழ்ந்துகொண்டு அழகியமலரைத்தூவித் தெரிசிக்கஆகாயத்திலெழுந்தருளியமாத்திரத்தில ஆழம்பொருந்தியதடாகத்திலிருக்கின்ற அக்கினியில்மூழ்கிய அன்பர்கள்தங்கள்துக்கமெல்லாம்நீங்கவாழ்ந்துவணக்கஞ்செய்துசிவகணநாதர்களாய்வடிவுகொண்டுபிரமசிவனெதிராகவந்தார்களென்றவாறு, (௯௭)

துரியத்தலையிற்பயில்வாருந்தொழுதங்கெழுவார்முகநாடி
யொருசற்றகலாதவர்நீரிங்கொழியத்தனிநாமெய்தியதுங்
கரையிற்றிரைபோய்விழவீசுங்கழுநீர்வாசங்கமழுவாவி
யெரியிற்புகுவீரென்றதுவும்யாதோவெனவிங்கிதுவாகும்

(இ-ள்) துரியத்தின்முடிவின் விளங்கியகடவுளும் வணங்கியெழுகின்றஅடியார்களுடைய முகத்தைப்பார்த்துக்கொஞ்சநேரமாகிலுமநீங்காதவராகிய நீர் இங்கேநீங்கத்தனியேநாம் போனதும்கரையிலேஅலைகள்போய் மோதும்படிவீசுகின்றசெங்கழுநீர்வாசங்கமழ்கின்றதிருக்குளத்தில் அக்கினியிலேமூழ்குவீரெனறுசொல்லியதும்என்னகாரணமோவென்றுகேட்டால இதுவாகுமென்றாரென்றவாறு, (௯௮)

வேறு,

உத்தமனென்னுந்திருவாதவூரனைமன்னும்புலியூரிற்
புத்தரைவெலலும்படிநாமிப்புவிமிசைவைத்தோமியாமே
சித்தமயர்ந்தேதுயர்கூருஞ்செய்தியனுமென்பதுதோர [இற்
வித்தலமீதேசிலநாளிங்கெம்முடன்வாராதிருமென்றோம்

(இ-ள்) உத்தமனென்கின்றதிருவாதவூரனைநிலைபெற்றசிதம்பரத்திலேபுத்தரைவாதில வெல்லும்படிநாம் இந்தப் பூமியின்மேல்வைத்தோம்நாம்நீங்கினால் மனம்நொந்துதுன்பமடைவானென்பதுதெரிந்துஉங்களையும் இந்தஸ்தலத்திலேசிலநாளெம்முடன்வாராதிருப்பீரென்றுசொன்னோமென்றவாறு, (௯௯)

மல்மகள்பலரும்பிவிமீதேமாணிட்வடிவந்தனையெய்திச்
சிலபகலெனினும்பயில்காலைச்சேர்தருமலவாதனையென்றே

பலமலர்கமழுந்தடமீதிற்பரவருஞானவனல்சேர்வித்
திலதெனநீடுஞசடமேவிதகிவ்வுளவீந்தேயிந்நாளில்

(இ-ள்) ஆணவம்மாயைகாமியமென்னும்மும்மலநீங்கினவர்களு ம்பூமியின்மேலே மானிடவடிவங்கொண்டு சிலநாளாயினும் அரு க்குங்காலத்தில் மறுபடியும்மலவாசனைசேருமென்று அனேகமல ர்கள்வாசிக்கின்ற தடாகத்திலேசொல்லுதற்கரிய ஞானாக்கினி யைச்சேர்வித்துப் பொய்யாகத்தோன்றிய மாயாதேகத்தைவேவ ச்செய்து இந்தத்தேகத்தை இந்நாளிலே கொடுத்தோமென்றார் பரமசிவனென்றவாறு. (௨௰)

என்றுவிளம்பிக்கணநாதரீசனுமகலப்புலியூரின், மன்று விளங்கப்பயிலவாருமவானின்மறைந்தாரவ்வெல்லைத், துன்றிய ஞானசிவநாமச் சொற்றமிழ்சொலவாரவேருக்கச், செஞ்செருந் கொன்றைச்செழுநீழற்றிகழவிருந்தாசிவயோகம்

(இ-ள்) இப்படியென்று அருளிச்செய்து கணநாதர்களெவ்விட த்திலுமநெருங்கச சிதம்பரத்திலே கனகசபைவிளங்க நிருத்தஞ் செய்கின்றசர்வநாயகரும் ஆகாயத்திலமறைந்துவிட்டார் அப்போ துநிறைந்த அறிவைத்தருகின்ற சிவநாமத்தையுடைய திருவாசக த் தமிழ்சொல்வாராகியமாணிக்கவாசகர் வேருக்கப்பெய்ய செழு மையுள்ளஒருகொன்றைமரநிழலிலே பிரகாசத்துடனேசிவயோ கஞ் செய்திருந்தாரென்றவாறு. (௨௧)

அன்பாழற்கேயுகுமாறுமையர்விடைக்கேவருமாறு, முன்பு தமக்காமுருவெய்திமுன்னைவனறருடொழுமாறு,பொன்பொதுவி ற்கேயனமாளர்புகுவதுமெல்லாமொருகா, லின்புறுமெய்ப்போ தகயோகத்தியல்பொடுகண்டாரென்செய்தார்.

(இ-ள்) அடியார்கள் அக்கினியிலே புகுந்தவிதமும் கடவுள்இ டபவாகனத்தின்மேல் வந்தவிதமும்முன்னேதமக்கு வேண்டிய வடிவங்கொண்டுகடவுளினுடையதிருவடியைவணங்கினவிதமும் இனிக்கனகசபையிலே தான்போயடைவதும் ஆகியஇவையெல் லாம்ஒருகாலத்திலேஇன்பமிகுந்தஉண்மைஞானத்தைத்தருகின் றசிவயோகத்திலேசுபாவத்துடனேமாணிக்கவாசகர்அறிந்துகொ ண்டார்பின்பென்செய்தாரோவென்னிலென்றவாறு, (௨௨)

செங்கைகுவித்தார்விழிநீரைச் சிந்தினரெந்தாய்பின்,னெங்க ளொளித்தாயெனமாலுற்றெய்தினர்பொய்கைக்கரைமீதிற், கங் கைமுடித்தார்விடையேறிக்கண்ணுறநண்ணுந்தலமோவென்,றங் கண்ணிலத்தேபோய்வீழ்வுற்றழிதழுந்தோவெனநொந்தார்

(இ-ள்) சிவந்தகைகளைக்குவித்தார் கண்களாலேஆனந்தபாஷ்ப ங்களைச் சொரிந்தார்எமதுபிதாவாகியகடவுளேவந்துபின்னெங்

கேயொத்தாயென்று மயக்கமடைந்துபொய்கைக்கரைமீதில் வந்து கங்கையைத்தரித்த பரமசிவன் இடபவாகனத்திலேறிக் கண்ணெதிரேயெழுந்தருளிய ஸ்தலமோவென்று இழகியஇடத்தையுடையபூமியிலேபோய் விழுந்து அழுதழுது ஐயோவெனநொந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௨௩)

வேறு,

அன்னைநிகர்ப்பீரென்னையொழித்தேயன்பாளர்
பொன்னடிபெற்றேபொய்கையுற்றகேபுகலாமோ
மின்னுறுவததீராதும்மருள்கூடாவினையேனுக்
கின்னலளித்தீரோயெங்கோனெளிச்சீரோனநொந்தார்

(இ-ள்)தாய்க்குச்சமானமானவரே என்னைநீக்கிஅன்பையாளுகின்றவராய்ப்பொன்போன்றபாதத்தைப்பெற்றுத்திருப்பொய்கையிலேயுண்டாகிய அக்கினியிலேமூழ்கலாமாபிரகாசிக்கின்றவடிவையுடையவரே உமதுகிருபையிலேகூடுதலசெய்யாத தீவினையையுடைய அடியேனுக்குத்துன்பத்தைக்கொடுத்து எங்கேஒளித்தீரென்று நொந்தார்மாணிககவாசகரென்றவாறு. (௨௪)

வேறு.

அங்நிலைதெளிந்துபொய்கைய்கன்றுயர்குருந்தநீழர்
பன்னருமறைகள்காணாபபதமலர்பற்றிவீழந்து
மன்னியதலத்திலுள்ளோர்வல்வினைப்பிறவிமான
வின்னருட்சதகமெய்தானருமயென்றெடுத்துச்சொன்னார்.

(இ-ள்)அந்தநிலையைத்தெளிந்து திருப்பொய்கையைவிட்டு நீங்கிஉயர்ந்ததிருககுருந்தநிழலிலே பன்னுதற்கரிய வேதங்கள்காணாததிருவடிமலரைப்பற்றி வீழ்ந்துநிலைபெறற பூமியிலுள்ளவர்களுடையதீவினைகளுக்காரணமாகிய பிறவிமாளும்படி இனிய அருளையுடையதிருச்சதகமமெயதானரும்பியென றெடுத்துசசொன்னார் மாணிககவாசகரென்றவாறு, (௨௫)

இத்திறங்கூறியாங்கேபுலம்புநின்றிரங்குமெல்லை
நித்தனன்றுரைத்தநீர்மைநெஞ்சினுணினைந்துபின்ன
ரததலத்திறைஞ்சியெங்கோனருடபெருவிடைபெற்றேகி
யுத்தரகோசமஙகையூரினுற்சென்றுபுககார்

(இ-ள்)இந்தப்பிரகாரஞ்சொல்லிய அங்கேபுலம்பிநின்று இரக்கஞ்சமயத்தில் கடவுளன்றருளிச்செய்ததைமனதிலே நினைந்து பின்புஅந்தஸ்தலத்திலேவணங்கிக் கடவுளுடையசெலவுபெற்றுக்கொண்டுபோய்த்திருவுத்திரகோசமங்கையென்னும ஸ்தலத்துக்கெழுந்தருளினார் மாணிக்கவாசகரென்றவாறு. (௨௬)

சடையவர்கோயிலெய்தித்தம்மைவந்தடிமைகொண்ட
வடிவதுகாணாதுமயங்கிவெய்துயிர்த்துவீழ்ந்து

விடுதிகொலென்னையென்றுநீத்தல்விண்ணப்பமென்னுந்
தொடைகெழுபாடலோதக்காட்டினர்தொல்லைமேனி

(இ-ள்) திருவுத்தரகோசமங்கையம்பல சடாபாரத்தையுடைய பரமசிவனெழுந்தருளியிருக்கிறகோயிலுக்குப்போய்த்தம்மைவந்தடிமைகொண்ட திருவுருவைக்காணாதவராய் மயக்கமடைந்துபெருமூச்சுவிட்டுக்கீழேவிழுந்து என்னைவிட்டுவிடுகிறாயோவென்று நீத்தலவிண்ணப்பமென்னும் பாடல்சொல்லப்பழைய திருவுருவைக்காண்பித்தாரென்றவாறு, (௨௭)

கன்னலையமுதையங்கேகண்டுகொண்டிறைஞ்சிச்சின்னா
ளங்கிருந்துதங்கோனருண்மொழிப்படியேசென்று
தன்னிகரில்லாத்தெய்வத்தலம்பலவணங்கிநீங்கிச்
சென்னிநன்னாட்டிலெய்தித்திருவிடைமருதூர்சேர்ந்தார்

(இ-ள்) கரும்பையும் அமிர்தத்தையுமொத்தகடவுளை அங்கேகண்டுகொண்டு வணங்கிசிலநாள அந்தஸ்தலத்திலிருந்து தமது கடவுள்சொற்படியேபோய்த் தனக்குநிகரற்ற அனேகந்தெய்வஸ்தலங்களை வணங்கிநீங்கிச்சோழநாட்டுக்குப்போய்த் திருவிடைமருதூரிற் சேர்ந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௨௮)

அப்பதிதொழுதபின்னரன்பாரூரெய்திச்
செப்பருமலர்த்தாள்போற்றித்திகழ்திருப்புலம்பலோதி
யெப்பரிசினருமியன்னையேயம்பியபதிகளெல்லாந்
தப்பறவணங்கிநீங்கித்தடமதிற்புகலிசேர்ந்தார்

(இ-ள்) அந்தஸ்தலத்தைவணங்கினபின்பு அன்புடனே திருவாரூருக்குப்போய்ச் சொல்லுதற்கரிய தியாகராயருடைய திருவடித்தாமரைகளை வணங்கிப்பிரகாசிக்கின்ற திருப்புலம்பலென்னும்பாடல்களைச்சொல்லி தமது இளைப்புநீங்க வணங்கிப்பரமசிவனால் அனுக்கிரகம் பட்டதஸ்தலங்களெல்லாந் தப்பாமல் வணங்கிநீங்கிவிசாலமபொருந்தியமதில் சூழ்ந்தசீர்காழியிற்சேர்ந்தார்மாணிக்கவாசகரென்றவாறு, (௨௯)

குன்றெனவுயர்ந்தகோயிற்கோபுரவாயினீங்கிச்
சென்றுயர்கயிலையானசெய்திகண்டிறைஞ்சுமெல்லை
மன்றிடைநடித்தபாதமலரடிபிடித்துக்கொண்டு
பின்றிகள்சடையோன்முன்னர்ப்பிடித்தருளிச்செய்தார்

(இ-ள்) மலையென்றுசொல்லும்படிப் பிரகாசிக்கின்ற ஆலயத்தினுடைய திருக்கோபுரவாசலைக்கடந்து நீங்கிப்போம் அதுகயிலாசமாகியசெய்தியைக்கண்டுவணங்கும்பொழுதுசிற்சபையிலே நிருத்தஞ்செய்ததிருவடித்தாமரையைப்பிடித்துக்கொண்டு பின்புறத்திற்பிரகாசிக்கின்ற சடாபாரத்தையுடைய கடவுளின்முன்னே பிடித்தபத்தென்பதைஅருளிச்செய்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௩௰)

தொல்வினைப்பகைமையுள்ளாரியாவருந்தொழுதாங்கு
வெல்லவரப்பகையையென்றுவிருப்புடன்சிலநாளவைகி
மல்குமத்தலத்தைநீங்கிவண்கமுகுகுன்றிலன்பாற்
செல்வத்தற்கிசைந்துதில்லைத்திசைகுறித்தைறைஞ்சியேகி

(இ-ள்) பழவினைப்பகையுள்ளவர்கள் வணங்கினாலயாவரும் அதனைவெல்வார்களென்று அந்தஸ்தலத்திலே விருப்புடனேசிலநாள்வாசஞ்செய்து அந்தஸ்தலத்தைவிட்டுவளத்தையுடைய திருக்கழுக்குன்றத்தில் அன்பாயசெல்வத்தற்குச்சம்மதித்துத் தில்லைநகரத்திசைகுறித்துவணங்கிப்போயென்றவாறு, (௫௧

வேறு.

உத்தரநெடுந்திசையிலேகியொளிகுன்று
மூத்தநதிசூழுமுதுகுன்றினைவணங்கா
வத்தலமகன்றுயரருட்டுறையிதென்றே
மெய்த்தவர்களெண்ணியுறைவெண்ணெயிலடைந்தார்

(இ-ள்) நெடியவடக்குத்திசையிலேவந்துபிரகாசமுள்ள மணிமுத்தாறுசூழ்ந்தவிருத்தாசலத்தைவணங்கிப்பின்பு உயர்ந்த திருவருட்டுறையென்றுபெரியோர்கள் நினைத்துவசிக்கின்ற திருவெண்ணெய்நல்லூரிற்சேர்ந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, ( )

அன்னகர்வணங்கியபினன்புடனகன்றே
நன்னர்பதிசென்றுநடுநாடுமுயர்காடும்
கொன்னவிபமடங்கலுறைகுன்றுமிகந்தே
மன்னுமருணாபுரிமருங்கணையவந்தார்

(இ-ள்) அந்தஸ்தலத்தைவணங்கியபின்பு அன்புடனேநீங்கிநல்வழியிலேபோய்நடுநாட்டையும் உயர்ந்தகாட்டையும் அசைந்திருக்கின்றயானையுஞ்சிங்கமும்வசிக்கின்றமலைகளையுங்கடந்து நிலைபெற்ற திருவண்ணாமலைக்குச்சமீபத்தில்வந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௫௩

மாடமொடுகோபுரமுமன்னுமணிமுத்துஞ்
சூடுமதிலும்பெரியதோரணமுகப்பு
நீடுகமுகாடவிநெருங்கியுள்தண்கா
வூடுயர்தல்கண்டுவகைகொண்டுதொழுதுய்ந்தார்,

(இ-ள்) உப்பரிகைகளும் கோபுரங்களும் நிலைபெற்ற ரத்தினங்களும்-முத்துகளும்பதித்தமதில்களும் - பெரியதோரணங்களையுடையமுகப்பும்-நீடியகமுகங்களும்-நெருங்கியுள்ளகுளிர்ந்தசோலைகளினுடையகிளைகள்உயர்ந்திடுதலகண்டுமகிழ்ச்சிகொண்டு வணங்கிப்பிழைத்தார்மாணிக்கவாசகரென்றவாறு, (௫௪

அன்றிருவர்தேட்டவழலானதொருவெற்பாய்
நின்றவடிவோமனநிறைந்தபெருவாழ்வோ

வென்றுமலையண்ணலையிறைஞ்சியருள்கொண்டே
சென்றருணையாகியசெழும்பதிபுகுந்தார்

(இ-ள்) அன்றுபிர்ம்மாவிஷ்ணுக்கள்தேட அக்கினிமலையாய்நின்றவடிவோ அல்லதுமனத்திலேநிறைந்தபெரியவாழ்வோவென்று அண்ணாமலையை வணங்கிக்கிருபைகொண்டு செழுமையுள்ளதிருவருணைமாநகரத்திற்புகுந்தார்மாணிக்கவாசகரென்றவாறு (௧௫)

வேறு,

சோலையுமதிலுமிபல்பூந்தோரணமறுகுந்தெய்வச்
சாலைகள்பலவுநீங்கிசசந்நிதிமறுகிற்சென்று
மாலையுமல்பாம்புந்திங்கண்மத்தமுமுடியில்வைத்தோ
னாலயமிறைஞ்சிக்கண்டார்தமமையன்றாண்டமேனி

(இ-ள்) சோலைகளும்-மதிலும்-பசியபூந்தோரணங்களையுடைய வீதியும்-அனேகதெய்வத்தன்மையுள்ள சாலைகளும் நீங்கிச சந்நிதிவீதியிற்போய்-மலர்மாலையுப்-மூன்றாம்பிறையும-சர்ப்பமும்-ஊமத்தைமலரும்-திருமுடியின்மேலவைத்த. அண்ணாமலையாருடைய ஆலயத்தைவணங்கித்தம்மையன்றுவந்தாண்ட திருவுருவைகண்டார்மாணிக்கவாசகரென்றவாறு (௧௬)

மாலுடன்பிரமன்றேவர்வந்தனக்கடிமையென்றேன்
றோவிடுபொழுதிலாலமுண்டிருள்கண்டபோற்றி
மேவிடும்பவநோய்தீரவிண்ணவர்மண்ணோர்பச்சைப்
பாலுடன்கலந்துட்கொள்ளும்பணிமலைமருந்தேபோற்றி

(இ-ள்) மகாவிஷ்ணுவும்பிரமதேவனும்தேவர்களும்உனக்கடைக்கலமென்றுமுறையிடும் போதில்ஆல்காலமுண்டிருண்டகண்டத்தையுடையவனேபோற்றி அதிகரிக்கின்ற பிறவிநோய்நீங்கத்தேவரும்மனிதரும்பசும்பாலுடன் அல்லது உமாதேவிபாகத்துடனேகலந்துஉட்கொள்ளுகின்றகுளிர்ச்சியுள்ளமலைமருந்தேபோற்றியென்றவாறு, (௧௭)

நெடியவன்கேழலாகிநீணிலமகழ்ந்துங்காணு
வடிகளென்றலைமேல்வைத்தவருட்பெருங்கடலேபோற்றி
படியிடம்புரக்குமுண்ணாமுலையெனும்பச்சைமேனிக
கொடியிடங்கொண்டசெம்பொற்குன்றமேபோற்றிபோற்றி,

(இ-ள்) மகாவிஷ்ணுவராகமாய்நீண்டபூமியைப்பிளந்துகாணாததிருவடிகளை என்றலைமேல்வைத்தபெரியகிருபாசமுத்திரமேபோற்றிபூவுலகத்தைரட்சிக்கின்றஉண்ணாமுலையென்னும்பச்சைமேனியையுடையகொடியைஇடதுபாகத்திற்கொண்டசிவந்தபொன்மலையேபோற்றிபோற்றியென்றவாறு, (௧௮)

வென்றிடுதிங்கள்ளிமேதிச்சென்னிவிக்கிரமன்றன்னைக்
கொன்றதன்பாவந்தீர்க்குறித்திட்டவருள்வாய்போற்றி

யென்றுவர்தென்னையாளுமடியனுண்மலையாய்போற்றி
யென்றுதம்பரிவாலேத்திபிறைஞ்சியங்குறையுநாளில்

இ-ள்) வெல்லுதல்செய்தநூர்க்கையானவள்மகிடாசுரனைக்கொ
ன்றபெரள்வந்திர நினைத்துப்போற்ற அருள்செயபவ னேபோற்றி அ
ன்றெழுந்தருளிவந்துஎன்னை அடிமைகொண்ட அணியண்ணுமலை
யானேபோற்றியென்று அன்பினுலெளத்திவணங்கி அங்கெவசிக்
கின்றநாளிலென்றவாறு, ௧௯

மாதர்கொண்மாதமெல்லாமார்கழித்திங்கட்பன்னி
லாதிரைமுன்னீரைந்தேயாகியதினங்களெல்லாம்
மேதகுமனையடோறுமனழுத்திருள்விடிவதான
போதயர்தம்மிற்கூடிப்புனற்றடமால்செய்வார்

(இ-ள்), அழகினைக்கொண்டஎழுவகைப்பருவமங்கையர்களெ
ல்லாம்மார்கழிமாதத்தில் திருவாதிரைக்குமுன்னே பத்துத்தின
ங்களிலெல்லாம்மேன்மைபொருந்தியவீதிகள்தோறும்அழைத்து
க்கொண்டு விடியற்காலத்தில்இவர்களெல்லாம்கூடித் தீர்த்தத்தி
லேபோய்ஸ்நானஞ்செய்வார்களென்றவாறு ௨௰

அன்னவரியல்புகண்டாரங்கவர்புகன்றதாக
மன்னியதிருவெம்பாவைவாசகம்பேசிபின்னர்க
கன்னியர்பாடியாடுங்கவின்கொளம்மனைகட்கூர்
பன்னியபாடலாகவம்மனைபாடல்செய்தார்

(இ-ள்), அவர்களுடைய இயற்கையைக்கண்ட மாணிக்கவாசகர்
மங்கையர்கள சொன்னதாகநிலைபெற்ற திருவெம்பாவை சொன
னபின்புமங்கையர்கள் பாடியாடுகின்ற அழகினைக்கொண்ட அம்ம
னையைக்கண்டமாணிக்கவாசகர் அவர்களசொன்னபாடலாகத்தி
ருவம்மானைபாடினுரென்றவாறு, ௨௧

விரவுமண்டையாரந்தமேதகுதலத்தைநீங்கிப்
பரிவுடன்கசசியேகாம்பரந்தனிற்பரனையேத்தித்
தெரிவருங்காமக்கோட்டசீறடிவணங்கித்தேவர்
வரங்களிறைஞசுந்தெய்வவண்கழுக்குன்றிற்சென்றூர்

(இ-ள்) கலந்தஅன்புடையவராகியமாணிக்கவாசகர்-மேன்மை
பொருந்திய அந்தத்திருவண்ணுமலையைநீங்கிஅன்புடனேகாஞ்சி
நகரில்வந்து ஏகாம்பரத்திலே கம்பனைவணங்கித தெரிதற்கரியதி
ருக்காமக்கோட்டத்தில் காமாட்சியினுடைய சிறியஇரண்டுதிரு
வடிகளையும்வணக்கித்தேவர்கள்வரங்களைக் குறித்துவணங்குகின்
ற தெய்விகமுள்ள வளத்தையுடைய திருக்கழுக்குன்றத்துக்கெழு
ந்தருளினுர்மாணிக்கவாசகரென்றவாறு ௨௨

கோட்டிதழ்கமழுங்கொன்றைச்சென்னியன்குலவுமன்பர்
கூட்டியமலர்த்தகள்போற்றித்துணைவரின்செய்யமேனி

காட்டினைகலங்காவண்ணமிக்குன்றிலென்று
பாட்டினைப்பொழிந்துசின்னாளமர்ந்தினைப்பணிந்துபோந்தார்

(இ-ள்) கொம்புகளிலே யிதழலர்கின்றகொன்றை மாலிகை தரித்தசிரசையுடைய கடவுளுக்கு அன்பராகிய மாணிக்கவாசகர் தனமுடியிலேசூட்டியதாமரைமலர்போன்றபாதங்களைவணங்கித் துணையானவனையான்கலங்காதப்படி சிவந்தமேனியைக்காட்டினாய் கழுக்குன்றிலேயென்று பாட்டினைச்சொல்லிச்சிலநாள்வசித்துப் பின்புபணிந்துபோனாரென்றவாறு. (௪௩)

அத்தலமுதலாநாட்பணைடங்குளந்தியுங்கானும்
மைத்தடங்கிரியுங்காவுமவாவிகளபலவுநீங்கிப்
பைத்தவெம்பாம்போடாடிநரியெலாம்பரிகளாக்குஞ்
சித்தர்தென்றில்லைமூன்றுகாவதமெனனச்சென்றார்

(இ-ள்) அந்தஸ்தலமுதல் மத்தியப்பிரதேசத்திலே யிருந்துள்ள ஸ்தலங்களும் கிராமங்களும் பெரியவிசாலமாகியமலைகளும் சோலைகளும் தடாகங்களும் நதிகளும கடந்துபடத்தையுடைய வெய்யசர்ப்பத்தோடுவிளையாடி நரிகளையெல்லாங்குதிரையாக்கிய சித்தராகிய கடவுளது அழகியதில்லைமாநகர் மூன்றுகாதவழியென்றுசொல்ல எழுந்தருளினார்மாணிக்கவாசகரென்றவாறு, (௪௪)

வேறு.

தாரூரன்மடப்பாவையர்தோளாசையிலாதவர்தாமும்
மாமுகளுமிட்டுண்டுயிராவாழாதவர்தாமுந்
தீமுனாகரவானமேலருளசெய்யாதவர்பலரும்
பொழுர்வழிபோகாதவர்புலியூர்வழிபோனார்

(இ-ள்) பரிசுத்தமாகிய தந்தவரிசைகளையுடையமங்கையர்கள் தோளாசையிலாடுகின்ற வனமகளும இட்டுண்டுயிரைமூரா தவர்களும அகங்கினிமுனைந்து திருக்கரத்தையுடையகடவுள்மே ல அன்புசெய்யாதவர்களும்போகப்பட்ட நரகவழியிலேபோகாத மாணிக்கவாசகர் புலியூராகியசிதம்பரத்தினவழியாகப்போயினா ரென்றவாறு, (௪௫)

செல்லுஞ்சுரமிருபாலொளிதிகழ்கொன்றைகண்மலரா
வெல்லொன்றியவிமையோருலகெனநின்றனவெங்கும
புல்லுஞ்சிவநாமத்தமிழ்போலவண்டிசைபாடச்
சொலலும்பொருளவலலார்தங்கைபோன்றனதோன்றி

(இ-ள்) இப்படிசொல்லுகின்றமார்க்கத்தினிரண்டுபக்கத்திலும் ஒளிவிளங்குகின்றகொன்றைகள்மலர்ந்து எங்கும்பிரகாசம்பொருந்தியதேவர்களுடைய பொன்னுலகம போலநின்றன- சிவநாமத் தைத்தழுவுகின்றதமிழ்போல வண்டுகளிசையைப்பாட, அதற்கு ப்பொருள்சொல்லவல்லவித்துவான்கள் அபிநயங் காட்டுங்கைக ள்போலமலர்ந்திருந்தன காந்தள்களென்றவாறு. (௪௬)

தெள்ளுஞ்சிவஞானஞ்சிறிதில்லார்தவவேடங்
கொள்ளுஞ்செயலெனவெண்மலர்குலவுங்கவிரெல்லாம்
பள்ளமபடர்புனலபோற்புலன்வழியேபயிலசிறியோ
ருள்ளந்தனையொககுந்திகழ்மைகொண்டொளிர்காயா

(இ-ள்)தெளிந்தறிகின்ற சிவஞானம்சிறிதுமில்லாதவர்கள்தவசி
கள்வேடங்கொள்ளுவதுபோல் முருக்குகளெல்லாம்வாசனையில்
லாதவெளியையுடையமலர்களை மலர்ந்திருந்தன பள்ளத்திற்செல்
லுகின்றநீரைப்போல் ஐம்புலன்வழியேசெலலுகின்ற சிறியோர்
களுடையமனம்போலககரியமலர்களைப் பூத்திருந்தனகாயாமரங்
களெலலாமென்றவாறு, (சஎ)

பாயுங்குலமந்தித்திரள்பயிலுந்தொறுமசையா
வீயின்குழுவெழுதேனினிருல்சேர்மலர்நாக
மாயந்திகழ்தாராகணமகல்வான்மிமிளிர்மதிய
மேயும்பசுகிளர்பொங்கரினிடைநின்றனவெங்கும்

(இ-ள்)புன்னைமரங்களிலே குரங்கினங்கள் குதித்துச்சஞ்சரிக்
குந்தோறும்அசைந்துவிழுகின்றபுஷ்பங்களின்கூட்டங்களெழுகின்றதேன்கூண்டும்
மலர்களுமஅகன்றஆகாயத்தில்விளங்குகின்றசந்திரனும்தாரகை
களும்போலஎங்குமிருந்தன சோலையினிடையிலெனறவாறு. ()

பக்கங்கிளர்கமுகின்றிரள்பலசாமரைவீசக்
கொககின்றளிர்கோதும்பலகுயிலகாகளமூதத்
தொக்கன்பொடுதிண்ணைதிபாசொரியும்பலபொற்பூ
வொக்கும்படிமலர்சிந்தினவொண்சண்பகசோலை

(இ-ள்)மாணிக்கவாசகருக்குப் பக்கத்திற்பிரகாசிக்கின்றகமுக
மரககூட்டங்கள் அனேகஞ்சாமரங்கள் வீசமாந்தளிரைக்கோது
கின்றஅனேககுயிலகள் சின்னமூத மிகுந்தஅன்புடனே தேவர்
கள்சொரிகின்றபலபொன்மலரை ஒக்கும்படி ஒளிபொருந்தியமல
ர்களைச்சிந்தினசண்பகசோலைகளென்றவாறு, (சகூ)

நீங்காவளமிவ்வாறுளநீள்சூதநாரந்
தேங்காரளிமுதல்பாதிரிதெங்கின்றிரள்வகுளங்
கோங்காசினிகொந்தாசெழுமந்தாரநெருங்கும்
பூங்காவையகன்றார்புலியூர்நன்னகர்கண்டார்

(இ-ள்)நீங்காதவளங்களையுடைய நீண்டமாவும்நாரத்தையும்நி
றைந்தவண்டுகள் சத்திக்கின்றபாரியும் தெங்கும்மகிழும்கோங்கு
ம்பலாவும்கொத்தார்ந்த செழுமையுளளமந்தாரமும் ஆகியமாங்க
ள்நெருங்கியபூஞ்சோலையைக்கடந்துசிதம்பரத்தைக்கண்டார்மா
ணிக்கவாசகரென்றவாறு, (ருய)

சேணேன்றியமதிலும்பணிதிகழ்கோபுரநிரைவுஞ்
சோணந்தரும்பங்கிளர்துணைமாளிகைபலவுங்

காணுந்தோறுமெழில்செய்வதுகண்டஞ்சலிகொண்டே
பூணுந்திருவருளன்பாபுகழ்ந்தாருணமகிழ்ந்தார்

(இ-ள்) உயர்ச்சிபொருந்தியமதிலும் சிற்பத்தொழிலின் மிகுந்த கோபுரவரிசைகளும் சிவந்தகும்பங்களைப்பிரகாசிக்கின்ற அனேக உப்பரிகைகளும்பார்க்குந்தோறும் அழகினைச்செய்வதைக்கண்டு அஞ்சலிஹஸ்தராய்ப்புகழ்ச்சிசெய்து மகிழ்ச்சிகொண்டார்திருவருள் பூண்ட அன்பராகியமாணிக்கவாசகரென்றவாறு. (௫௧)

வேதந்தருமொலியுந்தொழுமவிஞ்ஞோர்தமதொலியும்
கீதந்தருமொலியுங்கிளர்முழவங்களினொலியும்
போதந்தருசிவஞானிகள்பகர்வாகமவொலியு
மோதுந்தமிழொலியுங்கடலொலிசெய்தனபுலியூர்

(இ-ள்) பின்னும் அந்தச்சிதம்பரத்திலே வேதமோதுகின்றசத்தமும் வணங்குந்தேவர்களைச் சத்தமிடுகின்ற கீதங்களின்சத்தமும் பிரகாசிக்கின்றபேரிகைகளின்சத்தமும் அறிவினைத்தருகின்ற சிவஞானிகள் சொல்லுகின்றஆகமங்களின்சத்தமும் ஓதுகின்றதமிழின்சத்தமும்கடல்போலச் சத்தித்தனவென்றவாறு. (௫௨)

நிரைபொன்றியமணிமாளிகைநெடுவீதிகள்கலா
வரைபொன்றியவுயர்கோபுரமணிவாயிலபுகுந்தே
யுரைபொன்றியசிவஞானவுரைகூருஞ்சிவநன்னூல
கரைகண்டவர்மணிமன்றிறைகண்டாரருள்கொண்டார்

(இ-ள்) வரிசைபொருந்திய அழகியஉப்பரிகைகளையுடையநெடிய வீதிகளைக்கடந்துமலைபோற்பொருந்திய உயர்ந்தகோபுரவாசல்வழியாகப்புகுந்து பொருந்தியசொல்லையுடையசிவஞானத்தை விளங்குகின்ற சிவாகமங்களைக்கரைகண்ட மாணிக்கவாசகர்சிற்சபையை எதிரேகண்டு அருள்பெற்றாரென்றவாறு. (௫௩)

பொன்றாபொதுநின்றாடியபுனிதன்றனைமுடிமே
லன்றாளடிவைக்கும்பரனாகும்படிகண்டார்
மன்றாவுயிரனையமணிமன்றாசரணென்
சொன்றாபலகாலன்பொடுதொழுதார்மிகவழுதார்

(இ-ள்) பொன்னம்பலத்திலே நின்றுதிருக்கூத்தாடியகடவுளைத் தம்முடையசிரசிலே அந்தநாளிலே திருவடிகளைச்சூட்டியகுருவுருவமாகக்கண்டு இந்தச்சகத்துக்கெல்லாம் அரசனே உயிருக்கொப்பானவனே சபாநாயகனே உனக்குஅடைக்கலமென்றுசொல்லிப்பலதரம் அன்புடனேதொழுதுமிகவும்அழுதார் மாணிக்கவாசகரென்றவாறு, (௫௪)

விண்டேயிருகண்ணீர்விழவீழ்ந்தனன்முடிமேற்
கொண்டேபினெழுந்தனபொறிகுறையாவருணிறையா

வண்டார் குழலுமைபாகனை வண்டில்லையுளின்னே
கண்டேனெனறபாடலகளுந்தாரவுரைத்தார்.

(இ-ள்) இராவணகளும் ஆனந்தபாஷ்பமொழியநமஸ்கார மபண்ணித் திருவடிகளைமுடிமேற்சூடிக்கொண்டு மீண்டெழுந்து அன்புமேன் குறைவில்லாத திருவருணிறைந்து வணங்கனமொழி யாகின்ற கூந்தலையுடைய உமாதேவிபாகராகிய கடவுளைவளந்தை யுடையதில்லையம்பலத்திலே இப்பொழுதே கண்டேனென்று பல பாடல்களாற் கண்டபத்து என்கிற கொள்ள உரைத்தார் மாணிக்க வாசகரென்றவாறு. (௫௫)

குன்றாத மூலநிசகுதியாகியசுடர்
மன்றில் வெளிப்படு நாடியவொளியு
மொன்றிப்பவழமுமியலுற்றாசெயலற்றா
ரென்றுரைசெய்லவொருமிலையோவியமானார்.

(இ-ள்) குறைவில்லாத திருமையையுடைய ஸ்ரீமூலஸ்தானத்தி லிருக்கும் சிவலிங்கமாகிய சோதியும்பொற்சபையாகிய சிதாகாசத் திலேயம்பலத்தில் நிருத்தஞ்செய்கின்ற சோதியுமொன்றென்று சொல் லும் அநுபூதியிலேயிருந்து ஒருசெயலுமில்லாதவராய் அசைவற் ற ஓவியமாகிய சித்திரம்போலானார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௬)

மைகால்குழலுமைபாகனின்னெயிற்பாடிடங்கே
கைகாலசைவிலகாயினகண்ணுகுதிரிதிமையாக
செய்காரியமெனவேதுதிகெருளாமருளென்ற
மெய்காவலாமனுமனைவிட்டபோயினவென்றார்

(இ-ள்) அப்போது கருமையைப்பெற்றிருக்கின்ற கூந்தலையுடைய உமா தேவிபாகராகிய சபாநாயகரை வழிபட்டுவணங்குமபோது கைமுதலா யின அசைவில்லாமலிருக்கின்றன கண்ணுங்கொட்டுதலாயினும் இ மைக்கவில்லைசெய்யுங்காரியம் என்னவென்று தெரியாதமயக்கமா யிருக்கிறதென்று மாணிக்கவாசகரை இனி அவர்களையும் பட்டுப் போமென்றார் மெய்க்காவற்காரர்களென்றவாறு. (௫௭)

வேறு.

பூண்டருள்கொண்டகாவல்புரிபவருரைத்தல்கேளாத்
தாண்டவமிகழுஞானத்தன்மையின்றனைமைநாடிக்
காண்டகுதுரியாதீதசுழிபாதத்தொளியின்மூழ்கி
நீண்டதோர்தம்பமாகிநின்னார்நெஃதுபோது

(இ-ள்) கிருபையைக்கொண்ட மெய்க்காவற்காரர் சொன்னது கேட்டுத் தாண்டவம்புரிகின்ற அறிவின்றன்மையினது பழமை யைநாடிக்காணத்தக்க துரியாதீதமாகியதிருச்சபாதத்தினுடைய ஒளியிலேமூழ்கிப்பரவசப்பட்டு நீண்டஒருஸ்தம்பமாகி நெடிதா நின்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௮)

போமெனப்போகாரொன்றும்புகல்கிளர்பித்தர்கொண்டார்
ராமெனக்காவலாளரனுசிதன்பிக்குமெலலைச

சாமுட்டற்குயிர்வந்தெய்துந்தன்மைபோற்குவிந்தகஞ்சத்
தேமலர்க்கரமேற்கொண்டுசிவசிவபோற்றியென்றார்

(இ-ள்), இவர்போமென்றால்போகார் ஒன்றும்பேசார்பயித்தியங்கொண்டவராகுமென்று மெய்காவற்காரர்பயந்துநின்று இரங்கும்போது இறந்ததேகத்திற்கு உயிர்வந்தடைந்த தன்மையைப்போல அஞ்சலிசெய்த தாமரையலர்போன்றகைகளை. மேற்கொண்டு சிவசிவபோற்றியென்றார்மாணிக்கவாசகரென்றவாறு (௫௯)

முன்னவன்செம்பொன்மன்றை மும்முறைவலங்கொண்டங்
தன்னிகரில்லாமூலத்தலைவனைவணங்கிப்பின்னை [குத்
ரன்னையம்பிகைதன்பாதமன்புடனிறைஞ்சியந்தப்
பொன்னவிர்கோயின்மேல்பார்புலீச்சரஞ்சென்றுசேர்ந்து

(இ-ள்). ஆதியாகியகடவுளுடைய பொன்னம்பலத்தைமூன்று தரமவலமாகக்கொண்டு அங்கேதனக்கு நிகரில்லாத திருமூலஸ்தான கடவுளை வணங்கிப்பின்பு உமாதேவிதிருவடிகளை அன்புடனேவணங்கி அந்தப்பொன்னொளியையுடையகோயிற்குமேற்பக்கத்தில் திருப்புலீச்சரத்திலடைந்தென்றவாறு (௬௰)

வரந்தரவமர்ந்தநாதன்மலரடிவணங்கிநாகீச்
சரந்தனிலிருந்தவண்ணறன்பதமிறைஞ்சிநீங்கித்
திருந்தியமறையோர்வாழுந்தில்லையம்பலஞ்சூழ்வீதிப்
பொருந்துழியமிர்தமானவாசகம்புகலலுற்றார்

(இ-ள்), வேண்டிய வரங்களைத் தருதற்குஎழுந்தருளிய அந்தக் கடவுளுடைய தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கிஅதற் கருகேதிருநாகீச்சரத்திலிருந்து பரமசிவனுடைய பாதங்களைவணங்கிநீங்கித்திருத்தமாகியதில்லை மூவாயிரவர்வாழ்கின்றசிதம்பரத்தைச்சூழ்ந்தவீதியிற்போகும்போது அமிர்தமாகியதிருவாசகஞ்சொல்லத்தொடங்கினார்மாணிக்கவாசகரென்றவாறு (௬௧)

ஆடியிக்குலாநற்றில்லையாண்டவனைக்கொண்டென்னும்
பாடலைப்புகன்றுகோயிற்றிருவகைப்பதிகங்கூறி
நாடுமச்சிவபுராணமொழிந்தநல்லகவன்மூன்று
நீடுமெய்த்தமிழுமன்பாலோதினர்நீதிமிக்கார்

(இ-ள்), ஆடிக்குலாத்தில்லையாண்டானைக்கொண்டென்னுங்குலாப்பத்துப்பாடிக் கோயிற்றிருப்பதிகமுங்கோயின்மூத்ததிருப்பதிகமும்பாடிக்கீர்த்தித்திருவகவல திருவண்டபகுதிபோற்றித்திருவகவல் ஆகியமூன்றகவலும் அன்பினுலேபாடினார்நீதியின்மிக்கவராகியமாணிக்கவாசகரென்றவாறு. (௬௨)

கைவளைசிலம்பச்செம்பொற்கிங்கிணிகறங்கச்சூழ்ந்து
மைவளர்குழன்மேல்வண்டுமருண்டிசைசிதறப்பண்பாட்

மெய்யிவரும்பவெம்போர்விழிக்கயல்புரட்டினாங்க
ரிவ்வகைநின்றுசுண்ணமிடித்தனர்மடந்தைநல்லார்

(இ-ள்) கைகளிலேயிருக்கின்றசங்கவளையல்கள் சத்திக்கச்செ
ம்பொன்னாற் செய்தநகைகணிகள்சத்திக்க மயிர்சார்ந்துபூசியகரிய
கூந்தலின்மேல் வண்டுகள்மயங்கி இசையைப்பாடத்தேகத்திலே
வேர்வையுண்டாகவெவ்விய போர்செய்கின்ற கண்ணு கயல்களை
ப்பாட்டிப் பக்கங்களிலேயிந்தவகைநின்று மாதர்களெல்லாம் தி
ருப்பொற்சுண்ணமிடித்தார்களென்றவாறு (௯௩)

அத்திருவனையார்பாடல்கேட்டவரிசைத்ததாக
மெய்த்தமிழதனானுமிகுதிருச்சுண்ணமோதி
மைதிகழ்காவினூடேவருந்துமங்கேபொய்தல்
தத்தமின்முயலுங்காதற்சிறுமியர்தம்மைக்கண்டார்

(இ-ள்), அந்தமாதர்களுடைய பாடல்களைக்கேட்டு அவர்கள்
சொல்லியதாகமெய்யாகியதமிழினால் நன்மைமிகுந்ததிருபொற்
சுண்ணம்பாடி மேகங்கள்பிரகாசிக்கின்றசோலையிடத்தேவருமள
வில் அங்கேதங்கள்தங்கைகளுக்குள்ளே விளையாடுகின்றபெண்பிள்ளை
களைப்பார்த்தார்மாணிக்கவாசகரென்றவாறு (௯௪)

கண்டபின்வழிதுகூறுங்கட்டுரைசிறிதுமற்றெம்
மண்டலையுரைமினென்றவருரைத்ததாக
வெண்டருதிருத்தெள்ளேணந்திருவுந்தியுந்தோணோக்கம்
பண்டிகழ்திருப்பூவல்லிபபாடல்பொன்னூசல்சொன்னார்

(இ-ள்), பார்த்தபின்புவீண்பேச்சுசிறிது மில்லாமல்எமதுக
டவுளையேசொல்லுங்கள் நீங்களென்று அவரவர்கள்சொல்லியதா
கத்திருத்தெள்ளேணம்திருவுந்தியார்திருத்தோணோக்கம்பண்கள்
விளங்குகின்ற திருப்பூவல்லிதிருப்பொன்னூசல்பாடினார்மாணிக்
கவாசகரென்றவாறு (௯௫)

ஆங்கொருசிறுமிதன்சிரன்னையைநோக்கிக்கூறுந்
தாங்கிசைமொழியேயாகத்தகுமவையீரைந்தோதி
ஞாங்கரின்முரலுந்தும்பிதன்னையுநயந்துநாதன்
பூங்கழல்வழுத்துகென்றுபுனிதர்கோத்தும்பிசொன்னார்

(இ-ள்), அங்கேஒருபெண்சிறந்ததனதுதாயைப்பார்த்துச்சொ
ல்லுந்தாங்கப்பெற்றஇசையையுடையசொல்லென்னத்தக்க அன்
னைப்பத்துப்பாடிப்பக்கங்களிற்பாடுகின்றதும்பியைவிரும்பிப்பார்
த்துக்கடவுளுடைய திருவடியைத்துதி செய்யென்றுதிருக்கோத்
தும்பிசொன்னார்மாணிக்கவாசகரென்றவாறு (௯௬)

பொங்கரினிடையேவாழும்பொற்பிளங்குயிலேகூவி
யிங்கழையெம்பிரானையென்பதுங்கிளியைநோக்கித்
திங்களஞ்சடையோன்பாதஞ்செப்பெனத்தசாங்கமென்னுந்
தங்கிசைத்தமிழுஞ்சொன்னார்தன்னிகரொருவரில்லார்

(இ-ள்) சோலையின்மத்தியிலே வாழ்கின்றகுயிலைப்பார்த்து அழகிய இளங்குயிலே இங்கேயெமது கடவுளைக்கூவியழையென்பதாகிய குயிற்பத்தும் கிளியைப்பார்த்துச் சந்திரனைத்தரித்தகடவுளைச்சொல்லென்னும் திருத்தசாங்கமும்பாடினார் தனக்குநிகரொருவருமில்லாத மாணிக்கவாசகரென்றவாறு, (௬௭)

மண்ணிடைத்தம்மையாண்டவடிவினையன்றிமற்றோ
ரண்ணலைக்கடவுளென்பார்க்கஞ்சுதும்வினையேனென்றும்
பண்ணுறச்சிறந்தசெய்யுள்பகர்ந்துநற்பன்னசாலை
யொண்ணகர்ப்புறம்புசெய்தங்கிருந்தனருண்மைமிக்கார்.

(இ-ள்) பூமியிலேதம்மையடிமைகொண்ட கடவுளையல்லாமல் வேறொருவரைத் தெய்வமென்பதற்கு அஞ்சுகின்றேன் வினையையுடையேனென்னும் சிறந்தபண்ணையுடைய அச்சப்பத்துப் பாடிப் பின்பு அந்தநகர்ப்புறத்திலே ஒருபாணசாலைசெய்து அங்கிருந்தார் உண்மையிலேமிக்க மாணிக்கவாசகரென்றவாறு. (௬௮)

பரம்பரப்பொருளாகமிந்தப்பைந்தமிழோதிவையம்
பெரும்பிறப்பகலவந்துபிறந்தவர்செய்தியெல்லா
மிருந்தநற்றொகுதிதோறுமியம்பினன்மகிழ்ச்சிசெய்தி
யரும்புகழ்தில்லையுள்ளாரியாவருமதிசயித்தார்

(இ-ள்) உலகமானதுவேதாந்தபொருளாகிய இந்தத்திருவாசகத்தமிழைச்சொல்லிப பெரியபிறப்பினின்று நீங்கவந்துதிருவவதாரஞ்செய்தமாணிக்கவாசகருடைய செய்தியனைத்தும் அரியபுகழையுடைய தில்லையிலுள்ளவர்யாவரும்தங்கள்கூட்டந்தோறுஞ்சொல்லிநல்லமகிழ்ச்சிபெற்று அதிசயித்தாரென்றவாறு. (௬௯)

தத்துவமுடிவிலாடுந்தாண்டவந்தமுட்கண்டு
சித்தனுஞ்சென்றுமன்றினிமலனையன்பாலேத்தி
யித்திறமையர்தில்லையெல்லையில்வைகுதலிப்பாற்
புத்தரைவாதில்வென்றபுகழினையுரைத்தல்செய்வாம்

(இ-ள்) முப்பத்தாறுதத்துவத்தின் முடிவிலேசெய்கின்ற சபாநாயகரது நிருத்தத்தைத்தமக்குள்ளேகண்டுநித்தியம்போய் அந்தக்கடவுளைப்பத்தியினாலே வணங்கியிந்தப்பிரகாரம்மாணிக்கவாசகர் தில்லைமாநகரத்துஎல்லையிற்செய்தபாணசாலையிலெழுந்தருளியிருக்க இப்பால்அவர்புத்தரைவாதிலேசெயித்தகீர்த்தியைச்சொல்லுவாம், எ-று (௭௰)

திருவம்பலச்சருக்கம்-முற்றுப்பெற்றது,

ஆ. திருவிருத்தம்-௬௱௰௩.

சிவமயம்.

# புத்தரைவாதில்வென்றசருக்கம்.

வேறு.

தாழ்நீடுவேணியண்ணருள்விடாவோர்மாதவ
னாழிஞாலவண்மையுண்மையாயுநேயநெஞ்சினன்
சோழநாடுகண்டுதில்லைதொழுதுபின்புபழுதிலா
வீழநாடுதன்னைநாடவெண்ணியங்குநண்ணினன்

(இ-ள்) தாழ்ந்துநீடிய சடாபாரத்தையுடைய பரமசிவனுடையஇரண்டுபாதங்களையுமவிடாதஒருதபசியானவர் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவளத்தை ஆயதக்கஇசையுள்ள மனமுடையவராசசோழநாட்டைக்கண்டு தில்லைமாநகரைவணங்கிப்பின்பு குற்றமில்லாதஈழதேசத்தைப்பார்க்கவேணுமென்றுநினைத்து அங்கேபோயினனென்றவாறு. (௧)

நண்ணுமாதிமாதவனலங்கொளீழநாட்டனு
மன்னனாளிருந்தவூரடைந்துசேரிடந்தொறு
மெண்ணிலாதகாலம்வாழிதில்லைமன்றமென்றுகூ
றுவனிலாவுமன்பியலுரைக்கவேதொடங்கினன்

(இ-ள்) அப்படியேமாதவசியானவர் முதன்மைபெற்றநன்மைகொண்டஈழநாட்டரசன் இருந்தவூரைச்சேர்ந்து மிருந்தஉள்ளன்பினாலேதானிருக்குமிடந்தோறுஞ்சிதம்பரம அளவில்லாதகாலம் வாழ்கவென்றுசொல்லத்தொடங்கினனென்றவாறு. (௨)

சென்றுசேரிடங்கடோறுஞ்சிறந்தசெம்பொன்னம்பல
மென்றுகூறிவைகுநாளிலீழநாடன்முன்புபோய்
நன்றிலாதமூகர்தாநயந்திறைஞ்சிமன்னனே
யொன்றியாமுரைத்துமென்வந்திவ்வாறுகூறினார்

(இ-ள்) தானபோய்ச்சேருமிடந்தோறுஞ்சிறக்கப்பெற்ற பொன்னம்பலமவாழ்கவென்றுசொல்லியிருக்குநாளிலங்கேயிருக்கும்நன்மையில்லாத மூடராகியபுத்தர்ஈழதேசத்து ராசாவுக்கெதிரேபோய்நயப்புடனவணங்கி அரசனேஒன்றுகேள்நாம்சொல்லுகிறோமென்றுமகிழ்ச்சியுடனஇந்தப்படி சொன்னார்களென்றவா

ஒற்றகமிலுதிருத்தனொருத்தனின்னகர்க்குளா
னற்கலன்கள்க்குமாலைநாளுமுண்பதைய்யமே
நிற்கினும்மிருக்கினுநிலாவசெம்பொன்மன்றெனுஞ்
சொற்கிளர்ந்துரைக்குமென்று சொல்லுமுன்வணங்கினார்

(இ-ள்) குறைவில்லாத திறமையுடையவனுருமொருத்தன்இந்நகரிலேயிருக்கிறான் அவனுக்காபரணம் ருத்திராக்ஷமாலிகை அடைந்தநத்தோறும்புசிப்பதுபிக்ஷைநின்றாலும்இருந்தாலும்பிரகாச

ள்புலைவன்ய பொன்னம்பலமென்னுஞ் சொல்லைச் சொல்லுகிறு
னென அமுன்னேவணங்கினார்களென்றவாறு. (௪)

வேறு.

இன்றிங்கவனைக்கொணவீரென்றிசைத்தாவிருபனுங்கவருஞ்
சென்றன்புடையாய்வருகவனையழைத்தானிறன யனையவென்ன
நன்றென்பதுவுந்தீதுமிலாநாளும்பலிபெற்றுண்பதொழிந், தொ
ன்றுங்கருதாருடனகருமமுளதோவேந்தறகெனவுரைததான்

(இ-ள்) அவ்வரசனானவன் இன்று இங்கே அவனைக் கொண்டுவா றுங்களென்று சொன்னான் அவரும்போய அனபுடையவரோ உம்மை யரசனழைககிறான்வாருமென்றார் அதறகு அவாசொலலுவாாநா ள்தோறுமநம்மையுந்தீமையுமிலலாத பிசசையெடுத்துஉணபதல லாமல்ஒன்றும்நினையாதவாகளிடததும அரசனுககுககாரியமுண் டோவென்றாள்-று. (௫)

ஊரிற்பலிகொண்டுணகினுமற்றொன்றுங்கருமமில்லெனினும்
பாரிற்பயிலவாருயிர்புரததலபரமாகிருயாககாதலினால
ஆரிறகமற்காரெம்மரசனறன்பாலவருதலவேண்டுமெனச்
சீரிறிகழவேறாதருடனசென்றாரொன்றுந்தீமையிலான

(இ-ள்) ஊரிலேபிக்ஷையெடுத்துண்டாலும் காரியம்ஒன்றுமில்லை யானாலும்பூமியிலேயிருக்கின்றவர்களுடைய உயிரைரக்ஷித்தல்அ ரசர்களுக்குப்பாரமாகுமஆதலினாலகமழகின்றவேராறசெய்தமா லையையுடையஎங்களரசனிடததிலேவரல்வேண்டுமென்றுசொல் ல நல்லதென்றுசிறப்புவிளங்கியவேலையுடைய தூதருடனேபோ னாாதீங்கொன்றுமிலலாதபசியானவரென்றவாறு. (௬)

மூந்தும்பிடகமூன்றுணர்ந்துசெயிர்நான்கொழிந்துமூதுசீல
மைந்தும்புனைநதுபாரமிதேயாறைத்தடக்குமியலபுடையோன்
கந்தங்கெடுதன்முக்தியெனக்காட்டுங்குறவனிருப்பவுடன்
சங்கஞ்சிறந்தபுயகிருப னிருந்தான்றானைபுடைசூழ

(இள்) * ஆதியாகியபிடகநூன்மூன்றுமறிந்துநான்குகுற்றமுநீ ங்கிசீலமைந்துந் தரித்துககாமாதியாறும் பஞ்சேந்திரியங்களும் அடக்கப்பட்ட இயல்பையுடையவனாய்ப பஞ்சகந்தமுங்கெடுவது முத்தியென்று காட்டுகின்றபௌத்தாசிரியன்தன்னுடனேயிருகக சசேனைகள்புடைசூழ அழகுசிறந்தபுயத்தையுடைய புத்தராசனு மிருந்தானென்றவாறு. (௭)

உடுக்குந்தனிவெண்கோவணமுமொளிர்பொக்கணமுமாத்தி
ரையு,மெடுக்குஞ்சதங்கைநெடும் பிரம்புமிலகுந்திலதத்திருமுக

று, மயக்குஞ்சிறுபுன்மூரலுமின்னைசயுஞ்சடையுங்கண்டரசன் றிடுக்கணுகொளவந்தருகாகவிருந்தான்றிருவம்பலமென்று,

(இ-ள்) அப்போதுதபசியானவர்உடுக்கப்பட்டஒருவெள்ளைக்கோவணமும்பிரகாசிக்கப்பட்ட கபாலமுஞ்சதங்கைகட்டிய நெடியபிரம்புமதிலர்தபொட்டணிந்ததிருமுகமுஞ்சிறியபுன்சிரிப்பும் அசைகின்றசடையும்பார்த்து அரசனதிடுக்கிட்டுவந்துஅருகேயிருந்தார் திருவம்பலமென்றுசொல்லினென்றவாறு, (௮)

இருக்குந்தலைவன்றனைநோக்கியிப்போதிருவம்பலமென்றிங் குரைக்குந்தகைமையென்கொலெனவுலகாள்பவனுக்கவனுரைப் பான், பெருக்கும்புகழாற்றிகழ்வளவன்பிரியாவிருகட்பேரருளா புரக்குந்திருநாட்டறந்தழைக்கும்புலியூரென்பதொன்றுளதால்.

(இ-ள்) இப்படியிருக்கதபோதனைப்பார்த்து இப்போதுநீர்திருவம்பலமென்று இங்கேசொல்லுந்தன்மையென்னவென்று வினவ அவ்வரசனுக்குஅவர்சொல்லுவார் செல்வத்தைஅதிகரிக்கச்செய்யுங்கீர்த்தியினாலேபிரகாசிக்கின்ற சோழராசாவானவன் பிரியாததன்னுடைய கிருபாநோக்கங்களாலேரட்சிக்கின்ற சோழநாட்டிலே சிதம்பரமென்றொருஸ்தலமுண்டென்றவாறு (௯)

அந்தப்பதிமுதில்லைவனமஃதேபுவனமனைத்தினுக்குமுந்தக் கிளருந்தெய்வதலமதனான்மூலதானமதா, மிந்தப்புவிக்குநாப்பணெனவிலங்கும்பொதுவாமிடமதனிற, சந்தத்தனதத்தாருமைகாணத்தலைவன்றிருத்தாண்டவம்புரிந்தார்.

(இ-ள்) அந்தஸ்தலம்முன்னேதில்லைவனம் அதுவேதிரிபுவனத்துக்குமுன்னேஉண்டாகிய தெய்வஸ்தலமாம்அதனால் மூலஸ்தானமென்றுசொல்லலாம்இந்தப்பூமிக்குநடுவாகப்பிரகாசிக்கின்றசிற்சபையிலே சந்தனம்பூசப்பட்டஸ்தனத்தையுடைய உமாதேவிகாணச்சபாநாயகர் நிருத்தஞ்செய்தாரென்றவாறு. (௰)

மன்னுந்திரலான்மனுமைந்தன் வடிவிற்குறுநோய்மாற்றி நெடும்,பொன்னங்கிரிபோலுருக்கொள்ளும்புனிதத்தடமுண்டதின்மூ ழ்கி, முன்னம்புவிமேற்றவமொன்று முயலாதவருமைக்கொழி, லென்னுந்திருத்தாண்டவம்புரிதல்கண்டாலுலகினிப்பிறவார்

(இ-ள்) நிலைபெற்றதிறலையுடையமனுச்சக்கரவர்த்திகுமாரனுடையஇரணியவன்னுடையதேசத்திலிருந்த குட்டநோய்யைநீக்கிநெடியமகமேருவைப்போலுந் திவ்வியதேகத்தைக்கொடுத்தபரிசுத்தமாகிய சிவகங்கையென்னும் ஒருதடாகமுண்டு முன்னேபூமியிலேயொருதவமுஞ்செய்யாதவரும்அதிலேமூழ்கிப்பஞ்சகிருத்தியத்திற்குக் காரணமாகியநிருத்தத்தைத் தெரிசித்தால் அவர்கள் உலகத்திலேவந்துபிறவார்களென்றவாறு. (௰௧)

## புத்தனைவாதில்வென்றசருக்கம

நண்ணும்பிறவியொழித்துயிர்க்குநலஞ்சேர்முத்திகொடுக்கு
மவர், கண்ணுஞ்சமயக்கடவுளரில்யாரேவல்லவனெனப்பதமே
ல், வண்ணந்திகழ்பொற்கழலணிந்துமாதுமைக்கொடியுங்கட்டியரு
ட்பெண்ணம்பிகைகண்காணநடஞ்செய்தானந்தப்பெருந்தருக்கர்

(இ-ள்) பொருந்திய பிறவியை நீக்கி ஆத்மகோடிகளுக்குந
ன்மையானமோக்ஷத்தைகொடுப்பதற்குரியனாகின்ற அனேகசமய
தெய்வங்களில்யாரேவல்லவனென்றுதிருவடிமேலழகுவிளங்
கியபொன்னினாற் செய்த வீரககழலையணிந்து வலிமையுடைய
கொடியுங்கட்டிஅந்தகர்வத்தால் அருட்சத்தியாகியஉமாதேவிகா
ணநடனஞ்செய்தாரென்றவாறு (௰௨)

தேக்குஞ்சடிலமுடிக்கடவுளிருதாள்கருதாத்தீமனமும்
வாக்குஞ்செயலுங்கொடியருமொருகாற்பொன்னம்பலமென்னி
லாக்கந்தருமஞ்செழுத்திருபத்தோராயிரத்தோடறுநூறு
நாக்கொண்டுரைக்குமதற்குரியோன்றான்குன்றாநற்புகழான்

(இ-ள்) நிறையப்பெற்ற சடாமுடியையுடைய பரமசிவனுடை
யஇரண்டுபாதத்தைவணங்காததீயமனமும்வாக்கும்செய்கையுமு
டையகொடியவர்களும் ஒருதரமதிலேபெறறபொன்னம்பலமென
றுசொன்னால்செல்வத்தைத்தருகின்றபஞ்சாக்ஷரத்தை இருபத்
தோராயிரத்தறுநூறுதரம் நாவைக்கொண்டுசொல்வதற்குரிய
ரல்லவா வென்றார்குறையாதநல்லகீர்த்தியையுடையதபசியானவ
ரென்றவாறு (௰௩)

நீறுந்திருவஞ்செழுத்துமிலாநிருபாதிருவம்பலமென்று, கூறு
ம்பொருளிங்கிதுவாகுமென்றான்குன்றமெனுங்குணத்தான், றே
றும்பிடகமூன்றுமுரைசெய்யுந்தலைவனல்லாது, வேறுங்கடவு
ளொன்றுளதோவென்றே புத்தன்வெகுண்டுரைப்பான்

(இ-ள்) மலையென்றுசொல்லுங்குணத்தையுடையதபசியானவ
ர்விபூதி பஞ்சாக்ஷரமில்லாத அரசனே திருவம்பலமென்றுநாம்
சொன்னதற்குப்பொருள்இதுவாகுமென்றார் அப்போதுதேருகி
ன்றபிடகாகம்மூன்றும்சொன்னதலைவனல்லாமல் வேறேஒருதெ
ய்வமுண்டோவென்று கோபித்துச்சொன்னான்புத்தகுருவானவ
னென்றவாறு. (௰௪)

சென்றேதில்லையெனும்பதியிற்சேர்வேன்வாதுசெய்தவன்று
னின்றேநடிக்குங்கழல்சேர்நீடுங்கொடியுமீங்கறுப்பே
னென்றேகடவுள்புத்தனெனவுலகோரறியவுரைத்தந்த
மன்றேபோதிநிழற்பெருமாள்பள்ளியென்னவழங்குவிப்பே

(இ-ள்) அப்படியானால்தில்லைமாநகருக்குப்போய்வாதுசெய்து
அவரிருந்து நிருத்தஞ்செய்கின்றபாதத்திலிடுகின்றவீரக்கழலையு
ம்பிடிக்கின்ற கொடியையும்அறுத்துப்போடுவேன் புத்தனொருவ
னேதவிரவேறுதெய்வமில்லையென்று அந்தச்சபையை அரசமரநி

மூலிலிருக்கும்புத்தன்கோயிலென்றுசொல்லும்படிவைப்போமெ னறுன புத்தகுருவானவனென்றவாறு, (௰௫)

இந்தக்கருமந்தினமூன்றில்யானேமுடிப்பனெனவெழுந்து
சந்தசிவிகைமேறகொண்டுதன்றுள்வணங்குநங்கணருசூழ
தந்தகிளருந்திரைக்கடலுநாடுங்காடுமகன்றேகிப
புந்தித்துயரங்கொண்டொல்லைசென்றான்புத்தன்புலியூரில்

(இ-ள்) இந்தககாரியத்தைமூன்றுதினத்தில்யானேமுடிப்பனெ ன்றுஅழகியசிவிகையின் மீதிலேறிகொண்டுதன்னுடையபாதத தைவணஙகுகினற பௌத்தகூட்டஙகள்சூழமிகவமபிரகாசிககின் றஅலையையுடையகடலும் நாடுமகாடுமநீஙகிபுததியிலேவியசன ஙகொணடுசீககிரததிலே புத்தகுருவானவன் சிதமபரத்துககுப் போயினனெனறவாறு (௰௬)

வேறு.

மன்னனுந்தனதுசெல்வமகட்குள்மூகைநீங்கப்
பொனனிமமபலததிலேகவென்பதுபொருந்தவுன்னித்
தனனெடுந்தானைசூழததனிபபெருஞ்சிவிகையேறிக
சென்னிநனனாடுசோநாதிலூலயினெலலைபுகான்

(இ-ள்) புத்தாசனுக்கன்னுடையசெல்வமபோன்றபுத்திரிக்கு மூஙமையுண்டான ஊமைததனமை நீங்கச சிதமபாததுககுப் போகவேண்டுமெனபதை நினைத்துதன்னுடைய சேனைகளசூழ ஒப்பற்றபெரியசிவிகையிலேறிகொணடு சோழநாட்டிலவநதுதி லலைமாநகரத்துககுவநதானென்றவாறு, (௰௭)

இஙஙிவன்செல்லுமுன்னமெய்தியபுத்தனங்கி
செஙகரன்றிலலைமெல்லைசசிவிகையினிழிந்துசென்று
பொங்குதண்புனலசோசெனனிப் புலிசசாமரன்போற்கோ
றங்குசெஙகனகசாலந்தயஙகுமண்டபத்திலானன் [யிற்

(அள்) இந்தப்புத்தாஜன்வருவதற்குமுன்னேவந்த புத்தகுரு வானவன்அககினியைத்தரித்த சிவநதகையையுடையபாமசிவனு டையதிலலைமாநகரதது எலலையின்முன்னேசிவிகையைவிடடிறங் கியிருநககுளிாசசிபொருநதியகஙகைகயைததரித்த சிரசையுடை யபாமசிவனதுஆலயத்திலே பொன்னினாறசெயத மண்டபததில் வந்துசேர்ந்தானென்றவாறு (௰௮)

ஆங்கவனிருப்பசசென்றவாசனுமிறைஞ்சிமெய்தி
யோங்கியமகிழ்ச்சியெய்தியமர்ந்துழியுரகாசி
தாஙகியசடிலன்கோயிமுன்னிலுட்கருமஞ்செய்வா
ரீங்கிவர்வரவுகண்டேயாவருமொருங்குசேர்ந்தார்

(இ-ள்) அங்கேயிருந்தபுத்தகுருவைப்புத்தாாசன் வணங்கித்து திசெய்துஉயர்ந்தமகிழ்ச்சியடைந்திருக்கும்போது சர்ப்பக்கூட்டத்

தைமுடித்த சடையையுடைய பரமசிவனது கோயிலிலேபணிவிடைசெய்பவர்கள் இவர்கள் வருதலைக்கண்டுஎல்லாரும் ஒன்றாய்ச்சேர்ந்தார்களென்றவாறு. (௰௯)

வேறு.

தத்தமனநொந்துகனலெனவெகுண்டே
சித்தமயர்வெய்தும்வகைசின்மொழிகள்கூறா
வத்தனுறைதில்லைநகரெல்லையையகன்றே
புத்தகடிதகிதுபொறோமெனவுரைத்தார்

(இ-ள்) அப்படியேசேர்ந்தவர்கள் தங்கள்தங்கள் மனநொந்து அக்கினியைப்போற்கோபித்து அவர்களாயாசங்கொள்ளும்படில்லவார்த்தைகளைப்பேசிக்கடவுளிருக்கின்ற தில்லைமாநகரினெல்லையைவிட்டுப்புத்தனே சீக்கிரத்திலோடிப்போ இதுநாங்கள்பொருக்கமாட்டோமென்றுசொன்னார்களென்றவாறு. (௨௰

தார்வளவன்முன்னருயர்தர்க்கவுரைகொண்டே
நீர்பரவுசைவநிலையன்றெனமொழிந்தே
சீர்மருவுபுத்தனுயர்தெய்வமெனவிப்போ
தேர்பெறழினைப்பதலதேகுவதிலென்றான்

(இ-ள்) வெற்றிமாலையையணிந்த சோழராசன்முன்னேஉயர்ந்ததர்க்கம்பேசி நீங்கள்போற்றப்பட்ட சைவமார்க்கம்நிலையன்றென்றுசொல்லிச்சிறப்புப்பொருந்திய புத்தனேஉயர்ந்ததெய்வமென்று அழகுபொருந்த இப்போதுசொல்வதல்லாமற்போவதில்லையென்றானென்றவாறு, (௨௧

பத்தனவனிவ்வுரைபுகன்றபினெவர்க்கு
மித்திறமுரைகருவமெனக்கடிதகன்றே
மெத்தவர்கள்வேதமுதலோர்பரிகலத்தோர்
தத்தமனைதோறுமிதுசாற்றினர்களன்றே

(இ-ள்) புத்தகுருவானவன்இந்தவார்த்தையைச்சொன்னபின்பு யாவர்க்கும் இதைசசொல்லுவோமென்றுசீக்கிரத்திலேஉண்மையாகியதபோதனர்களுக்கும் தில்லைமூவாயிரவர்களுக்கும் பரிகலத்தார்களுக்கும் அவரவர்கள்வீடுகள்தோறும்போய்ச்சொன்னார்களென்றவாறு, (௨௨)

புண்ணுழையும்வேணிகர்புகன்றமொழிகேளா
வண்ணலுறைகோயிலிடையாவருமடைந்தே
வண்ணமணிமண்டபமதெய்திவருபத்த
ளெண்ணமதுகேட்குவமெனக்கடிதுசென்றார்

(இ-ள்) புண்ணிலேவேல்நுழைந்ததுபோல இவர்களெல்லாஞ்சொன்னசொல்லைக்கேட்டுச் சபாநாயகரெழுந்தருளியிருக்கின்றகோயிலிலேயெல்லாரும்போய் அழகியரத்தினம் பதித்தமண்டபத்

திரிருக்கிற புத்தகுருவினுடைய நினைப்பென்னவென்று கேட்போமென்றுசீகிரத்திறபோனார்களென்றவாறு, (உங)

தெய்வநாரானவர்கள்செல்லவெதிர்வாரா
மெய்யணர்வில்புத்தனைவெகுண்டியலசொல்ல
வுய்வகறியாதவொருநீபயமிலாதே
யிவ்வலகையிருந்தமதியாமையெதுவென்றார்

(இ-ள்) தெய்வத்தன்மையையுடைய தில்லைமூவாயிரவர்போக எதிர்கொண்டுவாராத உண்மைஞானமில்லாத புத்தனைக்கோபித்துப்பலபேசுகன்பேசிப்பிழைக்கும்வகையறியாதநீ இங்கே அச்சதமில்லாமல் மதியாமலிருந்ததன்மையென்னென்றுகேட்டார்களென்றவாறு, (உச)

அங்கமறையாகமபுராணமவையாலே
நுங்கடவுளேகடவுளென்றுநுவல்வீரே
லெங்கடவுளேகடவுளென்றுநவில்வேன்யா
னியகெனெதிர்கூறுமெனவேயவனுரைத்தான்

(இ-ள்) ஆறுசாஸ்திரமும்நான்குவேதமும்இருபத்தெட்டாகமும்பதினெண்புராணமும் ஆகிய அவைகளாலேஉங்களுடையதெய்வமேதெய்வமென்று சொலவீர்களானால எஙகளதெய்வமேதெய்வமென்று யோன்சொல்லுவேன் இங்கேயென்னெதிரே சொல்லுமென்றுசொன்னான் புத்தகுருவென்றவாறு, (உரு)

போற்றுமறையந்தணர்தளபுத்தனைவெகுண்டே
தோற்றனையெனககலைஞர்சொல்லவுனைவெல்வோ
மாற்றமினியுன்னுடனுரைக்குமதுமறறோர்
சேற்றினெதிர்கலலெறிதல்செய்தவலதுண்டோ

(இ-ள்) யாவராலுந்துதிக்கப்பட்டதில்லைமூவாயிரவர்கள் இது சொன்னபுத்தகுருவைப்பார்த்து கோபித்துஉன்னைவித்துவான்கள்தோற்றாயென்றுசொல்லும்படி செயிப்போம்இனிஉன்னுடனே பேசுவது சேற்றின்மேல்கல்லெறிவதுபோ லலலாமல்வேறுண்டோவென்றார்களென்றவாறு, (உகா)

நன்றிதருவாருமொருஞாளிகுறைசெய்தா
னின்றதன்வெகுட்சியைநிறுத்தல்தடைமா
யின்றிதிபுநின்னுடனிகழ்சசியெனுஞ்சீ
ரொன்றுமிலையானவுனையொருரையில்வெல்வோம்

(இ-ள்) ஒருத்தருக்குநன்மையைச்செய்யப்பட்ட பெரியோர்களும்ஒருநாயானதுகுறைத்தால் அங்கேநின்று அதன்கோபத்தை ஆற்றுவது முறைமையாகுமென்பார்ஆதலால்இன்று இழிவினையுடையஉன்னோடு பேசுகிறதுநமக்குத்தகாதகாரியமானாலும் சிறப்பொன்றுமில்லாதவுன்னைஒருசொல்லிலேசெயிப்போமென்றார்கள்தில்லைமூவாயிரவரென்றவாறு, (உஎ)

மிக்கதிறன்மன்னவருமெய்யுணர்வினோருந்
தொக்கசபைமுன்னர்நமதாககவுரைசொன்னோர்
றகக்தெனலாமுதுதகாததிதுவென்று
லெககலகமுமமில்லையிதேகருமமாமால

(இ-ள்) மிகுந்ததிறலையுடையஅரசர்களுக்குமமெய்யுணர்வினை யுடையபெரியோர்களும்கூடியிருக்கின்றசபையிலேபதிரோமமுடை யதாகவார்த்தையைசசொன்னால இதுதக்கது இதுதகாததென் று அவர்கள்சொல்லுவார்களானால் எந்தக்கலகமுமில்லை இதுவே காரியமாகுமென்றார தில்லைமூவாயிரவுமென்றவாறு, (௨௮)

உத்தரமுரைக்கவியாதுபுலியூரார்
புத்தனைமுனிந்தனர்புடைத்தனர்களென்றே
யித்தலமுரைத்துவிடுமென்வளவன்பால்
மெய்த்தவருரைத்தெழுதுமோலையைவிடுத்தார்

(இ-ள்) உத்தரஞ்சொல்லமாட்டாமல தில்லைமூவாயிரவர்புத்த குருவைக்கோபித்தார்கள் அடித்தார்களென்று இந்தஉலகஞ்சொல லுமென்றுசோழராசாவைவரும்படி ஒருஓலையெழுதிவிட்டார்க ள் இவர்களெல்லாமென்றவாறு, (௨௯)

அந்தணர்பொருந்தவருங்கலையுணர்ந்தோர
வந்தனுகுநாளைமணிமனறுதொழவெனறே
புந்திமகிழோலைபலபோகவியனவெயயோன
மந்தரமொளித்தனனமுளைத்தனனிராவோன்

(இ-ள) பிராமணர்களுக்கும பெரியதபோதனர்களும் ஆரியக லைகளியானதில் வல்லவரும்நாளைசிதம்பரத்தைத தெரிசிக்கவ ந்துசேருமென்றுபுத்திமகிழும்படியாகிய பலவோலைகளெழுதிவி டடாரகளஅபபோது சூரியனமறைந்தான்சந்திரனுதயமானனெ ன்றவாறு. (௩௰)

வேறு.

துங்கவானென்னுமாதின்சுடர்நுதற்றிலகமென்னக்
கங்குலாமடந்தைபாரகருகவுனகொள்கண்ணாடியென்னச்
சங்கவார்குழையாரிட்டதாளவெள்ளிகவிகையென்னத்
திங்கண்மாகடவுட்டோன்றசிறந்ததுஞாலமெல்லாம்

(இ-ள்) உயர்ந்தஆகாசமாகிய மங்கையினுடைய ஒளிவிளங்கு கின்றநெற்றியிலணிந்ததிலகப்பொட்டுபோலுமஇரவாகியமங்கை யானவளபார்க்கும்அழகுபொருந்திய கண்ணாடிபோலும நெடிய சங்கைக்குழையையுடைய பரமசிவனுக்கிட்ட ஒருவெள்ளியமு த்துக்குடைபோலும் சந்திரன்றோன்ற உலகமெல்லாஞ்சிறப்புப் பெற்றதென்றவாறு. (௩௧)

இன்றுருதினமுந்தோராவிங்கிருநாளையாக்க
ளுன்றனதுயர்ச்சியின்மைகாட்டுவோமுலகிற்கென்று

நன்றிகொண்மனையிற்சென்றேயாறுசுவையார்ந்தி
யன்றிருண்மேன்மையாளருந்துயில்பயிலுங்காலை

(இ-ள்) இன்றொருபொழுதுமாத்திரம்புத்தனை இங்கிருப்பாய
யாங்கள் நாளை உனதுடையதாழ்வை உலகத்திற்குக் காட்டுவோ
மென்று நன்மையைக்கொண்ட வீட்டிற்குப்போய்அறுசுவையும்
நிறைந்தநல்ல உணவையுண்டு அன்றிராத்திரி மேன்மைபொருந்தி
யவர்களெல்லாம் நித்திரைசெய்யும்போதென்றவாறு. (௩௨)

அழகுறமன்றிலாடுமையர்கைம்புரம்புதாங்கித்
தழைசடைமுடியுமேனிசாத்தியநீறுமாகி
விழைதருவடிவங்கொண்டுவெளிப்படகனவில்வெய்யோ
னெழுவதன்முன்னரெய்தியாவர்க்குமிதுபகன்றார்

(இ-ள்) அழகுபொருந்தபொன்னம்பலத்தில் நிருத்தஞ்செய்கி
ன்றசபாநாயகரானவர் கையிற்பிரம்புகொண்டுதழைத்தசடைமு
டியும்திருநீறணிந்த திருமேனியும்உடையவராய்எல்லாரும்விரு
ம்புகின்றதிருவடிவங்கொண்டுசூரியஉதயமாகுமுன்னேவந்துகன
விலேஎல்லார்க்கும் இதுசொன்னாரென்றவாறு, (௩௩)

வருந்தலதொழிமினம்மூரெல்லையில்லைகியன்பா
விருந்தனன்வாதவூரனிவ்வுரைகேட்டபோதிற
பொருந்தியதர்க்கநூலாறபுத்தனைவெல்வானின்னே
யருந்தவமுடையநீர்போயழைத்திடுமவனையென்றார்

(இ-ள்) வருந்துவதையொழியுங்கள்நம்முடையதில்லைமாநகரத்
தினெல்லையில் திருவாதவூரனென்கிறமாணிக்கவாசகனிருக்கிறான் இந்
தச்செய்தியைக்கேட்டால்பொருந்தியதர்க்கசாஸ்திரத்தைக்கொ
ண்டுபுத்தனைவாதுசெய்துவெல்லுவான் ஆதலாலிப்பொழுதே அரிய
தவத்தையுடைய தில்லைமூவாயிரவரோகிகள்போய்அவனையழை
யுங்களென்றார் சபாநாயகரென்றவாறு. (௩௪

கண்டனர்கனவுதன்னில்விழித்தனாகனகமன்றி
லொண்டொடிபாகனன்பரிலுரைத்ததுகருத்திலாய்ந்து
கொண்டனர்மகிழ்ச்சிசெங்கைகுவித்தனர்முடியிற்கோயின்
மண்டபமிசையிலெல்லாமாந்தரும்வந்துதொக்கார்

(இ-ள்) இப்படிசொற்பனத்திலேகண்டார்கள்பின்புவிழித்தார்
கள்பொன்னம்பலத்திலே உமாதேவிபாகராகியசபாநாயகர்அன்
பிலேசொல்லியதைக்கருத்திலாராய்ந்து மகிழ்ச்சிகொண்டார்
கள்சிரசின்பேரிலே சிவந்தகைகளைக்குவித்தார்கள் கோயின்மண்
டபத்திலே எல்லாரும்வந்துசேர்ந்தார்களென்றவாறு. ௩௫

புல்லறிவுடையபுத்தன்புகன்றதற்கிரங்கிப்பின்னை
செல்லையில்கருணையான்வந்திருவ்தன்லவதனியெய்திச்

சொல்லியமொழியினாலேசோதிகொண்மூகத்தாராகி
வலவிருட்கிடைந்துவெய்யோன்வரவிரிகமலமொத்தார்

(இ-ள்)அற்பவறிவையுடைய புத்தகுருசொன்னபேச்சுக்குஇர
க்கமுற்றுப பின்பு அளவிலலாதகிருபையினாலேகடவுளானவிலே
வந்துசொல்லியசொலலினாலேமுகமலாசயுடையவராய இருளு
க்குஒதுங்கிப்பின்பு சூரியன்வரவிரிந்த தாமரைமலரையொத்தார
தில்லைமூவாயிரவரெனறவாறு, (௧௬)

தெய்விகமானமன்றிற்றிருநடம்புரியுநாதன்
றைவருநீறுஞ்செய்யசடையுநறபிரம்புமாக
மைவிரிகயகுற்காலைவந்துநமைமகிழ்ச்சியெய்த
விவ்வகைமொழிந்தாரென்றேயாவருமகனவுசொன்னார்

(இ-ள்)தெய்விகமானசபையிலேதிருநடனஞ்செய்யுஞ்சபாநாய
கர்விபூதிபூசிக்கொண்டுசிவந்தசடையுமநலலபிரமபையுமுடைய
வராகக்கரியநிறத்தையுடைய இராத்திரியில எழுந்தருளிநலலம
கிழ்ச்சியடையஇப்படிஅனுக்கிரகஞ்செய்தாரெனறுயாவருநதா
ங்கள்கண்டகனவைசசொனனார்களென்றவாறு, (௧௭)

அத்தனைமன்றுளாடுமையனைவியந்துகூறித்
தத்தமிலன்புகூர்ந்துதணித்துளம்வருத்தநீங்கி
மெய்த்தவவாதவூராமேவிடததனுக்கேவோமென்
றுத்தமனனசாலையொல்லையிற்குறுகினார்கள்

(இ-ள்)அத்தனாகியும் சிற்சபையிலே நித்தஞ்செய்கின்றஐயனு
கியும்இருக்கின்றசபாநாயகரை அதிசயித்துசசொல்லித்தங்களத
ங்களுக்குள்ளேஅன்புமிகுந்துதணித்துமனவருத்தநீங்கிமெய்த்த
வத்தையுடைய மாணிக்கவாசகர் இருக்கின்ற இடத்துக்குப்போ,
வோமென்றுஉத்தமமாகிய பர்ணசாலையிற சீக்கிரத்திறபோனார்க
ள்தில்லைமூவாயிரவரென்றவாறு, (௧௮)

கூடினர்பன்னசாலைகூரருட்குன்றையன்பா
னாடினர்நயந்துகண்டார்நளினவாசனத்திவெய்திப்
பீடினிருந்தயோகம்பெயர்ந்தனர்வியந்துமன்றி
லாடினருரைத்தவெல்லாமாங்கவர்க்கியம்பினார்கள்

(இ-ள்) அப்படியேபோனவர்கள்பர்ணசாலையிலிருக்கின்றசிறந்
தகிருபாமலையாகியமாணிக்கவாசகரை அன்பினாலே தேடிநயப்பு
டனேகண்டார்கள்அப்போது அவர்பதுமாசனத்தின் மேலிருந்த
யோகம்நீங்கினார்அதுகண்டுசபா நாயகர்கனவிளிடத்திலேவந்து
அனுக்கிரகஞ்செய்ததையெல்லாம்அவருக்குச்சொன்னார்கள்தில்
லைமூவாயிரவரென்றவாறு, (௧௯

வேறு.

அந்தமொழியன்பினர்செப்புலனிலங்குதனு மன்றிறைபணி
ந்ததுணாரவந்தவருட்ன்கடிதுசென்றுதிருமன்றனை வணங்கியரு

ள்பெற்றமயலாஞ் சிந்தையிருந்தமணிமண்டபம் தெய்தியவர்தீ
யழுகநாடிவிடாரேநந்துமெனவேயெழினிகொண்டுமறைவித்தெதி
ரிருந்தனராலங்கொள்ளணைமேல்,

(இ-ள்) அந்தத்திருவார்த்தையானது மாணிக்கவாசகர்செவியி ணிடத்திலேசேர்ந்தமாத்திரத்தில்முன்னமே கடவுள்சொல்லியி ருப்பதைநினைத்துவந்த தில்லைமூவாயிரவருடனே சீக்கிரம்போய அழகியசபாநாயகனைவணங்கிக்கிருபையைப்பெற்றுப்பௌத்தர் களிருந்தமண்டபத்திற்குப்போய் அவர்கள்தீமையுள்ளமுகத்தை ப்பார்த்தால் துன்பமுண்டாகுமென்று திரைபோட்டுக்கொண்டு ஆசனத்திலெழுந்தருளியிருந்தாரென்றவாறு, (௪௰)

மன்னுமறையந்தணர்புராணிகருங்கலைகள்வல்லவர்நல்லோ
ர்களுடனே சென்னிவளவன்கடிதுவந்துதிருமன்றனெதிர சென்
றுதொழுதங்கணலா மினனுமணிமண்டபம்தெய்தியருளன் பரை
வியந்தடிவணங்கியருகா நனைரணையின்புறமிருந்தனனவிரித்தக
லைநிறைவுகொண்டமதிபோல

(இ-ள்) நிலைபெற்றவேதப்பிராமணர்கள் பௌராணிகர் கலைஞா னமவல்லவர்கள்பெரியோர்களுடனேசோழராசாசீக்கிரத்திலவ ந்துஅழகியசபாநாயகனைத்தெரிசனம்பண்ணிக்கொண்டுஅதைவி டுபிரகாசம்பொருந்தியரத்தினமிடைந்த மண்டபத்திற்கு வந்துதிருமைமிகுந்தமாணிக்கவாசகர்திருவடியையவணங்கிஅவரு க்குப்பக்கத்திலேபூரணசந்திரன்போலஆசனத்திலிருந்தார்எ-று,

ஈழவளநாடனுமெழுந்தடிபணிந்துதிரையிட்டுறைநல்தி
றைவா வாழிமிகவாழியென நின்றபொழு தங்கவனைமன்னர்பெரு
மானுமகிழா மேழமினைவ நல்லவிலையிலவிலையிமணிக்கெனவியந்
தரு திருத்தியெவருஞ்சூழமனைவ'தங்குமுழி யங்கயவிருத்தனர்க
ள் சூழ்ந்துகரிசொல்லுமயலோர்

(இ-ள்) ஈழதேசத்துராஜனும் எழுந்துசோழராசாவைப்பணி ந்துகுறையாதவிருந்த திரைப்புறவொடுத்து அரசனேமிகவும் வாழக்கடவாயென்றுதுதித்தபோது அந்தஅரசனை அரசர்க்கரச னுகியசோழராசாவும் சந்தோஷித்துநீகொடுக்கயானை மெத்தவும் நல்லதாயினநீயொடுக்காத்தினத்திக் தவிலலையிலலையென்று அ திசயித்துபக்கத்திலிருக்கச்சொலவிஎலலாருஞ்சூழ்ந்திருக்குக் குமசபையினிடத்திலேபக்கத்திலிருந்தார்கள் ஆலோசித்துசா ட்சிசொல்பவர்களென்றவாறு. (௪௨)

தில்லைநகரந்தணர்தபோதனர்சிறந்தினிதிருந்துழிவிரிந்தசிவ
நூல்வல்லவரிழிந்தகுணபுத்தனுடன்வாதுசெயும் மன்னுசபைபாக

ணவருமேவார்தில்லைமறைதந்தவன்முகுந்தன்முனிவோரெழுவர்
சூழுமிரு நான்குதிசைமேலெல்லையிலிருப்பவருத் திரர்களவிஞ்
சையர் இராப்பகலிலங்குகதிரோர்,

(இ-ள்.) தில்லைமூவாயிரவர்களும் முனிவர்களும் சிறப்பாகவிருந்தமாத்திரத்திலே மாணிக்கவாசகர் இழிவுபெற்ற குணத்தையுடையபுத்தனுடனேவாதுசெய்யும்நிலைபெற்றசபையைக்காணவருபவர்கள்யாவரென்றால்பிரமதேவன்மகாவிஷ்ணுசப்தமுனிவர்கள்அஷ்டதிக்குப்பாலர்கள் உருத்திரர்கள் விஞ்ஞையர்கள் இரவும் பகலும்விளங்குகிற சந்திரசூரியர்களென்பவாறு, (௬௩.)

வேறு,

தன்பெருந்தானைசூழவிருந்தகன்பொன்னிநாடன்
றென்பெழிற்றுறைசூழ்நாடன்றிருவடி வணங்கிநின்று
நின்பரசைவஞானநிலைமையை நிறுத்தல்வினை
யென்பரமபுத்தாதமமையிங்குயிர்செகுப்பதென்றான்,

(இ-ள்.) தன்னுடையசேனைகளெல்லாஞ்சூழும்படியிருந்தசோழன் மாணிக்கவாசகர் திருவடிகளைவணங்கிநின்று சுவாமிஉமறுடையபரமசிவஞானநிலைமையையுலகத்திலே நிறுத்துவதுஎன்னபாரம் புத்தனைஉயிர்போகுவதென்றானென்றவாறு (௬௪)

வளவனிவ்வகையிற்கூறவந்தபொய்புத்தரெல்லா
முளமயர்வெய்தவாதவூரருண்மகிழ்ச்சியெய்திக்
களவுறைபகர்வாய்வந்தகாரணமுரைநீயெனவக [ன்
கிளர்செவிநுழைவேல்போலக் கேட்டவனிதனைச்சொல்வா

(இ-ள்) இப்படிசோழராசன் சொல்லிவந்திருக்கின்ற அப்தம் பேசும் புத்தர்களெல்லாம் மனவருத்தமடையமாணிக்கவாசகர்மகிழ்ச்சியடைந்துபுத்தனைப்பார்த்துத்திருட்டுவார்த்தைசொல்லப்பட்டவனேநீவந்த காரணத்தைச்சொல்லென்றுகேட்கவேலாயுதஞ் செவியிலேநுழைக்துபோல்அவ்வுரைக்கேட்ட புத்தனானவன இதைச்சொல்வானென்றவாறு (௬௫)

மன்னுமெங்கடவுளல்லான்மற்றிலைகடவுளென்றே
யிந்நெடும்பதியிலெய்தியம்பியிங்கெவருங்காணப்
பொன்னினம்பலத்தேயெங்கள்புத்தனைவைத்தல்வேண்டி
யென்னல்வந்திருந்தேனிங்குவேறிலைநினைத்ததென்றான்.

(இ-ள்) நிலைபெற்ற எங்கள்தெய்வமல்லாமல் வேறேதெய்வமில்லையென்று இந்தஊரில்வந்துசொல்லி இங்கேயெல்லாருங்காணப் பொன்னம்பலத்திலே எங்கள்புத்தனைவைக்கவிரும்பியேநற்றேவந்திருக்கிறேன் இதல்லாமல்யானினைத்தது வேறொன்றுமில்லையென்றான்புத்தகுருவென்றவாறு. (௬௬)

என்றலும்வாதவூரரெம்மிறைவர்புன்முறுவலெய்தி
மூன்றவமொன்று நீலலாய்முயலிபவாவதுண்டோ
நன்றதுநிற்கவுன்றனறபெருங்கடவுடானும
சென்றவனடியிற்சேருஞ்செய்தியுங்கூறுகென்றார்

(இ-ள்) இப்படியென்று சொல்லியவளவில் மாணிக்கவாசகரா புன்னகைகொண்டு முனபிறப்பிலேதவமொன்றுமில்லாதவனே முயல்யானையாவதுண்டோ நல்லது அதுநிற்க உன்னுடைய நல்லபெரியதெய்வமும் ஆத்மாசகாள்வனடியிற்சேருஞ்செயதியுஞ்சொல்லென்றுகேட்டகரென்வாறு. (சஎ)

அண்ணலாருரைத்தபோதிலங்கவன்வெகுட்சியெய்திக்
கண்ணிலாதவர்கருவெய்யோன்கதிரொளிகாட்டலாமோ
நண்ணலாவெங்களுதனற்புகழுரைக்கினன்றே
வெண்ணிலாயிரங்கள்வேண்டுமென்றுபினிதுபுகன்றான்

(இ-ள்)இப்படிமாணிக்கவாசகர் சொன்னவ்ளவில அந்தபபுத்தகுருவானவன் கோபமடைந்துகண்ணில்லாதவனுக்குச் சூரியனுணதகிரணொளியைக காட்டககூடுமோபொருந்துவதறகரியதாகிய எங்கள்புததேவனுடைய நல்லகீர்த்தியைச சொல்லவேண்டுமானல் நல்லநாவானவைகள் பல்லாயிரம்வேண்டுமென்று பின்புஇதுசொன்னுன், எ-று, (சஅ)

அறந்திகழ்பிடகநன்னூலோதியன்புடையனாகிப்
பிறங்குபலயோனிதோறும்பிறந்துயர்க்குறுதிசெய்து
மறந்தருகோறலாதிநாலவைகபொழிந்துமேன்மை
சிறந்துளபோதிநீழற்சேர்வனெம்மிறைவனுவான்

(இ-ள்) தருமம்விளங்குகின்ற நல்லபிடகாகமஞ்சொல்லி அன்பையுடையவனாய்ப் பிரகாசிக்கின்ற அனேகயோனிகள்தோறும பிறந்து ஆத்மகோடிகளுக்குஉறுதிசெயது பொல்லாங்கைத் தருகின்றகொலைகளவுபொய் கள்ளுண்ணல்என்னும்நாலுகுற்றங்களையும் நீக்கிமேன்மைசிறந்திருக்கின்ற அரசமரநிழலிலேசேர்ந்திருப்பானெமதுகடவுளென்றவாறு (சகூ)

மேவியகருவிற்சேருமுருவம்வேதனைகுறிப்புப்
பாவனையுடனவிஞ்ஞானம்பஞ்சகந்தங்கள்கூடி
யோவிலபல்லுணர்வுண்டாகியொழிவதுபிறவித்துன்ப
மாவதுபோன்றககேடாயழிவதுமுத்தியென்றான்

(இ-ள்)பொருந்திய கருப்பத்திற்சேருகின்ற உருவம்வேதனை குறிப்புப்பாவனைவிஞ்ஞானம்ஆகியபஞ்சகந்தங்களுங்கூடிஒழிவில்லாதஅனேகஅறிவுண்டாய் நீங்குவதுபிறவித்துன்பமாம் அதுநீங்கக்கேடாயழிவது மோக்ஷமென்றுனென்றவாறு, (ருய)

வாதவூரண்ணலாரும்வன்புனற்பொன்னிநாட்டன்
றீதிலாமுகத்திறுடுசிறந்தருட்பார்வைநல்கிப்

பேதையாய்மதிமால்கொண்டுபித்துழைக்கும்புத்தற்
கோதியாமின்றுசொல்வதென்றுபின்னிதுபுகன்றார்

(இ-ள்) அப்போதுமாணிக்கவாசகருக்குநீர்வளமிகுந்தகாவேரிசூழ்ந்தநாடாகிய சோழராசாவினது களங்கமற்ற முகத்தைப்பார்த்துக்கிருபாநோக்கஞ்செய்து அறியாமையினால் மயக்கங்கொண்டுபேயித்தியவார்த்தைசொல்லும் புத்தனுக்கு இன்றுயாமென்சொல்வதென்றுபின்பு இது சொன்னாரென்றவாறு. (௫௧)

கருமமுண்டென்றுநன்னூல்சாற்றினன்றலைவனென்னை
மருவியவுணர்வுண்டாகிமறைந்திடுங்கணத்திலென்னை
யொருகுடனுனைத்தேடிப்புகலுமாலுணர்வுபோனால்
இருடருமின்னூல்சொல்வதெப்படிகூறல்வேண்டும்

(இ-ள்) கருமமுண்டென்று புத்தனுனைவன்பிடகநூல்சொன்னானென்றாய பொருந்திய அறிவுதோன்றி ஒருகணநேரத்தில்மறைந்துபோமென்றாய் சொல்லும்பொருளும் நீதேடிச்சொல்லுமுனமே உணர்வுகெட்டால் அந்நூலதனைத்தருகின்ற உன்னூல்சொல்வது எப்படிசொல்லென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௨)

ஆகலாலறநூலென்பதுனக்கிலையுயிர்கட்காயுப்
பேதமாம்யோனிதோறும்பிறந்தனனிறைவனென்றாய்
தீதுசேரொருவாமாலைத்திகைக்கவந்தவர்கட்காரும்
போதமால்கொள்ளிலம்பாலபோவதங்குள்ளதாமோ,

(இ-ள்) ஆகையினாலே தருமசாத்திரமென்பது உனக்கில்லை ஆத்மாக்களுக்காக அனேகமயோனிகள்தோறும் உன்கடவுள் போயப்பிறந்தானென்றாய் குற்றம்பொருந்திய ஒருவாமயக்கத்தைத்தீர்க்கவந்தவர்களும் அதிமயக்கத்தைக்கொண்டால அந்தமயக்கம் போகுமோவென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௩)

கொல்வதுகருதானெங்கள்கோவெனவுரைத்தாய்முன்னம்
பல்வகையோனிதோறும்பார்மிசைபிறக்குநாளில
வெல்புலிநரியுமாகிலெம்பசியுறுமற்றிய
புல்லொடுதழையோதின்பானின்பெருமபோதநாதன்

(இ-ள்) எங்கள்கடவுள்கொல்லநினையானென்றுசொன்னாய் முன்னே அனேகயோனிகள்தோறும்பூமியின்மேற்பிறக்குங்காலத்தில் வெல்லுகின்ற புலிகளாயும்நரிகளாயும்பிறக்கும்போது வெவ்வியபசிவந்தால்பில்லுங் கழைபுந்தின்பானோ அரசமர்நிழலிலிருக்கும் உன்னுடையகடவுளென்றவாறு, (௫௪)

கரவெனுமூன்றாவிற்கந்தமைந்துடனேகூடி
யருவம்மழியுமென்றுமுன்னிறாகக்குருவமெங்கே
விரவியயோனிதோறுமுயிர்க்கருள்செய்யவேண்டி
மருவொருவடிவங்கொண்டானென்பதெஞ்ஞமதியிலாதாய்
என

# புத்தனை நீலி வென்ற சருக்கம்

(இ-ள்) மெய்யாகிய உன்னாகமத்தில் ஐந்துகந்தங்களுடனே கூட்டத்தே க்ஷணமழியுமென்று சொன்னாய் அப்போது உன் கடவுளுக்கு உருவெங்கே அனேகயோனிகளில் ஆத்துமாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு ஒருவடிவங்கொண்டு வந்தானென்பதென்ன புத்தியில்லாதவனேயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு, (௫௫)

காரணமாகக் கெடுங்காரியவுருவின்றேலுன்
சீரணிபோதிமேற்சேரிறைவனுக்குருவமில்லை
பூரணஞானமில்லாய பொன்றுகைமுத்தியென்னும்
பேருணர்வில்லாயுன்றன் பிடகநூல்யாவர்சொன்னார்

(இ-ள்) காரணமாகிய பூதமாவோடேகூடுகின்ற காரியமாகிய வடிவில்லாதிருந்தால் உன்னுடைய சிறப்புப்பெற்ற அரசமரத்தின்கீழிலேயிருக்குந் தெய்வத்துக்கு வடிவில்லை நிறைந்த அறிவில்லாதவனே யஞ்சக்கந்தமும் கெடுவது முத்தியென்று சொல்லும் பேரறிவில்லாத உன்பிடகாகமத்தை யார்சொன்னாரென்றவாறு, (௫௬)

இருபதிற்றொருவராக வெண்ணின்மூன்புத்தரெல்லாம்
வருவதுசிறந்ததாயார் வயிற்றினைப்பீறியென்னை
பரிவொடுசுமந்துபெற்றாருயிர்கெடப்பழுதுசெய்தே
யருநரகத்தில்வீழ்மவாகவோர்கடவுளாவார்

(இ-ள்) இருபத்தொருவரெனவெண்ணப்பட்ட உன்னுடைய புத்தர்களெல்லாம் பிறப்பது சிறப்புப்பெற்றதாயார் வயிற்றைப் பீறியென்று சொன்னாய் அன்புடனே சுமந்து பெற்றதாய்மாருடைய உயிர்நாசத்தையுடைய குற்றஞ்செய்து அரியநரகத்தில் வீழ்வாராகவோர் தெய்வமாவாரகளென்றவாறு, (௫௭)

சாவுடைப்பூதநான்கின் கலப்பினிற்பேதமல்லா
தாருயிருக்குலாவேறில்லையென்னைப்பின்பொய்ம்மைநூலி
னிரவினிற்றுயிலுங்காலுன்முகத்திடையேறிப்போகு
மரவினைப்பூதபேதமறிந்ததோவறிவிலாதாய்

(இ-ள்) சாவினையுடைய நான்குபூதத்தினுடைய கலப்பிலேபேதமேயல்லாமல் தோன்றியவடிவுக்கு உயிரொன்றுவேறில்லையென்பாய் நீசொல்லிய புத்தசாஸ்திரத்தில் இராத்திரியிலே நித்திரைசெய்யும்போது உன்முகத்திலேயேறிப்போகும் சர்ப்பத்தை இந்தப்பூதங்களறிந்ததோ வறிவில்லாதவனேயென்றவாறு, (௫௮)

உருவமுமுயிருங்கூடுமுணர்வுனக்கில்லையிந்த
வுருவமிங்கிறந்தகாலையுயிர்கடிதகன்றுபோகு
முருவமுமுயிருங்கூடிப்பிறக்குமேலதனாலன்ற
லுருவமுமுயிரும்வேறுமென்றுரையுன்றன்வாயால்

(இ-ள்) உருவும் உயிரும் ஒன்றாய்க்கூடும் அறிவு உனக்கில்லையென்றாய் இந்தவுருவம் நீங்கினகாலத்தில் உயிரும் சீக்கிரத்தில் நீங்கிப்

போகும்உருவமும் உயிரும்ஒன்றாய்க்கூடிப்பிறக்குமானால் அதனு ல்உன்னுடைய உருவும்உயிருமவேறாகுமெனறுஉன்வாயாற்சொ ல்வாயென்றார்மாணிக்கவாசகரென்றவாறு, (௫௯)

வானமுமில்லைவானத்தோசையுமில்லைவான
மானதில்வழக்கதாமென்றறைவையுன்றனூலிற்
காணிலம்புனற்கான்றுங்கலப்பதற்கிடமதாகு
மேனவிலோசைவானினிகழ்ந்துளசெய்தியென்பாய்

(இ-ள்) ஆகாசமுமில்லை அவ்விடத்தே சத்தமுமில்லை அந்த ஆகாசம்இல்வழக்காமென்று சொன்னாய் உன்னாகமத்தில் பிருதுவி அப்புதேயுவாயு நான்குபூதமும்இருப்பதற்கு இடம்ஆகாசமல்ல வோ நீசொல்லப்பட்ட சொலவின்னோசை ஆகாசத்திலுண்டாகிய தென்றுசொல்லுவாயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு, (௬௰)

இடமிருந்திசைதானென்பதில்வழக்கென்னுநீயே
வடநெடுந்திசையிற்போதிமாமெனவணக்கஞ்செய்வை
புடவியிலறிவிலாரும்பித்தரும்பொய்ம்மையோரு
முடனிகழவையிற்கூறிலொக்குநீயுரைப்பவெல்லாம்

(இ-ள்) இடமிருந்ததிசையென்றுசொல்வது இல்வழக்கென்று சொல்வாய் இப்படிசொல்லும் நீயேநெடியவடதிசையிலே அரச மரமிருக்கின்றதென்று வணக்கஞ்செய்வாய் பூமியிலே அறிவில் லாதவர்களும்பயித்தியங்கொண்டவர்களும் அபத்தம்பேசுகிறவர் களும்இருக்கிறசபையிலே உன்சொலவெல்லாம்பொருந்துமென் றாமாணிக்கவாசகரென்றவாறு, (௬௧)

மரமுயிரல்லவென்பையைம்பூதமான
வுருவினர்போலநன்னீருணவினாற்கிளைகொண்டோங்குஞ்
சருகெழுமுணவின்றிலாதலாற்சனனபேதத்
தருவினையருத்தவெங்கோனுயிர்களமைத்ததென்பாய்

(இ-ள்) மரங்கள்உயிரல்லவென்று சொல்லுவாய்நீபெற்றபா ஞ்சபூதத்திலுண்டாகிய தேகத்தையுடையவர்கள்போல நல்ல நீரைஉண்கையினாலே இலைகள்தளிர்த்து வளர்ந்திருக்கும் அஃதில லாவிட்டால்சருகாகும் ஆகையினாலே சென்னபேதத்தில கன்மங் களைப்புசிப்பிக்கஎமதுகடவுள் உயிர்களுக்கு அமைத்தவடிவாகு மென்றுசொல்வாயென்றவாறு, (௬௨

வன்பெரும்பழுதுகோறன்மண்மிசைத்தானேசெத்த
புன்புலைதின்னன்றென்றுரைப்பையின்பொய்ம்மைநூலிற்
றின்னையென்றுனக்குநல்லூனுடலுயிர்செகுத்தேயூட்டி
யுன்பசிதணிப்பார்பாவமெய்துவதுனக்குநன்றோ

(இ-ள்) ஒருஉயிரைக்கொல்லுவதுபழுதுபூமியிலேதானேசெத் தமாமிசத்தைத்தின்பது நன்றென்றுசொல்வாய்உன்பொய்யாகம

த்திலேயின்றென்றுஉனக்குநல்லஉயிரைக்கொன்றுமாமிசத்தை உண்பித்துஉன்பசியைத்தணியப்பார்க்குப்பாபமடைவதுஉனக்குந ல்லதோவென்றவாறு, (௯௩)

காரணமிருக்கவென்றுங்காரியங்கெடுதல்வீடென்
றாரணம்பரவுமெங்கோனாகமம்புகலவாசொலவா
மோரணங்குமிருந்தேசோபபோனறுதன்முத்தியென்னும்
பேரணங்குறுமேயிருமேயிருப்பதுசொலவாய

(இ-ள்) காரணமிருக்கப்போதும்காரியங்கெடுவதேர்மோக்ஷ மென்றுவேதங்களாலவுங்கிறைநாங்களுடையகோனாகியசிவனுடை ய ஆகமங்களுஞ்சொல்லப்பட்டவாகளை சொல்லுவார்களபோலவருத் தமுமஉயிருக்கூடக்கெடுவது முத்தியென்கின்ற பெரிய வருத்தங் கொண்டவே யிருமையறியாமற்சொல்வாயென்றவாறு, (௯௪)

அழிந்திடினுங்கூக்கமுத்தியென்றுரைத்தாயெய்து
மழிந்திடினமுத்திபெறுமாரொன்வினவும்போதி
லழிவதிமையநிலுண்டாமுணாவெனவுரைகிலேந்து
மழிந்தனவிலேயாமுத்தியாவதுமில்லையென்றார்

(இ-ள்) பஞ்சஸ்கந்தமும் அழிந்தால முத்தியென்று சொன் னாய பஞ்சஸ்கந்தமும் அழிந்தால முத்திபெறுபவர்யாவரென்று வி னவும்போதில அந்த அருசிலுமஉணடான அறிவென்றுசொன்னா ல்அப்போதுபஞ்சஸ்கந்தமும அழிபவுமில்லை மோட்சமுமில்லையா மென்றுமாணிக்கவாசகரென்றவாறு, (௯௫)

பொங்குபுகழமங்கியுளபுத்தனுமவெகுண்டே
யெங்கடவுளதுபெறுமுத்தியிலையென்றீர
நுங்கடவுளியாதுமது முத்திபெதுவென்னத்
தங்குசிவஞானமுணாவைசயமிதுசொலவார

(இ-ள்) மிகுந்தகீர்த்தியானது மங்கியிருக்கபுத்தனுங்கோபித் துஎங்களுக்குத்தெய்வமுமில்லைமோட்சமுமில்லையென்றுசொன் னீர்உம்முடைய தெய்வமாவதெது நீங்களடையுமமோட்சமெது வென்று கேட்கசிவஞானத்தையறிந்தசைவராகியமாணிக்கவா சகர்இதுசொல்வாரென்றவாறு, (௯௬)

ஆலமணிநீழலிலிருந்தறமுரைக்குங்
கோலமதுகண்டுபலர்குமிட்டடிப்பான்
மேலணியுநீறனுமைகூறனருண்மேவுஞ்
சீலனவன்பெருமைசெப்பவெளிதாமோ

(இ-ள்) அழகியகல்லாலின்நிழலிலிருந்து தருமஞ்சொல்லுகின் றவடிவைக்கண்டுஅனேகம்பேர்தெரிசிக்க நிருத்தஞ்செய்வான்வி பூதிதரித்ததிருமேனியையுடையவன்உமாதேவியையொருபாகத்

திலுடையவன் கிருபையையுடையவன் இப்படிப்பட்டகடவுளது
பெருமைசொல்வதற்குளரிதோவென்றவாறு, (௬௭)

தில்லைமணிமன்றிலுறைதிங்களணியெங்கோ
னெல்லையுளதோமொழியுமென்றநளபுரிந்தே
சொல்லுமளவிற்பலகொடுத்துமுயலாதே
நிலலுமிதுகூறுமெனநீசனிதுரைத்தானே,

(இ-ள்) தில்லைமாநகரில் அழகிய பொன்னம்பலத்திலிருக்கின்ற சந்திரனையணிந்த எமதுகடவுளானவர் ஒருமுடிவு உண்டானவரோ சொல்லுமளவில்பலபேசுகள சொல்லமுயலவேண்டுவதில்லை நிலலும நான்கேட்டதைச்சொல்லுமெனறு நீசனுகியபுத்தனிதுசொன்னனென்றவாறு, (௬௮)

முன்னர்வடநீழலிலிருந்தறமொழிக்கா
னென்னிறைவனென்னுமுனையெனனெதிருரைத்தீர்
மன்னுசெபமாலைகொடிருக்குமதுமறறோ
ருன்னரியநறகடவுளுண்டெனநினைந்தோ,

(இ-ள்) முன்னேகல்லாலின்கீழிருந்து தருமஞ்சொன்னன் எங்களுடைய கடவுளென்று என்னெதிரே சொன்னீர் கையிலே நிலைபெறறசெபமாலையைக்கொண்டிருப்பதுவேறொருநினைத்தற்கரிய நல்லதெய்வமுண்டென்று நினைந்தோவெனறவாறு, (௬௯)

மல்லுலகத்தவர்வணங்கிடநடிப்பன்
றில்லையிறையென்னவுரைசெப்பினிர்முனிபபோ
நல்லவிவினேர்கள்சிலர்நாடுமவருண்டோ
வல்லதுதமிச்சைதனிலாடுமவருண்டோ,

(இ-ள்) வளம்பொருந்திய உலகத்தார்வணங்கும்படிக்குச்சிதம்பரத்திலே நிருத்தஞ்செய்வான் எமதுகடவுளென்று சொன்னீர் நினைந்துபோகப்பட்டநல்லவினையுடைய சிலர்பார்க்கஆடுவதல்லது தம்மிச்சையிலேஆடுவாருமுண்டோவெனறான்புத்தகுரு,

வையமுழுதுய்யமணிமன்றினுணடிப்போன்
மெய்யணியுநீறனெனமென்மைகொடுரைத்தீர்
செய்யவொளிதங்குதிருமேனிகளினீறே
துய்யதெனவோவுமதுதொல்லிறைபுனைந்தான்

(இ-ள்) உலகமெல்லாம்பிழைக்கஅழகியபொன்னம்பலத்திலே நிருத்தஞ்செய்யும் எமதுகடவுள்திருமேனியிலேவிபூதிதரித்திருக்கின்றானென்று மேன்மைகொண்டுசொன்னீர் சிவந்தபிரகாசந்தங்கியதிருமேனியிலேவிபூதிபரிசுத்தமானதென்றோஉமதுகடவுள் தரித்தானென்றான் புத்தகுருவென்றவாறு. (௭௧)

மங்கையொருபங்கனெனவண்மைகொடுரைத்தீர்
பங்குபடுபெண்வடிவுபார்மிசையிலுண்டோ

வங்கமொருபாதிம்படமதிலுருவாகு
லுங்களிறைநீர்துறவிலுற்றதவமெனனே,

(இ-ள்) உமாதேவியையொருபாகத்திலேயுடையவனென்றுபெ
ண்வடிவாயிருப்பதுபூமியிலேயுண்டோஅப்படியாகியதேகமபெண்
ணுருவாயுமது கடவுளிருந்தால்நீர்துறவிலிருக்குந்தவமென்னெ
ன்றவாறு, (எ௨)

என்றமொழிந்தபிணிகழ்ச்சிநகைசெய்தே
மன்றனடியார்கள்பெருவாழ்வுபெறவந்தார்
நன்றியுபதேசமிதுநற்றவமிலாதா
யுன்றனெதிர்சொலவதலவென்றிதுரைசெய்வார்,

(இ-ள்) இப்படியென்று அந்தப்புத்தகுருசொன்னதற்கு இகழ்ந்து
நகைசெய்து எமதுகடவுளுடைய அடியார்கள்பெரியவாழ்வைப்
பெறவந்தவர்கள் நல்லஉபதேசமாகிய இதனைநல்லதவமொன்றி
ல்லாத உன்னெதிரேசொல்லுவதல்லவென்று இதுசொல்வார்மாணி
க்கவாசகரென்றவாறு, (எ௩)

ஓங்குசெபமாலைகொடிருக்கவுலகெல்லா
மீங்குயிர்தவங்கள்செயவென்பதெனவென்னாய்
தாங்கியபடைத்தொழில்கள்சார்பொடுபழக்கம
பாங்குளமாணிக்கர்கரபத்திரமதாகும்,

(இ-ள்) உயர்ந்தசெபமாலைவகையைக் கையிலேவைத்திருப்பது உ
லகத்தாரெல்லாம் இங்கேஉயர்ந்ததவங்கள்செயதற்கென்றறிவி
யாய்தாங்கப்பெற்றஆயுதத்தொழில்களைசார்புடனே பழக்குகி
ன்றபக்குவமுமாணிக்கவாசகரென்றவாறு. (எ௪)

ஈட்டியதவப்பயனிலாதவர்கள்போலு
நாட்டமுடையாரிர்நடித்திடுவனென்றாய்
காட்டயனலபோலுடல்கலந்துயிரையெல்லா
மாட்டுமொருநட்டுவனெம்மண்ணலென்வென்றாய்,

(இ-ள்) தவப்பயனைச் சம்பாதியாதவர்களைப்போல் ஊனக்கண்
ணையுடையவராகிய உலகத்தார்காணஎதிரேகூத்தாடுவானென்று
ய்விறகிலேயிருக்குந்தீயைப்போலத் தேகத்திலேகலந்துஉயிரை
யெல்லாம்ஆட்டுவிக்குமொருநட்டுவன் எமதுகடவுளென்று எண்
ணிக்கொள்வாயென்றார்மாணிக்கவாசகரென்றவாறு, (எ௫)

நீற்றினையணிந்ததுவெனின்னினைவதென்றே
சாற்றினையுயிர்க்கிடர்தணிப்பதெனவென்றுய
தோற்றியுளதம்புதல்வர்துன்பமுறுமக்நோய
பாற்றும்வகையன்னையாகுந்தியமருந்தாம்,

(இ-ள்) உம்முடையகடவுள்விபூதியையணிந்ததுஎன்னவென்று
கேட்டாய் அதுஆத்மாக்களுக்குத் துன்பத்தைத் தணிப்பதென்

றெண்ணிக்கொள்வாய்பிறந்திருக்கின்றதம்முடையபிள்ளைகளை
ந்தநோவைநீக்கும்படி தாயமாராசப்பிட்டமருந்தாகுமென்றார்மா
ணிக்கவாசகரென்றவாறு. (௭௬)

புல்லறிவுகொண்டுபலபொத்துவமொழிபுத்தா
நில்லவனலாலொருவர்நீயறிவதுண்டோ
நலத்திருநீறறிவுளனாகுமிறைதானே
சொல்லுமதலாலொருவர்சொல்லவெளிதாமோ.

(இ-ள்) புல்லறிவினைக்கொண்டு அனேகம்வீண்வார்த்தைகள்பேசுகின்ற புத்தனேநிற்பாய அவனையல்லாமலொருவர்நீறறைத்தறியப்படுவதுண்டோ நல்ல திருநீறறிவுள்ளாசமவேதந்தசொல்லுவதல்லாமல மற்றொருவரால் சொல்லத்தகுமோவென்றவாறு, (௭௭)

பாகமதிலுத்தமியைவைத்தல்பழுதென்றாய்
போகமுலகுக்கருள்புரிதற்குளவெனறே
மாகமுகிலேர்தருநன்மங்கையொடிருந்தான்
யோகமுயிர்கட்கருளயோகவுருவானான்,

(இ-ள்) ஒருபாகத்திலே உமாதேவியைவைப்பது குற்றமென்று சொன்னாய உலகத்தாருக்குப்போகத்தைத்தரல்வேணுமென்று நினைத்து ஆகாசத்திலேசஞ்சரிக்கின்ற மேகத்தைப்போலக்கூந்தலையுடைய பார்வதியையொருபாகங்கொண்டிருந்தார் அல்லாமலும் உயிர்கட்கு யோகத்தைக்கொடுக்கும் பொருட்டு யோகவுருவங்கொண்டிருந்தார் எமதுகடவுளென்றவாறு, (௭௮)

அந்தகர்முற்றதடியன்றியறியாபோ
லிந்தமொழிகற்றனையினியறிதிதோராய்
மைந்துபுனைசந்தவிடையான்மலரின்மன்னும்
கந்தமெனநின்றநிலைகண்டிலைகணில்லாய்

(இ-ள்) குருடர்கையிலிருக்கின்ற தடியையல்லாமல்வேறொன்றுமறியாதவிதம்போல இந்தப்பேசுமாத்திரங்கற்றாயல்லாமல வேறொன்றுமறியமாட்டாய வலிமைபெற்றஅழகியஇடபவாகனத்தையுடையபரமசிவன் பூவிலிருக்குமமணம்போல ஆத்மாக்களிடத்தில்கலந்து நின்றநிலைமையைப்பார்த்தாயில்லை கண்ணில்லாதவனேயென்றார்மாணிக்கவாசகரென்றவாறு, (௭௯)

ஆதிசிவயோகிமிகுபோகியுருவர்க்குஞ்
சோதிவெகுரூபசகளாதியருவிலலா
நீதிமனுமன்றனினின்றநிலையல்லால்
யாதுமுடியாதுபதமயாரறிவரென்றார்

(இ-ள்) ஆதியாகியுஞ்சிவயோகியாகியும்மிகுந்தபோகியாகியும் அரூபியாகியும்சோதியாகியும் வெகுரூபியாகியும் இன்பக்கடலாகியும்இருக்கின்றகடவுள் தன்மயில்லாதநீதிநிறைந்தபொற்சபை

# ௩௪ புத்தரைவாதில்வென்றசருக்கம்

யிலே யின்றநிலையையல்லாமல எதிராகளதுபாதம்-யார் அவரை டியிவாரகளெனறவாறு, (௮௰)

மைந்தர்மடவாரதமதுவாசஙிறைவிநீயே
யிந்தவனைக்கேட பமமொழியியம்புவதெனென்றே
யாகூறிலவாஙபவருஙகலைகளுவலலாா
மூநதுகலைமாமினை முனிநெறிமொழிந்தார்.

(இ-ள்) அளவறறகலைகளினவலலவராகியமாணிககவாசகர்மை ந்தாகள மஙகையாகள ஆகிய இவாகள வாகஙிலிருக்கிறசரஸவ திநீயேபேசுபவளாாகஙகபேசுவதெனனெனறு ஆகியாகியகலைவா ணியைக கேட்டுதது இதுசொனனாரெனறவாறு. (௮௧)

வேறு,

நாககசநானமறைசொலலு நீயிவைசொல்வதெனகலைமாத
ருககனவேளவிபிலுனறனுசிதடிநகஙினறுமறபபதே [ராய
மூககணனருமிலைமென ழிமூகாநாவையகனறுநீ
நககநாதிருவகளையெனநாமநதையுமநுசினனள

(இ-ள்) நானகுவேதஙகளையுஞசொலலிய நீதானேயிக்கபொ யமையைசசொலலவேணடியதெனனசரஸவதிதககன்யாகததிலுன மூககைபறுததமைகமறநதுவிட்லாமா திரிகேதகிரததைதயுடையப ரமசிவனது அருளிலலைமபனறுசொலலுமமூவருடையநாவைவி டடு நீசிவனுடைய ஆககினைபபடிபபோவெனறுசொலலச சரஸ் வதியுமபபநதாளெனறவாறு (௮௨)

அஞசிவஞசகாநாவினுனறுமகனறபினபவாகூமெலா
நஞசருககினாபோலொடுஙகிநடுஙகிமூககாசளாயினு
நெஞசகொநதுபின்மநாடவினறநிநஞசிவஞானநா
லெஞசவினயியசெலவாபாதமிறைஞசிபினியிதுகூறினுன

(இ-ள்) சரஸ்வதியகநது வஞசகருடையநாவினினறுமநீஙகி னபினபு அவாகளெலலாம விஷஞசாபபிடடவாகள போலஒடுங கிநடுஙகிஊமைகளாஞாகள அதுகணடுமனநொநதாஈழதேசதது ராசன் சிவஞானநூலகளிற குறைவிலலாத மாணிககவாசகாபா தததை வணஙகினாறு இதுசொனனனெனறவாறு .(௮௩)

சொலலவலலவாமூகையாயினா செபலவிலாவொருமூகை யாம், வலவியென்புதல்வுககுமூகைமறைநதுகலலுறைகூடினு,ன ல்லதொணடனுமகருநாவெனனாயனுாவடனளினீ,யொலலைபிங கழையெனனவந்த வனுணமைசோவைநணணினள்

(இ-ள) பேசத்தககவர்களுமெயாயினர்கள் பேசவில்லாதஊ மையாகிய என்புத்திரிக்குஊமைநீஙகிகல்லவார்த்தைபேசவந்தா ல் நானுமக்குநல்லஅடியுநுவேனென்றுசொல்லமாணிக்கவாசகர்

ழைத்துக்கொண்டு வாவென்றுசொல்லஅவனும்உண்மைப்பொரு ந்தியசபைக்கு வந்தானென்றவாறு. (௮௪)

கண்ணுயங்குழனின்றகன்னியைநனமையாலருநாடியே
கண்ணினின்னருள்செய்துபின்னரழைத்துமுன்னிருத்தியே
புண்ணுடுங்கியிருந்தபுத்தனுரைத்ததர்க்கமவைக்கெலாந்
தண்ணறுங்குழல்வல்விநல்லுரைசாற்றுகென்றுவிளம்பினார்

(இ-ள்) சபையிலேவந்துநின்ற கன்னிகையைமாணிக்கவாசகர் பார்த்துகிருபாநோக்கஞ்செய்து பின்புஅழைத்து எதிரிலிருக்க வைத்து உள்ளம்நொந்து அங்கிருந்தபுத்தன்சொல்லியதர்க்கத்துக் கெல்லாம் குளிர்ந்தவாசனைபொருந்திய கூந்தலையுடைய பெண்ணே நீயுத்தரஞ் சொல்லென்றாரென்றவாறு, (௮௫)

பற்றுநன்குணராதபுத்தர்பகர்ந்ததர்க்கமவைக்கெலாங்
கற்றறிந்தவர்போலமன்னியகன்னிமாறுரைகூறினாள்
மற்றுமங்கையர்சாழலாம்விளையாட்டலாகமகிழ்ச்சியா
லுற்றதன்பொருடனைவாசகமாகவுண்மையரோதினார்

(இ-ள்) பத்தியைநன்றாயறியாத புத்தரானவர்கள்சொல்லியத ர்க்கவார்த்தைக்கெல்லாம படித்தறிந்தவர்கள்போல இந்தப்பெ ண்ணானவ ளுத்தரஞ்சொன்னாள் அதைமங்கையர்செய்யுந் திருச் சாழல்விளையாட்டாக மகிழ்ச்சியினாலே அந்தப்பொருளையெடுத் தும்பாட்டலாகச்சொன்னார்மாணிக்கவாசகரென்றவாறு, (௮௬)

ஈழமன்னனுஞ்செழுத்துமியம்பிநீறுபுனைந்துமின்
றாழநின்றடிமைத்திறந்தவறாததொண்டினனாயினான்
சோழனும்புலியூரின்மன்னியதொன்மையாளருமம்பலம்
வாழ்கவென்றுதுதித்துநின்றெழில்வாதவூரனையேத்தினார்

(இ-ள்) ஈழராசனும்அஞ்செழுத்துஞ்சொல்லி விபூதிதரித்தபி ன்புதாழநின்று அடிமைத்திறத்திலேதவறில்லாதஅடியனாயினான் சோழராசனும் தில்லைமூவாயிரவரும்அம்பலம்வாழ்கவென்றுது தித்துஅழகிய மாணிக்கவாசகரையேத்தினார்களென்றவாறு, ()

தக்கசீர்பயிலீழமன்னுயர்சைவனாரெதிர்நின்றுநின்
றக்கமாலைபுனைந்துநீறுமணிந்துதொண்டினனாகவே
துக்கமாகியசீவரத்துவராடைமூடுமுடம்பினார்
மிக்ககாதரமூகைதீர்ந்திடல்வேண்டுமென்றுவணங்கினார்

(இ-ள்) தக்கதாகியசிறப்புள்ளஈழராசனும்மாணிக்கவாசகரெ திரேநின்று ருத்திராட்சமணிந்து விபூதிதரித்த அடிமைத்திறமு டையவனாகவே,துக்கத்தைத்தருகின்றசிவந்த சீவரவஸ்திரத்தால் மூடுமுடம்பையுடைய புத்தர்மிகுந்தஊமைத்தன்மைதங்களுக்கு நீங்கவேண்டுமென்று வணங்கினார்களென்றவாறு. ௮௮

இன்னவாறருள்செய்குவாயினியெம்பிரானெனவன்புடன்
பொன்னிசூழ்வளநாடனும்புலியூருளாருமிறைஞ்சினார்
மன்னுசீர்புனைவாதவூரர்மகிழ்ந்துபார்வையைநல்கவே
முன்றாகவணங்கியேயவர்மூகைதீர்ந்திதுகூறினார்

(இ-ள்) இந்தப்படிஅருள்செய்வாய் எமதுகடவுளேயென்றுஅன்புடனேசோழராசனும தில்லைமூவாயிரவரும மற்றவருமவணங்கினார்கள் நிலைபெற்றசிறப்பினையுடைய மாணிக்கவாசகர் மகிழ்ந்துகிருபாநோக்கஞ்செய்யஉடனே அவர்களெல்லாம்நமஸ்கரித்துஊமைத்தன்மைநீங்கி இதுசொன்னார்களென்றவாறு, (௮௯)

மாசிலாதமனத்தினாய்முனமன்னுதீவினைசெய்தலா
லாசிலாதநன்னீறணிந்துநலஞ்செழுத்துரைசெய்திலேம்
பூசலாகியநீறுடன்புனையக்கமாலைகளாவியார்
ஆசுதாதுவராடையைசுடுமென்றுதூன்றிவணங்கினார்

(இ-ள்)களங்கரகிதமானமனமுள்ளபெரியவரேமுன்பிறப்பிலே விலையெற்ற தீவினையைச்செய்தபடியால குற்றமற்றவிபூதிதரித்து நல்லபஞ்சாட்சரத்தை உச்சரியாலிருந்தோம் பூசுவதாகியதிருநீருந்தரிக்கப்பட்டருத்திராட்சமும காவிவஸ்திரமும் ஆகியஇவைகளெல்லாங்கெடுப்பீர் இந்தசிவப்புவஸ்திரத்தைச் சுடுமென்றுவணங்கினார்களென்றவாறு, (௯௰)

சோட்டமின்றிபணிந்தமையார்நகைகோட்டுநின்றமுகத்தரா
யீட்டுமுனசெயதவத்தினரிவரென்றுசிந்தையிலெண்ணியே
வாட்டருந்திருநீறணிந்துவயங்குருத்திரசாதனம்
ஈண்டியங்கவர்சீவரங்களைப்பொருங்குதீக்கிரையாக்கினார்

(இ-ள்) அழுக்காறிலாதமனமுள்ள மாணிக்கவாசகர் புன்சிரிப்புடையமுகத்தினராய்ப் பூர்வஜன்மத்திலிவர்கள்தவஞ்செய்தவர்களென்றுமனத்திலேநினைத்துக்கெடுதலசெய்யாதவிபூதிதரித்துபபிரகாசங்கொண்ட ருத்திராட்சமும்அணிவித்து அவர்களுடைய சீவரமாகியவஸ்திரங்களைககாந்தியையுடைய நெருப்புக்கு இரையாக்கினரென்றவாறு, (௯௧)

பொய்யிலாவருளையருப்புலியூருளார்களுமன்புசேர்
மையலாகியவேடமின்றிவயங்குநீறணிவார்களுந்
துய்யகாவிரிநாடனுந்துகடறுமீழர்தமன்னனுஞ்
செய்யமாமணிமன்றுளாதிருமுனபுசென்றுவணங்கினார்

(இ-ள்) பொய்மையில்லாதகிருபையையுடையமாணிக்கவாசகருமதில்லைமூவாயிரவரும் முன்புசேர்ந்தமயக்கமாகியவேஷமில்லாமல்பிரகாசம்பொருந்திய விபூதிதரித்தவர்களும்பரிசுத்தமாகியகாவேரிநாட்டையாளுகின்ற சோழராசனும்குற்றம்நீங்கிய ஈழதேசத்துராசனும்சிவந்தரத்தினமிட்டிழைத்தகனகசபையிலிருக்கும்சபாநாயகரைநேராகவந்துசேவித்தார்களென்றவாறு, (௯௨

பொன்றுகின்றதுமுத்தியென்றுபுகன்றுநின்றுழல்புத்தர்தா
மன்றுகண்டுவணங்கியன்புடன்மாபெருந்தவராவதே
யின்றிதன்பொருளாவதென்பலவாழுடன்கடிமீதிலே
சென்றதண்புனலல்லவோவுபர்தில்லையெல்லையினண்ணினார்

(இ-ள்) இறக்கிறதே மோட்சமென்றுசொல்லி நின்றுஉழலுகின்றபௌத்தர்கள்பொன்னம்பலத்திலே சபாநாயகரைக்கண்டுவணங்கிஅன்புமிகுந்தபெரியதபோதனர்களாவது என்னஅதிசயம் இன்றுஇதனதுபொருளானதென்னவெனில்பலங்கிகளுடனேகடலிலேபோனதுளிநத நீரல்லவாஉயாநததில்லைமாநகரதில் வந்தவர்களென்றவாறு, (௬௩)

மன்றகன்றபின்யாவருஞ்செல்வாதவூருறையெந்தையார்
சென்றிலங்குதிருப்பாலீசாசிறந்தபாதம்வணங்கியே
நன்றிதுன்றியவங்கண்வைகினாநலநதில்லையுளாரெலா
மென்றுமிகுதிருமையர்நீரினியென்றுதம்மனையேகினார்

(இ-ள்) சபையைவிட்டுநீங்கியபின்பு எல்லாருந்தங்களிடத்திற்குசெல்லமாணிக்கவாசகர்திருப்பலிச்சாரத்திலிருக்கும்கடவுளுடையசிறநததிருவடிகளைவணங்கி அங்கேயிருந்தனர்நன்மைபொருந்தியதில்லைமா நகரத்தாரெல்லாமெந்நாளும் ஐயரேநீர்இங்கேயிருமென்றுவேண்டிககொணடுதங்கள்கிரகத்துககுப்போனாரகளென்றவாறு, (௬௪)

பொன்னிநாட்டுமிழநாடுபுரந்தமன்னனுமுன்புபேர்
மன்னுதீவினைதீரமனறுவணங்கிநேரணிவார்களு
முன்னதாகவிறைஞ்சிஞானமூகிாந்தகோவையகன்றுபோய்
மின்னுமாமணிமாடமாளிகைதன்னிலன்புடன்மேவினார்

(இ-ள்) காவேரிநாட்டையாளுகின்ற சோழராசனும்ஈழதேசத்திராசாவும்வந்தராஜாக்களும் முன்புசேர்நதிருந்ததீவினைகளெல்லாம்நீங்கிசசபையைவணங்கி விபூதிதரித்தபுத்தர்களும்முன்னதாகவணங்கி மாணிக்கவாசகரை நீங்கிப்போய்மின்னுகின்றரத்தினங்கள்பதித்தஉப்பரிகையில் அன்புடனேசேர்ந்தார்களென்றவாறு

புன்மைவேடமகன்றுநீறுபுனைந்துளார்களுமன்னனுந்
தொன்மையார்திருவாதவூரர்துலங்குபாதம்வணங்கியே
நன்மையாமணிமன்றிறைஞ்சியகந்துநெஞ்சினில்வஞ்சமாம்
வன்மையானதொழிந்துதில்லைதமன்றுறையொணவைகினார்

(இ-ள்) இழிவானவேடங்கள் நீங்கிவிபூதியைத்தரித்த புத்தர்களுமராஜாவும பழமையாயுள்ளதிருவாதவூரராகியமாணிக்கவாசகாஇரணடுபாதங்களையும்வணங்கிநன்மையாகிய அழகியதிருசசிற்றம்பலத்தைவணங்கிஅப்புடனே நெஞ்சிலேயிருக்கும்வஞ்சகம்நீங்கிச்சிதம்பரமேதங்களுக்குநிலைபெற்றபதியாகவிருந்தார்களென்றவாறு, (௬௫)

புத்தரைவாதில்வென்றசருக்கம்-முற்றிற்று

ஆக-விருத்தம் ௬௫,

உ

சிவமயம்.

# திருவடிப்பெற்றசருக்கம்.

வேறு.

உடன்படப்பொய்யைமெய்யாவுரைத்திடுஞ்சமயமென்னுங்
கடங்கயத்திரளைவெல்லுந்தனிப்பெருமடங்கலன்னார்
நெடுந்தவப்பெருமையாலேநினைப்பருஞ்சைவஞான
மிடம்படப்புகலவார்பின்னெய்தியசெய்திசொலவாம்.

(இ-ள்) உடன்படும்படிபொய்யைமெய்யாகச்சொல்லியபரசமயங்களென்னும்யானைக்கூட்டத்தைவெல்லுகின்ற ஒப்பற்றபெரியசிங்கமேற்றுக்கொப்பாகியவரும்நெடியதவத்தின்பெருமையாலே நினைத்தற்கரிய சிவஞானத்தைவிரித்துச்சொல்லப்பட்டவருமாகிய மாணிக்கவாசகர்பின்பு அடைந்தசெய்தியைச் சொல்லுவாமென்றவாறு, (௧)

ஆடல்வெம்படையினாட்சியெழுச்சியோடச்சோவென்னும்
பாடலுந்தெய்வலோகயாத்திரைப்பத்துமோதித்
தேடலுந்திகைப்புமீளத்தெளிதலுஞ்சிறுமைகொண்டு
நாடலுங்களிப்புமில்லாநறபெருவாழ்விலானார்

(இ-ள்) ஆடலையுடையதிருப்படையாட்சியுந்திருப்படையெழுச்சியும் அச்சோபத்தும் தெய்வலோகயாத்திரைப்பத்தும் பாடியொன்றைத்தேடுதலும் திகைத்தலும்பின்புதெளிதலும் சிறுமைகொண்டுவாடுதலும களித்தலுமில்லாதபெரியவாழ்வுபெற்றிருந்தார் மாணிக்கவாசகரென்றவாறு, (௨)

போற்றுமஞ்செழுத்துநீறம்புவிமிசைவிளங்கத்துன்ப
மாற்றிடுஞ்சைவஞானவாசகம்புகலவந்தார்
சீற்றமில்புலியும்பாம்புஞ்சீர்பெறவிளங்குமன்றி
லேற்றினன்புலியூர்மேலைச்சிவபதமென்றுகண்டார்

(இ-ள்) யாவரும்போற்றுகின்ற பஞ்சாட்சரமும்விபூதியும்பூமியின்மேல்விளங்கத்துன்பத்தைநீக்குகின்ற சிவஞானத்தை விளக்குந்திருவாசகஞ்சொல்லவந்த மாணிக்கவாசகர்கோபமில்லாதவியாக்கிரபாதரும்பதஞ்சலியாரும் சிறப்புப்பெறவிளங்குகிற பொற்சபையிலாடும் இடபவாகத்தையுடைய சபாபதியினது சிதம்பரம் மேலானசிவபதமென்றுகண்டாரென்றவாறு, (௩)

அய்யரங்குறையுநாளிலாடகமன்றிலாடு
மெய்யர்தங்கருணையாலேவேதியவடிவக்கொண்டு
துய்யமுப்புரிநூன்மார்புந்துலங்குபுத்தகமுந்தோன்றச்
செய்யமென்பாதநோவச்சென்றுமுன்னுநின்றார்

(இ-ள்) மாணிக்கவாசகர்அந்தச்சிதம்பரத்திலிருக்கின்றநாளி லேபொற்சபையிலாடுகின்ற சபாபதியானவர் தமதுகிருபையா லேபிராமணவடிவங்கொண்டுபரிசுத்தமாகிய முப்புரிநூலணிந்த மார்பும் விளங்குகின்ற புஸ்தகமுந்தெரியச்சிவந்த திருவடிகளுஞ் சேவலெழுந்தருளிஎதிராகநின்றாரென்றவாறு. (௪)

முன்புறநின்றவேதமுதல்வனைமுகத்திநோக்கி
யின்புறவாதவூரிருமெனவிருந்தபின்னாக
கொன்புனைமறையின்மிககிளெங்குளிராகூறுமென்ன
மன்பெருவளஞ்சேர்பாண்டிமண்டலத்திருப்பேனென்றார்

(இ-ள்) எதிரேவந்துநின்றவேதப்பிராமணரைப்பார்த்துஇன்ப ம்பொருந்த மாணிக்கவாசகிருமென்றுசொல்லஅவரிருந்தபின் புபெருமையையுடையவேதத்திலிருந்தவரேநீயெங்கேயிருக்கிற துசொல்லுமென்றுகேட்கநிலைபெற்றபெரியவளத்தையுடையபா ண்டியதேசத்திலே நாமிருக்கிறதென்றார்அந்தபிராமணரென்று

பாண்டிநாடென்றபின்னர்ப்பரிவுடன்செறிவுகூறி
யீண்டுநீவருதல்வேண்டுகாரியமியம்புமென்ன
வாண்டநாயகன்றனாணையாகியகருமநுமமைமக
காண்டலேயென்றுபின்னுங்கருததுறவிதனைசசொன்னார்

(இ-ள்) பாண்டியதேசமென்று சொன்னபின்பு இன்புடனேஉ பசரித்துஇங்கே நீர்வருதற்குககாரணஞ்சொல்லுமென்னகசடவு ளது ஆகஞையாகிய காரியமஉம்மைககாணுவதேயென்று பின்னு ம்மனத்திலேபொருந்தஇதைசசொன்னரென்றவாறு, (௬)

மண்ணிடைபுகுந்துமேலைவானிடைபறந்துமுன்னர்க்
கண்ணனுமயனுந்தேடிககாண்பதறகரியார்தம்மைப்
புண்ணியமன்றிலாடும்புனிதரைபபரியிலேறப
பண்ணுநீம்பெருமையாலேவாழ்ந்ததுபாண்டிநாடு

(இ-ள்) பூமியைப்பிளந்தும் ஆகாசத்திறபறந்தும்முன்னேமகா விஷ்ணுவும்பிரமதேவனுந்தேடிககாணுதற்கரிய கடவுளாகியும்சி றசபையிலேநிருத்தஞ்செய்பவருமாகிய பரமசிவனைககுதிரையே றச்செய்தஉம்முடைய பெருமையினலே பாண்டியநாடெல்லாம் வாழ்ந்ததென்றவாறு, (எ)

தென்பெருந்துறையிலையன்றிருவடிசேவைசெய்து
துன்பமொன்றின்றிவாவிசூழ்கழுக்குன்றிறசென்று
பொன்பொலிமன்றிலெய்திபுத்தரைவாதிலவென்றீ
ரென்பதுகேட்டுப்பின்னரியாவருமகிழ்ச்சிகொண்டார்

(இ-ள்) அழகியதிருப்பெருந்துறையிலெழுந்தருளியிருக்கின்ற கடவுளுடையதிருவடியைவணங்கித்துன்பமொன்றுமில்லாமல்த டாகஞ்சூழ்ந்ததிருக்கழுக்குன்றத்திற்கும்போய்ப்பின்புசிதமபரத்

இற்குனிந்துபுக்கனைவூர்துசெய்துசெயித்திரென்பதுகேள்விப்பட்டுபோலவருமமகிழ்ச்சியடைந்தாரென்றவாறு (௮)

ஆதியைமன்றுளாடுமையனையன்பினாலே
யோதியதமிழின்பாடலுள்ளவையோதவெண்ணி
மாதுயாகலவின்னேவந்தனனெழுதல்வேண்டும்
வேதியர்பெருமானின்றுவிளம்பிடும்விளங்கவென்றார்

(இ-ள்), ஆதியாகியும சிற்சபையிலே ஆடுகின்றவையனாகியுமிருக்கின்றகடவுளைப் பத்தியினாலேநீர்சொல்லிய தமிழ்ப்பாடலமூழுவதும்ஓதற்குநினைத்தாகதுன்பநீங்க இங்கேவந்தேன் அதனெழுதலினைவேண்டுமெபிராமணரில்உத்தமரேவிளக்கமாக இன்றுசொல்லவேண்டுமென்றார் அந்தப்பிராமணரென்றவாறு. (௯)

விண்ணகம்பரவுநாதனிவ்வகைவிளம்பசிந்தை
நண்ணுமன்புடையராகிநற்சடைமுடியார்தம்பை
பெண்ணனுந்தமிழின்பாட்டாலியம்பியவையப்போ
துண்மனமகிழ்ந்துளமெய்ஞ்ஞானவாசகமுவந்துசொன்னார்

(இ-ள்)தெய்வலோகத்திலுள்ள தேவர்கள்வணங்குகின்றசபாநாயகர்இவ்வாறுசொல்ல மனத்திலேயிருக்கும் அன்பையுடையவராய்ஜடாமுடியையுடைய பரமசிவனையெண்ணுதற்கரியதமிழ்பாடலாகசொல்லியமாணிக்கவாசகர் அப்போது அகமலர்ந்து உண்மைஞானத்தைத்தருகின்றதிருவாசகத்தைமகிழ்ச்சியுடனேசொன்னாரென்றவாறு, (௰)

அங்கவருரைத்தவெல்லாமம்பலத்தாடுமையர்
செங்கையிலேடுவாங்கித்தெளிவிறவரைந்தபின்னர்ப்
பொங்கியவருளினாரும்புகன்றிடாகலத்தையும்
பங்கினர்தம்மைக்கோவைபாடுதல்வேண்டுமென்றார்

(இ-ள்)அவர்சொல்லியபாடலெல்லாம்சிற்சபையிலாடுஞ்சபாபதியானவர் தம்முடையதிருக்கரத்தில் ஏட்டைப்பிடித்துக்கொண்டு தெளிவாக எழுதியபின்புமிருந்த அருளையுடையமாணிக்கவாசகருஞ்சொல்லித் துன்பநீங்க உமாதேவிபாகராகியசபாநாயகரைப் பாட்டுடைத்தலைவனாகவுடைய ஒருகோவைபாடல் வேண்டுமென்றார் அந்தப்பிராமணரென்றவாறு. (௰௧)

மன்னியதவத்தின்மிக்கோர்தாருளமகிழ்ந்துகூற
மூன்னூறுவிருந்துகோவையெழுதினர்முடிந்தபின்னர்ப்
பொன்னவிர்வேணியார்தாம்புத்தகஞ்சேமித்தங்கண்
மின்னெனமறைந்தார்சொன்னவித்தகராயர்ச்சிகொண்டார்

(இ-ள்) நிலைபெற்றதவத்திலேயிருந்தமாணிக்கவாசகர்அதற்கு மனமகிழ்ந்துசொல்ல எதிரேயிருந்துதிருக்கோவையாரெழுதிமுடித்தபின்புபொன்போலும் பிரகாசிக்குஞ்சடையையுடையவர்தம்,

ருடையபுத்தகத்தைக்கட்டி அவ்விடத்திலேகொண்டுபின்னலைப்
போலமறைந்தார அதுகண்டுமாணிக்கவாசகர வந்ததைகொண
டாரென்றவாறு. (௰௨)

எழுந்தனரெங்குமோடிநாடினரெங்கேகொலென்று
வழிந்தனர்மனமுலாடுமாதியென்றறிந்தபின்னாப
பொழிந்தனர்கண்ணீரெங்கேபோயினையென்றுமண்மேல்
விழுந்தனர்பரமானந்தவேலைவெள்ளத்துளாரா

(இ-ள்) எழுந்தாரெங்குமோடித்தேடிப்பார்த்தார் இதென்ன
ஆச்சரியமென்று மனமகிழ்ந்தார சிதம்பரத்திலேயிருந்தசெ
யகின்றசபாபதியென்றறிந்து பின்புகண்ணிலே ஆனந்தபாஷ்
பம்பொழிந்தாரெங்கேபோயினையென்று பூமியிலேவிழுந்தார்பர
மானந்தசமுத்திரத்திலழுந்தினாரென்றவாறு (௰௩)

செந்தமிழ்கன்புமிக்கார்சென்றுகம்மன்றிலெய்தி
யந்தரத்தவர்மாலயனைன்றுகத்துநாடி
நந்தமக்கடிமைபூண்டுநயந்தவனொருவன்சொன்ன
விந்தனற்பாடல்கேண்மினென்றவாக்கருளிச்செய்தார்

(இ-ள்) உயர்ந்ததமிழினிடத்திலேஅன்புமிகுந்தசபாநாயகர்பு
ஸ்தகத்தையெடுத்துக்கொண்டு தமதுசபைக்குளெழுந்தருளிதேவ
ர்களையும் மகாவிஷ்ணுவையும் பிரமதேவனையுமபார்த்துநமக்கடி
மைசெய்து நயமபினையபெற்றமாணிக்கவாசகனசொன்னஇந்நா
லபாடல்களைகேளுங்களென்று அவாசருந்தனுக்கிரகஞ் செய்
தாரென்றவாறு. (௰௪)

மெத்தகவாதவூரர்விளம்பிடவெழுதுமித்தப்
புத்தகமனுளாடலபுரிந்தவனெழுததாமென்று
முத்தியைபுதவுங்கோவைமுடிவிடத்தெழுதிபின்னர்க்
சித்திரமலர்க்கையாலேதிருந்தமைத்காப்புஞ்செய்தார்

(இ-ள்) மெய்ம்மையுள்ள தவத்தையுடைய மாணிக்கவாசகர்
சொல்லஎழுதப்பட்ட இந்தத்திருவாசகம்கனகசபையிலே இருந்
தருளுகின்றஅழகிய திருச்சிற்றம்பலமுடையார்திருவெழுத்த
மென்று மோக்ஷத்தைததருகின்றதிருக்கோவையாருடிந்தவிட
த்திலே யெழுதியபினபு அழகியமலரையொத்த கையினாலேதிரு
த்தமாக முத்திரைகாப்புஞ்செய்தாரென்றவாறு (௰௫)

வெண்பிறைமுடித்தவேணிவித்தகருலகுக்கெல்லா
நண்புடைவாதவூரர்கற்றவருணர்த்தவெண்ணி
யெண்பெறுமுனிவர்விண்ணோரிறைஞ்சுமம்பலத்துவாயில்
வண்படிம்தேயுண்மைவாசகமுறையைவைத்தார்

(இ-ள்) வெள்ளிமூன்றாம் பிறைசூடியதரித்த ஜடாபாரத்தையு
டையசபாநாயகர் உலகத்துக்கெல்லாம் சினேகமுடையமாணிக்

கவராசர்து நல்லதவத்தைஎல்லாருக்கும் அறிவிக்கநினைத்து எண்ணப்பெற்றமூவாயிரவர்கள் தேவர்கள்வணங்குஞ் சபைவாசற்படியிலே திருவாசகமாகிய திருமுறையைவைத்தாரென்றவாறு. (௰௬)

வைத்தபின்பூசைசெய்யுமந்தணனவந்துகண்டிப்
புத்தகமிங்குநண்ணுமபூதமைதைவிகமாமெனறு
சித்தமங்குருகினின்றுதில்லையுள்ளவாகட்கெலலா
மித்திறங்கூறவேண்டுமெனறுமனறகன்றுபோந்து

(இ-ள்) படியிலேவைத்தபின்புபூசைசெய்யுமொருபிராமணன் பார்த்து இப்புத்தகமிங்கேயிருக்கும் புதுமைதெய்விகமாமென்று மனமுருகிநின்று தில்லைமாநகரத்தார்க்கு இதனைச்சொல்லவேண்டுமென்று சபையைவிட்டுப்போயெனறவாறு. (௰௭)

தெந்திருமருவுந்தொல்லைதில்லைநன்னகரிலுள்ளார்
தந்திருமுனபுசென்றுசாற்றுஞரிந்தநீர்மை
யந்தணாமொழிந்தபின்னரதிசயமிதுவென்றோடி
வந்தணர்படிமேலண்ணலவைத்தபுத்தகங்கண்டார்கள்

(இ-ள்) இலகுதமியானவள் வசிக்கின்றபழமையாகிய சிதம்பரத்திலுள்ளவாகளிடத்திற்குப்போய் ஒருபுத்தகம்சபையின்படியிலேயிருக்கின்றதென்றுசொலலியபினபு இது அதிசயமாமென்று ஓடிவந்துபடியின்மேலசபாநாயகர்வைத்தபுததகததை எலலாருங்கண்டாாகளெனறவாறு (௰௮)

யாவருந்தம்முனடியெம்மிறையுறைபுமன்றுட்
டேவருமபுகுதவொண்ணாதெய்விகமிதுவென்றெண்ணி
மேவுமனபதனாலண்ணலவிளம்பியசைவநூலோ
தாவுசெந்தமிழோவென்றுபார்ப்பதுதககதென்றார்

(இ-ள்) எல்லாருந்தங்களுக்குள்ளேபார்த்து நமதுகடவுளிருக்கின்றசபையிலே தேவர்களும்புகுதறகுககூடாத தெய்விகமிதுவோவென்று நினைத்துப்பொருந்துகின்ற அன்பினாலேகடவுள் சொல்லியசிவாகமமோ தமிழநூலோவென்று பார்ப்பதுதகுதியாமெனறார்களென்றவாறு. (௰௯)

தேக்கியவருளுமன்புஞ்சிறந்தவரெல்லாருஞ்சொல்லும்
வாக்கினிலொருவன்சென்றுமலர்கொடுவணக்குஞ்செய்து
பூக்கமழ்சடையோன்வைத்தபுத்தகந்தன்னைச்சேம
நீக்கினரோதினார்முனிதிகளகவனன்கும்

(இ-ள்) அருளும் அம்புநிறைந்த தில்லைமூவாயிரவர்களெல்லாருஞ்சொல்லுகினற வாக்கில்வல்லவராகிய ஒருவர்போய்மலரைக்கொண்டு அருச்சித்து நமஸ்கரித்துப் பரமசிவன்வைத்த புத்தகத்தைஅவிழத்து வட்டைநீக்கிப்படித்தார் நீதியைக்கொண்ட அவல் நான்குமென்றவாறு. (௨௰)

வேறு,

திருச்சதகமுதலாகச்சிறந்தமிழ்நூறும்
விரிந்தவகப்பொருட்கோவைவிளங்கவொருநானூறு
முரைத்தனர்பின்முடிந்தவிடற்றுயரவாதவூரன்மொழி
தரித்தெழுதுமம்பலவனெழுத்தென்றுசாற்றினார்

(இ-ள்) திருச்சதகமுதலாகச்சிறக்கப்பெற்றதமிழ்ப்பாட்டல் நூறும்விரித்துச்சொல்லப்பட்டஅகப்பொருட்கோவை நானூறுபாடலும்விளங்கப்படித்தார்கள் பின்புஅதுமுடிந்தவிடத்திலே இதுமாணிக்கவாசகர்சொல்ல அழகியதிருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தென்று படித்தார்களென்றவாறு. (௨௧)

கேட்டவர்களெல்லாருங்கிளர்புளகங்குறுவேர்
காட்டிடலுங்கண்ணீருங்கசிந்துருகுஞ்சிந்தையுமா
யீட்டியமெய்த்தவமுடையோனியம்பியவித்தமிழன்றி
வீட்டுநெறிக்கினிச்சிவநூல்வேறுளதோவென்றார்கள்

(இ-ள்) இந்தத்திருமுறையைப்படிக்கக் கேட்டவர்களெல்லாம் மெய்ப்புளகமுங்குறுவேர்வுகொள்ளுதலும் ஆனந்தபாஷ்பமுஞ் சிந்துருகுமனமுங்கொண்டவராய் மெய்த்தவத்தையுடையமாணிக்கவாசகர்சொல்லியஇந்தத்தமிழல்லாமல்மோட்சவழிக்குஞ்சிவநூல்வேறுண்டோவென்றுசொன்னார்களென்றவாறு, (௨௨)

பூணரவன்றிருநாமம்புகழுமருந்தவர்சொல்ல
யாணரிதன்பொருடேனையின்றுணர்வோமென்றெண்ணி
மாணுடைமன்றகன்றேகிமறைவல்லார்போதிநீழல
வீணருடன்பெருவாதுவென்றவர்முன்சென்றார்கள்,

(இ-ள்) சர்ப்பாபரணந்தரித்தசபாநாயகரைப்பாடிய மாணிக்க வாசகர்சொல்லஅழகிய இதன்பொருளாகியதேனை இன்றறிவோமென்றுநினைத்துப்பெருமைபொருந்திய சபையைவிட்டுப்போய் அரசமரநிழலிலேயிருக்கும் வீணராகியபுத்தருடன் பெருவாது செய்துவென்றமாணிக்கவாசகர்முன்னேபோனார்கள்தில்லைமூ யிரவரென்றவாறு,

சென்றவர்தந்திருமுன்புதிருமுறையைத்தண்டர்புரா
னின்றுசெயுஞ்செயலிதுவெனவியம்பினாரின்றெலவே
மொன்றுறுமென்புன்பாடலுவந்தருளப்புவிமீதி
லன்றுசெயுந்தலமறியேனென்றருதாரன்பாளர்

(இ-ள்) இப்படிப்போனவர்கள்அவரெதிரே திருமுறையைவைத்துத்தேவர்பிரானாகிய கடவுள்இன்றுசெய்தகாரியமிதுவென்று சொன்னார்கள்அதுகண்டெல்லாரும்அற்பமாகிய என்பாடலைமனமகிழ்ந்துகொண்டருளப்பூமியிலேஅன்றுசெய்ததவத்தையறியமாட்டேனென்றார்மாணிக்கவாசகரென்றவாறு, ௨௪

புண்ணியரிங்கிவ்வாறு புலம்பியபின் புலியூரி
லெண்ணருமன்புடையார்களிதமுடனஞ்சலிசெய்து
பண்ணுலவுஞ்சிவஞானப்பாடல்கொளும்படி தம்பா
னண்ணிமரன்செய்ததென்னீர்நவிலுமெனச்சொன்னார்கள்.

(இ-ள்) மாணிக்கவாசகர் இங்கே இப்படிபுலம்பி அழுதபின்பு சிதம்பரத்திலிருக்கின்ற அளவற்ற அன்பையுடையவர்கள் இதத்துடனே அஞ்சலிசுயஸ்தராய்ப்பண்ணையுடைய ஞானபாடலைகொள்ளும்படி உமமிடத்திலேகடவுள்வந்துசெய்தகாரியமென்னசொல்லுமென்றுகேட்டார்களென்றவாறு, (உ௫)

அல்லலெனும்பிறவியிலாவண்ணல்செயுஞ்செயல்யாவுஞ்
சொல்லியபின்புலியூரர்தொழுதுமனங்களிகூர்ந்து
தில்லையிலெம்பெருமானைச்செப்பியவித்தமிழ்மாலை
நல்லவரும்பொருள்கூறவேண்டுமெனநவின்றார்கள்

(இ-ள்) துன்பமென்னும்பிறப்பில்லாத மாணிக்கவாசகர் சபாநாயகர்செய்தசெய்கையெல்லாம்சொன்னபின்பு தில்லைமூவாயிரவர்வணங்கிமனமகிழ்ச்சிகொண்டுசிதம்பரத்திலிருக்கின்றஎமதுகடவுளைச்சொல்லியஇத்தமிழ்ப்பிரபந்தத்திற்கு அருமையாகியநல்லபொருள்சொல்லவேண்டுமென்றுகேட்டார்களென்றவாறு. ()

ஓங்குபுகழ்த்திருவாதவூரன்றயும்பெருமானுந்
தேங்கியமெய்ச்சிவஞானசிந்தையுடன்களிகூர்ந்து
பூங்கனகப்போதுவெதிரேபோய்ப்பகர்வேனெனப்போக
வாங்கவர்முன்சென்றருமன்பொடுபின்சென்றார்கள்

(இ-ள்) கீர்த்தியினாலுயர்பெற்ற திருவாதவூரிலே திருவவதாரஞ்செய்தமாணிக்கவாசகர் சிவஞானநிறைந்த மனத்துடனேகளிப்பையடைந்து அழகியகனகசபையெதிரேபோய்இதற்குப்பொருள்சொலவேனென்றுபோக அவர்முன்னேபோனவர்கள் அன்புடனே அவர்பின்னேபோனார்களென்றவாறு, (உ௭)

நின்றபுகழ்ப்புலியூரர்நேசமுடன்புடைசூழச்
சென்றருளுக்கிடமானசெம்பொனினம்பலமெய்தி
யொன்றியவித்தமிழ்மாலைப்பொருளிவரென்றுரைசெய்து
மன்றதனிற்கடிதேகிமறைந்தனரங்கவர்காண

(இ-ள்) நிலைபெற்றகீர்த்தியையுடைய சிதம்பரத்திலேயுள்ளதில்லைமூவாயிரவர்கள் அன்புடனே புடைசூழ்ந்துவரப்போய்கிருபைக்கிடமாகியகனகசபையையடைந்துபொருந்திய இத்தமிழ்ப்பிரபந்தத்திற்குப்பொருள்இவர்தாமென்றுசபாநாயகரைக் காட்டிச்சபையிலேதில்லைமூவாயிரவர்காணச்சீக்கிரத்திற்போய்மறைந்தார்மாணிக்கவாசகரென்றவாறு, (உ௮)

செய்காட்டுங்கமுகடவித்தில்லையுளார்பொருள்கேட்க
கைகாட்டித்தம்முருவங்காட்டாமன்மறைந்தாரைப்

பைகாட்டும்போரவப்பணியுடையார்தமக்கன்பு
மெய்காட்டிப்பாலுளுடனேமேவியநீராகினர்

(இ-ள்)கமுகமரக்காட்டையுடைய வயல்சூழ்ந்த தில்லைமூவாயிரவர் பொருள்கேட்கச் சபாபதியைப்பொருளென்று கையாற் காட்டித் தமதுதிருவுருவைக்காட்டாமல் மறைந்தமாணிக்கவாசகரைப் படமுள்ளபெரியசர்ப்பாபரணத்தையுடையகடவுளானவர் தமக்கு அவர்செய்தஅன்பின மெய்ம்மையைக்காட்டியபாலுடனே பொருந்தியநீர்போலாகினரென்றவாறு. (௨௯)

அண்டனையண்டர்கோனையன்பினலெய்துமாறு
கண்டனர்புளகமெய்திக்கம்பிதமாகிநின்று
விண்டனர்கசிந்துசிந்தைவேர்த்தனர்மேனியெங்கும்
கொண்டனர்மகிழ்ச்சிசெங்கைகுவித்தனர்தில்லையுள்ளார்

(இ-ள்)தேவனாகியும்தேவர்க்கு அரசனாகியுமிருக்கின்றசபாபதியை மாணிக்கவாசகர் அடைந்தவிதமுமகண்டார்கள் தேகம்புளகமடைந்துநடுக்கமுற்றுத் துதித்துமனமுருகிக் கண்ணீர்பொழிந்து திருமேனியெல்லாம்வேர்த்தார்கள்மனமகிழ்ந்தார்கள் சிவந்தகைகளைச் சிரசின்மேல்கூப்பிக்கொண்டார்கள தில்லைமாநகரிலுள்ளார்களென்றவாறு. (௩௰)

வேறு.

பூதநடங்கடொடங்கினயோதமகிழ்ந்தனதுங்கண
நாதர்புகழ்ந்தனர்தும்புருநாரதராகிசைகொண்டனர்
வேதமொடந்தரதுந்துமிமீதுமுழங்கியெழுந்தன
மாதவரிந்திரர்பைந்தருமாமலர்சிந்திவணங்கினர்

(இ-ள்)பூதங்களெல்லாம் நிருத்தஞ்செய்தனமிகவுமகிழ்ந்துவந்தகணநாதர்கள புகழ்ந்தனர்தும்புருநாரதர் இசைசெய்தார்கள வேதங்களும் அந்தரதுந்துமிகளும் ஆகாசத்திலமுழங்கி யெழுந்தன முனிவரும் இந்திரரும்பஞ்சதருவினுடைய மலரைத்தூவிவணங்கினார்களென்றவாறு. (௩௧)

ஞானநடம்பயில்சங்கரனாமமிருந்துளநெஞ்சினர்
மோனசுகத்தருடன்சிவபூசைமுயன்றுநயந்தவ
ரூனமிலன்புளதென்புலியூரிலுறைந்துசிறந்தவர்
வானகரும்பரவுந்திருவாசகவின்புநுகர்ந்தனர்.

(இ-ள்)ஞானநாடகஞ்செய்கின்ற சபாநாயகருடைய திருநாமத்தைத்தியானிக்கின்றநெஞ்சையுடையவர்களும் மௌனமெய்ச்சுகந்தங்களுடனேசிவபூசையிலேசெய்துமுயன்றவர்களும்கெடுதலில்லாத அன்பையுடையஅழகியசிதம்பரத்தில் வசித்துச்சிறப்புப்பெற்றவர்களும் தேவர்களும்பரவுகின்ற திருவாசகத்தமிழின்பத்தைப் புசித்திருந்தார்களென்றவாறு (௩௨)

வேறு.

ஈனமிருந்தளதோலுமென்புநரம்புஞ்சீயு
மானவுடற்சிவரூபமாமிதனைத்தெளியாம
லூனுடலுக்கிரைதேடியுழன்றுலகிற்றடுமாறி
மாநரகிற்புகுதுமதோமாயைதலைப்படுவோர்கள்

(இ-ள்) இழிவுமிருந்துள்ள தோலும்எலும்பும்நரம்பும்சீயுமா னவுடல சிவரூபமாகும் இதனைத்தெளியாமல மாமிசபிண்டத்து க்கிரைதேடிசஞ்சரித்துஉலகத்திலேதடுமாறிகொடியநரகத்திலே புகுவதுஎன்னஆச்சரியம மாயையினுடையவலையிலகப்படு மனி தாகளென்றவாறு. (௧௩)

வேறு.

வாதவூரந்தணர்தந்திருவாய்மைவிளங்குதிருக்கதை
யோதினராயன்புடனேசெவியூடுமுகந்ததுகேட்டவர்
போகமெய்ஞ்ஞானமுஞ்சுகபோகமுடன்புகழ்பெறுவர்க
ளூழிலபுவனங்கடொலைந்துபின்சேர்குவர்வண்சிவலோகமே

(இ-ள்) திருவாதவூரில் திருவவதாரஞ்செய்த மாணிக்கவாசக ருடையஉண்மைவிளங்கிய இந்தத்திருக்கதையைப்படித்தவர்கள் அன்புடனேகாதினாலே கேட்டவர்கள் மிகுந்தஉண்மைஞானம் பொருந்தியசுகபோகத்துடன் கீர்த்தியும்பெற்றும் பிறவிசாகர மொழிந்துபின்பு வளத்தையுடைய சிவலோகம்பெறுவார்களெ ன்றவாறு. (௧௪)

வேறு.

பூதலமாதும்வாழ்கபொன்மழைபொழிந்துவாழ்க
வேதவாகமமும்வாழ்கவேந்தர்செங்கோலும்வாழ்க
தீதிலஞ்செழுத்துநீறுஞ்சிவனடியாரும்வாழ்க
வாதவூரிறைபுராணம்படித்திடக்கேட்டோர்வாழ்க,

(இ-ள்) பூமிதேவியும்வாழ்க-பொன்மாரிபெய்துவாழ்க வேதா கமங்களும்வாழ்க அரசர்கோலும்வாழ்க-குற்றமற்ற பஞ்சாக்ஷர மும் விபூதியும்சிவனடியார்களும்வாழ்க-மாணிக்கவாசகருடைய புராணத்தைப்படித்தவர்களும் கேட்டவர்களும் வாழ்கவென்ற வாறு. (௧௫)

(*)

திருச்சிற்றம்பலம்,

திருவடிபெற்றசருக்கம்-முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம்,௭-க்கு-திருவிருத்தம்-௫௱௪௰௫

திருவாதவூரர்புராணம்-முற்றிற்று.

(*)